# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 31st March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Conclusions of the National Development Council*

*377 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a statement showing:

(a) the conclusions arrived at the meeting of the National Development Council held in November 1963, in so far as they relate to Madras State; and

(b) the details of the action taken so far, in the light of these conclusions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): A statement[a] showing the main recommendations of the National Development Council and the action taken thereon is placed on the Table of the House.

64909

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** விவசாய அபிவிருத்திக்கு வேண்டி நம்முடைய ராஜ்யத்தில் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் என்னென்ன சிபார்சு செய்யப்பட்டதோ அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவைகளெல்லாம் இங்கு வைக்கப்பட்ட பேப்பரில் காணலாம்.

**புலவர் கா. கோவிந்தன்:** இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. கிராமம் என்று சொல்லும் நேரத்தில் ரெவின்யூ கிராமங்களுக்குத்தான் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. காணி கிராமங்களில் வசதி செய்து கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்திலே அந்தக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பொதுவாக எல்லாக் கிராமப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஃபோர்டு பவுண்டேஷன் எதைச் சொல்லியிருந்தாலும் சரி, நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் போதுமானதாக இல்லை.

---

[a] Printed as Appendix I on pages 662–673

uod 19—7—1965]

K.R. 249/70
MADRAS.

219

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY, 31ST MARCH 1965

VOLUME XXIX—No. 6

AUG 1965

CONTENTS


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 547–584 |
| II Calling Attention to the failure of the Pisanam main paddy crop in Shencottah and Tenkasi taluks of Tirunelveli district .. | 584–585 |
| III Announcements— | |
| (1) Nomination to the Committee on Government Assurances .. | 585–586 |
| (2) Election to the House Committee .. .. .. .. | 586 |
| (3) Election to the Committee of Privileges .. .. .. | 586–587 |
| IV Presentation of Report—Report of the Committee on Estimates. | 587 |
| V Government Motions— | |
| (1) Reports of the Committee of Privileges in ' Broadway Times ' Cases Nos. 1 and 2 .. .. .. .. .. .. .. | 587–589 |
| (2) Discussion on the Official Language Policy—*cont.* .. .. | 597–660 |
| VI Government Bill— | |
| The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1965 (L.A. Bill No. 10 of 1965). | 589–597 |
| VII Papers laid on the Table of the House .. .. . . | 660–661 |


©
GOVERNMENT OF MADRAS
1965

V211,31 N65
N65.29.6
64909

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise.*]

சாகுபடி செய்யக்கூடிய விவசாயிக்குப் போதுமான பாதுகாப்பு செய்யப்படுவதாக இல்லை. அதனால் உற்பத்தி குறைகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறதா ? அப்படியிருந்தால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போதுள்ள சட்டம் போதுமானதாக இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், பயிரிடுகின்றவர்களிடையே பாதுகாப்புச் சட்டம் திருத்தமாக இல்லை என்ற குறை தெரிவிக்கப்பட்டது. இது திருத்தமாக்கப்பட இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** கிணற்றுப் பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் கிணற்றுப்பாசனம்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கு ஆயில் சர்வ்விஸ் போன்றவைகள் வாங்குவது மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகையால் இது சம்பந்தப்பட்ட விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விதிமுறைகள் ஏற்கெனவே தளர்த்தப்பட்டிருக்கின்றன. மேலும் தளர்த்தப்பட வேண்டுமென்று குறிப்பாகத் தெரிவித்தால் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மைனர் இர்ரிகேஷன் சம்பந்தப்பட்டவரை மூன்றாவது ஐந்தாண்டுத் [illegible] 12 கோடிக்குப் பதில் 19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் சொல்லமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதலமைச்சர் அவர்கள் விரிவான சட்டம் கொண்டுவர உத்தேசம் இருப்பதாகக் கூறினார்கள். ஐந்து வருஷங்களாக இந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய பதவிக்காலம் முடிவதற்குள்ளாகவாவது இந்தச் சட்டத்தைக் கொண்டுவரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விரிவான சட்டம் என்று சொன்னால் புதிய சட்டம் என்று பொருள் அல்ல. எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து காம்ப்ரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷனைக் கொண்டுவர வேண்டும். சட்டம் எல்லாம் நிரந்தரச் சட்டமாகக் கொண்டுவர வேண்டும். ஆகையால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக எவ்வளவு சீக்கிரத்தில் தயாரித்துக் கொண்டுவர முடியுமோ, அந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### சேலம் மாவட்டத்தில் கனிப்பொருள் படிவங்கள்

* 378 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலப் புவியியல் யூனிட் சேலம் மாவட்டத்தில் காணும் கனி வளங்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்தியதா ?



(இ) அப்படியென்றால் என்ன என்ன கனிவளங்கள் எந்த அளவில் கிடைக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம்.

(இ) சபை முன் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

(a) Yes Sir.

(b) A statement[a] is placed on the Table of the House.

**திரு. ம. கமலநாதன் :** சேலத்தில் மிக அதிகமாகக் கிடைக்கும் இரும்புத் தாதுவை வைத்துப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தாலும், வேறு கங்கர் போன்ற கனிப்பொருள்கள் மிக அதிகமாக இருப்பதால், அந்த வட்டாரத்தில் ஒரு சிமின்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசம் இல்லை.

### கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தணிக்கை அறிக்கை

* 379 கேள்வி.— திரு. நா. சின்னசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 1962-63-ம் வருடத்திய தணிக்கை அறிக்கையை அமல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 1962-63-ம் வருடத்திய தணிக்கை அறிக்கையில் அந்த ஆலையின் சில குறைபாடுகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை ரிஜிஸ்ட்ரார் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எப்போது முடிவு எடுத்தது? இன்னும் ஆரம்பிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆரம்பத்தில் ஷேர் காபிடல் வசூல் ஆகவில்லை. அதற்குப்பிறகு மெஷினரி கிடைப்பதற்குக் காலதாமதம் ஆனது. அதுதான் காரணம்.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த ஆலையைப்பற்றிச் சொல்லும் போது அதன் கணக்குகளிலே குற்றம் கண்டுபிடித்தார்கள் என்ற காரணத்திற்காக அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றப்பட்டாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது எனக்குத் தெரியாது. எனது சக அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி. கூட்டுறவு இலாக்காவின் கணக்குகள் பற்றி அவருக்குத்தான் பொறுப்பு.

---

[a] Printed as Appendix II on pages 673–678

[31st March 1965

### Coral-reefs around Rameswaram islands

* 380 Q.—Sri RAMA. ARANGANNAL : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether it is a fact that the coral-reefs around Rameswaram and Danushkodi islands have been permitted to be cut and converted into lime; and

(b) if so, to whom the work was entrusted to be carried out?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தப் பவளப்பாறையை வெட்டி எடுத்ததின் காரணமாக அண்மையில் தனுஷ்கோடியில் அடித்த புயல் கொஞ்சம் அதிகமாக அடித்தது என்று கருதப்படுவது உண்மையா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினருக்கு, map இருக்கிறது. அதைவேண்டுமானால் காட்டுகிறேன். பவளப் பாறை இருக்கும் இடம் வேறு. புயல் அடித்த இடம் வேறு. கனம் அங்கத்தினருக்குத் தவறான அபிப்பிராயம் இருந்தால் அதை வைத்துக்கொண்டிருப்பது சரி அல்ல. இதைப்பற்றி விசாரணை செய்ததில் பவளப்பாறைக்கும் புயலுக்கும் எந்தவிதமான சம்பந் தமும் இல்லை என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

**திரு. சா. கணேசன் :** பவளப்பாறை என்று அந்தமாதிரியான ஒரு பகுதி இருப்பதனால்தான், தனுஷ்கோடி, ராமேஸ்வரம் தீவுகள் மணற்பாங்காக இருந்தபோதிலும், வன்மையாக வரு கின்ற அலைகளைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது முழு வதும் அகற்றப்படுமானால் மேலும் அரிப்பு ஏற்படும் என்ற கவலை இருக்கிறது. அதைப்பற்றிய நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் கவலை தவறான கவலை என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரிப்பு ஏற்படுகின்ற இடம் தீவுக்குக் கிழக்குப் பகுதி. பவளப் பாறை இருக்கும் இடம் மேற்குப் பகுதி. குறிப்பாக கீழக்கரை, வாலிநோக்கம் போன்ற இடங்களில் சிறு சிறு பவளப்பாறைகள் இருக்கின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தப் பவளப்பாறை வெட்டி எடுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். அப்படியானால் இது எந்த இலாக்கா சார்பிலே நடைபெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கால்சியம் கார்பனேட் செய்வதற்கான முக்கியமான மூலப்பொருள் வெட்டியெடுக்கப்படு கிறது. அதைச் செய்வதற்கு இந்திய சிமிண்ட் கம்பெனி, அதற்கு வேறு ஏதோ பெயர் இருக்கிறது, அந்தக் கம்பெனிக்கு இலைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.



31st March 1965]

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படியானால் அப்படி வெட்டி யெடுக்கின்ற தனியார் யார் என்று அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுதான் இந்திய சிமிண்ட் கம்பெனி என்று சொன்னேன். அவர்கள் வேறு பெயர் வைத்திருக் கிறார்கள்.

### Accidents on the Ghat Road, Nilgiri Hills

* 381 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether it is a fact that within a fortnight from 26th December 1964 two accidents have occurred one to a passenger bus and the other a lorry on the Ghat Road, Nilgiri Hills; and

(b) The matter is sub-judice.

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Two accidents occurred not within a fotnight but within a month.

(b) The matter is sub-judice.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நீலகிரி மலைப்பிரதேசத்தில் அடிக்கடி இந்தவிதமான விபத்துக்கள் ஏற்படக்காரணம் என்னவென்று விசாரணை செய்யப்பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த விபத்துக்கள் நீலகிரியில் மாத்திரம் அல்ல. நீலகிரியில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டது என்று புள்ளி விவரம் காட்டவில்லை. பொதுவாக விபத்துக்கள் ஏற்படுவதற்கு லாரிகள் சம்பந்தப்பட்டவரை அதி வேகமாக ஓட்டுகிறார்கள் என்ற புகார் வருகிறது. அதற்குப் பல இடங்களில் ஜீப் கொடுத்து, திடீர் சோதனை போடும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்குச் சொந்தமான ஊட்டியிலிருந்து திருச்சி செல்லும் பஸ் இந்த மாதிரி விபத்துக்கு உள்ளாகி இருக்கிறது. விசாரணை நடத்தி இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்ற காரணம் அறியப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுதான் கோர்ட்டில் இருக்கிறது. சர்க்கார் அந்த டிரைவர் மீது பிராசிக்யூஷன் போட்டு இருக்கிறது. அவர்மீது குற்றம் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கோர்ட்டு விசாரிக்கும்.

**திரு. கே. பொன்னையன் :** பொதுவாக மலைப்பிராந்தியங்களிலே திருப்பங்களில்தான் இந்த மாதிரி ஆக்ஸிடன்ட் அதிகமாக ஏற்படு கிறது என்று சொல்லப்படுகிறதே, அதனால் சர்க்கார் இந்தமாதிரி திருப்பங்களை இன்னும் அதிகமாக அகலப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** திருப்பங்களில்தான் அதிக மாக ஆக்ஸிடன்ட் ஏற்படுகிறது என்று புள்ளிவிவரங்கள் காட்ட வில்லை. ஆனால் திருப்பங்களில் இடைவெளிகளை எல்லாம் பொதுப்

பணித் துறை அகலப்படுத்தி வருவது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். குறிப்பாக மலைப் பிராந்தியங்களில் இடைவெளி அதிகம் இல்லை. அதை இன்னும் அதிகமாக அகலப்படுத்த வசதி இல்லை.

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 382 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன?

(இ) அவைகளில் முறையே பட்டு நூல் நெசவாளர் சங்கங்கள் எத்தனை?

(உ) ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள தறிகளின் எண்ணிக்கை எத்தனை?

(எ) எத்தனை சங்கங்கள் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) 1,086 ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு தலைமைச் சங்கமும் இருக்கின்றன.

(இ) 21 பட்டுநூல் நெசவாளர் சங்கங்களும், 6 செயற்கைப் பட்டு நூல் நெசவாளர் சங்கங்களும் உள்ளன.

(உ) ஒவ்வொரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலுமுள்ள தறிகளின் எண்ணிக்கை பெருமளவு வாம்புக்குட்பட்டு வேறுபடுகின்றது. எனினும், ஒவ்வொரு சங்கத்திலுள்ள சராசரி தறிகளின் எண்ணிக்கை 210 ஆகும். பட்டு, செயற்கைபட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு சங்கத்திலுமுள்ள சராசரி தறிகளின் எண்ணிக்கை அத்தகைய முறையை 218, 168 ஆகும்.

(எ) 32.

திரு. வி. எஸ். எஸ். மணி: நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கக் கூடிய வீடுகளில் அதிகமாகக் குடியிருப்பு வசதிதான் இருக்கிறது. உள்ளே பாவு போட முடியாது. அங்கேயே வீட்டை ஒட்டி பாவு போடுவதற்கு பாக்டரியில் 'ரூம்ஸ்'க்கு இடவசதி இருப்பதுபோல இடவசதிசெய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களில் சேராத மற்ற நெசவாளருக்கும் எதாவது வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் நெசவாளர்களுக்குக் கட்டிக்கொடுத்திருக்கின்ற வீடுகளைச் சென்று பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். அங்கு வசிப்பதற்கு ஒரு அறையையும் தறிபோடுவதற்கு ஒரு பெரிய அறையையும் வைத்து தான் ஒவ்வொரு வீடும் கட்டப்பட்டு இருக்கிறது. இந்தத் தறியைப் போட்டு நெசவு செய்துகொண்டிருக்கிற இடம், நான் பார்த்த அளவில், தறிகள் நெய்வதற்கு வசதியாக இருக்கிறது. பாவு போடுவதற்குப் போதிய இட வசதிகள் கொடுக்கவேண்டும், அதிகமான வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பல முறையிலே நிர்க்கலாம் 'சைஸ்ட் யார்ன்ஸ்' ஆக இருந்தால் தாங்களே பாவு போடக்கூடிய அவசியம் இருக்காது. எந்தெந்த இடங்களில் எது வேண்டுமோ அதை வாங்கிக் கொடுக்க, எதாவது குறிப்பிட்ட இடத்தைக் காண்பித்துக் கொடுத்தால், சர்க்கார் பரிசீலனை செய்ய முடியும். கூட்டுறவு நெசவாளருக்குத்தான் இப்போது விடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. காரணம் அவர்களிடமிருந்து வசூல் செய்வது சுலபம். கூட்டுறவுக்கு அப்பாற்பட்ட நெசவாளர்களுக்கு இந்த வசதி இல்லை.



திரு. சா. கணேசன்: இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் போல 'வீவர்ஸ் எஸ்டேட்' ஒன்று அமைத்து, அங்கே இந்தவிதமான தறிகளைப்போட, மரங்களை வைத்து ஒரு பெரிய ஏரியா அமைத்து, பாவு போடுவதற்கும், நெசவு செய்வதற்கும் வசதி அமைத்துக் கொடுக்கக் கூடிய திட்டம் அரசாங்கத்திற்கு உண்டா? இல்லாவிட்டால் இந்த ஆலோசனையை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ஆலோசனை எடுத்துக் கொள்வதற்கு இல்லை. காரணம் என்னவென்றால் கைத்தறி நெசவு அவரவர்கள் வீட்டிலேயே, "டிசென்ட்ரலைஸ்ட் ஸிஸ்டம் ஆப் எம்ப்ளாய்மென்ட்" ஆக இருக்கவேண்டுமென்ற கருத்து, கொள்கை அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது. அவர்களை எல்லாம் கொண்டுவந்து சேர்த்து, பாக்டரி மாதிரிவைத்து, இடம் வைத்துக்கொடுப்பது என்ற நிலை, இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற முறைக்கு முரணானது. "ஹோம்லெஸ் வீவர்ஸ்", "தறியில்லாத நெசவாளர்கள்" இருக்கிறார்கள். அவர்கள் 'இன்டஸ்ட்ரியல் சொஸைடி' வைத்து இருந்தால் தறிகள் கொடுத்து, அவர்கள் நெசவு வேலை செய்து வாழ்க்கை நடத்துவதற்கான வழிவகை செய்து இருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி: தறிகளிலே இரண்டு வகை உண்டு ஒன்று நடுப்பாவு போட்ட தறிகள். அம்மாதிரிப் பாவு போடக் கூடிய சில நெசவாளர்கள் வீட்டிற்குள்ளேயே தறி போட்டுக் கொள்வதற்கு இட வசதி கிடையாது. தனியாக இடம் ஒதுக்கி 'காமன் வீவர்ஸ் ஹோம்'-க்காக இட வசதி கொடுத்தால் நல்லதாக இருக்கும். அந்த மாதிரி ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கைத்தறி நெசவை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று பல உபகரணங்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அவ்வாறு கொடுக்கிற முறையிலே 'ரோல் தறிகள்' தான் நல்லது என்று சர்க்கார் கருதுகிறது. நீண்ட பாவு போடாமல், நெய்யும் துணி ரோல் ஆக வருவதற்கு, இந்த விதமாகத் தறிகள் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுத்து, அதற்கு வேண்டிய உபகரணங்களும் இலவசமாகக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. கனம் அங்கத்தினர் சொல்வது பழைய முறை, அதை மாற்றிக்கொள்வது நல்லது என்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

[31st March 1965

**திரு. எஸ். முருகையன் :** ஆயிரத்துக்கு அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தும், 36 நெசவாளர் சங்கங்களில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். இன்னும் அதிகமான கூட்டுறவு நெசவாளருக்கு வீடு கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறதா? இல்லை என்றால் அதிகமாக வீடு கட்டுவதற்குச் சர்க்கார் திட்டம் போடுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆயிரத்துக்கு மேல் சங்கங்கள் இருந்தால்கூட கூட்டுறவுச் சங்கங்கள், வீடு கட்டக் கூடிய சொத்து, ஆஸ்தி பொறுப்புடைய சங்கங்கள் மிகக் குறைவு. இந்தப் பொறுப்பை ஒட்டித்தான் சங்கங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற பிரச்னையை நாம் அமல் நடத்துகிறோம், விஸ்தரிக்கிறோம். சென்ற 2-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் 1,500 வீடுகள் கட்டினோம். 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1,181 வீடுகள் கட்ட இருக்கிறோம். 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான இலக்குகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கிற பட்டு நூல்கள் வெளி மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நமது மாநிலத்திலே பட்டு உற்பத்தி செய்து நெசவாளருக்கு வழங்க சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா? அப்படியானால் எந்தெந்த இடங்களில் உற்பத்தி செய்ய இருக்கிறார்கள்?

(ஒரு பூனை குறுக்கே ஓடிற்று)

MR. SPEAKER : It is not afraid of any privilege or points of order (Laughter).

THE HON. SRI R. VENKATARAMAN : If it were a black cat, it would be a sign of good luck.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ராஜ்ய பிரிவினை ஏற்பட்ட பிறகு, மொழிவாரி மாகாணங்கள் அமைந்த பிறகு, பட்டு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகள் நம் ராஜ்யத்தை விட்டுப் போய் விட்டன. அதனால் பொதுவாக தமிழ்நாட்டிலே பட்டு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகள் எங்கே இருக்கின்றன என்று ஆராய்ந்தோம். இதற்கு முன்னால் தென்காசியில் பட்டு உற்பத்தி செய்ய முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. ஆராய்ச்சியின் பயனாக அந்த இடத்தில் நாம் 'மல்பரி கல்டிவேஷன்' செய்துகொண்டு இருக்கிறோம். அதே போல் வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தத்தில் கூட பட்டுப் பூச்சிகளை வளர்க்க முடியும் என்றும் 'மல்பரி கல்டிவேஷன்' செய்ய முடியும் என்றும் தெரிகிறது. அதையும் பரிசீலனை செய்து அந்த இடத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கிறோம். தமிழ்நாட்டில் ஹோசூருக்கு அடுத்துள்ள இடங்களில், தாளவாடி போன்ற இடங்களிலே பெரும் அளவில் பட்டு உற்பத்தி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திருமதி ஏ .எஸ். பொன்னம்மாள் :** இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும்



31st March 1965]

செலவழிக்கப்பட்டு இருக்கிறதா? கிராமப்புரங்களிலும், குக்கிராமங்களிலும் கூட்டுறவு நெசவாளர்கள் மனுப்போட்டும்கூட சரியாகப் பரிசீலிக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சரியாகப் பரிசீலித்துத் தான் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று முடிவு எடுக்கிறோம். கொடுப்பதென்றால் அதற்கு மூலதனம் இருக்கவேண்டும், நிதி வசதி இருக்கவேண்டும். ஒரு பகுதி அவர்கள் கட்டவேண்டிய தொகை. அதைக் கட்டுவதற்கான வசதி இருக்கவேண்டும். இதெல்லாம் இருக்கிறதா என்று பார்த்தால், கிராமங்களில் இருக்கிற பல சங்கங்களுக்கு வசதி இல்லை. இப்போது பரவலாகக் கொடுத்து இருக்கிற சங்கங்கள் எல்லாம் சேலம், திருச்சி, மதுரை இம்மாதிரிப் பெரிய இடங்களில் கொஞ்சம் இருக்கின்றன. நிதி வசதி இருக்கிற சங்கங்களுக்குக் கொடுத்து இருக்கிறது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஆங்காங்கே கூட்டு நெசவாளர் சங்கங்கள் லாபகரமாக நடைபெறுகின்றன. சரியாகக் கண்காணிப்பு இல்லாததன் காரணமாக கொடவாசல், மாயவரம் போன்ற இடங்களில் சங்கங்கள் நஷ்டத்திற்குள்ளாகின்றன. சரியான கண்காணிப்பு இருக்க என்ன ஏற்பாடுகள் செய்ய உத்தேசம்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிர்வாகத் துறையில் கூட்டுறவு இலாகா கண்காணிக்கும். கைத்தறி நெசவாக இருந்தால் இன்டஸ்ட்ரீஸ் இலாகா கண்காணிக்கும்.

**திரு. து. ப. அழகமுத்து :** சில கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, நெசவாளர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக நிலம் எல்லாம் வாங்கி ஒதுக்கப்பட்ட பிறகும்கூட தேசீய நெருக்கடியின் காரணமாகக் கட்டிடம் கட்டுவதற்குப் பணம் சாங்ஷன் செய்ய முடியாத நிலை இருக்கிறது, ஆகவே, இதைத் தவிர்த்து, பழைய படி அவர்கள் எல்லோரும் வீடு கட்டிக்கொள்வதற்குப் பணம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது மூன்றாவது திட்டத்தில் இல்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** குற்றாலத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற திட்டத்தில் மாடல் வீவர்ஸ் ஷெட் போட்டு அதில் சில்க் யார்ன் உற்பத்தியை அதிகமாக்க சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்த நெசவாளர்களுக்குத்தான் வீடு கட்டிக்கொடுக்க முடியும், அப்பொழுது தான் அவர்களிடமிருந்து தொகையை வசூல் செய்வதற்கு வசதியாக இருக்குமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் கூட்டுறவுச் சங்கங்களில் சேராதவர்களுக்கு வீடு கட்டும்

திட்டம் இல்லையா? அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடாது என்ற பாலிசி இருக்கிறதா? இண்டஸ்டிரியல் பைனான்ஸ் பாலிசி என்ற முறையிலே கூட்டுறவுச் சங்கங்களில் சேராதவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டபொழுது, கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்களுக்குத்தான் வீடுகட்டும் திட்டம் என்ற கொள்கை ஒத்துக் கொள்ளப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன மாறுதல் செய்யமுடியும் என்பதை இப்பொழுது சொல்வதற்கில்லை.

### *Industrial Estates in Private Sector*

* 383 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the nature of assistance given by the Government for the establishment of Industrial Estates in private sector?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government sanction loan equal to 80 per cent of the cost of the schemes after the Co-operative Societies or Companies establishing the Industrial Estates, raise a share capital equal to 20 per cent of the cost. The loan which is repayable in 15 years will bear interest at the rates to be fixed suitably in individual cases. Besides the free services of an Administrative Officer for each of the Estates will be sanctioned for an initial period of 3 years.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தனியார்களால் நடத்தப்படுகின்ற தொழில் பேட்டைகளுக்கு 80 சதவிகிதம் கடன் உதவி அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் துறையிலேயே முழுத் தொகையையும் போட்டு ஏற்பாடு செய்தால் என்ன என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு துறையிலும் செய்கிறோம். சர்க்கார் துறையில்தான் ஏராளமான தொழில் பேட்டைகள் செயல்படுகின்றன. அத்துடன் கூட்டுறவுத் துறையுடனும் சேர்ந்து செய்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் யார் யார் தொழில் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் ஒன்று சேர்ந்து தொழில்பேட்டைகள் ஆரம்பிப்பதற்கு முன்வருவார்கள் என்பது தான். அப்பொழுதுதான் தொழில் பேட்டை கட்டி முடிக்கப்பட்ட பிறகு அது யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை வராது.

MR. SPEAKER : I think the hon member wants to know why hundred per cent loan should not be given. Anyway, the hon. member may repeat his question.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** பூராத் தொகையும் அரசாங்கமே போட்டு அரசாங்கத் துறையிலே என் நடத்தக்கூடாது என்பது தான் என்னுடைய கேள்வி. எத்தனை தொழில் பேட்டைகள் இருக்கின்றன என்பதையும் அறியலாமா?

MR. SPEAKER : The Hon. Minister has already answered that question.



**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கோவாபரேடிவ் இண்டஸ்ரியல் எஸ்டேட், தூத்துக்குடி முடியும் தறுவாயில் இருக்கிறது. கோவாப்பரேடிவ் இண்டஸ்டிரியல் எஸ்டேட், சிவகாசி பாதி வேலை நடந்துகொண்டு இருக்கிறது. கோவாப்பரேடிவ் இண்டஸ்டிரியல் எஸ்டேட், பொள்ளாச்சி-உடுமலைப்பேட்டை வேலை நடந்து கொண்டிருக்கிறது. வியாசர்பாடியில் 20, 30 யூனிட்டுகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. கோவாப்பரேடிவ் ஆட்டோமொபைல் பார்ட்ஸ் இண்டஸ்டரி, ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. கே. ஆர். சுந்தரம் இண்டஸ்ரியல் எஸ்டேட் வேலை துவங்கி விட்டது. கோயம்புத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் சில யூனிட்டுகள் வேலை ஆரம்பமாகும் தறுவாயில் இருக்கின்றன. செல்ஃப் ஹெல்ப் இண்டஸ்டிரியல் எஸ்டேட், வேலச்சேரி ஆரம்பமாகும் நிலையில் இருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுகாவினுடைய தலைநகரிலேயும் சிறிய சிறிய தொழில் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் இந்தத் தொழிற் பேட்டைகளைத் தாலூகாத் தலைநகரிலே எற்படுத்த வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுதான் நோக்கமும் கூட. அதன்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமென்று பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நன்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாலுகாத் தலைநகர்களிலே தொழில் பேட்டைகள் அமைப்பதற்குப் பதிலாக அந்தந்தத் தாலூகாக்களிலுள்ள கிராமங்களிலே தொழில்பேட்டைகள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு அமைப்பதின் மூலம் தொழில் வளம் சரியாக இருக்குமா என்பது சந்தேகம். தாலூகாக்களே பின் தங்கிய பகுதிகள்தான். அதற்கும் பின் தங்கிய பகுதிகளாகிய கிராமங்களில் தொழில்பேட்டைகள் ஆரம்பிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது.

**திரு. முனு. ஆதி :** இந்தத் தொழில் பேட்டைகள் நடத்துவதிலே தனியார் துறையிலே நடத்தப்படுகின்ற தொழிலிலே அதிகப் பலன் கிடைக்கிறதா? அல்லது பொதுத் துறையிலே அதிகப் பலன் கிடைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவரவர் கருத்துப் பிரகாரம் பிரச்சாரம் செய்கிறார்கள், சர்க்காரைப் பொறுத்தவரையில் நாம் வைத்திருக்கிற தொழில்பேட்டைகள் திறமையாக நடக்கின்றன என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

**திரு. கோ. சி. மணி** : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழில்பேட்டை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இப்பொழுது தஞ்சையிலே தொழிற்பேட்டை நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டு ஆரம்பிக்க முடியுமா என்பதெல்லாம் இப்பொழுது சொல்வதற்கு இல்லை.

**திரு. ம. கமலநாதன்** : கிருஷ்ணகிரியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் பேட்டையிலே தொழில் ஆரம்பிக்க அநேகமாக யாரும் முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? 18 யூனிட்களிலே, 5 பேர்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : எனக்கு வந்திருக்கின்ற தகவல் முற்றிலும் மாறாக இருக்கிறது. ஃபங்ஷனல் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் புரூட் புராஸஸிங் ஆரம்பிக்க வேண்டுமென்று பலர் வந்து அந்த இடத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்** : சேலம் ஜில்லாவிலே ஒரு தொழில்பேட்டை ஆரம்பிக்க உத்தேசம் இருந்தது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்யமுடியாமல் இருந்தது. அதைப்பற்றி உயர்நீதி மன்றத்திற்கு வழக்குச் சென்றது. ஆகவே, வேறு யாரிடமிருந்தாவது இடத்தை விலைக்கு வாங்கி அந்த இடத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்தத் தொழிற்பேட்டை ஹைகோர்ட்டில் தொக்கிக்கொண்டிருக்கிறது. இதுவரையில் 2, 3 இடங்கள் சேலத்திலே வாங்குவதற்கு முயற்சி செய்தோம். ஆனால் அங்கு இருக்கிற மக்கள், தங்களுக்கு இருக்கின்ற நிலம் போகாமல் தொழில்பேட்டை நடத்தினால் நல்லது என்று நினைக்கிறார்கள். அந்த வித்தையைச் செய்ய எங்களால் முடியவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நீலகிரி ஜில்லாவிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க அமைச்சரவர்கள் அனுமதி அளிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இன்னும் முடிவெடுக்கவில்லை என்று சொன்னேன்.

* 384 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of employees in Industrial Estates at Ambattur and Guindy?

THE HON. SRI R. VENKATARAMAN :

4,349 – at Industrial Estate, Guindy.

2,114 – at Industrial Estate, Ambathur.

This refers to direct employment and not to secondary and tertiary employment.



**திரு. ம. கமலநாதன்** : கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் உள்ள சைக்கிள் அசெம்பிள் செய்யப்படுகிற இடத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? புரூட் புராஸஸிங்கிற்காக 18 யூனிட்டுக்களிலே எத்தனை யூனிட்டுகளுக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள்? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்த விதமான வேண்டுகோள் வந்திருக்கிறது என்று சொன்னேன். அதைப் பற்றி முடிவு இன்னும் எடுக்கவில்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம்** : சேலத்திலே தொழிற்பேட்டை ஆரம்பிக்க, விற்கப்படாத, ஆர்ஜிதம் செய்யப்படாத இடங்கள் பல இருக்கின்றன. அந்த இடங்களில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : வசதியிருக்குமானால் செய்யலாம். சர்க்காருக்கு இந்த இடத்தில்தான் வைக்கவேண்டுமென்று அவசியம் கிடையாது. பல வசதிகளையொட்டி நிலத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சில ஜில்லாக்களிலே, தேர்ந்தெடுக்கிற நிலங்களை மக்கள் முன்வந்து கொடுத்து அதற்குவேண்டிய பல வசதிகளையும் செய்துகொடுத்து தொழிற்பேட்டை ஆரம்பிக்கிறார்கள். மற்ற இடங்களில் சிலர் இந்த இடம் வேண்டாம் என்று சொல்லி, ஒவ்வொரு இடமாகக் காட்டிக்கொண்டே போகிறார்கள். அவ்வாறு சொல்கிற இடங்களில் சேலமும் ஒன்று என்று நினைக்கிறேன். அதனால்தான் காலதாமதம் ஆகிறது.

*Location of wells by dowsing method*

* 385 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any scheme, to fix the location of wells by dowsing method, and if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : There is no such scheme in the Agriculture Department.

வேளாண்மைத் துறையில் அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

**புலவர் கா. கோவிந்தன்** : வட ஆற்காடு கிணற்றுப் பாசனம் நிறைந்த மாவட்டம். அங்கு கிணறுகள் எல்லாம் பாறைக் கிணறுகள். பாறைகளை உடைக்க இயந்திர வசதி செய்து கொடுக்கப்படுமா? 9-00 a.m.

**கனம் திரு. பூ. கக்கன்** : உப கேள்வி இதிலே எழவில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : நீரோட்டத்தைக் கண்டு பிடிக்க அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டார் ஒரு கடியாரத்தை வைத்துக் கொண்டு பார்க்கிறார்கள். அந்த மாதிரி சோதனை செய்யப்பட்டதா? அல்லது பானிவாலா என்ற சாமியார் வந்து ஏதோ கண்டுபிடிப்பதாகக் கூறப்பட்டதே, அந்த முறையில் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கிணறு வெட்டக் கடன் வாங்கும் விவசாயப் பெருமக்கள் எல்லாம் அவர்களே தண்ணீர் எங்கே இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்கிறார்கள். வாட்டர் டிவைனர் வைத்துப் பார்க்கிற ஏற்பாட்டை ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டிலிருந்து செய்திருக்கிறார்கள். விவசாய இலாகா கடன் கொடுக்கும்போது அந்த மாதிரி டிவைனரை வைத்துப் பார்ப்பதில்லை.

**திரு. வை. சங்கரன்:** வாட்டர் டிவைனரை சர்க்காரே அமர்த்தி, தண்ணீர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வசதி செய்து அவர்களுக்குக் கடன் கொடுத்தால் கொடுக்கப்படுகிற பணம் நல்ல முறையில் செலவழிக்க ஏதுவாக இருக்கும் அல்லவா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இதைப்பற்றிப் பரிசீலனை செய்துதான் பதில் சொல்லவேண்டும்.

**திரு. செ. மாதவன்:** கிணறு வெட்டும் திட்டத்திற்காகக் கொடுக்கப்படக்கூடிய பணம் சரியான முறையில் செலவழிக்கப் படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. பாதி வெட்டும் போது தண்ணீர் இல்லையென்ற நிலை ஏற்பட்டால் பாதியிலேயே நின்று விடுகிறது. குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற பகுதி களில் தனித் திட்டம்போட்டுத் தண்ணீரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளை மத்திய சர்க்கார் செய்து வருகிறது. அதே போன்ற திட்டத்தை மேற்கொள்வது பற்றிப் பரிசீலிக்க நமது விவசாய இலாகா முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப் படுகிற திட்டம் வீணாகப் போகக் கூடாது. அந்த முறையில் தண்ணீர் வந்த பிறகுதான் முழுத் தொகையும் கொடுக்கப்படு கிறது. கிணற்றை வெட்டும்போது நன்மை பயக்குமா என்று அரசாங்கம் கண்காணித்துத்தான் கடன் கொடுக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கிணறு வெட்டுவதற்கு லோன் கொடுத்தாலும்கூட, மூன்று ஏக்கர்களுக்குக்கீழே வைத்திருக்கின்ற நிலச்சுவான்தாரர்கள் கிணற்றை வெட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொதுக் கிணறு ஒன்று வெட்டத் திட்டமிட்டு அரசாங்கம் கடன் உதவி செய்ய முன்வருமா?

**கனம் சபாநாயகர்:** கிணறு வெட்டுவதைப்பற்றி உப கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஆனால் மூலக் கேள்வியோ நீரோட்டத்தைக் கண்டுபிடிப்பது பற்றிய கேள்வி.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** வாட்டர் டிவைனரை வைத்துப் பார்த்து அந்த மாதிரிப் பொதுக் கிணற்றை வெட்டு வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** மானியக்கோரிக்கையின் பொது விவாதத்தின்போதே சொன்னேன். கூட்டுறவு சொசைட்டியில் அல்லது பஞ்சாயத்து போர்டில் அந்த மாதிரிப் பொதுக் கிணற்றை வெட்டி ஜனங்களிடம் இருந்து ஈவுத் தொகையை வசூலித்து நடத்த முன் வந்தால் அரசாங்கம் உதவி செய்யும்.



**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** டீப் போர் வெல் சம்பந்த மாக, கல்கத்தாவில் ஜியலாஜிகல் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அவர்கள் எங்கே தண்ணீர் இருக்கிறது அல்லது இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதன் கிளை ஸ்தாபனம் ஒன்றைச் சென்னையில் வைத்துக் கிணறுகளை வெட்டுவதற்குப் பரிசீலனை செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** கிணறு வெட்டும்போது தண்ணீர் கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேகம் இருந்து வருகிறது. நிரந்தரமாகத் தண்ணீர் அடியில் இருப்பதைக் கண்டு பிடிக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** விவசாய இலாகாவைப் பொறுத்தவரை அந்த ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை. விவசாயிகளே பார்த்து எங்கே தண்ணீர் இருக்கிறது என்று கண்டுபிடித்து விடுகிறார்கள். தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க ஜோசியர்கள் இருக்கிறார்கள். குச்சியை வைத்துப் பார்த்து விவசாயிகளே கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் இது போன்று தண்ணீர் இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. விவசாய இலாகாவில் இல்லை.

**திரு. முனு. ஆதி:** நீர் ஓட்டத்தைக் கண்டு பிடிக்கிறவர்கள் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் இருப்பதாகச் சொன்னார்கள் அவ்வாறு கண்டுபிடிக்கப்படுவது விஞ்ஞான ரீதியிலா அல்லது தெய்வபக்தி முறை அல்லது வைதிக முறையிலா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எந்த முறையாக இருந்தாலும் தண்ணீர் இருக்கிறதா என்பது கண்டறியப்படுகிறது.

**கனம் சபாநாயகர்:** நமது எஞ்ஜினியரிங் இலாகாவில் இத்தனை முறைகள் இல்லைபோல் தெரிகிறது.

**திரு. சா. கணேசன்:** ஏற்கெனவே இந்த மாநில சர்க்காரிலே உணவுத் துறையிலே இருந்த ஸ்ரீமான் எம். எஸ். சிவராமன் அவர்கள் கவட்டைக் கம்பு போன்றவற்றை வைத்து, இந்த மாதிரி நீரோட்டத்தைக் கண்டுபிடித்ததில் நல்ல பலன் ஏற்பட்டிருக் கிறது என்று அமைச்சர்களே பாராட்டியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அதை நிரந்தரமாக்க முயல் வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்த முறை இப்போது கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

**திரு. ஆ. துரையரசன்:** பூமிக்கடியில் இருக்கும் நீரோட்டத் தைக் கண்டுபிடிக்க தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, ஓரத்தநாடு பகுதியில் தொடங்கியிருப்பதாக அறிக்கையில் கூறி யிருக்கிறார்கள். அறந்தாங்கி வட்டப் பகுதி 'நான்-சி. எம். பி.' ஏரியாவாக இருப்பதால் அதிக நீர் ஓட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு எப்போது விஸ்தரிக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

MR. SPEAKER : So, the Hon. Minister wants a separate question.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, நீரோட்டத்தைக் கண்டு பிடிக்கும் முறைகளை விவசாயிகள் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த முறைகளில் எல்லாம் சிறந்த முறை, வேளாண்மைக்கு அதனால் நன்மை ஏற்படுகின்ற முறை எந்த முறையோ, அதற்கான முயற்சிகளில் ஈடுபட அரசினர் முன் வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்தின் முயற்சிகள் இல்லாமலே விவசாயிகள் அநேக கிணறுகளை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்கே தண்ணீர் இருக்கிறது, எங்கே தண்ணீர் இல்லை என்பதை விவசாயிகளே கண்டுபிடித்துக் கொள்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக அதைச் செய்து கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** சிவராமன் அவர்கள் கையாண்ட பச்சை மரத்தின் குச்சியை வைத்துக்கொண்டு நீர் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கும் முறையை அநேகமாக விவசாயிகள் எல்லோரும் கற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் அத்தகைய தெரிந்த வாட்டர் டிவைனர்கள் பற்றிய சில தகவல்களைத் தாத்தக்க ஜாபிதா ஒன்றை விவசாய இலாகா தயார் செய்து மற்ற விவசாயிகளுக்குத் தெரியும்படியாகச் செய்தால் விவசாயிகள் பயன்பெற முடியும் என்ற வகையில் அப்படி ஒரு ஜாபிதாவைத் தயார் செய்ய அரசினர் முன்வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது நல்ல யோசனை. அரசாங்கம் இதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

**கனம் சபாநாயகர் :** இதைப்பற்றி 'யூனிவர்சிடி'யில் ஒரு 'கோர்ஸ்' ஓப்பன் பண்ணலாம்.

**திரு. செ. மாதவன் :** ஜோசியம் பார்த்துக் கிணறு வெட்டுவதிலே பல இடங்களில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. ஜியலாஜிகல் டிபார்ட்மெண்ட், தண்ணீர், எண்ணை முதலியவற்றைக் கண்டுபிடிப்பதற்காகச் சில கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். அதை நமது மாநில சர்க்கார் வாங்கி விவசாயிகளுக்கு உதவும் படியாகச் செய்தால் கிணறுகளை நல்ல முறையில் வெட்ட வசதி ஏற்படுமல்லவா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த வருஷத்திலிருந்து பூமிக்குள் நிரந்தரமாக எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காக 'அண்டர்கிரவுண்ட் வாட்டர் இன்வெஸ்டிகேஷ'னுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எந்தெந்த இடத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, குறிப்பிட்ட ஒரு இடத்தில்





தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதை அவர்கள் கண்டு பிடிப்பார்கள். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த மட்டில் எவ்வளவு இடத்திற்கு அதை விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப் போலவே மத்திய அரசாங்கத்தில் இருந்து எக்ஸ்ப்ளோரேடரி டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் என்ற அமைப்பு ஜியலாஜிகல் சர்வே அடிப்படையில் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் ஆராய்ச்சி செய்து வருகிறது. இராமநாதபுரத்திலும், தஞ்சை ஜில்லாவிலும் ஊற்று நீர், பல நூறு அடிகளுக்குக் கீழ் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து ஒரு அறிக்கை தயார் செய்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** விவசாயிகள் ஊக்கமாக இதையெல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விவசாயிகளுக்கு இன்னும் கொஞ்சம் ஊக்கம் அதிகமாகக் கொடுப்பதற்கு போரிங் செட்களைப் பயன்படுத்தி ஆங்காங்கு அவர்களுக்குக் குறைந்த சார்ஜில் அதைச் செய்ய முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** போரிங் செட்கள் வைப்பதற்குக் கூட ஊக்கம் அளித்து ஒத்தாசை உதவி செய்து வருகிறது.

### *Bug poison and pesticides*

* 386 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to regulate the supply and use of bug-poison and pesticides?

**கனம் திரு. பூ. கக்கன் :** இல்லை.

**திரு. வை. சங்கரன் :** மூட்டைப்பூச்சி மருந்துகள், மூட்டைப் பூச்சிகளைவிட மனிதர்களின் உயிர்களைத்தான் அதிகமாகக் குடித்துள்ளதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரிகளில் வந்துள்ள தற்கொலை கேஸ்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் பாதிக்கு மேல் மூட்டைப்பூச்சி மருந்தினால் உள்ளது. ஆகவே இந்த லெத்தல் டோஸ் குறைவாக இருக்கும்படி மூட்டைப் பூச்சி மருந்தைக் கட்டுப்படுத் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மூட்டைப்பூச்சி மருந்தைக் கட்டுப்படுத்த ஏற்கெனவே அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது. அதிகாரிகள் சென்று அந்த மருந்து விற்பனை செய்கிறவர்களிடம் பரிசோதனை செய்ய வேண்டும். விற்பவர்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் விற்க வேண்டும், சிறு குழந்தைகளுக்கு விற்கக்கூடாது என்றிருக்கிறது. வாங்குகிறவர்கள், அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் நிலைமையைத் தெரிந்துதான் செய்யவேண்டுமென்று விதிமுறைகள் எல்லாம் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் விற்க வேண்டும் என்பது கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது. 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ள

[31st March 1965

வேண்டுமென்ற எண்ணம் கூட உதிக்க மாட்டாது. ஆகவே இதைச் செம்மையான முறையில் தீமையில்லாத முறையில் மூட்டைப் பூச்சியைக் கொல்லக்கூடியதாகவும், மனித உயிருக்குப் பாதகம் இல்லாத நிலையிலும், இந்த மருந்தைச் செம்மைப்படுத்தக் கூடிய ஒரு நெறியைக் கண்டு பிடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பரிசீலனை செய்ய வேண்டும். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதுபோல் இருக்கிறது. பரிசீலனை செய்துதான் பதில் சொல்ல முடியும்.

**திரு. முனு. ஆதி** : மூட்டைப் பூச்சி மருந்து வாங்க சில கட்டுப்பாடுகள் விதித்தால் நலம் என்று கருதுகிறோம். மது வகைகள் உபயோகிக்க டாக்டர் சர்டிபிக்கேட், மெடிக்கல் பிராஞ்ச் சர்டிபிகேட் வாங்குகிறார்கள். அதேபோல் பஞ்சாயத்து சானிட்டரி இன்ஸ்பெக்டார்கள் சர்டிபிக்கேட் வாங்கினால்தான் இந்த பக் பாயிசன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : அரசாங்கம் கையாண்டு வரும் முறை தான் நல்ல முறை.

### *Manufacture and sale of "Arishtam"*

* 387 Q.—Sri A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) whether it is a fact that most of the Pharmacists are engaged in the manufacture and sale of a sort of intoxicating liquor highly injurious to the public health by the name "**Arishtam**"; and

(*b*) if so, the action taken thereon?

**கனம் திரு. பூ. கக்கன்** : (அ) ஆயுர்வேத மருத்துவர் என்று சொல்லிக் கொள்பவர்களே பெரும்பாலும் 'அரிஷ்டம்' தயாரித்து விற்று வருகிறார்கள். மருந்து கலக்குபவர்கள் (pharmacists) அல்ல.

(இ 'அரிஷ்டம்' உட்பட ஆயுர்வேத மருந்துகள் தயாரித்து விற்பது 1964-ம் ஆண்டு மருந்துப் பொருட்கள், வாசனைப் பண்டங்கள் (திருத்த) சட்டத்தின் (மத்திய சட்டம் 13/1964) மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் ஆயுர்வேத மருந்துப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பது குறித்த பல்வேறு ஷரத்துக்களை அமுல்படுத்தி விதிகள் இயற்றும் போது தான் 'அரிஷ்டம்' போன்ற போதை தரும் பானங்கள் தயாரிப்பவர்கள் உட்பட, ஆயுர்வேத மருந்துப் பொருட்களைத் தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

Sri A. KUNJAN NADAR : Is the Hon. the Minister aware that there were three instantaneous deaths in P. V. S. Pharmacy at Thuckalai recently, due to taking this 'arishtam'?

The Hon. Sri P. KAKKAN : I have no such information.



31st March 1965]

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு** : கன்னியாகுமரி ஜில்லாவில் எல்லாத் தாலூக்காக்களிலும் நான் சில சமயம் சென்றிருந்த போது, அரிஷ்டம் என்ற பெயரால் மது வகைகள் கலந்து பெரும் அளவில் அங்கு விற்பனை செய்யப்படுகிறது என்ற புகார்கள் கூறப்பட்டன. ஆகவே அத்தகைய புகார்கள் பொது மக்கள் அதிகமாக கூறும்போது, அரிஷ்டம் என்ற பெயரால் மது வகைகளைக் கலக்குவதை நிறுத்தக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த மட்டில் ட்ரக் கண்ட்ரோல் ப்ராஞ்ச் விசாரணை செய்தது. அம்மாதிரிக் குறைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே போலீஸ் இலாகாவை விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறோம். ஐ.ஜி. ரிப்போர்ட்டை எதிர்பார்க்கிறோம்.

**திரு. சா. கணேசன்** : அரிஷ்டம் என்பதையே ஒழித்து விட்டால் அல்லது மிகக் கடுமையான தடை விதிப்பதினால்-அரிஷ்டம் என்பது வேறொன்றும் அல்ல, இனிப்பான கஷாயம் என்பதுதான், அது ஒரு ஆயுர்வேத ப்ரப்பரேஷன்—அதை ஒழித்துவிட்டால் பல நோய்களைப் போக்க பலஹீனர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். நியாயமான முறையில் மருந்து தயாரிப்பவர்கள், நியாயமான அனுமதி பெற்ற வைத்தியர்கள் இவர்கள் அன்றி வேறு யாரும் அரிஷ்டம் விற்கக் கூடாது என்ற அளவில் செயல்பட வேண்டுமென்பதை அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : அரிஷ்டத்தில் பல வகை இருக்கிறது. சில கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. Ayurvedic preparations such as Ashokarishtam, Dasamoolarishtam, Jeerakarishtam and Madhukesavam are recommended by the Board of Revenue to be included under restricted preparations for which licences should be obtained under the Prohibition Act. இவைகள் எல்லாம் இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் அதுபற்றிய குறைகள் இருக்கின்றன. அதைக் கண்டுபிடிக்க தக்க ஏற்பாடுகள் செய்து ரிப்போர்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Sri A. KUNJAN NADAR : Not only in Kanyakumari district but everywhere this Arishtam is sold. In Madras there is a Pharmacy known as Sri Krishna Pharmacy, which was inaugurated by our former Chief Minister. Their main business is selling Arishtam. There are frequent deaths due to the taking of this Arishtam. Of the three persons who died in Thuckalai, one happened to be a Police constable. In view of the injurious effects of this liquor. will the Government institute an enquiry by experts and ban this liquor altogether from being sold to the public?

**கனம் திரு. பூ. கக்கன்** : இந்த மாதிரிக் குற்றங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை விசாரணை செய்து பரிசீலனை செய்யும்படி போலீஸ் இலாகா மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[31st March 1965

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சேலம் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் மது காவசம் என்ற குடி வகை மருந்துக் கடைகளில் விற்கப்படுகிறது. நாட்டுச் சாராயத்திற்கும் அதற்கும் வித்தியா சமே கிடையாது. ஆனல் அதை விற்கலாம் என்று அனுமதி தருகிறபோது பல கிராமங்களில் மருந்துக் கடைகள் என்ற முறையில் கடைகள் ஏற்படுத்தப்பட்டு அந்த மது வகை விற்கப்படு கிறது. அதைக் கவனித்து அரசாங்கம் தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அரிஷ்டம் என்ற பெயரால் ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். ட்ரக் கண்ட்ரோல் ப்ராஞ்ச் அதைக் கண்காணித்துத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அபிப் பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். போலீஸைக் கேட்டிருக்கிறோம். மத்திய சர்க்காருக்கு எழுதி, மக்களுக்குக் கெடுதி வாராமல் அவர் கள் குடித்துக் கெட்டுப்போகாமல் இருக்க ஏதாவது செய்ய முடி யுமா என்பதை அரசாங்கம் கவனித்து வருகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நம் மாநிலத்தில் செயல்படுகிற மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் போதை இருந்தால் தண்டனை கொடுப்பது இப்போது இருக்கிற முறை. ஆனல் அரிஷ்டம் சாப்பிட்டாலும் பட்டைச் சாராயம் சாப்பிட்டாலும் இரண்டுக்கும் ஒரேவிதமான போதைதான் உண்டாகிறது என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனல் நம் உயர்நீதி மன்றம் அரிஷ்டம் சாப்பிட்டுப் போவதை உண்டானல் அது இந்தச் சட்டத்தின் கீழ் வராது என்று முடிவுபடுத்தியிருப்பதால், இந்தச் சட்டத்தை அமுல் படுத்தும் நிலையில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த அரசாங்கம் அரிஷ்டம் என்கிற போதைப் பொருளையே ஏன் தடைசெய்யக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கிராமங்களில் தயார் செய்து கொண்டி ருக்கிறார்கள். அது ஆளைக் கெடுத்து விடுகிறது என்று சொன்னேன். ட்ரக் கண்ட்ரோல் பிராஞ்சு விசாரனை செய்யவும் போலீஸ் விசாரணை செய்யவும் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ரிப்போர்ட்டைப் பார்த்த பிறகுதான் முடிவுசெய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அரிஷ்டத்தில் இந்த அளவுக்கு ஆல்கஹால் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ? சர்க்கார் போட்டிருக்கிற விதிகளின்படி இவ்வளவுதான் ஆல்கஹால் சேர்க்கலாம் என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த் அளவுக்குத்தான் சேர்க்கலாம் என்று விதிமுறை இருக்கிறது. ஆனல் எந்த அளவுக்குச் சேர்க்க வேண்டும் என்ற தகவல் இப்போது என்னிடமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரிஷ்டம் என்கிற போதை யூட்டுகிற பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடை செய்வ தற்குச் சட்டங்கள் இடம் தரவில்லை என்று தெரிவதால், சட்டத்தை மாற்றம் செய்யவேண்டும் என்று போலீசார் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்களா?



31st March 1965]

**கனம் திரு. பூ. கக்கன் :** போலீசாரிடம் ரிப்போர்ட் கேட்டிருக் கிறோம். சீக்கிரமாக வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கள்ளச் சாராயத்தைச் சாப்பபிட்டு விட்டு ஆயுர்வேத டாக்டர்களிடம் அரிஷ்டம் சாப்பிட்டதாக சர்டிபிகேட் வாங்கி, கோர்ட்டுகளில் காட்டித் தப்பித்துக்கொள்ளு கின்ற முறை இருந்து வருகிறது. ஆகவே ஆயுர்வேத டாக்டர்கள் கொடுக்கும் சர்டிபிகேட் செல்லாது என்று சர்க்கார் உத்தரவிடுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒருத்தரை நினைத்துக்கொண்டு எல்லோரும் கெடுதி செய்கின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது. கெடுதி செய்யக்கூடியவர்களாக இருந்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, இது ஏதோ கன்னியாகுமரி ஜில்லாவில் மட்டும்தான் கிடைக்கிறது என்பதில்லை, எல்லா இடங்களிலுள்ள கடைகளிலும் விற்கப்படு கிறது. சோழவந்தானில் மூன்று கடைகள் இருக்கின்றன. முதலாவது இதைப்பற்றி எனக்குத் தெரியாமல் இருந்தது. கிராமத்திலுள்ள மக்கள் கள்ளுக்கடையில் கூடுவது போல் இந்த அரிஷ்டம் விற்கின்ற கடைகளில் கூடுகிறார்கள். போலீஸ்காரர் களும்கூட நிற்கிறார்கள். இதன் மூலம் மக்களுக்குக் கெடுதல் ஏற்படுவதால், மாநிலம் முழுவதும் இம்மாதிரிப்பட்ட அரிஷ்டம் விற்கக்கூடாது என்று தடை விதிக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்கள் சொன்னது மாதிரி, இதை அடியோடு எடுத்து விட்டால் பல வியாதிகளுக்கும் மருந்து கிடைப்பதற்குச் சிரமம் ஏற்பட்டுவிடும். ஆகவே இதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். அனேகமாக கன்னியாகுமரி ஜில்லாவில்தான், மலையாளத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கைத்தேர்ந்தவர்கள் இந்த அரிடஷ்த்தைத் தயார் செய்கிறார்ககள். அந்தப் பகுதியிலிருந்து பல இடங் களுக்கும் வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆயுர்வேதப் பொருள்கள் நமக்குத் தேவையாகத்தான் இருக்கின்றன. ஆனல் சென்னை மாநகரத்தில் முக்கியமாக குடிசை வாழ் பகுதிகளில், மது கஷாயம் என்றும் மதன கஷாயம் என்றும் பாட்டில்களில் அடைத்து, சிறுசிறு கடை களில் அதிகமாக விற்றுவருகிறார்கள். இதைத் தடுக்கவேண்டும் என்று மதுவிலக்குக் கமிட்டியில் சொன்னபோது, இதைத் தடுப்ப தற்குப் போதுமான அதிகாரமும் சட்ட வசதியும் இல்லை என்று போலீசார் சொல்லுகிறார்கள். ஆகவே இம்மாதிரிப்பட்ட கஷா யத்தைத் தடுப்பதற்கு ஏதாவது சட்டம் கொண்டுவர அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** என்னுடைய பதில்களில் இதைத் தான் சொன்னேன். அரசாங்கம் இதைப்பற்றி நன்கு பரிசீலித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[31st March 1965

MR. SPEAKER : That cannot be considered in a question like this. If the suggestion of the Hon. Member is to be implemented, a Bill will have to be brought forward for amending the Act. If such a Bill is brought forward, the hon. Member may give notice of amendments. It is only then that such questions can be considered and not during the question-hour.

*Schemes for cultivation of vegetables*

* 388 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the various schemes under the special development programme for cultivation of vegetables?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the Table of the House.

இது குறித்துச் சபைமுன் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை சங்கரன் :** இதுவரைக்கும் எவ்வளவு உதவி வாங்கப் பட்டிருக்கிறது? இந்தத் திட்டத்தின் பயனை எந்த அளவுக்குப் பயன் கிடைத்திருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதுவரைக்கும் நாம் கொடுத்திருப்பது, 1962-63-ல் நம்முடைய டார்கெட் 200 கிலோகிராம், உற்பத்தியானது 430 கிலோகிராம். கொடுத்திருக்கும் நிதி அதில் 0.24 லட்சம். 1963-64-ல் 9,152 கிலோகிராம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது நம்முடைய டார்கெட், உற்பத்தியானது 9,674 கிலோ கிராம். இதற்குக் கொடுத்திருப்பது 5.96 லட்சம். 1964-65-ல் 1964 நவம்பர்வரை உற்பத்தி செய்திருப்பது 8,114 கிலோகிராம். கொடுத் திருப்பது 2.02 லட்சம் ரூபாய்.

*Soil testing Laboratories*

* 389 Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state :

(a) the number of soil testing Laboratories in the State: and

(b) the number of experiments carried out in these laboratories during 1963–64?

THE HON. SRI P. KAKKAN : (a) There are at present, three soil testing laboratories functioning in this State, one each at Coimbatore, Aduthurai and Koilpatti.

| | | |
|---|---|---|
| (b) | Coimbatore | 7,025 |
| | Aduthurai | 13,755 |
| | Koilpatti | 3,344 |
| | Total .. | 24,124 |

(அ) கோயம்புத்தூர், ஆடுதுறை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்றாக மூன்று பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் நமது மாநிலத்தில் பணியாற்றி வருகின்றன.

a Printed as appendix III on pages 679–680.



31st March 1965]

| | | |
|---|---|---|
| (இ) | கோயம்புத்தூர் | 7,025 |
| | ஆடுதுறை | 13,755 |
| | கோவில்பட்டி | 3,344 |
| | மொத்தம் | 24,124 |

**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** சார், நமது மாநிலத்தில் இன்னும் எத்தனை இடங்களில் மண்வள ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்கு அடுத்தபடியாக கடலூரில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் திருக்குப்பம் என்ற இடத்திலும், மதுரையிலும், வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தத்திலும் இந்த மண்வள ஆய்வுக் கூடங்களை வைக்கவும் உத்தேசம் இருக்கிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஸார், பட்டுக்கோட்டையில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று இருந்தது. இப்போது அதை எடுத்துவிட்டார்கள். ஆகவே தற்போது அதில் மண்வள ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கு ஏற்கெனவே ஒரு விதைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடத்தின் பக்கத்தில் ஆடுதுறையில் இப்போது மண்வள ஆய்வுக் கூடம் இருக்கிறது. தேவைப்பட்டால் அங்கு போய் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த மண் வள ஆராய்ச்சிக் கூடங்கள் பல இடங்களிலும் அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்தியதே, எந்த நிலத்திற்கு எந்த உரம் போட வேண்டும் என்று கண்டுபிடித்து, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் இத்தனை இடங்களில் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று சர்க்கார் கணக்கு அனுப்புகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியனால் அதன்படி செய்ய முடிவதில்லை. இதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன் :** எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்த நிலையத்தை ஏற்படுத்த முடியாது. பக்கத்திலுள்ள லாபரட்டரிக்கு மண்ணைக் கொண்டு போனால் பரிசோதனை செய்து விவரத்தைச் சொல்வார்கள். மாகாணத்தில் பல இடங்களிலும் இம்மாதிரிப் பரிசோதனை செய்யவேண்டும். படிப்படியாகத்தான் முக்கியமான இடங்களில் எல்லாம் இதற்கான ஆய்வுக் கூடங்களை அமைத்துக்கொண்டு வருகிறோம். எல்லாவற்றையும் உடனடியாகச் செய்துவிட முடியாது.

**திரு. கோ. சி. மணி :** இந்த மண் வள ஆராய்ச்சிக்குக் கிராம சேவக்குகள் மண்ணை எடுத்துச்செல்கிறார்கள். சர்வே நம்பருக்கு சர்வே நம்பர் மண் வளம் வித்தியாசப்பட்டிருக்கிறது. பல

நிலங்கள் இருக்கக்கூடிய ஒரு நிலச்சுவான்தாரிடத்திலிருந்து மட்டும் மண்ணை எடுத்துக்கொண்டுபோய் அலுவலகத்தில் கொடுக்கிறார்கள். மண்வள ஆராய்ச்சிக் கூடத்திலுள்ள எந்த அதிகாரியும் வந்து மண்ணை எடுத்துப்போவதில்லை. ஆகவே இதிலுள்ள பயன் சரியாகத் தெரியவில்லை. ஆகவே இதற்கான அதிகாரிகளே நேரில் வந்து மண்ணை எடுத்துக் கொண்டு போவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதிகாரிகள் ஒவ்வொரு இடத்திலும் மண்ணை எடுத்துக் கொண்டு இருக்க முடியாது. கிராம சேவக்குகள் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் மூலமாக விவசாயிகளுக்குத் திரும்பி வந்து ரிசல்ட் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** சார், மண்ணை எடுத்துப் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டாலும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து முடிவை விவசாயிகளுக்குச் சொல்வதோ அதற்கு தகுந்தவாறு உரம் போட வேண்டும் என்று சொல்லுகின்ற பழக்கமோ கிடையாது. ஆகவே மண்ணை எடுத்துக்கொண்டுபோனால் அதற்குப் பிறகு என்ன செய்யவேண்டும் என்று சொல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மண்ணை எடுத்துக்கொண்டு போனால் நிச்சயமாக ரிசல்டைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். என்னிடத்தில் இருக்கின்ற தகவல்களின்படி, இம்மாதிரி மண் வள ஆராய்ச்சி ஏற்பட்டதின் காரணமாக 30 சத விகிதத்திலிருந்து 70 சத விகிதம் வரை அதிகமாக உற்பத்தியில் ஆதாயம் கிடைக்கிறது என்று தெரிகிறது. ஆகவே மண்ணைப் பரிசோதனைக்கு எடுத்துக்கொண்டு போகிறவர்கள் திரும்பி வந்து ரிசல்ட்டை சொல்வதில்லை என்று சொல்வது சரியல்ல. அப்படி ஏதாவது அவர்கள் சொல்லாமல் இருந்தாலும் விவசாயிகள் சும்மா இருந்து விடக்கூடாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Lands for Bhoodan Yagna*

* 390 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the extent of lands contributed to Bhoodan Yagna in the State: and

(*b*) the extent distributed to the landless in the State?

THE HON. SRI P. KAKKAN : (*a*) **51,332 acres.**

(*b*) **17,286 acres.**

(அ) 51,332 ஏக்கர்கள்.

9-30 a.m. (இ) 17,286 ஏக்கர்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, 51,000 ஏக்கரில் 17,000 ஏக்கர்தான் நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீதி நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கு அற்ற நிலங்களா, அதனால்தான் கொடுக்கப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. பூ. கக்கன் :** சில இடங்களில் இப்போது கமிட்டிகள் அமைத்து, அந்தந்த வட்டாரத்திலே இருக்கிற லோக்கல் கமிட்டிகள் பகிர்ந்து கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதிலே துரிதமாகச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சில இடங்களில் நிலங்கள் இருந்தாலும் அந்த நிலங்களைக் கேட்க பாரும் முன் வரவில்லை. கிடைத்திருக்கிற நிலங்களில் பெரும் பகுதி நல்ல நிலங்களாக இருப்பதால்தான் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. லாயக்கு இல்லாத நிலங்களும் இருக்கின்றன. சில இடங்களில் லாயக்கில்லாததும் இருக்கின்றன.

### உப்பு உற்பத்தி

* 391 **கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் உப்புத் தயாரிப்பதற்கான சர்வே ஏதேனும் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) ஆம்.

(இ) 1962-ல் உப்புத் தயாரிப்பதற்கும் ஏற்ற நிலங்களைப்பற்றித் தோராயமாக சர்வே செய்யப்பட்டது. இந்த மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர்த்து, சுமார் 9,500 ஏக்கர் நிலம் உப்புத் தயாரிப்பதற்குக் கிடைக்குமென்று தெரிந்தது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், இந்த ராஜ்யத்தில் உற்பத்தி ஆகக் கூடிய மொத்த உப்பின் அளவு என்ன என்று அறிய முடியுமா? உள்நாட்டுத் தேவைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் போக ஏராளமான உப்பு தேங்கிக் கிடக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இந்தச் சிக்கலைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அல்லது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : The current production is 7.7 lakhs tons per annum. இன்னும் 12 லட்சமாகக்கூட ஆக்க முடியும். மூன்றாவது திட்டத்தில் அந்த அளவுக்கு ஆக்கவேண்டுமென்று திட்டம். உப்பு தேங்கி இருக்கிறதா இல்லையா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, சர்வே செய்தபோது தரங்கம்பாடி, காவிரிப் பட்டணம் பகுதியில் உப்பு உற்பத்தி செய்யத் தகுதியான இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களா? அதன் மீது எடுத்த முடிவு என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** தஞ்சாவூரில் சர்வே செய்திருக்கிறார்கள். பட்டுக்கோட்டை கடற்கரைப் பகுதியில் 508.50 ஏக்கர், நாகப்பட்டணம் பகுதியில் 385.07 ஏக்கர், மாயூரம் பகுதியில் 42.26 ஏக்கர் இருப்பதாக அவர்கள் தகவல் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உப்பிலிருந்து உப பொருள்களை எடுக்க தொழிற்சாலைகளை நிருவும் உத்தேசம் உண்டா? அப்படியானால் எங்கெங்கு நிருவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையயா : அந்தக் கேள்விக்கு இதிலிருந்து பதில் சொல்ல முடியாது. இப்போதே திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. இன்னும் பல இடங்களில் அமைக்க லைசென்சுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### இம்மாநிலத்தில் புதிய ரயில் பாதைகள்

* 392 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் புதிய ரயில் பாதைகள் ஏதாகிலும் ஏற்படுத்த மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) During 1964, the following new Railway lines in this State were recommended to the Government of India for execution :—

(i) Tirunelveli--Cape Comorin via Trivandrum and Nagercoil.

(ii) Laying of a Broad gauge line from Tiruchirappalli to Tuticorin via Dindigul and Madurai.

(iii) Salem–Bangalore line to be converted into broad-gauge instead of the planned metre-gauge.

(iv) Electrification of the suburban line on the broad-gauge from Madras to Arkonam.

(v) Dindigul to Salem via Karur; and

(vi) Theni to Gudalur,

(vii) Chinnasalem to Chingleput

(viii) Coimbatore–Satyamangalam–Chamrajanagar.

The Government of India have stated that the question of inclusion of the electrification of the Madras–Arkonam section in the Fourth Five Year Plan is under consideration and that the other new lines will be considered by the Planning Commission at the appropriate time. They have also stated that the new metre-gauge line under construction between Bangalore and Salem will be able to carry all the anticipated traffic in this region in the next ten to twelve years and that there is no justification now for the additional investment of Rs. 3 crores required for the construction of the line as broad gauge.

These lines will be considered for being recommended to the Government of India for inclusion in the Fourth Plan.





திரு. சா. கணேசன் : தஞ்சைப் பகுதியிலிருந்து கோவைப் பகுதிக்குச் செல்லுவதற்கு நேரடியான, ஒழுங்கான பாதைகள் செம்மையாக இல்லாத காரணத்தினாலே மாயூரத்திலிருந்து அரந்தாங்கி, அரந்தாங்கி-காரைக்குடி-திண்டுக்கல் நேர் கனெக்ஷன் கொடுத்து விட்டால் நேரடியாகக் கடைசி வரை போக வாய்ப்பு இருக்கிறது. அதை அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா : இதெல்லாம் பிறகு யோசிக்க வேண்டிய சமாசாரம். இப்போது இந்த 8 லைன்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். இதில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை சேர்க்க முடியுமோ அத்தனை சேர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு மேல் பிறகு தான் யோசிக்கவேண்டும்.

திரு. இரா. நெஞ்செழியன் : தலைவர் அவர்களே, சேலம்-நெய்வேலி-கடலூர் பாதையை அகலப்படுத்தும் திட்டம் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையயா : அது இப்போது இல்லை. அதை அரசாங்கம் யோசிக்கும்.

### *Felling of trees and income derived*

* 393 Q.—SRI S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether the trees on the sides of Mount Road and Poonamallee High Road in Madras City have been felled; and

(b) if so, the income derived therefrom?

கனம் திரு வெ. ராமையயா : (அ) ஆம்.

(இ) 22,600.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும், மவுண்ட்ரோடிலும் ஏகப்பட்ட மரங்களை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். முன்பு இருந்த நிழல் இல்லாமல் சுடுகாடு போல் காட்சி அளிக்கிறது. மறுபடியும் அந்த ரோடுகளில் மரத்தை வைத்துப் பயிரிட முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையயா : இப்போது இருக்கக் கூடிய டிராஃபிக் டென்ஸிட்டியைப் பார்க்கும்போது, குறிப்பிட்ட ரோடுகளை அகலப்படுத்தினால்தான் ட்ராஃபிக் போக முடியும். அப்படி அகலப்படுத்தும்போது இருக்கும் மரங்களை வெட்ட வேண்டியிருக்கிறது. வேலைகளெல்லாம் முடிந்து மீண்டும் அங்கெல்லாம் மரங்கள் வைக்க முடியுமா என்று என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் ரோடெல்லாம் கட்டடத்திற்குள் போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி இடம் இருந்தால் மரங்களை வைப்பது பற்றி அரசாங்கம் கவனித்துப் பார்க்கும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, for the purpose of widening the roads, trees have been felled but the electric and telegraph posts are still standing in the middle of the widened roads. What arrangements the Government are making to remove them?

[31st March 1965

THE HON. SRI V. RAMAIAH : They will also be realigned and refixed.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ரோடுகளில் இருந்த மரங்களெல்லாம் ஏலத்திற்கு விட்டு வெட்டியாகி விட்டன. வெட்டிய மரங்களுக்கான ஏலத் தொகை சர்க்காருக்கு நேரடியாக வந்து விடுகிறதா? அல்லது அதில் கார்ப்பரேஷனுக்கும் பங்கு உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நகர எல்லைக்குள் இருக்கக்கூடிய மரங்கள் கார்ப்பரேஷனுக்குச் சொந்தம் என்று முடிவு ஆகியிருக்கிறது. அதிலிருந்து வசூல் ஆகக் கூடிய தொகை கார்ப்பரேஷனுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ஏலம் போட்ட மரங்களின் மதிப்பு 22,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு மரம் 500 ரூபாய்க்குப் போகும். நல்ல கனமான மரங்கள் சாலையில் இருந்தன. இந்த ரேட் ஏன் குறைவாக இருக்கிறது? எங்காவது ஊழல் நடந்திருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒப்பனை ஏலம் போடுகிறார்கள். என்ன ஊழல் இருக்கும் என்று தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் மரத்தின் பருமனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அவைகள் டீக் மரம் அல்ல. இங்கே அவைகளைத் தூங்குமூஞ்சி மரம் என்று சொல்வார்கள். அது விறகுக்குக் கூடப் பயன்படுமா என்பது சந்தேகம். ஒப்பனை ஏலம் போடப்படுகிறது.

### இரயில்பாதை—சாலைக்கடவில் மேம்பாலம்

* 394 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் திருக்கோகர்ணம் ரயில்வே கேட்டில் மேம்பாலம் ஒன்று கட்டும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஆம், புதுக்கோட்டை-திருச்சிராப்பள்ளி சாலையின் 2-5 கல் தொலைவிலுள்ள சாலை இருப்புப் பாதைச் சந்திப்பில் மேம்பாலம் ஒன்றைக் கட்டும் திட்டம் உள்ளது. இத்திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, தஞ்சைப்-பட்டுக்கோட்டை, தஞ்சை-புதுக்கோட்டை செல்லும் பாதையில் ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில் இரண்டு பாதைகள் இருக்கின்றன. அந்த இடங்களில் மேம்பாலம் கட்ட கோரிக்கை வந்ததா? அது கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை. அந்த மாதிரிக் கோரிக்கை வந்தால் அரசாங்கம் கவனிக்கும். அப்போது இருக்கிற ப்ரையாரிடிக்குத் தகுந்த மாதிரி ஏற்பாடு செய்யும்.



31st March 1965]

### *Selection of Tahsildars*

* 395 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether there is any proposal to amend the rules relating to the selection of Tahsildars and Deputy Tahsildars by promotion under the Madras Revenue Subordinate Service; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) It is proposed to fix 1st April as a common qualifying date for acquiring the qualifications (both test and service) for inclusion in the lists of Tahsildars and Deputy Tahsildars in order to give an equitable treatment to the persons of all districts.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** மாவட்டத்திற்கு மாவட்டம் இந்தத் தேதி மாற்றப்பட்டு, தனித்தனியாக விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால், பலருக்கு உத்தியோக உயர்வு கிடைக்காமல் இருக்கிறது. ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்குச் சில விதிவிலக்கை அளித்து, அந்தப் பாதிப்பைப் போக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது பற்றி என்னிடம் இப்பொழுது பதில் இல்லை. இனிமேல் எந்த முறை அனுஷ்டிக்க வேண்டும் என்பதற்குத் தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** ஒரு தாலுகாவினுடைய அதிகாரி தாசில்தார். ஒரு தாலுகாவில் 5 பஞ்சாயத்து யூனியன்களுக்குக் குறைவு இல்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும், தாசில்தாருக்கும் அடிப்படைச் சம்பளம் ஒரே மாதிரியாக இருக்கிறது. அந்தக் கமிஷனரை ஏறக்குறைய டெப்யூடி தாசில்தார் கிரேடில் போடுகிறோம். அடிப்படைச் சம்பளம் ஒரே மாதிரியாக இருப்பதினால், அவர்களுடைய தகுதியை நாம் நிர்ணயிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே, தாசில்தார் சம்பளத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்துவது பற்றி உத்தேசம் ஏதேனும் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது அதுபோன்ற உத்தேசம் ஒன்றுமில்லை

### சிதம்பரத்தில் மதகுப் பாலங்களை அகலப்படுத்தல்

* 366 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவில் ஹைவேஸ் ரோடிலும், யூனியன் ரோடிலும் குறுகலாயுள்ள மதகுப் பாலங்களை அகலப்படுத்த உத்தேசமுண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இல்லை.

## UNSTARRED QUESTIONS

### *Primary Health Centres*

41. *Q.*—Sri C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) the number of Primary Health Centres proposed to be started during 1964–65;

(*b*) the number of centres located in the buildings constructed by Government and the number located in private buildings; and

(*c*) whether there is any proposal to cover the entire blocks by opening Primary Health Centres as envisaged in the Plan?

*A*—

(*a*) 128 Primary Health Centres.

(*b*) 118 Primary Health Centres are located in the buildings constructed by Government and 26 centres are located in private buildings.

(*c*) Yes.

(அ) 128 தொடக்கச் சுகாதார நிலையங்கள்.

(இ) அரசாங்கக் கட்டிடங்களில் 118 தொடக்க சுகாதார நிலையங்களும் தனியார் கட்டிடங்களில் 26 நிலையங்களும் உள்ளன.

(உ) ஆம்.

### திருநெல்வேலி நகர உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கம்

42. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி நகர உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில் காரணம் என்ன ?

ப.—

(அ) கனம் அங்கத்தினர் பாளையம்கோட்டை-திருநெல்வேலி கூட்டுறவுப் பண்டசாலையைப் பற்றிக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அப்படியானால் அது உண்மைதான்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) Presumably the hon. Member is referring to the Palamcottah-Tirunelveli Co-operative Stores. If so, the answer is in the affirmative.

(*b*) Does not arise.

### பம்பு செட்டுகளுக்கு மனுக்கள்.

43 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவில் விவசாயிகளிடமிருந்து பம்பு செட்டு அமைக்க ஓனர்ஷிப் சர்டிபிகேட் கோரி எத்தனை மனுக்கள் வந்தன ?

(இ) எத்தனை விவசாயிகளுக்கு ஓனர்ஷிப் சர்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

ப.—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவிலுள்ள குடியானவர்களிடமிருந்து 1–1–1964-லிருந்து 30–11–1964 வரை உள்ள கால அளவில் வேளாண்மைக்கான நீர்க் குழாய்களுக்கு மின்



சாரம் வழங்குவதற்காக உடமைச் சான்றிதழ்களை வழங்கும்படி 196 மனுக்கள் பெறப்பட்டன. 1-1-1964-க்கு முன்பு பெறப்பட்ட எந்த மனுவும் முடிவு பெருமல் இல்லை.

(இ) மேற்சொன்ன கால அளவில் 144 சான்றிதழ்கள் அளிக்கப்பட்டன.

(*a*) During the period from 1st January to 30th November 1964, 196 applications were received from the Agriculturists in Sriperumbudur taluk, Chingleput district, for issue of Ownership Certificates for supply of Electricity to Agricultural pumpsets. No application received prior to 1st January 1964 is pending.

(*b*) 144 certificates were issued during the above period.

### மோரணம் கூட்டுறவு விவசாயக் குடியேற் காலனியில் கிணறுவெட்ட நிதி உதவி.

44 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், மோரணம் கூட்டுறவு விவசாயக் குடியேற் காலனி மக்களுக்கு 44 கிணறுகள் வெட்ட நிதி உதவுவது பற்றி, தமிழ் நாடு கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள் அரசுக்கு அனுப்பிய திட்டத்தின் மீது, அரசு எடுத்துக்கொண்ட முடிவு என்ன ?

ப.—

மோரணம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்தின் 44 அங்கத்தினர்களுக்காக, மேலும் 22 கிணறுகளை வெட்ட நிதி உதவுவதுபற்றிக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அனுப்பியுள்ள திட்டத்தை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

The proposal of the Registrar of Co-operative Societies for sanctioning financial assistance to the Moranam Land Colonisation Co-operative Society for sinking 22 more wells for 44 members of the society is under the consideration of the Government.

### தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பட்டதாரிகள்.

45 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் வேலைவாய்ப்புக் கிடைக்கப்பெற்றவர்கள் எத்தனை பேர் ?

ப.—

(அ) 115 பேர்.

(இ) விபரங்கள் கிடைக்கவில்லை.

(a) 115.

(b) Particulars are not available.

### குதிரைமொழித்தேரியில் மண்வளப் பாதுகாப்பு.

46 கேள்வி—திரு எம். எஸ், செல்வராஜன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்செந்தூர் தாலுக்காவில் குதிரைமொழித்தேரியில் மழைகாலத்தில் தண்ணீர் வீணுகி, மணல் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

[31st March 1965

ப.—

குதிரைமொழித்தேரி ஒதுக்கக் காட்டில் மண்வளப் பாதுகாப்பிற்கும் காடு வளர்ப்பிற்கும், வனத்துறைத் தலைவர் அனுப்பியுள்ள விரிவான திட்டம் ஒன்று அரசாங்கத்தில் பரிசீலனை செய்து தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

A comprehensive scheme for Soil Conservation and afforestation in Kuthiraimozhitheri Reserved Forest submitted by the Chief Conservator of Forests for taking up the scheme during 1965-66 was considered and deferred.

*Tuberculosis in the State.*

47. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. Minister for Public Health be pleased to state—

(*a*) the details showing the incidence of Tuberculosis in the State; and

(*b*) the details of preventive measures taken for controlling the spread of this disease?

*A*—

(*a*) & (*b*) A statement ª is appended.

(அ) & (இ) இதனுடன் ஓர் அறிக்கை ª இணைக்கப்பட்டுள்ளது.

**பாசனத்திற்கு நொய்யல் தண்ணீர்.**

48 **கேள்வி—திரு. எம். எஸ். மணி:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை தாலுக்காவில் நொய்யல் நதி மூலம் பாசனத்துக்கு தண்ணீர் விடப்படும் குளங்கள் எத்தனை?

(இ) அவைகளால் பாசன வசதி பெறும் பூமி எத்தனை ஏக்கர்?

ப.—

(*a*) Twenty.

(*b*) 7,461 acres.

(அ) இருபது.

(இ) 7,461 ஏக்கராக்கள்.

**பஸ் நிலையங்கள்.**

49 **கேள்வி—திரு எம். எஸ். மணி:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் பஸ் நிலையங்கள் நம் மாநிலத்தில் எத்தனை இருக்கின்றன?

(இ) அவை எந்தெந்த நகரங்களில் இருக்கின்றன?

(உ) அந்த நகரங்களில் அரசினரால் ஏதேனும் பஸ் நிலையம் கட்டப்பட்டுள்ளதா?

ª Printed as Appendix IV on pages 680-682.



31st March 1965]

*A.*—

(*a*) Sixty.

(*b*) & (*c*) A statement ª showing the particulars is placed on the table of the House.

(அ) அறுபது.

(இ) & (உ) இது சம்பந்தப்பட்ட பட்டியல்* சட்டமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

**பின்தங்கிய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்**

50 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ம் ஆண்டு உபகாரச் சம்பளத்திற்கு எத்தனை மாணவர்கள் மனு செய்தார்கள்?

(இ) எத்தனை மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டது?

(உ) அரிசன பையன்கள் எத்தனை பேர்கள்? இதர வகுப்பு பையன்கள் எத்தனை பேர்கள்?

(எ) கொடுக்கப்பட்டதில் மாநில சர்க்கார் தொகை எவ்வளவு? மத்திய சர்க்கார் தொகை எவ்வளவு?

ப.—

(விபரங்கள் 31-12-1964 முடிய மட்டும்.)

(அ) 326,631.

(இ) 218,675.

(உ) அரிசன மாணவர்கள்—173,897.
மற்ற மாணவர்கள்—44,778.

(எ) மாநில சர்க்கார் நிதியிலிருந்து—ரூ. 85,19,300-ம்
மத்திய சர்க்கார் நிதியிலிருந்து—ரூ. 65,81,135-ம் கொடுக்கப்பட்டது.

(Particulars relate only up to 31st December 1964.)

(*a*) 326,631.

(*b*) 218,675.

(*c*) Harijans—173,897.
Others—44,778.

(*d*) From State Funds—Rs. 85,19,300.
From Government of India Funds—Rs. 65,81,135.

*Farming Societies*

51 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of collective and joint farming societies started in the State; year-war and district-war from 1960 to 1964?

ப.—

இது குறித்து சபை முன் ஓர் அறிக்கை ª வைக்கப்பட்டது.

A statement ª is placed on the Table of the House.

*Trade Unions*

52 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) the number of trade unions registered as on 30th September 1964; and

(*b*) the number of trade unions whose registrations were cancelled during the year 1963-64 and the reasons therefor?

* Printed as Appendix V on pages 683-684.

ª Printed as Appendix VI on pages 685-686.

*A.*—

(*a*) 3,736.

(*b*) 159. Under section 28 of the Indian Trade Unions Act, 1926, read with regulation 18 of the Madras Trade Union Regulations, 1927, all registered trade unions are required to submit on or before 31st May each year annual returns for the previous financial year showing all receipts and expenditures, liabilities and assets, etc., together with the up-to-date copy of the rules of the unions, in duplicate. Several unions did not submit the annual returns on due dates inspite of advance circular from the Registrar of Trade Unions. Some of the unions have submitted either defective or incomplete returns and failed to rectify the defects or to send additional particulars even after advice from the Registrar. Hence, show cause notices were issued to all the above mentioned trade unions under section 10 (*b*) of the Indian Trade Unions Act, 1926, giving not less than two months time to explain, as to why the registration of the unions should not be cancelled. As the unions did not send the annual returns or failed to furnish additional particulars within the time specified in the show cause notices, their registrations were cancelled for violating the provisions of Section 28 of the Indian Trade Unions Act, 1926, read with Regulation 18 of the Madras Trade Union Regulations, 1927.

(அ) 3,736.

(இ) 159. 1927-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் சங்க ஒழுங்குமுறை விதிகளைச் சேர்ந்த 18-வது விதியை 1926-ம் ஆண்டு இந்தியத் தொழிலாளர் சங்கச் சட்டத்தின் 28-வது பிரிவுடன் சேர்த்துப் படிக்கையில் ஏற்படும் அதிகாரங்களின்கீழ், பதிவான தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒவ்வோராண்டும் மே மாதம் 31-ம் தேதியன்றோ அதற்கு முன்போ முந்திய ஆண்டுக்கான ஆண்டு விவரக் கணக்குகளை அனுப்ப வேண்டுமென்று கேட்கப்படுகின்றன. இக் கணக்குகளை அந்த ஆண்டு வரவு, செலவினங்கள், பொறுப்புகள், இருப்புகள் முதலியவற்றையும் நாளது தேதிவரை திருத்தப் பெற்றுள்ள அத்தொழிற்சங்க விதிகளின் நகல் இரட்டைப் பிரதியிலும் அனுப்ப வேண்டும். தொழிற் சங்கப் பதிவாளர் முன்னதாகவே சுற்றறிக்கை அனுப்பியிருந்தபோதிலும் பல தொழிற் சங்கங்கள் தங்கள் ஆண்டு விவரக் கணக்குகளை உரிய தேதிகளில் அனுப்பவில்லை. சில சங்கங்கள், குறைபாடான அல்லது முழுமையாயிராத விவரக் கணக்குகளை அனுப்பியுள்ளன ; பதிவாளர் கேட்ட பிறகும் அச்சங்கங்கள், மேற்சொன்ன குறைபாடுகளை நீக்கிக்கொள்ள அல்லது கூடுதல் விவரங்களை அனுப்பத் தவறிவிட்டன. எனவே, 1926-ம் ஆண்டு இந்தியத் தொழிற் சங்கச் சட்டத்தின் 10 (b) பிரிவின்கீழ், மேற்சொன்ன சங்கங்கள் அனைத்திற்கும் ஏன் அச்சங்கங்களின் பதிவை ரத்து செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. இவற்றிற்கு விளக்கம் அனுப்ப இரண்டு மாதத் தவணையும் கொடுக்கப்பட்டது. அந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் அச்சங்கங்களின் ஆண்டு விவரக் கணக்குகளை அனுப்பாமலும் அல்லது கூடுதல் விவரங்களைக் கொடுக்காமலும் இருந்ததால், 1927-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் சங்க ஒழுங்குமுறை விதிகளைச் சேர்ந்த 18வது விதியை, 1926-ம் ஆண்டு இந்தியத் தொழிற்சங்கச் சட்டத்தின் 28-வது விதியைச் சேர்ந்த ஷரத்துக்களுடன் சேர்த்துப் படிக்கையில் ஏற்படும் அதிகாரங்களை அவை மீறியதற்காக மேற்படி சங்கங்களின் பதிவுகள் ரத்து செய்யப்பட்டன.

### *Marriages registered under the Special Marriage Act*

53 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Honourable the Minister for Co-operation be pleased to state the number of marriages registered in each district by people professing various religions under the Special Marriage Act during the years 1962–63 and 1963–64 ?



*A.*—

A statement a is appended.

a ஓர் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

### ஒளவையல் கால்வாயை விஸ்தரித்தல்.

54 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவேரி-மேட்டூர் பிராஜக்ட் வாய்க்காலில் ஒளவையல் கால்வாயை விஸ்தரிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) இதற்கு வேண்டிய சர்வே நடைபெற்றதன் முடிவு என்ன ?

ப.—

(அ) & (இ) காவேரி-மேட்டூர் திட்ட ஏற்பாட்டின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் முழுவதற்கும் பாசன வசதி செய்து தருகிற வரையில் இந்த திட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

(*a*) & (*b*) The proposal has been deferred until the ayacut under the Cauvery-Mettur Project System is localised.

### திருவரங்குளம் விதைப்பண்ணை.

55 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலூகா திருவரங்குளம் சர்க்கார் விதைப் பண்ணைக்கு 1962 முதல் 1964 ஜூன் முடிய ஆன செலவு எவ்வளவு ?

(இ) அப்பண்ணையிலிருந்து 1962 முதல் 1964 ஜூன் முடிய எவ்வளவு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன? அதன் விலை மதிப்பென்ன ?

ப—

(அ) 1962-லிருந்து 30—6—1964 வரையுள்ள கால அளவில் இதற்காக செலவான தொகை ரூ. 26,968·90.

(இ) 1962-லிருந்து 30—6—1964 வரையுள்ள கால அளவில் மொத்தம் 22,245 கிலோ கிராம் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 12,052·50.

(a) An expenditure of Rs. 26,968·90 was incurred for the period from 1962 to 30th June 1964.

(b) A total quantity of 22,245 kg. was produced from 1962 up to 30th June 1964 and its value was Rs. 12,052·50.

### திருவரங்குளம் பஞ்சாயத்து.

56 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியன் 64 கிராம பஞ்சாயத்துக்களை கொண்டதாக இருப்பதால் இதனை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசமுண்டா ?

ப—

இல்லை.

No.

### *State Transport Buses—Servicing of*

57. *Q* :—Sri M. V. KARIVENGADAM Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Transport buses are left for servicing in the private frms in the muffassal ; and

a Printed as Appendix VII on page 687.

[31st March 1965

(*b*) if so, whether a copy of the list of firms and the amount paid to them for servicing during the year 1963–64 will be placed on the table of the House ?

*A.*—

(*a*) State Transport Express buses are left for servicing in the private firms in the mufassal where servicing facilities are not provided by the Madras State Transport Department. As and when departmental facilities are provided at the out-stations, servicing by private firms is discontinued. At present, the daily maintenance of Express buses at out-stations is got done through the agency of private firms only at Ootacamund, Nagapattinam and Cuddalore.

(*b*) The details are furnished below :—

| *Name of the firm.* | *Place.* | *Total amount paid during 1963–64.* RS. | P. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 1 Messrs. Sridharan Co., Nagapattinam. | Nagapattinam .. | 12,601 | 00 |
| 2 Messrs. Appa Trading Co., Salem. | Salem .. .. | 1,105 | 63 |
| 3 Messrs. N. U. Bashyam Reddy and Sons, Cuddalore. | Cuddalore .. .. | 201 | 37 |
| 4 Messrs. K. Nataraja Pillai and Co., Madurai. | Madurai .. .. | 1,459 | 99 |
| 5 Messrs. N. Mahalingam and Co., Ootacamund. | Ootacamund .. | 6,849 | 25 |
| 6 Messrs. G. Guruswamy Naidu and Sons, Krishnagiri. | Krishnagiri .. .. | 899 | 90 |
| | Total .. | 23,117 | 14 |

(அ) பஸ் பழுதுபார்ப்பதற்கான வசதிகளை வெளியூர்களில் தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை ஏற்படுத்தியிராத இடங்களில் அத்துறையைச் சேர்ந்த எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பழுதுபார்ப்பதற்காக அங்குள்ள தனியார் நிறுவனங்களில் விடப்படுகின்றன. வெளியூர்களில் இத்துறையினர் அவ்வப்போது வசதிகள் ஏற்படுத்தித் தரும்போது, தனியார் நிறுவனங்களில் பழுதுபார்ப்பதற்கு விடுவதில்லை. இப்போது உதகமண்டலம், நாகப்பட்டினம், கடலூர், ஆகிய இடங்களில் மட்டுமே எக்ஸ்பிரஸ் பஸ்கள் தனியார் நிறுவனங்களிடம் அன்றுடப் பராமரிப்புக்கு விடப்படுகின்றன.

(இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| நிறுவனத்தின் பெயர். | இடம். | 1963–64-ல் செலுத்தப் பட்ட மொத்தத் தொகை. ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மெசர்ஸ் ஸ்ரீதரன் கம்பெனி, நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் .. | 12,601·00 |
| 2 மெசர்ஸ் அப்பா ட்ரேடிங் கம்பெனி, சேலம். | சேலம் .. .. | 1,105·63 |
| 3 மெசர்ஸ் என்.யூ. பாஷ்யம் ரெட்டி அண்டு சன்ஸ், கடலூர். | கடலூர் .. .. | 201·37 |
| 4 மெசர்ஸ் கே. நடராஜ பிள்ளை அண்டு கம்பெனி, மதுரை. | மதுரை .. .. | 1,459·99 |
| 5 மெசர்ஸ் என். மகாலிங்கம் அண்டு கம்பெனி, உதகமண்டலம். | உதகமண்டலம் .. | 6,849·25 |
| 6 மெசர்ஸ் ஜி. குருசாமி நாயுடு அண்டு சன்ஸ், கிருஷ்ணகிரி. | கிருஷ்ணகிரி .. | 899·90 |
| | மொத்தம் .. | 23,117·14 |



31st March 1965]

### கஸ்தம்பாடி பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம்

58 கேள்வி—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரணி தாலுகா கஸ்தம்பாடி பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

ப—

இல்லை.

No.

### வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர்

59 கேள்வி—திரு. ர. சம்பங்கி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆம்பூர், வடாற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தற்போதைய உற்பத்தி அளவு எவ்வளவு ?

ப—

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தற்போதைய ஒரு நாளைய கரும்பு பிழியும் திறன் 800 டன்கள். இந்த மில் 1963–64 ஸீஸனில் 13,113 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்தது.

The present cane crushing capacity of Ambur Co-operative Sugar Mill is 800 tons a day. The mill produced 13,113 tonnes of sugar during the last season, viz , 1963–64.

### தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பணியாற்றுவோர்.

60 கேள்வி—திரு. ர. சம்பங்கி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய மலேரியா ஒழிப்புத் (N.M.E.P.) திட்டத்தின்கீழ் பணியாற்றுபவர்களின் வேலை நிரந்தரமானதா ?

[31st March 1965

(இ) இத்திட்டத்திற்கு 1963-64-ல் அரசு செலவழித்த தொகை எவ்வளவு ?

ப—

(அ) இல்லை.

(இ) ரூ. 82·49 லட்சம்.

(a) No.

(b) Rs. 82·49 lakhs.

### *Lease of building at Pudukkottai*

61 *Q.*—Sri A. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have leased the building at Pudukkottai known as the Ladies Club, the Officer's Club;

(*b*) if so, when and under what terms;

(*c*) whether a deputation of ladies met the Chief Minister on 9th July 1964 at Pudukkottai and urged the restoration of the building for the use of the Ladies Club; and

(*d*) if so, action taken thereon.

*A.*—

(*a*) Yes.

(*b*) The lease in favour of the Officer's Club was initially ordered in 1954 and renewed in 1959. The lease was sanctioned subject to the usual conditions under B.S.O. 24-A and subject to the payment of a lease rent of Re. 1 per annum.

(*c*) No.

(*d*) Does not arise.

(அ) ஆம்.

(இ) ஆபீசர்ஸ் கிளப் பெயரில் இந்தக் குத்தகை முதலில் 1954-ல் கொடுக்கப்பட்டது. 1959-ல் அது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. B.S.O. 24-ன் கீழுள்ள மாமூல் நிபந்தனைகளுக்குட்பட்டும், ஆண்டு ஒன்றுக்கு குத்தகை வாடகை ரூ. 1 கட்டவேண்டுமென்கிற நிபந்தனைக்குட்பட்டும் அது குத்தகைக்கு விடப்பட்டது.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO THE FAILURE OF THE PISANAM MAIN PADDY CROP IN SHENCOTTAH AND TENKASI TALUKS OF TIRUNELVELI DISTRICT.

Sri A. R. SUBBIAH MUDALIAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, viz., the complete failure of the Pisanam main paddy crop in Shencottah and Tenkasi taluks in Tirunelveli district and the necessity (i) to open fair price shops and issue family cards in all the villages in the above taluks, (ii) to postpone collection of kist and loan amounts in the above taluks and (iii) to withdraw the levy system of procurement.



31st March 1965]

The Hon. Sri V. RAMAIAH : Sir, the cultivated extent of 'Pisanam' paddy crop in Shencottah was 7,217 acres. The area under single crop was 455 acres and the rest under double crop. The crop has completely failed in 2,745 acres and the crop is likely to wither in 3,036 acres. The 'Kar' crop was successful in Shencottah taluk.

In Tenkasi taluk, 'Pisanam' paddy crop was cultivated over an extent of 27,176 acres. The crop has completely failed in 12,005 acres and the crop is likely to wither in 8,159 acres. The extent of cultivation of double crop was 23,214 acres. The 'Kar' crop was successful in this taluk also.

There is no case for the postponement of collection of land revenue or loan amounts in these taluks. However, remission has been granted on wet lands in Tenkasi taluk where crops have failed. In Shencottah taluk, the question of remission on the assessment of wet lands does not arise, as basic tax has been levied in that taluk.

Rice is distributed on family card system in Shencottah Municipality and in Tenkasi and Kadayanallur Town Panchayats in Tenkasi taluk. The distribution is made on the basis of 8 ounces per adult per day. *Ad hoc* supply is made to deficit pockets in rural parts through co-operatives and retailers. A total supply of 28 tonnes of rice is made every week to Shencottah taluk and 105 tonnes of rice is supplied to Tenkasi taluk every week.

Under the levy scheme, very low targets have been fixed consistent with the expected low yield of paddy. The target fixed for procurement of paddy is 550 tonnes in Tenkasi taluk and 100 tonnes in Shencottah taluk. One hundred and thirty tonnes of paddy have so far been procured in Shencottah taluk and 109 tonnes in Tenkasi taluk. It is not considered necessary to withdraw the graded levy scheme now in force in these areas.

## III.—ANNOUNCEMENTS.

(1) Nomination to the Committee on Government Assurances.

Mr. SPEAKER : I have to announce to the House that under Rule 214 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Assembly to be members of the Committee on Government Assurances for the year 1965–66 :—

(1) Sri A. Raghava Reddi.

(2) Sri A. Arumugam.

(3) Sri A. S. Dakshinamoorthy Gounder.

(4) Sri S. Nanjunda Rau.

(5) Sri Rama. Arangannal.

(6) Sri N. Soundarapandian.

(7) Sri A. Swamidhas.

[Mr. Speaker] [31st March 1965

Under Rule 215 (1) of the said Rules, I nominate Sri Rama Arangannal to be the Chairman of the Committee.

(2) ELECTION TO THE HOUSE COMMITTEE.

MR. SPEAKER: I have to announce to the House that the following eleven members were duly nominated for the eletion of eleven members of the Madras Legislative Assembly to the House Committee for 1965-66:—

(1) Sri A. S. DHAKSHNAMOORTHY GOUNDER.
(2) Sri N. DURAIPANDIAN.
(3) Sri G. D. PERUMAL RAJU.
(4) Sri A. L. RAMAKRISHNA NAICKER.
(5) Sri S. ANGAMUTHU NAICKER.
(6) Sri V. S. ARUNACHALAM.
(7) Sri A. CHIDAMBARANATHA NADAR.
(8) Sri A. THIAGARAJAN.
(9) Sri MUNU. ADHI.
(10) Sri M. P. VADIVELU.
(11) Sri KR. RM. KARIAMANICKAM AMBALAM.

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filled viz., eleven, I hereby declare them to have been duly elected to the House Committee.

Under Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate—

(1) Sri K. GOPALA GOUNDER,
(2) Sri P. APPAVOO,
(3) Sri M. S. MANI AND
(4) Sri S. MANI.

to be members of the House Committee.

The Deputy Speaker is the *ex-officio* Chairman of the House Committee.

(3) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

MR. SPEAKER: I have to announce to the House that the following fifteen members were duly nominated for the election of fifteen members of the Madras Legislative Assembly to the Committee of Privileges for the year 1965-66:—

(1) Hon. Sri M. BHAKTAVATSALAM.
(2) Sri K. B. PALANI.
(3) Dr. B. NATARAJAN.
(4) Sri G. RAJARAM.
(5) Sri N. RAMASWAMY UDAYAR.



31st March 1965] [Mr. Speaker.]

(6) Kumari D. SULOCHANA.
(7) Sri A. ARUMUGAM.
(8) Sri N. RAMACHANDRA REDDY.
(9) Srimathi T. N. ANANDANAYAKI
(10) Sri T. P. ALAGAMUTHU
(11) Sri V. R. NEDUNCHEZHIAN.
(12) Sri M. V. KARIVENGADAM.
(13) Sri K. CHEEMAICHAMY.
(14) Sri V. KRISHNAMOORTHY.
(15) Sri S. MADHAVAN.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fifteen, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1965-66. The Deputy Speaker is a Member *ex-officio* of the Committee.

Under Rule 183 (4) of the Madras Assembly Rules, I nominate Sri K. Parthasarathy to be the Chairman of the Committee.

IV.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI K. S. SUBRAMANIA GOUNDER: Sir, I rise to present the First Report (1964-65) of the Committee on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Fisheries Department.

V.—GOVERNMENT MOTION

(1) REPORTS OF THE COMMITTEE OF PRIVILEGES IN BROADWAY TIMES CASES NOS. 1 AND 2.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Reports of the Committee of Privileges in Broadway Times Cases Nos. 1 and 2 laid on the Table of the House on the 31st March 1964 be approved and that the Press Gallery pass issued to the said Weekly be suspended for the whole of the next Session."

*திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இந்தப் பத்திரிகையில் பிரசுரித்த செய்திகள் சம்பந்தமாக இந்தச் சபையில் விசாரிக்க வேண்டும் என்று நாம் உரிமைக் குழுவுக்கு அனுப்பிவைத்தோம். இதைப் பரிசீலனை செய்து, அவர்கள் கொடுத்த அறிக்கைக்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் எனக்கு என்ன புரியவில்லை என்றால், ஏன் அவர்கள் பத்திரிகைக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைப்பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை, அப்படி குறிப்பிடத் தவறியதற்கு உள்ள காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. உரிமைக் குழுவுக்கு அனுப்புவதே, அவர்கள் எல்லா வற்றையும் பரிசீலனை செய்து, அந்தக் குற்றத்தினுடைய தன்மை*

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [31st March 1965

என்ன, அந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை பொருத்தமானது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கவேண்டும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அவர்களுடைய முடிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், தக்க தண்டனை கொடுக்கவேண்டும் என்று தான் இரண்டு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரிமைக் குழு இந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்கொள்ளவேண்டிய அவசியம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது கொடுத்திருக்கக் கூடிய யோசனை கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய யோசனையாக இருக்குமே தவிர வேறு ஒன்றுமில்லை. அவர்கள் இந்தச் சபையில் திடீரென்று ஒரு யோசனையைச் சிபாரிசு செய்கிறார்கள். இது உரிமைக் குழுவின் சிபாரிசு இல்லை. உரிமைக் குழுவின் அறிக்கையில் பொதுவாக தண்டனை என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்டனை அதிகமாக வேண்டுமானாலும் இருக்கலாம், குறைவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மீண்டும் இந்தப் பிரச்னையைப் புதிய உரிமைக் குழுவுக்கு அனுப்பி என்ன தண்டனை பொருத்தமாக இருக்கும் என்பதை அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும் என்ற யோசனையை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, உரிமைக் குழு தண்டனை வேண்டும் என்றும் சொல்லலாம். என்ன தண்டனை என்றும் சிபாரிசு செய்யலாம். என்னுடைய சொந்தக் கருத்து, என்ன தண்டனை என்று சிபாரிசு செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் இப்பொழுது உரிமைக் குழு அவ்வாறு கருதவில்லை. இந்த விஷயத்தில் தண்டிக்க வேண்டும் என்று போட்டார்கள். என்ன தண்டனை என்பதை மன்றத்திற்கே விட்டு விட்டார்கள். அதைத் திரும்பக் குழுவுக்கே அனுப்புவது சரியில்லை. சம்பந்தப்பட்டவர் வருவார் என்று எதிர்பார்க்கப் பட்டது. அவர் வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார். வந்தால் மீண்டும் அவரை விசாரிக்க வேண்டாம் என்று பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர் மன்னிப்பும் கோரவில்லை. முதலிலே மன்னிப்புக் கோருகிறேன் என்று சொன்னார். என்னிடமேகூட வந்து அப்படிச் சொன்னார். பிறகு விசாரணைக்கு அவர் இல்லை. மன்னிப்பும் கோரவில்லை. ஆகவே உரிமைக் குழு தண்டனை கொடுப்பது என்று சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார்கள். மீண்டும் அதைக் குழுவிற்கே அனுப்புவது சரியாகாது. இதுவரையில் இந்த விஷயம் சபையில் சமர்ப்பிக்கப்படாததற்குக் காரணம், உத்தரப் பிரதேசத்திலே கோர்ட்டிலே வழக்கு இருந்து வந்ததுதான். ஒரு ஆண்டாக சபைக்குக் கொண்டுவரப்படாமல் இருந்தது. ஆகவே இப்பொழுது என்னுடைய மோஷனை மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதல் அமைச்சர் கூறிய யோசனைப்படி பத்திரிகை ஆசிரியர் தண்டிக்கப்படவில்லை, திருபர் தான் தண்டிக்கப்படுகிறார்.



31st March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகை தண்டிக்கப் படுகிறது.

MR. SPEAKER : The question is—

" That the Reports of the Committee of Privileges in Broadway Times Cases Nos. 1 and 2 laid on the Table of the House on the 31st March 1964 be approved and that the Press Gallery pass issued to the said Weekly be suspended for the whole of the next Session."

The motion was put and carried.

## VI.—GOVERNMENT BILL

### THE MADRAS INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1965 (L.A. BILL NO. 10 OF 1965).

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I move—

" That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1965 [a] (L.A. Bill No. 10 of 1965) be taken into consideration."

In moving the motion, I wish to explain briefly the provisions of the Bill.

Schedule I to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) contains a list of 83 Pudukkottai inam estates. The list was prepared with reference to the standard list of inam villages maintained by the ex-Durbar of Pudukkottai State. It is, however, now found that, in regard to some of the villages included in the Schedule, the names given in the schedule are different from the names given in the relevant inam title deeds. In 37 cases, the names given in column (3) of the Schedule do not contain their alias names. In 4 cases, there is slight difference in spelling the names. In 3 cases, namely Serial Nos. 1, 46 and 79 of the Schedule, the names found in the inam title deeds are quite different. In the case of Serial No. 1 ' Immanampatti ', the name given in the inam title deed is ' Tiruvarankulam alias Renganathapuram '. In the case of Serial No. 46 ' Velangudi ', the name in the title deed is ' Vayalangudi alias Venkatachalapuram '. In the case of Serial No. 79. ' Perianayakiamman Endal ', the name in the title deed is ' Nallikudi '. Serial No. 74 ' Vengalaveli ' is now reported to be not an inam estate and has, therefore, to be omitted from the Schedule. In view of the numerous corrections to be made in the Schedule, the Government have decided to substitute for the existing Schedule a fresh Schedule adopting the correct names and also omitting the entry relating to Vengalaveli village.

At present, under Section 2 (14) of the Act, the Government have the power to notify a whole inam village in Pudukkottai as a Pudukkottai inam estate. The Government consider that they

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 30th March 1965.

should have also power to amend suitably any entries in columns (3) and (4) of Schedule I, where the said entries are found to be either incomplete or incorrect. Accordingly, a new Section 73-A is proposed to be inserted for this purpose with the necessary consequential amendment to Section 2 (14) of the Act.

Sir, with these words, I now request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1965 (L.A. Bill No. 10 of 1965) be taken into consideration."

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா நிறைவேற்றப் படக் கூடிய முறையைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, பிறகு மசோதாவைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். நேற்றைய தினம்தான் இந்த மசோதா இந்தச் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கத்தினர் பலருக்கு என்ன விவரம் என்றே தெரியவில்லை. எங்களுடைய சொந்த முயற்சியின் பேரில் சாயங்காலம் இந்த மசோதாவின் நகலைப் பெறமுடிந்தது. இது ஒரு முக்கியமான திருத்தம். நேற்று கனம் தொழில் அமைச்சர் கொண்டு வந்தது போன்ற சாதாரண திருத்தம் அல்ல. இவ்வளவு முக்கியமான திருத்தத்தை ஒரு மாத காலமாக இலாகாவினர் எதிர்பார்த்திருந்தும், கொடுக்க வேண்டிய நோட்டீஸ் சட்டசபைக்குக் கொடுத்து, இந்த மசோதா நகலை ஏன் சட்ட சபைக் காரியாலயத்திற்கு அனுப்பியிருக்கக் கூடாது என்பதுதான் புரியவில்லை. எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் படி, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் கனம் உணவு அமைச்சர் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நாங்களும் பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் ஒப்புக் கொண்டோம். அமைச்சர் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், நாங்களும் மறுக்க முடியாது. தங்களை மட்டும் சொல்லவில்லை. நாங்களும் ஒப்புக் கொண்டோம். ஆனால், இது சம்பந்தப்பட்ட நகலைத் தயார் செய்து கொடுக்க இந்த இலாகாவினர் ஏன் காலதாமதம் செய்தார்கள் என்பதைத்தான் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இந்த சட்டத்திற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்து அனுப்பியது 1963-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 11-ம் தேதி 1964 போய்விட்டது, இப்பொழுது 1965-ல் இருக்கிறோம். இன்னமும்கூட இந்தச் சட்டம் அமுலாக்குவது சம்பந்தமாக, ஒன்றாவது பிரிவு, நாலாவது விதிப்படி, பிறப்பிக்கவேண்டிய நோடிபிகேஷன்கள் பிறப்பிக்கப்படவில்லை. இன்றைக்கு ரெவின்யூ போர்டில் ஏழு மெம்பர்கள் இருக்கின்றனர், ஜாயிண்ட் செக்ரடரி, அடிஷனல் செக்ரடரி போஸ்டுகளெல்லாம் அதிகப்படுத்தப் படுகின்றன. சட்ட இலாகாவிலும் ரெவின்யூ இலாகாவிலும் முக்கியமான விஷயங்களில் இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்பட்டால், அமைச்சர் அவர்களைக் குறை சொல்லி என்ன பிரயோசனம். சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அமுல் நடத்தா





விட்டால், அது பாம்பைப் பாதி அடித்தது போலத்தான் ஆகும். சட்டத்தை இயற்றிவிட்ட பிறகு இன்றைக்கு இனும் நிலங்களில், இனும் கிராமங்களில் பல தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. மரங்கள் வெட்டப்படுகின்றன. இன்னும் கிராமங்களில் புதிய புதிய தொல்லைகள் ஏற்படுகின்றன. அரசாங்கத்திற்கே சட்டத்தை இயற்றிவிட்டோம் என்கிற கொள்கை அளவு திருப்தி தானா? காலையில் கேள்வி நேரத்தில் கூட நிலச் சீர்திருத்தத்தைத் துரிதமாக அமுலாக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் என்பதை தத்துவார்த்த ரீதியில் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று காட்டி, இந்த சர்க்கார் தப்பிக்கப் பார்க்கிறார்களா என்பது விளங்கவில்லை. அல்லது உண்மையிலேயே இலாகாவில் அப்படிப் பட்ட அதிகாரி யாராவது இருந்து இவ்வளவு காலதாமதம் செய்து, கொடுக்க வேண்டிய பலன்களைக் குடியானவர்களுக்குக் குறைவாகக் கொடுக்க வேண்டும், அல்லது கொடுக்காமலே இருக்க வேண்டும் என்று செய்கிறார்களா? ஒரு வருஷ காலமாகப் பல முறை இந்த விஷயம் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு ஷெடூல் திருத்தம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இவை ஆழமான திருத்தங்கள்; முக்கியமான திருத்தங்கள். சர்க்காருக்கு அதிகாரம் கொடுப்பதில் ஆட்சேபம் இல்லை. அதிகாரம் கொடுப்பதை ஆதரிக்கிறேன். கொடுக்கக் கூடிய அதிகாரம் குடியானவர்களுக்கு அனுகூலமாக பயன் படுத்தப் பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கால தாமதம் இனிமேலாவது இல்லாமல், உத்தரவு போட்டு அசல் சட்டத்தை அமுல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னொரு சட்டத்தைப் பற்றியும் இந்த சட்ட சபையில் இதற்கு முன்னே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதில் சபாநாயகருக்கும் சங்கடம். நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற் கில்லை. அமைச்சர் உறுதிமொழியை நம்பி, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அஜண்டாவில் சேர்க்கவேண்டும் என்று ஒப்புக் கொண்டுவிடுகிறோம். தங்களை மட்டும் சொல்ல வில்லை, நாங்களும் உடன்பட்டு இருந்திருக்கிறோம். என்ன தோன்றுகிறது? இனி பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்கிற படிப்பினைத்தான் வருகிறது. ஒரு முறை அசிரத்தையாக இருந்தால் சரி; இப்படி அடிக்கடி ஏற்படுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து இப்படிப்பட்ட கால 10-00 a.m. தாமதத்திற்கு உடந்தையாக இருக்கக் கூடாது. இவ்வளவு கால தாமதம், அசிரத்தைக்குக் காரணம் என்ன? இது பல மாதங்களாக இலாகாவில் இருந்திருக்கிறது. இப்பொழுது சட்டசபை 31 தினங்களாக நடந்து கொண்டிருக்கிறது. ஏழு நாள் நோட்டீஸ் கொடுக்கக் கூடாதா? உண்மையாகவே இதை எந்த அளவுக்குப் பரிசீலிக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பரிசீலிக்கக் கூட சந்தர்ப்பம் இல்லாமல், அவசரத்தின் காரணமாக இதை ஒத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதைக் கூறிக் கொண்டு முடிக்கிறேன்.

* திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கால தாமதத்தைப் பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறினார்கள். ஆனால், அந்தக் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. திருத்தம் கொடுப்பதற்குக் கூட வாய்ப்பு இல்லை. திருத்தம் நாங்
10-00 a.m. கள் முன்மொழியாவிட்டாலும் நாங்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு திருத்தங்களை அவர் களே கொண்டுவர வேண்டும் என்று நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கொண்டுவரக் கூடிய சட்டத்தினுடைய தத்து வத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். இதே சங்கடம் ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலும் ஏற்பட்டது. ஹைகோர்ட்டிலே பல தீர்ப்புகள் கொடுத்ததற்குப் பின்னால் சட்டம் திருத்தப்பட்டிருக் கிறது. இப்பொழுது நம்முடைய புதிய சட்டத்திற்கு அப்படிப் பட்ட தீர்ப்புகள் வருவதற்கு முன்னாலேயே திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டி வரவேற்கிறேன்.

ஆனால், இப்படி நோடிபிகேஷனை மாற்றுவது மட்டுமே குறிப் பிடப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் நம்முடைய நோடி பிகேஷனை உயர்நீதி மன்றம் தவறு என்று சொல்லலாம். அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டாலும், அதற்கு சட்டத்தில் என்ன வழிவகை செய்திருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஏற்கனவே ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே அப்படி வந்தது ஆர். ஆர். ஆக்ட் விலேஜைப் பொறுத்துகூட நோடிபிகேஷனைக் கான்ஸல் செய் கிறார்கள். உடனடியாக மறு நோடிபிகேஷன் செய்கிறோம். இரண் டுக்கும் இடையிலே உள்ள 'பீரியட்'டில் விவசாயினுடைய நிலை என்ன? இது பிரச்னையாக இருந்து வந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே ஒரு கிராமத்தை 'ஹோல் இனும்' என்று டிக்ளேர் செய்கிறோம், 1936-ம் வருடத்திய இனும் என்று டிக்ளேர் செய்கிறோம். அதற்குப் பிறகு ஹைகோர்ட் சொல்கிறது—ஒரு கிராமம் முழு கிராமமாக 'கிராண்ட்' செய்யப்பட்டது உண்மை தான். இது 'ஹோல் இனும்' தான். இருந்தபோதிலும், 'கிராண்ட்' செய்யும்போது ஒரே நாளில் செய்யாமல் பல நாட்களில் செய்கின்றார்கள். அல்லது ஒரு கிராமத்தை ஒரு நபருக்குச் செய்யாமல் ஒரே நாளில் இரண்டு பேருக்குச் செய்கிறார்கள். அப்படி இருந்தால் அது part inam village என்று வருகிறது. அது 'ஹோல் இனும்' ஆக வராது. இப்படித் தீர்ப்பு வருகிறது. உடனடியாக நம்முடைய நோடிபிகேஷன் செல்லாமல் போகிறது. இதன் விளைவு என்ன என்று பார்க்கும் போது, மறு நோடிபிகேஷன் செய்து, இது ஆர். ஆர். விலேஜ் ஆக இருந்தபோது வசூலிக்கப்பட்ட தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் போட்டார்கள். ஆனால், அந்த விவசாயினுடைய நிலை என்ன? சர்க்கார் நோடிபிகேஷன் செய்து விடுகிறது. அதற்குப் பின்னால் பத்து ஆண்டுகளுக்கு அவர்கள் வரி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை, பத்து ஆண்டுகளுக்குப்



பின்னால் சர்க்கார் மறு நோடிபிகேஷன், உயர்நீதி மன்றத் தீர்ப் பினால் செய்கிறது. இடைக்காலத்தில் பத்து ஆண்டுகளில் வாரத் தினுடைய நிலை என்ன என்பதற்கு விளக்கம் இல்லை.

ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே 1956-ம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தச் சட்டப்படி மறு நோடி பிகேஷன் கொடுத்ததற்குப் பின்னால், arrears எவ்வளவாக இருந் தாலும் வசூலிக்கலாம் என்று திருத்தச் சட்டம் ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அப்பொழுது இருந்த பிரச்னை அது. இப்பொழுது நமக்குப் புதிய சட்டத்தில் மூன்று ஆண்டுகள் பழைய பாக்கியைத் தீர்க்காவிட்டால் தீர்க்க வேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். அந்த சட்டத்திற்குப் பின் னால் இந்த நோடிபிகேஷனில் மாறுதல் ஏற்பட்டால் அல்லது நீதி மன்றத் தீர்ப்பினால் மாறுதல் ஏற்பட்டால் வாரத்தை யார் செலுத்து வது? எப்படிச் செலுத்துவது? சர்க்கார் செய்யக்கூடிய தவறு? தவறு என்று நான் குறிப்பிடவில்லை. நோடிபிகேஷன் நாம் செய் கிறோம். Interpretation of statutes என்ற முறையில் ஹைகோர்ட் டிலே வேறொரு முறை சொல்லலாம். அல்லது பின்னால் பரிசிலனை செய்து, சர்க்காரே, 'மைனர் இனும் அல்ல, முழு இனும் அல்ல, நியூ இனும் அல்ல' என்று கண்டு மறு நோடிபிகேஷன் செய்யும் நிலைமை ஏற்பட்டால், பழைய பாக்கியைப் பற்றி என்ன செய்வது என்பதைப்பற்றி இந்தச் சட்டத்திலே இடம் இல்லை. நாம் உரு வாக்கிய ப்ரின்ஸிபல் ஆக்டிலும் இடம் இல்லை. ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலும் இடம் இல்லை. 1956-ம் வருடத்திய சட்டத்திற்கும் புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்திலே அது பற்றி விளக்கம் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதைச் சட்ட இலாக்கா பரி சீலிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இப் பொழுது கொண்டுவராவிட்டாலும் மீண்டும் ஒரு திருத்தச் சட்டம் அதற்காக ஸ்பெஸிபிக்காகக் கொண்டுவரவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வட்டி (இன்டரஸ்ட்) யைப்பற்றிச் சொல்கிறார்கள். அதை நான் எதிர்க்கிறேன். புதிய செக்ஷன் 73-ஏ ஒரு கொள்கை தான். இருந் தாலும் தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நோடிபிகேஷன், ரி-நோடிபிகேஷன் சர்க்கார் செய்வது, அதிகாரி கள் செய்வது, அல்லது கோர்ட் தீர்ப்பினால் செய்வது, இது சாதா ரண நடைமுறையில் ஏற்படக்கூடிய சிக்கல். இந்த சிக்கலினு டைய விளைவு—யாரோ இன்னொருவருடைய தலையில் போட்டு, நிலச் சுவாந்தாராக இருந்தாலும்கூட, அவரிடமிருந்து வட்டி வசூலிக்க வேண்டும் என்ற முறை தவறு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் பெரிய நிலச் சுவாந்தார்களிடமிருந்து வட்டி வசூலித்தாலும் கூட, இந்த மைனர் இனும் ஒழிப்பிலும் சில எக்கர் கணக்கில் உரிமை உள்ளவர்களைக் கூட பாதிக்கக்கூடிய அளவில் வட்டியை அவர்

களிடத்திலிருந்து வசூலிக்கவேண்டும் என்ற கொள்கை தவறு என்று கூறி, அதை இந்தத் திருத்தச் சட்டத்திலேயே திருத்த வேண்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இவ்வளவு அவசரமாக, போதுமான அவகாசம் இல்லாமல் கொண்டுவந்ததைக் குறித்து கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் தங்களுடைய வருத்தத்தைச் சொன்னார்கள். அவர்கள் கூறின ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், இதற்கு இன்னும் கொஞ்ச காலம் அதிகமாக எடுத்துக்கொண்டு சாவதானமாக அடுத்த செஷனில் கொண்டுவந்திருக்கலாம். ஆனால், அது போல் காலதாமதப்படுத்திக் கொண்டுவர அரசாங்கம் இஷ்டப்படாத காரணத்தால், இந்த விவரங்களெல்லாம் தெரிந்தவுடனே, இப்பொழுதிருக்கும் சட்டப்படி இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டு, இந்த இனாம் எஸ்டேட்களையெல்லாம் 'டேக்-ஓவர்' செய்யமுடியாத ஒரு நிர்ப்பந்தம் இருக்கக்கூடிய காரணத்தினாலே இதை எப்படியேனும் இந்தக் கூட்டத்திலேயே கொண்டுவந்து, இதற்கு வேண்டிய திருத்தத்தைச் செய்துவிட்டால் தான், எப்படி மற்ற இனாம் ஒழிப்புச் சட்டங்களெல்லாம் இன்றைக்கு அமுலில் வந்தது, அதற்கு வேண்டிய பல கட்டங்கள் முடிவாகி, அதெல்லாம் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டதோ, அதுபோல புதுக்கோட்டை இனாமும் ஏற்பட வேண்டும் என்பதனால் தான் இவ்வளவு அவசரமாகக் கொண்டுவரவேண்டிய நிலைமை இருந்தது. காரணம், மற்ற சட்டங்களெல்லாம் இப்பொழுது நடைமுறையில் வந்துவிட்டன. பல இடங்களில் நோடிபிகேஷன் கொடுத்தாய் விட்டது. இன்னும் எப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தேதி நிர்ணயம் செய்து, தேதியும் பிரசுரமாய்விட்டது. முதல் கட்டமாகப் பல இனாம் எஸ்டேட்களை எடுத்துக்கொள்ள வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் முடிந்து, அடுத்த கட்டத்தில் எடுக்கவேண்டிய தேதியும் நிர்ணயமாய்விட்டது. அதற்குத் தகுந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதைத் தாமதித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த அவசர சூழ்நிலை ஏற்பட்டது.

இதில் ஏதோ பெரிய கொள்கைப் பிரச்னை இருப்பதைப் போல ஒரு நினைப்பு நினைத்துக்கொண்டு கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசினார்கள். இந்த மசோதாவைப் பார்த்தால், ரெவின்யூ ரிகார்டிலே இருக்கும் பெயருக்கும், இனாமுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெயருக்கும் இருக்கும் வித்தியாசம் தெரியும். இந்த இரண்டு நிலையையும் உணர்ந்து, பிறகு எந்த விதமான தவறும் வந்துவிடக்கூடாது, இதனால் சர்ச்சைகள் அதிகமாக வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ரெவின்யூ ரிகார்டில் இருக்கக்கூடிய பெயரையும், இனாம் சாசனத்தில் இருக்கும் பெயரையும் முறையாக இந்த ஷெட்யூலில் சேர்த்துவிடவேண்டுமென்பதுதான் இப்பொழுதிருக்கும் முயற்சி. இதில் ஏதோ ஆழமாக அங்கத்தினர்



கள் சிந்தித்து இதற்குத் திருத்தங்கள் கொடுக்க அவகாசம் இல்லை என்று சொன்னால், இவர்கள் எங்கிருந்து அந்தத் திருத்தத்தைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அரசாங்கமே முயற்சி எடுத்து இதெல்லாம் செய்கிறார்கள். இது அவசரமாகச் செய்ய வேண்டிய ஒரு காரியம். கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று மனத்திலே வைத்துப் பேசினார்களோ, அவர்களுக்கு விரைவிலே நன்மை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இந்த அவசரமான முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள், இந்தச் சட்டத்தை குறித்துப் பேசவந்த நேரத்திலே, பொதுவாக இனாம் ஒழிப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள். இதை இலாகா பரிசீலனை செய்யும், சட்ட இலாகாவும் பரிசீலனை செய்யும். அவசியம் திருத்தம் ஏற்பட வேண்டிய நிலை ஏற்படும்பட்சத்தில் அலைதயும் விவசாயிகளுக்குச் சாதகம் ஏற்படக்கூடிய முறையில் என்ன என்ன செய்யவேண்டுமோ, அதை அரசாங்கம் செய்யும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வட்டியைத்தான் முழு வன்மையாக எதிர்ப்பதாக கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள். "ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய அந்த ப்ரின்ஸிபிளை அது பெரிய எஸ்டேட்டாக இருக்கும் காரணத்தால் ஏற்றுக்கொள்கிறோம், அதை நான் வன்மையாகக் கண்டிக்கவில்லை. இதெல்லாம் சிறிய மிட்டாக்கள், சிறிய இனாம்கள், ஆகையினால், சிறு அளவுக்கு இத்தகைய இனாம் நிலங்களை வைத்திருக்கக்கூடியவர்களை பாதிக்கக்கூடாது" என்று கருத்தில் அவர்கள் பேசினார்கள். கொள்கை (ப்ரின்ஸிபிள்) என்றால், பெரியவர்களுக்கு ஒரு ப்ரின்ஸிபிள், சிறியவர்களுக்கு ஒரு ப்ரின்ஸிபிள் என்று இரண்டுவிதமாகப் பாகுபாடு இருக்கக் கூடாது. அதுவும் வட்டி என்றால், 3 சதவிகிதம் தான் வட்டி. அதிக அளவு இல்லை. அது நியாயம் என்று தான் அரசாங்கம் கருதுகிறது. அதனால் இந்தத் திருத்த மசோதாவைச் சபையிலுள்ள கனம் அங்கத்தினர்களும், சபையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, செக்ஷன் 73-ஏ இன்படி ஒரு நோடிபிகேஷன் வரும்போது இந்த 'அரியர்ஸ்' லிஸ்ட்டிலுள்ள விவசாயிகளினுடைய நிலை என்ன? அதற்கு விளக்கம் தரப்படவில்லை. நில வரி பாக்கியைப் போல் அரியர்சையும், வட்டியையும் வசூல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. ஆனால், இடைக்காலத்தில் விவசாயிகளுடைய நிலை என்ன, அவர்களுடைய உரிமை பிரச்னை என்ன, 'அரியர்ஸைப்' பொறுத்த வரையில் அவர்களுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, நோட்டிபிகேஷன் போட்டவுடன் அது இனுமாக ஆகி விடுகிறது. டி நோட்டிபிகேஷன் செய்தவுடன் நோட்டிபிகேஷன் ஆவதற்கு முன் எந்த நிலையில் இருந்ததோ, அந்த நிலையை அடைந்துவிடுகிறது. இனுமாக நோட்டிபிகேஷன் செய்தவுடன் காப்பென் சேஷனுக ஏதாவது கொடுத்திருந்தால் அந்தத்தொகை தான் டி நோட்டிபிகேஷன் ஆனவுடன் 3 சதவிகிதம் இன்டரஸ்டில் திரும்பப் பெறப்படுகிறது நாம் இனும் என்று நோட்டிபிகேஷனில் செய்கிறோம். அது இனும் அல்ல என்று கோர்ட்டிலே தீர்ப்புக் கொடுக்கிறார்கள். கோர்ட்டிலே என்ன தீர்ப்புக் கொடுக்கப்படுகிறதோ, அந்த நிலைமை தான் இருக்கும். நோட்டிபிகேஷன் கொடுப்பதற்கு முன்பு நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறவர்களும், நிலத்தை விவசாயம் செய்கிறவர்களும் என்ன காண்டிராக்ட், என்ன ஒப்பந்தம், என்ன கஸ்டமரி ப்ராக்டீஸ் வைத்துக்கொண்டு முன்பாக இருந்தார்களோ, அதே நிலைமை தான் டி நோட்டிபிகேஷன் ஆனவுடன் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன்** : ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் 1956 இல் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். 12 வருஷம் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. சர்க்கார் தவறினுல் முதலில் நோட்டிபிகேஷன் செய்ததும், பிறகு டி நோட்டிபிகேஷன் செய்ய வேண்டியதுமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 3 வருஷம் கட்டினுல் போதும் என்பதாகச் செய்வார்களா? அப்படிச் செய்தாலே போதும் என்பதாகத்தான் நான் குறிப்பிட்டேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இதில் சர்க்கார் செய்கிற தவறு ஒன்றும் இல்லை. சர்க்கார் இருக்கக்கூடிய ரெக்கார்டுகளை வைத்துக் கொண்டு இனும் என்று நோட்டிபை செய்கிறார்கள். அது இனும் அல்ல என்று கோர்ட்டில் வாதாட ஜனங்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் வாதாடுவதைச் சரி என்று கோர்ட்டார் ஏற்றுக்கொண்டுவிட்டால், அது இனும் அல்ல என்று கோர்ட்டில் தீர்மானிக்கப்படுகிறது. கோர்ட் தீர்ப்புப்படி ரீ நோடிபிகேஷன் செய்கிறோம். சர்க்காரே கூட ஏதாவது புது ரெக்கார்டுகள் கிடைத்து, அதன் மூலம் அது இனும் அல்ல என்று கண்டாலும் டி நோட்டிபை செய்யலாம். அவரவர்களுக்கு தங்கள் உரிமையை நிர்ணயம் செய்து கொள்ள உரிமை இருக்கிறது. கனம் மாதவன் அவர்கள் வேண்டுமானுல் 3 வருஷத்திற்கு மேல் அதிகமாகப் பழைய பாக்கியை வசூல் செய்யக் கூடாது என்று கோரிக்கை தெரிவித்துக்கொள்ளலாமே தவிர, குற்றச்சாட்டாகக் குறிப்பிட ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1965 (L.A. Bill No. 10 of 1965) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.



Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1965 (L.A. Bill No. 10 of 1965) be passed."

The motion was put and carried and the Bill was passed.

V. GOVERNMENT MOTIONS—*cont.*

(2) DISCUSSION ON THE OFFICIAL LANGUAGE POLICY—*cont.*

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று நான் பேசுகையில் மத்திய ஆட்சிமொழிப் பற்றி நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டு இருக்கின்ற 343, 341, 351 ஆகிய பிரிவுகளைப் படித்துக் காட்டினேன். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய ஆட்சிமொழி இந்தி என்பது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அதோடுகூட நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 345-ஆவது பிரிவும் இருக்கிறது. இது II-வது சாப்டர் (Chapter). "ரீஜனல் லாங்வேஜ்" (Regional Language ) என்ற தலைப்பு. அதில் தான் மாநிலங்களில் எம்மொழி ஆட்சிமொழியாக இருப்பது என்பது பற்றி நிர்ணயித்திருக்கிறது. அதன்படித்தான் நம் மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்று நிர்ணயித்துக்கொள்ள நமக்கு இடம் இருக்கிறது. இந்தப் பிரிவில்தான் மாநிலங்களின் ஆட்சிமொழியாக அந்த அந்தப் பிராந்திய மொழி இருக்கலாம் என்பதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு தொடர்ந்து ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கும் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் கனம் உறுப்பினர்கள் காண்பார்கள். ஆகவே, மொத்தத்தில் "ஆட்சிமொழி", என்ற தலைப்பில் 343 முதற்கொண்டு 351 வரையில் உள்ள பிரிவுகள் மத்திய ஆட்சிமொழியைப் பற்றியும், மாநில ஆட்சிமொழியைப் பற்றியும் நிர்ணயிக்கின்றன. இதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17-ஆவது பாகமாக இருக்கிறது. இது தான் "அபிஷியல் லாங்வேஜ்" (Official Language) என்ற தலைப்பில் உள்ளது.

இதுபற்றி ஒரு கருத்து கூட இருந்து வந்தது என்பதை நாம் உணர்வோம். அதாவது இந்த 17-ஆவது பாகத்தையே அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து எடுத்துவிட வேண்டும், நீக்கிவிட வேண்டும் என்று கூறப்படுகிற கருத்தை இந்த மன்றம் உணர்ந்து இருக்கும் என்று நம்புகிறேன். அவ்வாறு 17-ஆவது பாகத்தையே எடுத்துவிட்டால், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநில, மத்திய ஆட்சிமொழியைப் பற்றி நிர்ணயிக்க முடியாத நிலை தான் ஏற்படும். அது நல்லது அல்ல என்பதை மன்ற உறுப்பினர்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தில் "ஆட்சி மொழி" பற்றி

[திரு. எம். பக்தவத்சலம்] [31st March 1965

பிரிவுகளையே கொளுத்துவது என்று இயக்கம் நடைபெற்றது. அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவதே தவறு. 'Prevention of Insults to National Honour Act' என்பதாக சட்டம் இயற்றி இருக்கிறோம். சட்டத்திற்கு விரோதமாக நடப்பது சட்டப்படி குற்றம் என்பது ஒருபுறம் இருக்க, அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 17-ஆவது பிரிவையே நீக்கிவிடுவது என்பது நம் பிரச்சினையைத் தீர்க்காது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும்.

343 ஆவது ஆர்டிகிள்படி இந்தி, யூனியன் ஆட்சிமொழி என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றியவர்களே, அதை ஏற்றுக் கொண்ட பாரர்ளும மன்றத்தினர்களே, உடனடியாக இந்தி ஆட்சிமொழியாக வருவதில் உள்ள சங்கடங்களை நன்கு உணர்ந்து இருந்தார்கள். அதனால் தான், 15 ஆண்டுகள் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கலாம்—அதற்கு முன்பு ஆங்கிலம் தான் இருந்தது ஆகவே மேலும் 15 ஆண்டுகள் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கலாம்—என்பதாக இந்தச் சட்டத்தில் இயற்றி இருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஆனால், 'பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியே வந்துவிடும்' என்று சட்டம் இயற்றிய போதிலும் 'பதினைந்து ஆண்டுக்குள்ளேயே இந்தியை வைத்துக் கொள்ளலாம், ஆங்கில உபயோகத்தைக் குறைக்கலாம்' என்று கூட அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டு இருப்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஆனால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த 343 ஆவது பிரிவுப்படி இந்தியே—ஆங்கிலம் அல்ல—மத்திய ஆட்சிமொழியாக வந்துவிடும் என்பதாக நிர்ணயிக்கப் பட்டு இருக்கிறது என்றாலும், பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வருவதிலேகூட தொடர்ந்து சங்கடங்கள் இருக்கலாம், இந்தியே ஆட்சிமொழியாக வருவதற்குரிய வாய்ப்பே கூட இல்லாமல் போய் விடலாம் என்பதையும், சட்டத்தை நிறைவேற்றிய பாராளு மன்றத்தினர் உணர்ந்து இருந்தார்கள் என்பதைக் கனம் அங்கத் தினர்கள் உணர்ந்து கொள்ளலாம். ஏனென்றால் ஒரு கமிஷன் போடுவது என்கிற பிரிவையும் செய்திருக்கிறார்கள். 343 ஆவது பிரிவை மாற்ற வேண்டுமென்றால் சட்டம் செய்வதற்கும் அரசியல் அமைப்புச் சட்டம் 343 ஆவது பிரிவில் இடம் கொடுக்கப்பட் பட்டிருக்கிறது. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டு மென்றால் அதற்காகப் பார்லிமெண்டிலே சட்டம் செய்வதற்கு இந்த அரசியலமைப்புச் சட்டத்திலே அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் மென்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. நான் நேற்று இங்கே படித்த அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளின் அடிப்படைக் கருத்துக்கு முரண்பாடு இல்லாத வகையில், அதாவது இந்தி ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்ற 343 வது பிரிவிலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக்கு முரண்பாடு இல்லாத வகையில், ஆங்கிலம் மேலும் தொடர்ந்து இருப்பதற்கான சட்டம் செய்வதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் அங்கத்தினர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.



31st March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

அதன்பிறகு, "அபீஷியல் லாங்குவேஜ்" (Official Language) எந்த அளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்கிறது, மேலும் என்னென்ன செய்வது என்பதை எல்லாம் நிர்ணயிப்பதற்காக ஒரு கமிஷன், முன்பு பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. கேர் அவர்கள் தலைமையிலே 344-வது பிரிவின்படி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் ஆராய்ந்து பார்த்து அதனுடைய முடிவுகளையும், சிபாரிசுகளையும் தெவித்தது. அந்த அடிப்படையில் அந்தக் கமிஷன் எல்லா மாநிலங்களுக்கும், அந்தந்த மாநிலங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக, ஒரு கொஸ்டினையர் (questionnaire) அனுப்பினார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கொஸ்டினையருக்கு விடையளிக்கப்பட்டிருக்கிறது. அப்போதிருந்த அரசாங்கம் விடையளித்திருக்கிறது. இரண்டாவது கமிஷன் விசாரணைக்கு வந்த காலத்திலும் மற்றொரு மெமோராண்டம் (memorandum) தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பாக அனுப்பப்பட்டது. அதற்குப் பின்னால்தான் இந்தக் கமிஷனுடைய சிபாரிசுகள் வந்தன. ஆனால், அந்தச் சிபாரிசுகள் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தாக இல்லை. அந்தக் கமிஷனுடைய சிபாரிசுகளைப் பார்த்தால், பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இந்தி வந்துவிட்டால், இந்தி ஆட்சிமொழியாக இருக்கக்கூடும் என்பதிலே உள்ள சங்கடங்களை, கஷ்டங்களை அந்தக் கமிஷன் போதிய அளவு உணர்ந்ததாகப் புலப்படவில்லை. ஆகவே, அந்தக் கமிஷனின் சிபாரிசுகள் கிடைப் பதற்கு முன்னால் நாம் இரு முறைகள் நம்முடைய மாநில ஆட்சியின் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம்.

பின்னால், இந்த அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அதாவது 344 வது பிரிவின்படி, அந்தக் கமிஷன் எவ்வாறு நியமிக்கப் பட்டதோ அவ்வாறு ஒரு பார்லிமெண்டரிக் கமிட்டியும் நியமிக்கப் பட்டது. கமிஷனின் சிபாரிசுகளை வைத்துக்கொண்டு என்னென்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்வதற்காக பார்லிமெண்டரிக் கமிட்டி (Parliamentary Committee) அமைக்கப்பட்டது. அப்போதும் இந்த மாநில ஆட்சி மூன்றாவது மெமோராண்டம் (Memorandum) தயாரித்து ஆட்சிமொழிபற்றிக் கருத்துத் தெரிவித்தது. ஆனால், இந்த மூன்று மெமோராண்டங்களையும் சேர்த்துப் பார்த்தால்கூட இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தெரிவிக்கப்பட்ட அடிப்படைக் கருத்து ஒரு கருத்துதான், அதாவது, அரசியலமைப்புச் சட்டத்தின்படி இந்தி அகில இந்திய மொழியாக, மத்திய ஆட்சிமொழியாக, இருப்பது என்பதை மறுக்கவில்லை; ஆனால் இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பது தான் அந்தக் கருத்து. இந்த மூன்று மெமோராண்டங்களிலும், முதலாவது மெமோராண்டமாக இருந் தாலும்சரி, இரண்டாவது மெமோராண்டமாக இருந்தாலும்சரி, மூன்றாவது மெமோராண்டமாக இருந்தாலும்சரி, அந்தக் கருத்துத்தான் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், அந்த மெமோராண்டங்கள் தயாரிக்கப்பட வேண்டிய நிலையிலே, அப்போதிருந்த சட்டமன்றத்தின் எல்லாக்கட்சித் தலைவர்கள், ஒரு சில உறுப்பினர்கள் இவர்களையெல்லாம் சேர்த்து, ஒரு கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டிலே இந்த மொழிப்

[திரு. எம். பக்தவத்சலம்] [31st March 1965

பிரச்சினையை நன்றாக ஆராய்ந்து அந்தக் கமிட்டியினரும் கருத்துத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்துக்கேற்றவாறு தான், மெமோராண்டங்கள் தயாரிக்கப்பட்டு அபிஷியல் லாங்குவேஜ் கமிஷனுக்கும் (Official Language Commission) பார்லிமெண்டரிக் கமிட்டிக்கும் (Parliamentary Committee) அனுப்பப்பட்டன. அங்கேயுள்ளவர்களுக்கு இந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வகையிலே அங்குள்ள தமிழ்நாட்டு பார்லிமெண்ட் உறுப்பினர்களும், அந்தக் கருத்தைத் தெரிவித்தோம். அதன்படியே, மூன்றாவது மெமோராண்டத்தையும் தயாரித்து அனுப்பினோம். அதையெல்லாம் அப்போதிருந்த சட்ட மன்றத்தின் எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு கமிட்டியில் கலந்தாலோசித்துத்தான் முடிவு செய்தோம். அப்பொழுது தி.மு.க.வின் பெரும் தலைவரே இந்த மன்றத்திலே தி.மு.க.வின் தலைவராக விளங்கினார்கள். அவர்களும் இந்தக் கமிட்டியிலே இருந்தார்கள். ஆகவே, எல்லோரும் சேர்ந்துதான் ஏகமனதாக முடிவுசெய்து கருத்துக்களைத் தெரிவித்தோம். அந்த மெமோராண்டங்களில் இந்தி மட்டும் போதாது ; மத்திய ஆட்சிமொழியாகத் தொடர்ந்து ஆங்கிலமும் இருக்கவேண்டுமென்பதுதான் முக்கியமான கருத்தாக வற்புறுத்தப்பட்டது. வேறு சில கருத்துக்களையும் தெரிவித்தோம். அதற்கப்புறம் பார்லிமெண்டரி கமிட்டி அநேகமாக அதை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற வகையிலே தன்னுடைய சிபாரிசுகளைச் செய்தது. அதற்குப் பிறகும் மீண்டும் இந்த மாநில ஆட்சி நடத்துபவர்கள், அதாவது தென் மண்டலத்திலே உள்ள மற்ற மாநில முதலமைச்சர்கள், கல்வியமைச்சர்கள் முதலியவர்களுடன் கலந்து ஆலோசித்து ஒருப்படியான வகையிலே இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று, காலவரையறையின்றி இருக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்தோம். அதை அப்போதிருந்த பிரதம மந்திரி அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு அவர்களும் உறுதி அளித்தார்கள். பார்லிமெண்டில் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்தி பேசாத மக்கள், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் வேண்டுகின்ற வரையிலே ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கவேண்டுமென்றும், இந்திதான் ஆட்சிமொழி, ஆனால், "செகண்டரி லாங்குவேஜ்" (Secondary Language) ஆக ஆங்கிலம் சௌகரியத்திற்காக இருக்கும் என்றும் பார்லிமெண்டில் பேசும்போழுது குறிப்பிட்டார்கள். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் எவ்வளவு காலத்திற்கு விரும்புகிறார்களோ, அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்பதற்கிணங்கத்தான் சட்டம் கொண்டுவரப்பட்டது. 343-வது பிரிவில் சட்டம் செய்வதற்கு எந்த வகையில் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த வகையிலேதான் அபிஷியல் லாங்குவேஜ் ஆக்ட் (Official Language Act) என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுதே, அப்போதிருந்த இந்த மன்றத்து உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். என்னைப் போன்றவர்களும், சம்பந்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்களும் அங்கேபோய் விவாதித்தோம். 1963-ல் கலந்துபேசிப் பிறகு அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. சட்டம்

V2... N65



31st March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

N65-29.6

இயற்றப்பட்டபொழுது இன்னும் அதை எவ்வாறு மாற்றியிருக்கலாம் என்ற கருத்துத் தெரிவித்தார்கள். பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழி அபிஷியல் லாங்குவேஜ் சட்டத்தில் வரவில்லை, அந்த உறுதிமொழியும் சேர்த்துச் சட்டம் வேண்டுமென்ற கருத்து இந்த மன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. அங்கேயும் இதைப்பற்றி விவாதிக்கப்பட்டது. முக்கியமான ஒரு பிரச்சினை. அதைப்பற்றி நான் இந்த மன்றத்திலே கூட விளக்கினேன். "May" போடுவதா அல்லது "shall" போடுவதா ? என்ற பிரச்னை வந்தது. "shall" போடுங்கள் என்று நான் குறிப்பிட்டபொழுது "shall" என்று போட்டால் வியாக்கியானங்கள் எல்லாம் வரும், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளுக்கு என்று காலவரையறை போட்டால்தான் "shall" போடலாம் என்று தெரிவித்தார்கள். இதுமாதிரி சில உறுதிமொழிகளைச் சட்டத்தில் போடுவதில் சிரமங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதைப் பிரதம மந்திரி அவர்களும் எடுத்துக் கூறினார்கள். ஆனால், கால வரம்பின்றி ஆங்கிலம் இருக்கவேண்டுமென்பதுதான் நம்முடைய கருத்து. நாம் யார் எதிர்காலத்தைக் 10-30 a.m.
கட்டுப்படுத்துவதற்கு ? 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று போட நாம் யார் ? இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதைச் சட்டமாக்குவது என்றால், இந்தி பேசாத பிராந்தியம் எது எது என்பதிலே சிரமம் இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் கருத்திலே வேற்றுமை இல்லை. இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்பதுதான் விளக்கப்பட்டது. அப்போது சட்டம் இயற்றப்பட்டது; சட்டத்தோடுகூட பிரதம மந்திரி அவர்களின் உறுதிமொழியும் இருந்தது. இந்த மசோதாவைக்கொண்டு வந்த, அப்போது உள்நாட்டு அமைச்சராக இருந்த இப்போதுள்ள பிரதமர் ஸ்ரீ. சாஸ்திரி அவர்களுடைய உறுதிமொழியும் இருந்தது. சட்டம், அதோடுகூட உறுதிமொழி இரண்டும் நமக்கு வேண்டியதுதான். இந்தியோடுகூட நாம் வேண்டாமென்றுசொல்கிற வரையிலே ஆங்கிலமும் இருக்கவேண்டுமென்பது நிறைவேற்றப்பட்டது என்று கூறி[illegible], அது போதாது என்ற கருத்தை எதிர்க்கட்சி தெரிவித்துக் கொண்டுதான் இருந்தது. 'பிரதம மந்திரி உறுதிமொழி இருக்கிறது, சட்டமும் இருக்கிறது; இது போதும்' என்றுதான் நான் குறிப்பிட்டுக் கொண்டு வந்தேன். மற்றவர்களும் குறிப்பிட்டுக் கொண்டுவந்தார்கள்.

64909

பின்னால் 15 ஆண்டுகள் முடியும் தருவாய் வந்தது. வந்த பிறகு கிளர்ச்சிகள் நடந்தன, இயக்கம் வந்தது, பலாத்காரச் செயல்கள் ஏற்பட்டன. அதற்குப் பிறகுதான், இத்தனை உயிர்பலி [illegible] பிறகு தான், முதலமைச்சர்கள் மாநாட்டைக் [illegible] வேண்டுமென்ற எண்ணம் வந்தது என்று சிலர் நினைக்[illegible] தவறு என்றுதான் நான் சொல்லுகிறேன். இந்த இயக்கம் வருவதற்கு முன்பே—ஜனவரி மாதம் முதல் வாரம் என்று நினைக்கிறேன் ; டிசம்பராகவும் இருக்கலாம். சரியாக நினைவு இல்லை, முதல் வாரத்திற்கு மேல் இல்லை அப்போது—ஒரு முதலமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடந்தது. அதில் பிரதம மந்திரியவர்கள்,

உள்நாட்டு அமைச்சர் அவர்கள் எல்லாரும் இருந்தார்கள். அப்
போது இந்திமொழியைக் கையாள்வது எப்படி என்றெல்லாம்
விவாதிக்கப்பட்டது. அப்போதும் எங்களுடைய கருத்துக்களை
எடுத்துக் கூறினோம். 1965 ஜனவரி 26-ம் தேதியிலிருந்து இந்தி
ஆட்சிமொழியாக வந்து விட்டாலும் ஆங்கிலமும் தொடர்ந்து இரு
க்கப்போகிறது அபிஷியல் லாங்வேஜ் சட்டப்படி (Official Language
Act) ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கப் போகிறது. மொழியை
எப்படிக் கையாள்வது என்பதைப்பற்றிப் பேசியபோது, "இந்தி
பேசுகிற, இந்தியைக் கையாள்கிற மாநிலமாக இருந்தாலும் அந்த
மாநிலத்திலிருந்து தமிழ் நாடு போன்ற ஒரு மாநிலத்திற்கு, இந்தி
தெரியாத, இந்தியைக் கையாளாத, ஆங்கிலத்திலே ஆட்சி
நடத்துகிற ஒரு மாநிலத்திற்குக் கடிதம் எழுதினால் இந்தியோடுகூட
ஆங்கிலத்திலும் எழுதி அனுப்பவேண்டும்" என்று நாங்கள்
குறிப்பிட்டோம். "உத்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டு
ஆட்சிக்குக் கடிதம் வருவதாக இருந்தால்—அவர்கள் இந்தியில்
எழுதிக் கொள்ளட்டும்—ஆங்கிலத்திலும் கட்டாயம் இருக்க
வேண்டும், ஆங்கிலத்தில் இருந்தால்தான் புரிந்து கொள்ள
முடியும். இந்தியில் இருப்பதைப்பற்றி ஆட்சேபணை இல்லை;
கூடவே ஆங்கிலத்திலும் இருக்கவேண்டும்" என்று கூறினோம்.
அது ஏகமனதாக அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதே
போன்று ராஜஸ்தான் இந்தி பேசுகிற மாநிலம். இந்தியில்
அவர்கள் விவகாரங்களை நடத்தலாம். ராஜஸ்தான் ஆட்சியி
லிருந்து மத்திய ஆட்சிக்குக் கடிதம் வருவதாக இருந்தால், இந்தி
யில் எழுதினால் போதும், ஆங்கிலத்திலும் எழுத வேண்டாமென்று
கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் அதுவும் சரியல்ல; மத்திய
ஆட்சியில் இந்தி தெரிந்தவர்கள், இந்தி தெரியாதவர்கள் எல்லாம்
இருக்கிறார்கள். ஆகவே, இந்தியில் எழுதினாலும் ஆங்கிலமும்
கட்டாயம் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதுவும்
ஏகமனதாக மத்திய ஆட்சியைச் சேர்ந்தவர்கள், முதலமைச்சர்கள்
எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது நடைபெற்றது
ஜனவரி முதல் வாரம் அல்லது டிசம்பர் மாதத்தில், முதலமைச்
சர்கள் மாநாடு கூடுவது, மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேசுவது,
புதிது ஒன்றுமில்லை.

அதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பே அகில இந்திய சர்விஸ்
கமிஷன் பரிட்சைகள் பற்றி, ஆங்கிலம் இருக்கிறது; அதோடுகூட
இந்தியையும் மீடியமாக Medium ஆக்கவேண்டுமென்ற
யோசனை வந்தது. நான் அப்போது அவர்களிடம் 'கொஞ்சம்
பொறுங்கள்; அவசரப்படாதீர்கள்' என்று தெரிவித்தேன்.
இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதால் இந்தி
கூடாது என்று நான் சொல்ல முடியாது. ஆனால், இதற்கு அவசரம்
வேண்டாமென்று மட்டும் தெரிவித்தேன். ஆனால், இந்தி பேசுகிற
மக்கள் இந்தியும் மீடியமாக இருக்கவேண்டுமென்பதை விரும்பு
கிறார்கள் என்று கூறி அதைப்பற்றி முடிவு செய்யவும் எல்லா
முதலமைச்சர்களையும் அழைத்தார்கள். மன்ற உறுப்பினர்களுக்கு
நினைவு இருக்குமென்று நினைக்கிறேன்; மன்றத் தொடர் கூட்டம்
நடந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் நான் இதற்காகச் சென்
றிருந்தேன். அப்போதும் கலந்து பேசினார்கள். அப்போது நான்





தெரிவித்தேன். "ஆங்கிலத்தில் ஒருசிலர்
ஒரு கருத்தைத் எழுதுவது என்றால் இதிலே
எழுதுவது, இந்தியில் ஒருசிலர் 'Rank' போட
வெறும் மார்க் வாங்குவதோடு மட்டுமல்லாமல் ?," என்று
வேண்டியிருப்பதால் இதை எப்படிச் சரிப்படுத்துவது (moderation formula)
கேட்டேன். மாடரேஷன் ஃபார்முலா ஸ்விட்சர்லாண்டு,
போடலாம் என்று சொன்னார்கள். அந்த முறை என்றும்
பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அனுசரிக்கப்பட்டு வருகிறது (moderation formula)
கூறினார்கள். மாடரேஷன் ஃபார்முலா எங்க
ஒன்று ஏற்படுவதாக இருந்தாலும், முடிவு செய்யுமுன்பு அளிக்கக்
ளுக்கெல்லாம் காட்ட வேண்டும்; எங்களுக்குத் திருப்தி முற்பட
கூடிய அளவிலே இருந்தால்தான், அதை நிறைவேற்ற கொண்
வேண்டுமென்று கூறினோம். அதை அவர்கள் ஏற்றுக் ஃபார்முலா
டார்கள். இன்னும் அந்தமாதிரி மாடரேஷன் கொண்டு வரவில்லை. இது சம்பந்தப்
(Moderation formula)
பட்ட அமைச்சர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது 'இதை
யெல்லாம் பார்த்துத்தான் கொண்டுவரவேண்டும்; இதிலே ஏன்
அவசரம் காட்ட வேண்டும்?' என்று கூறினேன். அவர்களும்
அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். சமீபத்தில் பத்திரிகை
களில் கனம் உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள். 'இந்தியை
உடனடியாக அகில இந்திய சர்விஸ் பரீட்சைகளில் மீடியமாக
கொண்டு வரப் போவதில்லை' என்ற செய்தியைப் பார்த்திருக்க
லாம். அதைப்பற்றி இன்னொரு கருத்தும் இருக்கிறது. இந்தி
ஆட்சி மொழியாக இருக்கிறது; ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சி
மொழியாக இருக்கும். இந்த நிலையில் இந்தி ஒருவருக்குத் தாய்
மொழியாக இருந்தால் அவருக்குப் பிரத்தியேகமான வசதி
கிடைக்கிறது. ஆகவே, 14 மொழிகளும் ஏன் பரீட்சை மீடியமாக
(medium of examination) வரக் கூடாது என்ற கருத்தும்
இருக்கிறது. அந்தக் கருத்து பெரும்பாலோருக்கு இருக்கிறது.
இந்த மாநிலத்திலே அந்தக் கருத்து இருக்கிறது. மற்ற
மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அந்தக் கருத்தைத் தெரிவிக்
கிறார்கள். இதை நாங்கள் பரிசீலனை செய்கிறோம் என்று மத்திய
ஆட்சியினர் சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒன்று நான் கூற
விரும்புகிறேன். ஆங்கிலம் தொடர்ந்து மீடியமாக இருப்பதோடு
கூட இந்தியும் மீடியமாக வரும் என்றால் இந்தியில் மட்டும்
பரீட்சை எழுதியவரை அகில இந்திய சர்வீசில் எந்த மாநில
திற்கு வேண்டுமென்றாலும் அனுப்பலாம் என்பது கஷ்டமாக
இருக்கும். வேறு வேறு பிராந்தியங்களிலிருந்து வருகிற ஐ.ஏ.எஸ்.
ஆபீசர்கள் இருக்கிறார்கள். பஞ்சாபிலிருந்து வருகிற ஐ.ஏ.எஸ்.
ஆபீசர்கள் இங்கு வந்து தமிழைக் கற்றுக் கொண்டு தமிழிலே
பேசுகிறார்கள். முன்பு இருந்த ஐ.சி.எஸ். ஆபீசர்கள்கூட அவ்வாறு
அந்தந்த மொழியிலே பேசக் கற்றுக் கொண்டிருந்தார்கள்.
'இந்தியில் மீடியம் என்று வந்தால் அவர்கள் ஆங்கிலத்தைக்
கையாள்வது சிரமமாக இருக்கும். இந்தியிலேயே எல்லா
இடங்களிலும் ஆட்சி நடத்துவதாக இருந்தாலும் பரவாயில்லை'
என்று சொன்னேன். அதற்கு அவர்கள் பதில் சொன்னார்கள்—
"இந்தியை மீடியமாக வைத்துக்கொண்டாலும் இரண்டு கம்பல்சரி
(compulsory) பேப்பர்கள் ஆங்கிலத்தில் இருக்கும்; ஆங்கிலமும்
அவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும்" என்று கூறினார்கள்.

சமீபத்தில் நான் அங்கே இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது தொடர்ந்து வேறு ஒரு கேள்வியை எழுப்பினார்கள். இந்தியை மீடியமாகக் கொண்டவர்கள், ஆங்கிலப் பேப்பர் கட்டாயமாக எழுதவேண்டும்.

ஆனால் படித்த பிறகு தமிழ் நாட்டிலிருந்து ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் வங்காளத்திற்குப் போனால் அவர் வங்காளி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சை பாஸ் செய்வதில் கட்டாயமாக வங்காளி ஒன்றும் இருக்காது. நான் தெரிந்து கொண்ட வரையில் ஆங்கிலத்தை மீடியமாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அந்தச் சிரமம் இருக்காது என்பதுதான். இந்தியை மீடியமாக எடுத்துக் கொண்டால் ஆங்கிலம் கட்டாயப் பேப்பராக எழுத வேண்டுமென்று இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரை சொல்கிறேன், முடிவாகச் சொல்ல முடியாது. அப்படி வேறு மொழிகளில் பரீட்சை எழுதலாம் என்று வந்தால், கருத்து என்ன வென்றால், அதன் விளைவாக "ஆங்கிலமும் கட்டாயப் பேப்பராக இருப்பதுபோல், இந்தியும் கட்டாயப் பேப்பராக இருக்கும் என்பது. இந்தி மத்திய ஆட்சிமொழியாக ஆகியிருக்கிறது, எனவே இரண்டும் கட்டாயமாக இருக்கும்", என்று கூறுகிறார்கள். அதையும் கனம் உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். நான் தெரிந்து கொண்டதை எடுத்துச் சொல்கிறேன்.

மீண்டும் முதல் அமைச்சர்கள் மகாநாடு பெப்ரவரி 23-ம் தேதி நடந்தது. ஆங்கிலம் இருக்கிறது, இருக்கும், தொடர்ந்து இருக்கும். பிரதம மந்திரி அவர்களின் உறுதிமொழி இருக்கிறது, அபிஷியல் லாங்குவேஜ் (Official Language) சட்டம் இருக்கிறது. அந்த உறுதிமொழி என்றென்றும் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழி இன்று நம் பிரதம மந்திரி அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இன்று ஒன்றும் மாறுதல் இல்லை. முன்பே சொன்னதுதான் இன்றும். அன்று நமக்கு உறுதிமொழி அளித்த ஒப்புயர்வற்ற பிரதம மந்திரி அவர்கள் மறைந்துவிட்டார்கள். அதோடு நாட்டில் ஒரு அச்சம் ஏற்பட்டது. சிற்சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அவை சிறிய நிகழ்ச்சிகளாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் மக்களுக்கு ஒரு அச்சம் தோன்றியது. பழைய பிரதம மந்திரி அவர்கள் இப்பொழுது இல்லையே, இது அப்படியே கவனிக்கப்படுமா, நிறைவேற்றப்படுமா, என்ற அச்சம் ஏற்பட்டது. அதைத்தான் நான் மத்திய அரசினரிடம் கூறினேன். "ஒரு அச்சம் ஏற்பட்ட பிறகு இதற்கு அவசியம் இல்லை என்று சொன்னால் மட்டும் போதாது. இதைச் சட்டமாக்குவதுதான் நல்லது. எவ்வளவு தூரம் சட்டமாக்க முடியுமோ அதை ஆக்கலாம்" என்று கூறினேன். அதை எப்படி ஆக்குவது என்பது, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில்—அதற்கு நான் விளக்கம் கூறுவது—எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்பது. அப்போது ஒரு வரம்பு வந்து விடுகிறது. முப்பது அல்லது 40 ஆண்டுகள் என்று போடலாம் என்று வந்தாலும் ஒரு வரம்பு வருகிறது. முன்பே பிரதம மந்திரி அவர்கள் கூறினார்கள், அப்போதைய உள்நாட்டு மந்திரியாக





இருந்த இப்போதைய பிரதம மந்திரி அவர்களும் கூறினார்கள், 'shall' என்று போட்டால் ஒரு சங்கடம் இருக்கிறது என்று. 'Till such time என்றால் ஒரு வரம்பு வருகிறது; "shall" என்று போட்டால் தெளிவாக இருக்கும், சந்தேகமே இருக்காது. முன்பே இந்த யோசனை ஏன் ஏற்படவில்லை என்றால் அப்போது நிலைமை வேறு. அப்போது கால வரம்பு ஒன்றும் இல்லை. இப்போது வரம்பு வைத்துக் கொள்ளுகிறோம். ஆகவே "shall" போடலாம் என்பது என் கருத்து. அதை வற்புறுத்தியிருக்கிறேன். முதல் அமைச்சர்கள் மகாநாடு மீண்டும் கூடியபோது இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தக் கருத்தை ஒருவாறு ஏற்றுக் கொண்ட வகையில்தான் பிரதம மந்திரி அவர்கள் பார்லிமெண்டில் முதல் அமைச்சர்கள் கருத்து என்று ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். வேறு வேறு செய்திகள் பத்திரிகைகளில் வரலாம். நேற்றுக் கூட அந்த மன்றத்தில் கனம் உறுப்பினர் ஒருவர் கேட்டார். எந்தச் செய்தி வந்தாலும் இதில் ஒன்றும் ஐயப்படுவதற்கு இடமில்லை, கவலைப்படுவதற்கு இடமில்லை. இந்தச் சட்டம் ஆக்கப்படும், ஆங்கிலமும் தொடர்ந்து இந்தியோடுகூட இருக்கச் செய்யும் சட்டம் இயற்றப்படும். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாநிலங்கள் வேண்டுகிற வரையில், ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் வகையில் இது சட்டமாக்கப்படும். இன்னும் ஆகவில்லையே, இன்னும் எடுக்கவில்லையே என்று அவசரப்பட்டு, நமக்கு திருப்தி இல்லாத சட்டம் வருவதினால் பயன் இல்லை. இப்போது அனுபவத்தில் பார்த்தோம். ஒரு மாநிலத்தில்—ரொம்ப நிதானமாகச் செல்கிறவர்கள்—ஒரு கருத்துத் தெரிவித்தார்கள். தங்களுடைய அரசாங்கத்தின் கருத்து என்று தெரிவித்தார்கள். மற்ற எல்லா கட்சிகளுடைய தலைவர்களையும் கலந்து ஆலோசித்துச் செய்தது இந்தக் கருத்து என்று சொன்னார்கள். 'இந்தியை தாய்மொழியாகக் கொள்ளாத மாநிலங்களில் நாலில் மூன்று பங்கு ஒப்புக்கொள்ளும் வரை' என்று சொன்னால், 'அந்த ஒரு பங்கு என்னவாகிறது?' என்றேன்.

வினோபாஜி அவர்கள் சீரிய ஒரு கோட்பாட்டை நமக்கு அறிவித்தார்கள். இம்பொஸிஷன் (Imposition) என்பது கூடாது. இந்தி வேண்டாதவர்களிடம், இந்தியைக் கையாளத் தயாராக இல்லாதவர்களிடம் இந்தியைத் திணிக்கக் கூடாது, அதேமாதிரி ஆங்கிலம் வேண்டாமென்று சொல்கிறவர்களிடம் ஆங்கிலத்தையும் நாம் திணிக்கக் கூடாது. இப்போது சில உறுப்பினர்கள் யோசனை, ஆங்கிலமே இருக்கட்டும், அம்மாதிரி அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி விடலாம் என்பது. ஆனால் ஆங்கிலமே இருக்கட்டும் என்றால் ஆங்கிலத்தை அவர்கள் மேல் திணிப்பதாகும். ஆகவே நாம் எப்படி இந்தித் திணிப்பு கூடாது என்று சொல்கிறோமோ அதேமாதிரி ஆங்கிலத் திணிப்பை நாம் எவ்வாறு வற்புறுத்துவது? இந்த நாடு ஒன்று. இமயம் முதல் குமரி வரையில் உள்ள நாடு. இந்த நாட்டின் ஒற்றுமைக்குச் சிறிதும் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் நாம் எதையும் செய்யக்கூடாது என்பதைக் கனம் உறுப்பினர்கள் யாவரும் ஒப்புக்கொள்வார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். யார் மீறும்

திணிப்புக் கூடாது. அதைத்தான் சொல்கிறேன். இந்தச் சட்டம் கூட எதற்கு என்று நினைக்கிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் சொன்னேன், உறுதிமொழியை நாம் ஒப்புக்கொள்வதாக இருந்தால் அது சட்டமாக்கப்பட வேண்டும் என்பதை ஏன் எதிர்க்கிறீர்கள்", என்று. "ஏதாவது மென்டல் ரிசர்வேஷன் (mental reservation இருந்தாலும் எதிர்க்கலாம், இந்த உறுதிமொழி கூடாது என்றால் எதிர்க்கலாம், உறுதிமொழி இருக்கிறது, ஆகவே சட்டமாவதை ஏன் எதிர்க்கிறீர்கள்?", என்று கேட்டேன். "சட்டம் வேண்டாமென்று சொன்னால் சந்தேகம் அதிகப்படுகிறது, ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்", என்று நான் நேரிடையாகச் சிலரிடம் கேட்க, அவர்களால் விடை அளிக்க முடியவில்லை. "நீங்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு எங்களுக்கு நிலைமை இப்போதுதான் புலப்படுகிறது", என்று ஒரு சிலர்—பார்லிமென்டில் முக்கியமான உறுப்பினர்களாக இருக்கிறவர்கள்—சொன்னார்கள். ஆகவே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும்.

ஒன்றை நாம் மனதில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. அந்தக் கருத்து இந்த மன்றத்திலும் தெரிவிக்கப்படலாம். இரண்டு அல்லது மூன்று மொழிகள் ஆட்சிமொழியாக இருக்க முடியும் என்பதை மற்ற நாடுகளில் பார்க்கிறோம். பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழிகளாக எடுத்துக் கொள்வது என்றால் அது அவ்வளவு சாத்தியம் அல்ல என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுதான் பெரும்பாலும் தெரிவிக்கப்படுகிற கருத்து. பதினான்கு மொழிகளையும் போட்டால் பார்த்துத்தான் போட வேண்டியிருக்கும். நான் எந்த மொழியையும் குறைத்துச் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்கு சம்ஸ்கிருதத்தில் மிகுந்த ஆர்வம் உண்டு. எனக்கும் உண்டு. சம்ஸ்கிருதம் சிறந்த பொக்கிஷம். நம் மாணவர்கள் அதைப் படிக்க வேண்டியது செய்ய வேண்டும். இந்திக்குக் குந்தகம் இல்லாமல் சம்ஸ்கிருதம் படிக்க, வேண்டியது செய்யவேண்டுமென்ற முறையில் பாடத் திட்டத்தை அமைப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்தி, உருது, சம்ஸ்கிருதம் என்று 14 மொழிகள் போட்டிருக்கிறார்கள். எல்லா மொழிகளும் வரவேண்டும், எல்லாம் வருகிற வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று சொன்னால் எல்லா மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக வரும், சமஸ்கிருதமும் சேர்ந்துதான் வரும். இந்தியும் வரும். அது சாத்தியப்படுமா என்பதைப்பற்றிக் கனம் உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது மத்திய ஆட்சி மொழி இந்தி என்பது அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நான் நேற்று கூறியதுபோல் நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காலத்தில் காந்தி அடிகள் நம்மை உணரச் செய்தார்கள். நாம் அதை ஏற்றுக் கொண்டோம். அந்த வகையில்தான் இந்தி மத்திய ஆட்சி மொழியாக வருகிறது. அதைப் பெரும்பாலான மக்கள் விரும்புகிறார்கள். நாம் ஜனநாயகத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. எல்லா





மொழிகளையும் ஆட்சிமொழிகளாக வைத்துக் கொள்ளுங்கள்
என்று சொன்னால் அது ஆட்சி நடத்துவதற்குச் சௌகரியமான
வழியாக இருக்காது என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

மற்றொன்று நான் நேற்று வாசித்தேன். 351-வது பிரிவில்
இந்தியைப் படிப்பதற்கு எல்லோருக்கும் வசதி செய்து கொடுக்க
வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியின் டெவலப்
மெண்டுக்காக (development) அரசாங்கம் கவனம் செலுத்த
வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்திக்குக் கவனம்
செலுத்த வேண்டும் என்று சொல்லும்போது மற்ற மொழிகளுக்குக்
கவனம் செலுத்தப்படமாட்டாது என்று அர்த்தமல்ல. மற்ற 13
மொழிகளினுடைய டெவலப்மெண்டுக்கும் (development)
அரசாங்கம் அக்கறை செலுத்தும். பதினான்கு மொழிகளையும்
அரசாங்கம் தேசீய மொழிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.
இந்த மொழிகள் எல்லாம் முன்னேறுவதற்குக் கவனம் செலுத்தப்
படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும்
திரும்பித் திரும்பி இதைச் சொல்லிக் கொண்டு வருகிறது. அதற்
கான வகையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான முறை
யில் உறுதியும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும்
முக்கியமாக இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்ற
இடங்களில் வேறு ஒரு மொழியைக் கண்டிப்பாகப் படிக்க வேண்
டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்தைப் பொறுத்த
வரையில் நாம் தமிழில் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம்.
வேகமாக அதை அமல் நடத்துவதற்கு நாம் முற்பட்டிருக்கிறோம்.
மீண்டும் நான் உறுதியாகக் கூறுவேன், மற்ற எந்த மாநிலங்
களிலும் இல்லாத அளவுக்குத் தாய்மொழியில் ஆட்சியை நடத்து
வதில் நாம் முன்னணியில் நிற்கின்றோம் என்று. அதே நேரத்தில்
ஒழுங்காகவும், வேகமாகவும் வேலைகள் நடந்து கொண்டிருக்
கின்றன. ஆனால் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்வதில் தவறு
தலும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் நமக்கு அக்கறையிருக்
கிறது. இன்றைக்கு மாநில ஆட்சியைப் பொறுத்தவரையில்
தமிழில் முற்றிலும் ஆட்சி செய்வதற்கு முற்பட்டு விட்டோம்.
சீக்கிரத்திலேயே அது நிறைவேறும்.

மத்திய ஆட்சியைப் பொறுத்தவரையில், இரு மொழிக்
கொள்கை இருக்க வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். எல்லா
மாநிலங்களும் சேர்ந்து ஒரு மொழியே இருந்தால் போதும்
என்று சொல்வதாக இருந்தால் விஷயம் வேறு. ஒருசில
மாநிலங்கள் வேண்டுமென்றால் ஒரு மொழியை மட்டுமே மத்திய
ஆட்சிக்காக வைத்துக் கொள்ளலாம்; நம்மைப் பொறுத்தவரை
யில், ஆங்கிலத்தை இந்தியோடு தொடர்ந்து வைத்திருக்க
வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அதற்குரிய
சட்டத்தைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். இந்த இருமொழிக்
கொள்கையிலும் பயன் இல்லை என்றால், மொழிப் பிரச்னையைத்
தீர்ப்பதற்கு வேறு வழியில்லை என்று நான் சொல்வேன்.

இது தவிர, மும்மொழிக் கொள்கை என்று இருக்கிறது. அது
பள்ளிகளில் படிப்பதற்காக. தாய்மொழி ஒன்று, ஆங்கிலம் உலக
மொழி, அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது, இன்னொன்று

வேறு ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது, அதில் இந்தியைப் படிப்பதுதான் சௌகரியமாக இருக்கிறது என்று மாணவர்களே உணர்ந்திருக்கிறார்கள். இந்தி வேண்டாம் என்று சொல்லுகின்ற மாணவர்கள் கூட, பெரும்பாலும் இந்தியைத்தான் படிக்கிறார்கள். மத்திய ஆட்சியைப் பொறுத்த வரையில், இரு மொழிக் கொள்கை. ஆங்கிலமும் இருக்க வேண்டும். இந்தியும் இருக்கும். அதே நேரத்தில் மாநிலத்தின் ஆட்சியைப் பொறுத்த வரையில், தமிழில் எல்லாம் நடத்தப்படுகிறது என்றிருந்தாலும், கொஞ்ச காலத்திற்கு, எவ்வளவு காலத்திற்குத் தேவை என்று நாம் விரும்புகிறோமோ அதுவரைக்கும், ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்வதற்கு நாம் சட்டம் செய்திருக்கிறோம். இதுதான் நிலைமை. இதற்கு மேல் இந்த மன்றத்தின் நேரத்தை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. இரண்டு நாட்கள் இதன் மீது விவாதம் நடைபெறும். பல திருத்தங்கள் இதன் மீது பிரேரேபிக்கப்படவிருக்கின்றன. இதற்கு மேல் ஏதாவது விளக்க வேண்டியிருந்தாலும் இறுதியில் நான் விடையளிக்கும்போது விளக்குகின்றேன் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : Amendments to the motion can be moved now.

Sri V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move the following amendment :

Add at the end the following—

"and on such consideration this House recommends to the Government to convey to the Union Government that this House is of opinion that steps should be taken to recognise all the fourteen languages enumerated in the Eighth Schedule of the Constitution as the Official Languages of the Union under Article 343 and till such time English shall be retained for all official purposes of the Indian Union."

Sri K. A. MATHIALAGAN : Sir, I second it.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஆட்சிமொழிக் கொள்கைபற்றிய பிரேரணைக்கு அடியிற்கண்ட என்னுடைய திருத்தத்தைப் பிரேரிக்க அனுமதி கோரி திருத்தத்தைப் பிரேரேபிக்கின்றேன்—

இறுதியில் பின் வருபவற்றை சேர்த்துக் கொள்ளவும்—

"ஆட்சிமொழிக் கொள்கை விவாதத்திற்குப் பின், இம் மன்றம் பின்வருமாறு சிபாரிசு செய்கிறது,

'இந்தி ஆட்சிமொழியாவதால், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புப் போன்ற வாழ்க்கை நிலை பெரிதும் பாதிக்கக்கூடுமானதாலும்—,

'இந்தி ஆழ்ந்த, முதிர்ந்த, தெளிந்த பொருள் சிறந்த, சொல் வளம் அற்ற மொழியாகவும், பழம்பெரும் இலக்கியங்கள் அற்ற மொழியாகவும், எக்காலத்திலும், எப்பகுதியிலும், [illegible]





போதும் ஆட்சிமொழியாக விளங்காத ஒரு மொழியாகவும் இருப்பதாலும்—,

அகில உலக மொழியாக விளங்கும் ஆங்கிலமே தொடர்ந்து நம் ஆட்சிமொழியாக இருக்குமானால் இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவிலும் பயன் விளைக்கக் கூடுமானதாலும—,

தொடர்ந்து ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருந்தாலன்றி தேச ஒருமைப்பாட்டுணர்ச்சியே சிதறுண்டு போய்விடக்கூடுமானதாலும்—,

ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருந்தால்தான் நமது அரசியல் சட்டத்தின் முகவுரையில் உறுதி தரும் "அந்தஸ்திலும் வாய்ப்பு வசதியிலும் சமத்துவம்" என்பது நிலை நிறுத்தப் பெறுமானதாலும்—,

ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் ஆட்சிமொழியாக இருந்து வரவேண்டும் என்று தமிழ்நாட்டுச் சட்டசபை தன் அழுத்தமான கருத்தைப் புலப்படுத்திக் கொள்ளுவதுடன், இதற்கேற்ப இந்திய அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்றும் இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறது."

Sri KR. RM. KARIAMANICKAM AMBALAM : Sir, I second it.

Sri M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :

Add at the end the following—

"and on such consideration this House recommends that—

(a) effective representations be made to the Union Government for retaining English as co-official language at the Union level and for making necessary statutory provision for the same ;

(b) the Union Government be requested to conduct the business of the Central Offices in the States in the Regional languages and English and to ensure equal status for the Regional Languages ;

(c) the Union Government be requested to recognise the Regional Languages for the purpose of holding examinations for All India Services and Union Public Service Commission, if and when English is replaced ;

(d) the Union Government be requested to allot adequate funds and to take other necessary steps for introducing one of the South Indian Languages, as a third language, in Hindi-speaking areas ;

(e) effective steps be taken for replacing English by Tamil on a phased programme for all official purposes and to make Tamil the sole official language for all the purposes at State level, including the proceedings of the High Court, and

(f) all efforts be taken for the introduction of Tamil as medium of instruction at all levels of Education, while teaching English and Hindi as second and third languages in the State."

SRI A. KUNJAN NADAR : Sir, I second it.

SRI V. KRISHNAMOORTHY : In view of the fact that my Party leader has moved an amendment to the motion, I am not moving my amendment.

MR. SPEAKER : I would like to say one or two words. This is a very important discussion. I would request the hon. Members to be very lucid and to express their views with clarity and to give us more light than heat. I hope the discussion here will prove useful to the country.

There are 13 Members who have given their names. We have got about 2½ hours. The hon. Member Sri Mathialagan wants 20 minutes. I will allot 10 minutes each for the others.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு யோசனை சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த விவாதம் உஷ்ணத்திற்கு இடம் கொடுக்காத வகையில் வெளிச்சத்திற்கு இடம் கொடுக்கின்ற முறையில் இருக்க வேண்டும் என்று சொன்னது மிகவும் வரவேற்கக் கூடியது தான். இதில் கனம் முதலமைச்சர் அவர்கள் எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கலந்து பேசி, ஏதாவது ஒரு திருத்தத்தை ஒப்புக் கொள்ளுகின்ற வகையில் ஆலோசிக்க முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

11-00 **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது சிரமமான காரியம் இப்போது கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருப்பதையும், கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருப்பதையும் ஒருகாலும் ஒப்புக்கொள்ளமுடியாது. இதையெல்லாம் பேசி அப்புறம் முடிக்கலாம்.

**கனம் சபாநாயகர் :** கடைசியில் அப்படி முடிக்கலாம். ஆனால் இப்போது நான் சொல்லுவது வேறு. கடந்த முப்பது நாட்களாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. நமக்கு இருக்கிற கோபம் தாபம் எல்லாவற்றையும் காட்டியாகிவிட்டது. இதிலே அந்த மாதிரி போனால் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். கோர்ட்டிலே கேசை ஜெயிக்க தளுக்காக, நாசூக்காக பாயிண்ட்லை எடுத்துச் சொல்லுவார்களே, அந்த மாதிரி ஒவ்வொருவரும் பாயிண்ட்லை கெயின் பண்ணுகிற முறையில் விவாதத்தில் பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். நான் இதிலே ஒன்றும் கண்ட்ரோல் செய்ய முடியாது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு வேண்டுகோள். பேசுகிற உறுப்பினர்கள் பேசி முடிக்கிற வரையில் தாங்கள் காலம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அது என்றால் முடியாது. வேண்டுமானால் நீங்கள் யாராவது இங்கே இருந்துகொள்ளுங்கள், சேரைக் கொடுத்து விடுகிறேன்.

Hon. Member Sri Arangannal or any other Member may conduct the proceedings and allot the time for the speeches of the



Members. The point is, it is not possible. If all the hon. Members make it a point to finish their speeches within the time allotted to them, I will not touch the time bell before me and I am even prepared to remove it from my table here.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'ஹீட்' இல்லாமல் பேசுவதற்குக் கூடியவரை சுருக்கமாகப் பேசுவது நல்லது.

**கனம் சபாநாயகர் :** நல்லது. 10 நிமிஷம் என்றால், அதற்கு மேல் ஒன்றிரண்டு நிமிடங்கள் போனால் பரவாயில்லை. சபையில் நான் சப்தம் செய்யக்கூடாதல்லவா—எனக்கு இங்கு இருக்கிற 'பெல்' தான் உதவி. கனம் அங்கத்தினர்களெல்லாம் டயத்தை அட்ஜெஸ்ட் செய்துகொண்டு போனால் இந்த 'பெல்' லைக் கூட எடுத்துப் போட்டு விடலாம்.

SRI A. KUNJAN NADAR : Sir, we can extend the time for discussion by having a sitting in the afternoon.

MR. SPEAKER : We are having discussion on this subject for another day. If necessary, and if the leaders of parties agree, the suggestion of the hon. Member can be considered.

Now hon. Member Sri K. A. Mathialagan may speak.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் விவாதிக்கப்படுகிற இந்த ஆட்சி மொழி பற்றிய விவாதத்தில் வெப்பத்திற்குப் பதிலாக ஒளி அதிகமாக இருக்க வேண்டுமென்று தாங்கள் கூறிய பொன்னான அறிவுரையின் அடிப்படையில் நம்முடைய நாட்டையும், எதிர்காலத்தையும் மிகவும் பாதிக்கக் கூடிய இந்தப் பெரும் பிரச்னையில் அந்த அறிவுரை நல்ல வகையிலே விளங்க அதைக் கடைப்பிடிக்க நாங்கள் முயலுவோம் என்ற வகையில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள், ஆட்சி மொழி சம்பந்தமாக எழுந்த வரலாற்றைப் பற்றியும், அது பிறந்த விதத்தைப்பற்றியும், இன்றைக்குள்ள நிலைமைகளைப்பற்றியும், நேற்றைய தினமும் இன்றைக்கும் விளக்கியிருக்கிறார்கள். இனி எதிர்காலத்தில் அவர்களாலே என்ன செய்ய முடிந்தது என்பதைப் பற்றியெல்லாம் சொல்லி, இது தான் சிறந்த பரிகாரம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று நான் சொல்லிக்கொள்வேன். முதல் அமைச்சர் அவர்கள் 1964 வது வருஷத்திலே இருந்த நிலையிலிருந்து இன்றைய தேதியிலே முன்னேற்றமான பாதையிலே அடி எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்குச் சென்றிருக்கிற வழி மிகவும் எங்களுக்கு முழுமையான திருப்திகரமான வழியாக இல்லாவிட்டாலும், அது சரியாத பாதைகள் தான், அந்தப் பாதையில் அவர்கள் ஒரு அடி எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வேன். அப்படி நான் பாராட்டுதலைத் தெரிவிக்கிற நேரத்தில் இந்த மொழிப் பிரச்னை கடந்த 30-40 வருஷங்களாகவும்

[திரு. கே. ஏ. மதியழகன்] [31st March 1965

இன்னும் எதிர்காலத்திற்கும், இன்றைக்கு இந்தியாவிலேயே மிக மிகச் சீக்கிரத்தில் பரிகாரம் தேடப்பட வேண்டிய பிரச்னையாக இருக்கிறது என்பதையும், அதனுடைய பரிகாரம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற இந்த இரு மொழிக் கொள்கையினாலோ இன்றைக்கு அவர்கள் சொல்லுகிற பரிகாரங்களாலோ நிறைவேற்றப்பட முடியாது என்று மிகுந்த வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்கிறேன்.

நேற்றைய தினத்திலே குறிப்பிட்டார்கள். காந்தி மஹான் இந்தியைப் படிக்க வேண்டுமென்று சொன்னார் என்று குறிப்பிட்டார்கள். அரசியல் சட்டம் இப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது, 1965-ம் வருஷத்தில் இந்தி வந்துதான் ஆகவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். 'மே' என்று சொல்லிக்கொண்டு இருந்ததை இன்றைக்கு எப்படி 'ஷெல்' என்று ஒத்துக்கொண்டார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். துணைச் சபாநாயகர் அவர்களே, ஆழ்ந்த வருத்தத்தோடும் வேதனையோடும் எவ்வளவோ சஞ்சலத்திற்கிடையில் சொல்லிக் கொள்வேன். இன்றைக்கு ஆட்சி மொழிப் பிரச்னை அரசியல் சட்டத்தில் இருக்கிற 343-வது விதியோடு ஒழிந்து விடுவது அல்ல. இது 44 கோடி மக்களின் சமுதாயப் பிரச்சினையாகும். அரசியல் சட்டத்தில் 343-வது விதி ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் செய்யப்பட்டது. அந்த விதி சரியான சூழ்நிலையில் நன்றாகப் பரிசீலனை செய்து செய்யப்பட்டது அல்ல. அன்றைக்கே சிலர் இந்தி ஆட்சி மொழி ஆகி விடவேண்டுமென்று சொன்னார்கள். 'இல்லை, காலம் தாழ்த்த வேண்டும்' என்று இந்தி பேசாத பகுதியினர் சொன்னார்கள். பிரச்னைக்கு முடிவு காணாமல் காலம் தாழ்த்தும் ஏற்பாடாகத்தான் அது அமைந்தது. இன்றைக்கு அஃபிஷியல் லாங்குவேஜ் ஆக்ட் மூலமாகச் செய்வது கூட காலம் தாழ்த்துகிற ஓர் ஏற்பாடுதான். காந்தியடிகள் சொன்னார்கள் என்று சொன்னார்கள். காந்தியார் சொன்ன நிர்மாணத் திட்டங்களில் ஒன்று என்று சொன்னார்கள். காந்தியார் சொன்ன நிர்மாணத் திட்டங்கள் எவ்வளவோ இருக்கிறதே அவைகளெல்லாம் வெற்றிகரமாக ஆகாத திட்டங்களாகத்தான் முடிந்தன. காந்தியார் சொன்ன கதர் திட்டம் என்ன ஆயிற்று? காந்தியார் சொன்ன அஹிம்சை என்ன ஆயிற்று? இன்றைக்கு நாட்டிலே இருக்கிற பட்டாளங்களும், ஆயுத தளவாடங்களும் காந்தியார் சொன்ன அஹிம்சையின் அடையாளச் சீட்டுகளா என்று அறிய விரும்புகிறேன். இன்றைக்கு கனம் மன்றாடியார் இருக்கிறார், அவரை வேண்டுமானால் விட்டுவிடுங்கள், கனம் மஜீத் இருக்கிறார், அவரை வேண்டுமானால் விட்டுவிடுங்கள், கனம் ஜோதி அம்மையாரை விட்டு விடுங்கள், இங்கு இருக்கிற மந்திரிமார்களில் 30, 40 வருடங்களாக காங்கிரசில் உள்ள எத்தனை பேர்கள் இந்தி படித்தார்கள், என்ன நற்சாட்சிப் பத்திரம் வைத்திருக்கிறார்கள்? அவர்கள் வீட்டுக் குழந்தைகளில் யார் படித்தார்கள்? மொழிக் கமிஷனுக்கு தமிழக அரசு அனுப்பிய மெமோராண்டம் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதியிலிருந்து இந்திதான் ஆட்சி மொழியாக வந்து விட்டது. இதைத் தடை செய்ய முடியவில்லை. எனவே எங்கள் ஆட்சேபத்திற்கு துக்க நாள் கொண்டாடுகிறோம் என்று



1st March 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

காபித்துக் கொள்கிறார்கள். ஆனால் தமிழக அமைச்சரவை மொழிக் கமிஷனுக்கு அறிக்கை அனுப்பினார்கள். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்?

"There can be no reasonable doubt in the mind of any one who has grasped the practical implications of the transition from English to Hindi, that 26th January 1965 is an utterly impossible date line. The obvious truth must be acknowledged, so that unfulfillable expectations may not continue to be fostered and unnecessary apprehensions may not continue to be entertained."

இப்படி நாம் அறிக்கை அனுப்பி வைத்தோம். 1965-ம் வருஷம் ஜனவரி 26-ம் தேதி utterly impossible date line (கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தி மட்டும்) இந்தி மாத்திரம் இருப்பது. முழுக்க முழுக்க முடியாத காலவரையறை. Unfulfillable expectations "நிறைவேற்ற முடியாத பேராசை" unnecessary apprehensions "தேவையற்ற அச்ச உணர்வுகள்" இவைகளெல்லாம் சென்னை சர்க்கார் அறிக்கையில் குறிப்பிட்டது, இந்தி மாத்திரம் இருப்பது பற்றி. ஜனவரி மாதம் 23-ம் தேதி நான் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டு வந்து ஜனவரி 26-ம் தேதி இந்தி ஆட்சிமொழி ஆவதை தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, பெரும் பீதி, அச்ச உணர்வு இருக்கிறது. வங்காளத்து அரசு இந்தி எழுத்துள்ள லாரியைப் பிடித்து நிறுத்துகிறார்கள். நீங்கள் என்ன செய்தீர்கள் என்று சொன்னபோது என்ன சொன்னார் நமது முதலமைச்சர். 1950-ம் வருஷமே அரசியல் சட்டம் சட்டமாகி விட்டது. இந்தி ஆட்சி மொழியாகி ஆண்டு பதினைந்து ஆயிற்று. அன்றைக்கு எப்படி அவசரத் தீர்மானம் பொருத்தமற்றது என்று தான் நிராகரித்தார். இன்றைக்குக் கூறுகிறாரே, நாம் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று கூறியதாக அதனை ஜனவரி 26-ந் தேதிக்கு முன்பு கூறினாரா? குற்றச்சாட்டுக்காக சொல்லவில்லை. மொழிப்பிரச்சினை சம்பந்தமாக திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொன்னதைப் பெருமையோடு வரவேற்கிறேன். இதிலே (Rethinking) மறு சிந்தனை தேவை, இந்தியாவின் ஐக்கியமா என்பது பிரச்சினை, ஒருசிலருடைய ஆசாபாசங்களைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு திரு. சுனித் குமார் சாட்டர்ஜி அவர்கள் அஃபிஷியல் லாங்வேஜ் கமிஷன் அறிக்கைக்கு ஆட்சேபக் குறிப்பில் சொன்னார்கள். சட்டம் நிறைவேறி, 1965-ம் வருஷத்தில் ஆட்சி மொழி ஆவது பற்றி, ஐந்து ஆண்டுகள் கழித்து என்ன சொன்னார்கள்?

"Considering that the Hindi-speaking people will have a natural and permanent advantage over non-Hindi speakers, if Hindi which is the regional language and mother-tongue of the former, comes to be used for all the official purposes of the Union; and that as a consequence India will have privileged class of Hindi-speakers in all the departments of public life and administration;

Considering also the fact that as an immediate consequence the fundamental rights of the non-Hindi speakers in the matter of their language are sure to be profoundly affected both in a pan-Indian setting as well as within their States;

[திரு. கே. ஏ. மதியழகன்] [31st March 1965

Considering further that the present political situation in the various States of India is at present quite abnormal and full of ferment through the working of linguistic and territorial jealousies and oppositions, and is not in the least propitious for any far-reaching change which may be taken to affect or modify the linguistic and other rights of various sections of the Indian people, particularly when they are outside of the Hindi orbit;

the question of the progressive use of the Hindi language for the official purposes of the Union be kept in abeyance for the time being as it may otherwise bring in other grave complications unnecessarily within the Union."

என்று சுனித்குமார் சாட்டர்ஜி அவர்கள் தமிழ் நாட்டு சுப்பராயன் அவர்களோடு கமிட்டியின் சிபார்சுக்கு ஒரு ஆட்சேபணைக் குறிப்பு எழுதினார்கள். இதையெல்லாம் எச்சரிக்கையில் பல்வேறு கட்டங்கள். ஒரு மொழி ஆட்சிமொழியாக இருப்பதற்கு என்ன அடிப்படை தகுதிகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆட்சி மொழியாக வருவதற்கு அவர் குறிப்பிட்ட இலக்கணமே போதும் என்று நான் கருதுகிறேன். சுனித் குமார் சாட்டர்ஜி அவர்கள் ஆட்சி மொழிக்கு என்னென்ன குறிக்கோள்கள் இருக்க வேண்டும் என்பதற்கு ஐந்து தகுதிகள் சொல்லியிருக்கிறார்கள். அவை பின்வருமாறு:

" (i) Maintenance of national unity;

(ii) Maintenance of efficiency of administration;

(iii) Advancement of knowledge among all sections of the people;

(iv) Maintenance of equal opportunities for all citizens, without giving special privileges to any particular group; and

(v) Preserving India's self-respect as an independent people".

இந்த ஐந்து தகுதிகளுக்குள்ளே இந்தி எந்த தகுதிக்குள்ளாவது வர முடியுமா? ஜனநாயகப்படி இந்திதான் ஆட்சி மொழி என்கிறார்கள். இந்த வாதம் எப்படி நியாயமாகும்? இந்தியாவில் 44 கோடி மக்களில் 13 கோடி மக்கள்தான் இந்தி பேசுகிறார்கள். 31 கோடி பேர் பெரும்பான்மையான மக்கள், மெஜாரிடி மக்கள் இந்தி பேசாத மக்கள் தான். ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் மட்டுமே பேசும் மைனாரிட்டி மக்கள் மொழியை மெஜாரிட்டி மக்கள் மீது திணிப்பது, அதுவும் மிகப் பழம் பெருமை வாய்ந்த மொழிகளான வங்காள மொழி, மராட்டி மொழி, தமிழ் மொழி, தெலுங்கு மொழி முதலிய மொழிகள் பேசும் மக்கள் மீது திணிப்பது ஜனநாயக விரோதம் அல்லவா? மைனாரிடியினர் மொழியை மெஜாரிடியினர் மீது திணிப்பது ஜனநாயகத்திற்கு விரோதம் அல்லவா? கேட்டால், நாம் எப்படிப் புகுத்தாமல் இருக்க முடியும் என்று பிடிவாதமாகச் சொல்கிறார்கள் இந்தி வெறித் தன்மையால்தான், நாட்டில் கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படுகிற தன்மை வளர்ந்து கொண்டு போவதைப் பார்க்கிறோம்



31st March 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

இந்தியில் முதல் உரைநடைப் புத்தகம் வந்தது 1800-ம் ஆண்டில் தான். திரு. வல்லோஜிலால் என்பவரால் முதல் உரை நடைப் புத்தகம் இந்தியில் கொண்டுவரப்பட்டது. கல்கத்தாவில் உள்ள போர்ட் வில்லியம் கல்லூரியில் கொண்டுவரப்பட்டது. அந்த மொழியின் தகுதிக்கு ஓர் உதாரணம், அந்தத் தகுதியை வைத்துக் கொண்டு இது தான் ஆட்சி மொழி என்று சொல்கிறார்கள். 26-ம் தேதிக்குப் பிறகு நிலை என்ன? 26-ம் தேதிக்குப் பிறகு இந்தி தான் ஆட்சி மொழி என்ற அரியாசன நிலை நிச்சயமாக இருக்கிறது. அன்று முதல் ஆங்கிலம் தயவு மொழியாக, தாட்சிண்ய மொழியாக மாற்றப்பட்டதை மறைக்க வேண்டியதில்லை. நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன். காங்கிரஸ் தலைமையினர் உண்மையிலேயே நாட்டில் இந்தி மொழிக்கு எதிராக ஏற்பட்டிருக்கிற உணர்வுகளைச் சரியாகக் கணிக்கவில்லை. முதலிலும் சரியாகக் கணிக்கவில்லை. இப்போதும் பரிகாரம் தேடும் முறையிலும் தெளிவில்லை. இந்தப் பிரச்னைக்கு காங்கிரஸ் தலைமை வழி நடத்திச் செல்லும் கொள்கையில் மக்களிடையே அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. முதல் மந்திரிகள் கூடினார்கள். முதல் மந்திரிகள் மட்டும் கூடி இந்தப் பிரச்னையை தீர்த்துவிட முடியுமா? 'பைலிங்குவலிஸம்' பற்றி இப்பொழுது நமது முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதே மன்றத்தில் முன்பு ஜனவரி 26-க்கு முன்பு என்ன சொன்னார்கள்? என்ன பேசிக் கொண்டிருந்தார்கள்? இப்பொழுது தான் இந்த அளவுக்கு இறங்கி வந்திருக்கிறார்கள். முன்பு என்ன சொன்னார்கள்? இந்திதான் கற்றுக் கொள்ள வேண்டும், அது தவிர்க்கப்பட முடியாத ஒன்று. இந்திய ஐக்கியத்திற்கு அது அவசியம். அதனால் லாபம் இருக்கிறது என்று சொன்னார்கள். தேசத் துரோகிகள் என்று எங்களைப் பார்த்துச் சொன்னார், தேசத் துரோகிகள் யார்? இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்கிறவர்கள் இந்தி வெறியர்கள்தான். ஒன்றுக்கும் லாயக்கில்லாத அங்காடி மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள்தான் தேசத் துரோகிகள். இந்தி வெறியர்கள்தான் இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்கிறார்கள். பார்லிமெண்டில் ஒரு பிராந்தியக்காரர்கள் மெஜாரிடியாக இருப்பதினால் அந்தப் பிராந்திய மொழியை நாட்டு மக்கள் மீது திணிப்பதா? இன்றைக்கு நம் முன்பாக உள்ள உயிர்ப் பிரச்சினை இந்தியாவின் ஐக்கியமா? இந்தி ஆட்சிமொழியா? இரண்டில் எது முக்கியம் என்பதாகும். இந்தியாவின் ஐக்கியத்தைவிட இந்தி மொழிதான் முக்கியம் என்று இந்தி மாநிலத்தவர் கருதுவார்களானால் இந்தியாவிலிருந்து பிரிந்து "இந்திஸ்தான்" என்று புதுநாடு ஏற்படுத்திக் கொள்ளட்டும், 14 தேசிய மொழிகள் ஆட்சி மொழிகள் ஆகக் கூடாது என்பதற்கு என்ன பொருத்தமான வாதம் சொன்னீர்கள்? மதவெறி நிறைந்த பாக்கிஸ்தானில் உருது மொழியோடு கூட, வங்காள மொழியும் மத்திய ஆட்சி மொழியாக இருக்கிறது. ஸ்விட்ஸர்லண்டில் மூன்று ஆட்சி மொழிகள் இருக்கின்றன. ஒரு பெர்சண்ட் இருக்கிற ரோமன்ச் மொழி ஆட்சி மொழியாவதற்கு வாக்கெடுப்பு நடத்திய நேரத்தில் நாட்டு மக்களில் 99 சதவிகிதத்தினர் அதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். ஹங்கேரி நாட்டில் 19 மொழிகள் ஆட்சி மொழி[illegible]

இருந்தன. நீங்கள் சொல்வதெல்லாம் 'டெம்பரரி பாலியேடிவ்' 'தற்காலிக நிவாரணம்' தான். நிரந்தரமான பரிகாரம் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்வது போல் 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக என்றைக்கு வருகிறதோ அன்றுதான். அது வரையில் இந்தப் பிரச்னை ஓயப் போவதில்லை, ஒழியப் போவதில்லை எங்களுடைய அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இது பற்றி மிகத் தெளிவாக திட்டவட்டமாக ராஜ்ய சபையில் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இந்தி பேசாத பிராந்திய மக்களுடைய மொழி உரிமை பற்றிய ஒரு 'மாக்னா கார்டா' என்று அந்த உரையை நான் கூறுவேன். ஆங்கிலத்தில் அந்த உரையின் திறவுகோல் போல வாசகம் சொன்னார்கள். எந்த மொழி உயர் தனிச் செம்மொழியோ, எந்த மொழியில் எனது மூதாதையர் பேசி மகிழ்ந்தனரோ, எந்த மொழியில் எண்ணற்ற கவி வாணர்கள் கவினுறு கருத்துக்களையும், கடலெனப் பரந்த மகோன்னத இலக்கியங்களையும் படைத்தனரோ, எந்தமொழி என்னுடைய ஊனில், உயிரில், இரத்தத்தில் கலந்துள்ளதோ; அந்த என்னுடைய அன்னை மொழியான தமிழ் மொழி எந்தநாள் டில்லிப் பேரசின் ஆட்சி மொழியாக ஆகப்போகிறதோ அதுவரையில் நான் ஓயப்போவதில்லை, திருப்திப்படப்போவதில்லை, என்று கூறினார்கள்.

"I will not be content and I will not be satisfied till that day when Tamil my mother tongue is made one of the Union Official language"— என்று அங்கே குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை முழுக்க முழுக்க அணுக வேண்டும். ஆங்கிலத்தை நெடு நாளைக்கு நீடிப்பது நமது சுயமரியாதைக்கு உகந்தது ஆகாது. தமிழை ஆட்சி மொழி ஆக்குங்கள். எங்களை வீணாக ஆங்கில மோகக்காரர் என்று கூறுகிறீர்கள். நாளைக்கே தமிழைக் மத்திய ஆட்சிமொழியாகக் கொண்டு வாருங்கள், இடைக் காலத்தில் கூட ஆங்கில நீடிப்பு வேண்டாம், அதைவிட்டுவிட்டு இவர்கள் ஆங்கில ஆதரவாளர், ஆச்சாரியார் சீடர்கள் என்று திசை திருப்பாதீர்கள். நிச்சயமாக நான் தெளிவாகச் சொல்ல முடியும். தென் ஆப்பிரிக்காவில் இருக்கிற இன ஒதுக்கல் போல், பாகிஸ்தான் மத ஒதுக்கல் போல் இது 'மொழி ஒதுக்கல்' தவிர வேறு என்ன? தென் ஆப்பிரிக்காவின் 'அபார்தீட்' (Apartheid) பற்றிப் பேசுகிறோம். பாகிஸ்தானைப் பார்த்து மத வெறியர்கள் என்று சொல்கிறோம். இது 'லிங்குவல் அபர்த்தீட்' 'மொழி ஒதுக்கல்' என்பது தவிர வேறு என்ன? ஆந்திர அம்மையார் ஒருவர் டெல்லி ராஜ்ய சபையில் கேட்டிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் இந்தியில் அச்சடிக்கப்பட்ட ரயில்வே டிக்கட்டைக் காண்பித்துக் கேட்டிருக்கிறார்கள். மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள் அதற்கு சாஸ்திரி அவர்கள் ராஜ்ய சபையில். அரசியல் சட்டம் இருக்கிறது, ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்று இங்கே திரு. பக்தவத்சலம் விளக்குகிறார்கள். ஆனால், ஆந்திரா ரயில்வே ஸ்டேஷனில் இப்படி ஒன்றும் புரியாத பாஷையில் டிக்கட் கொடுக்கப்படுகிறது, அரசியல் சட்டவிதிகளில்:





"The form of numerals to be used for official purposes of the Union shall be the international form of Indian numerals . . ." என்று இப்படிப் போட்டிருக்கிறது. ஆனால் ராமனாதபுரம் ராமேசுவரம் ரஸ்தாவில் போய் பாருங்கள். மைல் கல்லில் இந்தி எழுத்துக்கள்தான் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதாகக் கோபிக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் அரசியல் சட்டத்திற்கு அவமதிப்பு இல்லை என்று சொல்ல முடியுமா? ஆந்திரத்தில் ரயில்வே டிக்கட்டில் அப்படி இருக்கிறது என்றால், இங்கே தமிழகத்தில் மைல் கல்லில், ராமனாதபுரத்தில், இந்தியில் தான் எழுதப்பட்டிருக்கிறது, எத்தனாவது மைல் என்று யாருக்கும் புரிவதில்லை. கோவையில், பெருந்துறை ரோட்டில் இதே மாதிரி தான் இந்தி எழுத்துக்கள் தான் மைல் கல்லில் தீட்டப்பட்டுள்ளன. 'இண்டர்நேஷனல் நியூமரல்ஸ்' தான் போட வேண்டும், தேவநாகரில் எண்களை எழுதக் கூடாது, என்று அரசியல் சட்டத்தில் தெளிவாக விதிக்கப்பட்டிருந்தும், இப்படிப்பட்ட திணிப்பை நாம் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டத்திற்கு வந்தபிறகு கூட, திராவிட முன்னேற்றக் கழகம் இதற்குச் சொல்லுகிற பன்மொழி பரிகாரம் ஏதோ ஒரு அரசியல் காரணத்திற்காக என்று சொன்னால் அது முறையானது தானா? அன்றைக்கே தமிழகத்தின் பெருமைக்குரிய புதல்வர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், கவனிக்கவில்லை. டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய சொந்த ஊரிலே, திருச்செங்கோட்டிலே துப்பாக்கிச் சத்தம் கேட்ட பிறகு தான், ரத்த வெள்ளம் ஓடிய பிறகு தான், பிணங்கள் விழுந்த பிறகுதான், அரசபீடத்தின் விழி திறந்தது. இன்றையதினம் முயற்சி எடுக்கப்படுகிறது. shall-க்கும் may-க்கும் வியாக்கியானம் செய்யக் கூடிய முயற்சி பிறந்திருக்கிறது. இன்றைக்கு நாட்டில் 44 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் வாழ வேண்டும், வளர வேண்டும். நாட்டினுடைய ஐக்கியத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற ஒரு பெருநோக்கம் இன்றைக்குக் கூட வரவில்லை. அந்த நிலையிலே நாங்கள் சொல்கிறோம், ஜனநாயகம் சொல்கிறது, மக்கள் உரிமைக் குரல் சொல்கிறது. இந்தப் பிரச்னையைப் புனராலோசனை மறு சிந்தனை செய்ய வேண்டும். முதல் அமைச்சர்கள் கூடி இந்தப் பிரச்னையை தீர்த்துவிட முடியாது, எப்படி எப்படித் தங்களுடைய அதிகார ஆசனத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமோ அதற்குத் தகுந்த மாதிரி, ஆளுக்குத் தகுந்த மாதிரி, நேரத்திற்குத் தகுந்த மாதிரி இடத்துக்குத் தகுந்த மாதிரி வியாக்யானம் சொல்லக் கூடிய அரசியல்வாதிகள் சிலரால் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது. பெரிய வல்லுனர்கள் பன்மொழிக் கொள்கை தான் பரிகாரம், சிறந்த வழிமுறை என்று சொல்லியிருக்கிறார். இந்தியாவின் ஐக்கியத்தைக் காப்பாற்ற அது தான் வழி. நம்முடைய தமிழ் மொழி நல்ல ஆற்றல் படைத்த மொழி. அதை ஏன் ஆட்சி மொழியாகக் கூடாது? அதிலே ஏன் தயக்கம், தடுமாற்றம். 1960-ம் வருஷத்திலிருந்து இன்று வரையில் பார்த்தால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வட்டார மொழியின் வளர்ச்சிக்கு ரூ. 2,000 தான் செலவழிக்கப்பட்டுள்ளது. 300 கோடி ரூபாய் செலவாகியுள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது தமிழுக்காகச் செலவு செய்தது ரூ. 2,000 தான்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [31st March 1965

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் தமிழ் போன்ற வட்டார மொழிகளையும், இந்தியையும் வளர்க்க மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் தவறிவிட்டன என்று தீர்மானம் போட்டிருக்கிறது. நீங்கள் கூறும் பரிகாரங்களெல்லாம், நிச்சயமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தற்கால நிவாரணம்தான். ஆங்கிலம் கூட எத்தனை நாளைக்கு இருக்க முடியும். ஆங்கிலம் போகும்போது, அந்த இடத்தில் எது வரப் போகிறது? தமிழா? இந்தியா? திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கேள்வியைத் தெளிவாக, திட்ட வட்டமாக, தமிழா? இந்தியா? கேட்க விரும்புகிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நுங்கம்பாக்கம் பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், மொழிப் பிரச்சினைக்கு நிரந்தர பரிகாரம் ஏற்பட வேண்டுமானால் ஆட்சிப் பொறுப்பு காங்கிரசிடமிருந்து பறிக்கப்பட வேண்டும். இன்றைக்குச் சாதாரண நெடுஞ்செழியனை, மதியழகனை, நாளைக்குத் தமிழ் நாட்டில் அமைச்சர்களாக லால் பகதூர் சாஸ்திரியிடமோ, அவருக்குப்பின் பொறுப்பை வகிக்கிறவர்களிடமோ, பேசும்போதுதான் இதற்கு நிரந்தரப் பரிகாரம் ஏற்படப் போகிறது என்று குறிப்பிட்டார். அதுவரை பரிகாரம் இல்லை. எங்களுக்கு அதில் தெளிவிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பன் மொழிக் கொள்கை ஒன்று மொழிச் சிக்கலுக்குச் சரியான வழி என்று கூறி எனது உரையை முடிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்ன தான் தீர்வு சொல்லப் போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டே இருந்தேன். கடைசியில் சொல்லிவிட்டார்கள். இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. (சிரிப்பு).

* SRIMATHI A. SUARES : Mr. Deputy Speaker, Sir, I shall preface my remarks on the topic for discussion to-day with a brief reference to the main stages in the language issue.

In 1950 the new Constitution came into force. I shall read some of the clauses of Article 343. Clause 1 of the Article categorically states that 'the official language of the Union shall be Hindi'. Clause 2 of the same Article states that for a period of 15 years from 1950 the English language shall continue to be used for all the official purposes of the Union. Clause 3—this is important—states that Parliament may by law provide for the use after the said period of 15 years, of the English language for such purposes as may be specified in the law. This clause may be remembered when a decision is taken on the language issue.

The year 1959 is an important year when the Nehru formula was mentioned for the first time. As a result of a ballot, a private member's resolution that English be included in the Eighth Schedule of the Constitution came up for consideration in the Lok Sabha. During the discussion, the late Prime Minister intervened and said that English would continue as the alternate or associate official language of the Union as long as the non-Hindi speaking people so desired. This ame to be known as the Nehru Formula.



31st March 1965] [Srimathi A. Suares]

Mr. Nehru's statement on this occasion was a very carefully balanced and deliberate statement. In it he emphasised the importance of English which he said must continue for the good of the country. He also declared that English would continue to be learnt in India as the most important international language for exchange of ideas on the trends of world thought and developments in Science and Technology.

The next stage came in April 1963 when the Official Languages Act was passed. During the interval between 1959 and 1963 the protagonists of Hindi were more and more against the use of the words 'alternate' or 'associate' in the Nehru formula. They were also against the provision that it would be left to the non-Hindi speaking people to decide how long English would continue as the associate or alternate language. The whole of this Bill was not circulated to all the States. Clauses 3 and 4 of the Bill are important. Clause 3 provides that English *may* be used *in addition* to Hindi. Though many were of opinion that the word 'may' should be substituted by the word 'shall', the word 'may' remained in the Bill. It is stated that when a Member of Parliament wrote to the late Prime Minister about the word 'may' being used instead of the word 'shall', he replied, "I am advised that 'may' means 'shall'." The words 'in addition' (to Hindi) were not changed. There is a difference in meaning between the words 'in addition' and 'alternate or associate'.

Clause 4 of the Language Bill provides for a review of the progress of Hindi after 10 years from 1965 by a Parliamentary Committee. There was no provision in the Bill for the Report of the Committee coming back to Parliament, which meant that a small body of Members—say about 30 Members—as in the case of the Parliamentary Language Committee of 1958—could reach a decision which might nullify the assurance given by the late Prime Minister. The report of this Committee would go direct to the President.

The last stage is the announcement that Hindi would become the official language of the Union with effect from 26th January 1965.

There is no need for me to dwell on what happened in the Madras State and other non-Hindi speaking States on the Republic Day and the period that followed.

Let us consider the present position with regard to Hindi. In the Madras State, little or no progress has been made in Hindi for various reasons. The Central Government servants have made an attempt to attend classes provided for them but by no means do they have a working knowledge of the language. A few circulars and communications were received in Hindi after the Republic Day this year. It is stated that these circulars would not be deciphered even by those who had made some study of Hindi and they had to be returned to the senders for translation in English. This condition prevails in the non-Hindi speaking

[Srimathi A. Suares] [31st March 1965

States. Is it then possible to make Hindi as the sole medium of communication with effect from this year ? The late Prime Minister in his wisdom, in his deep knowledge of the people of India and in his ardent desire for unity, realised as the years went by, that Article 343 of the Constitution could not be enforced without disastrous results. If he gave an assurance in Parliament spontaneously when discussing the Language problem in 1959, he knew what the position was. Nine years had passed and he discovered that no progress had been made in Hindi. If he did not assert himself on this point in 1963 when the Official Language Bill was passed, it was because of the increasing pressure from the protagonists of Hindi.

The non-Hindi speaking people now want a statutory guarantee that the assurances given by Mr. Nehru will be honoured. English should continue as the associate or alternate official language as long as the non-Hindi speaking people so desire. An amendment to the Official Language Act to embody this assurance is absolutely necessary to satisfy the non-Hindi speaking
11-20 a.m. people. Consequential changes in the Act may also be found to be necessary.

I wish to express our appreciation of the prompt action taken by our Chief Minister during the recent Anti-Hindi agitation to bring about order and peace in the State. We deeply regret the loss of human lives, the loss of valuable property, both public and private and the great dislocation in the educational routine. Parents, teachers, educationists and elders have a great task to perform to make the students realise what they have done by giving vent to emotion and by blindly following their leaders. Young school children, who participated in the agitation have to be carefully watched and guided to prevent recurrence of such behaviour. We have seen that such young children look upon the destruction of valuable property as mere fun. Student discipline will be a major problem to tackle in future, but by appealing to the finer instincts of youth, by introducing democratic methods in teaching and school organisation, we can still hope for a change for the better in the younger folk.

Reading the newspapers we find that there is hope that the Centre will give statutory guarantee to the non-Hindi speaking people for the continued use of English for official purposes in terms of Mr. Nehru's assurance. Let us unite for the good of our country and to honour the memory of our departed leader. Let us not make the language issue the cause of disintegration of the country. There are serious matters confronting the country. Instead of wasting our time and energy in controversial matters, let us put our minds together to combat border warfare, to tackle shortage of food and to work for the uplift of India's millions. The language tangle will unravel itself as the rising generation grows up. Till then, let there be understanding of the problems of others and above all, let the unity of the country be foremost in our minds and actions. Thank you, Sir.



1st March 1965]

**திரு. நா. மகாலிங்கம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய தேசத்தின் ஆட்சி மொழிச் சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களுடைய பேச்சுக்குப் பின்னால் நடக்கக்கூடிய இந்த விவாதத்தில் கலந்து கொண்டு, நம்முடைய ராஜ்ய மக்கள் எம்மாதிரியான ஒரு நிலையை எதிர்காலத்தில் எதிர்பார்க்கிறார்கள் என்பதைப்பற்றி என்னுடைய எண்ணங்கள் சிலவற்றை நான் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய எண்ணங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் மொழியினுடைய நோக்கமாக இருக்கிறது. அவ்வாறு பார்த்தோமானால், நம்முடைய தேசத்திலிருக்கக்கூடிய எல்லா மக்களுடனும் நம்முடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு, நம்முடைய சிந்தனைகளைப் பிரதிபலிப்பதற்கு எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றிச் சரியாகச் சிந்தனை செய்ய வேண்டியது அவசியம்.

"ஆங்கிலம் இந்தத் தேசத்தினுடைய ஆட்சி மொழியாக நிரந்தரமாக இருக்க வேண்டும்" என்று ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. "இந்தத் தேசத்திலே தேசீய மொழிகள் என்று சொல்லப்பட்டிருக்கக்கூடிய 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும்" என்று மற்றொரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரு கொள்கைகளையும் எடுத்துப் பார்த்தோமானால், இது நடைமுறையில் சாத்தியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பதினான்கு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பதென்றால், பார்லிமெண்டில் நிறைவேறக் கூடிய சட்டங்கள், அங்கேயிருக்கக்கூடிய இலாகாக்கள் இவையெல்லாம் எவ்வாறு செயல்பட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள், இந்தப் பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக வந்தால் தேசத்தில் நிர்வாகத்தை எவ்வாறு நடைமுறையில் நடத்த முடியும் என்பதைப்பற்றி ஏதாவது விளக்கங்கள் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆயினும், நம்முடைய சபைத் தலைவர், கனம் சபாநாயகர் அவர்கள் ஆரம்பத்திலே குறிப்பிட்ட வெளிச்சத்தை அவருடைய பேச்சிலே காண முடியவில்லை; உஷ்ணத்தைத்தான் பார்க்க முடிந்தது. அவருடைய பேச்சிலே, அடுத்த தேர்தலில் அவர்களுடைய கட்சி அதிகாரத்திற்கு வர வேண்டும் என்ற வேகம் தொனித்ததே தவிர, ஆட்சி மொழிப் பிரச்னை சம்பந்தமாக என்ன சிந்தனையோடு கூடிய ஒரு முடிவு செய்வார்கள் என்பது எனக்கு இன்னும் புலப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் ராஜ்ய சபையில் பேசியபோது குறிப்பிட்ட வாசகங்களைக் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் தொடர்ந்து பேசியபோது குறிப்பிட்ட சில வாசகங்களையும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருந்தாரானால் மிகவும் நலமாக இருந்திருக்கும். "இந்தத் தேசத்தினுடைய பொது மொழியாக இந்தி இருக்க வேண்டும்.

என்பதற்காக நான் வேலை செய்யத் தயாராக இருக்கிறேன், இந்திக்காகப் பிரசாரம் செய்யவும் நான் தயாராக இருக்கிறேன்" என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள். (திரு. ப. உ. சண்முகம்: இல்லை.) கனம் அங்கத்தினர் பேசும்போது அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம். இந்தி இந்த தேசத்திலே பரவ வேண்டும் என்று சொன்னால், 14 மொழிகளும் தேசிய மொழிகளாக இருக்கும்போது இந்தி மொழியை மட்டும் பரப்புவதாக அவர்கள் ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும்? எதிர்காலத்தில் இந்தி தேசிய மொழியாக இந்தத் தேசத்திலே வரவேண்டும் என்ற உள்கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. அண்ணாதுரை அவர்களே, 'இந்தியைப் பரப்புவதற்கு நான் தயாராக இருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. "பேசப்படக்கூடிய இந்தியானது ஆங்கில வார்த்தைகளெல்லாம் சேர்ந்துள்ள இந்தியாக இல்லாமல் நல்ல அழகான இந்தியாக இருக்க வேண்டும்" என்றும் அவருடைய பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, 14 மொழிகளை மத்திய சர்க்காரினுடைய ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டு அரசாங்கம் நடத்துவது என்பது மிகவும் முடியாது. உலகத்திலே எந்த நாட்டிலும் அம்மாதிரியான முயற்சி நடந்ததே கிடையாது. ஆக, அது முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய உண்மையான நோக்கம், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற நோக்கமாக இருக்கிறது. அதை நேரடியாகச் சொல்வதற்கு அவர்களுக்கு மனத்திலே திடமில்லாமல் 14 மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்று சொல்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

அந்த விஷயத்தில் கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கொடுக்க திருத்தத்தில் அவர்கள், "ஆங்கிலம் தொடர்ந்து இந்தத் தேசத்தினுடைய ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்" என்று வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக, இரண்டு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒரே நோக்கம் வைத்திருந்தாலும் அவர்களுடைய திருத்தங்கள் வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

இந்தத் தேசத்தினுடைய தேசிய மொழியாக இந்துஸ்தானி இருக்க வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் நீண்ட காலமாகச் சொல்லி அதற்காகப் பாடுபட்டு வந்தார்கள். அந்த இந்துஸ்தானி என்று சொல்லும்போது அவர்கள் நாகரி லிபி, உருது லிபி ஆகிய இரண்டும் உபயோகப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆயினும், இன்றையதினம் தேசத்திலே எல்லோரும் ஆங்கிலத்தைக் கட்டாயம் படித்தாக வேண்டும் என்பதிலே கல்வி நிபுணர்கள் மத்தியிலே அபிப்பிராயபேதமே இல்லை. உலகத்திலே இருக்கக்கூடிய சிறந்த விஞ்ஞானம், கலை இவற்றையெல்லாம்



நம்முடைய தேச மக்கள்—படிக்கக்கூடிய மனிதர்கள்—சீக்கிரமாக நல்ல முறையில் தெரிந்துகொண்டு, உலக வளர்ச்சியோடு தொடர்பு கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்றால், ஆங்கிலம் படித்தேயாக வேண்டும் என்பதை நம்முடைய நாட்டிலே மட்டுமல்லாமல், உலகத்திலே இருக்கும் பல்வேறு நாடுகளிலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ருஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற தேசங்களில் எல்லாம் சர்வகலாசாலைகளில் ஆங்கிலம் கட்டாயமாகப் படிக்கப்பட வேண்டும் என்ற முயற்சி இப்பொழுது அதிகமாக நடந்து கொண்டு வருகிறது. ஆக, நீண்ட நாளாக நாம் படித்திருக்கக்கூடிய ஆங்கிலத்தை விட்டுவிடுவதில் பயன் இல்லை, தொடர்ந்து படித்தாக வேண்டும் என்பதை இந்தத் தேசத்திலே உள்ள கல்வி நிபுணர்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

ஆங்கிலம் நாம் ஏற்கனவே ஒத்துக் கொண்ட மொழியாக இருந்தாலும், நம்முடைய தேசத்திலிருந்து உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று, அங்கே நம்முடைய பிரதிநிதிகள் பேசும்போதும், நம்முடைய தேச மக்கள் வெளி நாடுகளுக்குச் செல்லும்போதும், 'உங்களுக்குத் தேசிய மொழி என்ன?' என்று அங்குள்ளவர்கள் கேட்டால், 'ஆங்கிலம் என்னுடைய தேசிய மொழி' என்று சொல்வதென்றால், அது நம்முடைய தேசத்தின் கௌரவத்திற்கு நிச்சயம் குறைவு என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால் நம் நாட்டில் இருக்கக் கூடிய ஏதாவது ஒரு மொழியை தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்வது என்று சொன்னால், இருப்பதற்குள் 13 கோடி மக்களுக்கு மேல் பேசக் கூடிய மொழியாக—கொஞ்சம் முன்பின்னாக இருக்கலாம்—இருப்பது இந்தி மொழி தான். பஞ்சாபில் பேசினாலும் அறிந்து கொள்வார்கள். வங்காளத்தில் பேசினாலும் அறிந்து கொள்வார்கள். மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் அறிந்து கொள்வார்கள். இப்படிப் பார்த்தால் இந்தியாவில் உள்ள மொத்த ஜனத்தொகையில் 60 சதவிகிதம் மக்களுக்கு மேலாக இந்தியைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு மொழி, இன்றைய தினம் இந்த தேசத்தின் ஆட்சி மொழியாக வராவிட்டாலும் நம்முடைய சந்ததியினர் காலத்திலாவது இந்த தேசத்தின் பொது மொழியாகப் பயன்படுத்துகிறோம் என்று பெருமைபடக்கூடிய வகையில் வர வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். காங்கிரஸ் விரும்புகிறது என்று நான் நினைக்கிறேன். மகாத்மா காந்தி சொன்ன பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளை நாம் பின்பற்றவில்லையே, அதைப் போல அவர் சொன்ன இந்தியையும் பொதுமொழியாகப் பின்பற்றாமல் விட்டுவிட்டு, 14 மொழிகளையும் ஆட்சிமொழியாகக் கொண்டு வாருங்கள் என்பதாகத் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியே விட்டிருந்தாலும்கூட இன்னும் சௌகரியமாக இந்தி வளர்ந்திருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், இந்தி சாதாரண மக்கள் கூட உபயோகப் படுத்தக் கூடிய மொழியாகும்.

ஆயினும் இன்றைய ஆட்சிமொழி சம்பந்தமாகப் பேசக் கூடிய நேரத்தில் இருக்கக் கூடிய சிக்கல்களை நீக்கத்தக்கவாறு, அரசியல் அமைப்புச் சட்டத்திலே சிறிது திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்துகிறேன். அரசியல் அமைப்புச் சட்டம் 343-வது பிரிவில்

" The Official language of the Union shall be Hindi in Devanagari script. "

என்பதாக தேவநாகரி ஸ்க்ரிப்ட் என்று இருக்கிறது. அதை ரோமன் ஸ்க்ரிப்ட் என்று திருத்துவது மிகவும் அவசியம் என்று கூற விரும்புகிறேன். நான் அரசாங்கத்தை வேண்டிக்கொள்வது, இதை அரசாங்கத்தின் திருத்தமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்கனவே இரண்டு மொழிகள் படிக்க வேண்டியதாக இருக்கிறது. தேவநாகிரி ஸ்க்ரிப்டைக் கற்றுக்கொண்டு இந்தி படிப்பதற்குப் பதிலாக கற்றுக் கொண்டுள்ள ரோமன் ஸ்க்ரிப்டிலேயே இந்தியைக் கற்றுக் கொள்ள இது வாய்ப்பாக இருக்கும். அப்போது இந்தி பேசாத ராஜ்ய மக்களுக்கு இது சங்கடமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியை நன்றாக வளர்க்க வேண்டும் என்பதற்காக 351-வது பிரிவில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

"It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India and to secure its enrichment by assimilating without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in the other languages of India specified in the Eighth Schedule and by drawing, wherever necessary or desirable, for its vocabulary, primarily on Sanskrit and secondarily on other languages."

இதிலும் சில திருத்தங்கள் அவசியம் என்று நினைக்கிறேன். இந்த இந்தி மொழியை வளர்ச்சியுள்ள, வளம் பொருந்திய மொழியாகச் செய்ய வேண்டும் என்கிறபோது சமஸ்கிருதத்தில் இருந்தும் இதர மொழிகளில் இருந்தும் வார்த்தைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இருக்கிறதே தவிர ஆங்கிலத்தில் இருந்து எடுத்துக் கொள்ளலாம் என்பதாக இல்லை. அதற்குத் தகுந்த மாறுதலும் செய்ய வேண்டியது அவசியம். மற்ற ராஜ்ய மொழிகளில் இருந்தும் ஆங்கிலத்தில் இருந்தும் பல் சொற்களையும் ஏற்றாக வேண்டும். உலக நாடுகளில் இருக்கக் கூடிய கலைச் சொற்கள், விஞ்ஞானச் சொற்கள் அவைகளை அப்படியே மொழி பெயர்க்காமல் உபயோகப்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவ்வாறு முயற்சி செய்தால்தான் இந்தி மொழி சௌகரியமாக முன்னேற முடியும். இந்தியும் சரி, ராஜ்ய மொழிகளும் சரி கல்லூரிகளில் உபயோகப்பட வேண்டுமென்றால் மொழி பெயர்ப்பின் மூலம் நடைபெற முடியாது. சர்வதேசக் கலைச் சொற்கள், விஞ்ஞானச் சொற்கள் ஆகியவற்றை எல்லாம் மொழி பெயர்ப்பது என்றால் நிச்சயமாக வளர்ச்சி அடைய முடியாது.





இன்றைய தினம் நாம் நம்முடைய தாய்மொழியைப் பற்றி வெகு சிறப்பாகச் சொல்கிறோம். சிறந்த இலக்கியங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆயினும் மத சம்பந்தமான கருத்துக்களை எண்ணிப் பார்த்தால்—குறிப்பாக தென்னகத்தில் பரவியுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்கள் எல்லாம் விளக்கம் பெறுகிறபோது சமஸ்கிருத துணை மிகுதியாக வேண்டியிருக்கிறது. சமீப காலத்தில் தோன்றிய ராமலிங்க அடிகளார் சன்மார்க்க சங்கம் என்று ஆரம்பித்தார்கள். அவர் தம்முடைய சித்தாந்தங்களை எல்லாம் அழகாகத் தமிழில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சித்தாந்தங்களை விளக்க வேண்டுமென்றாலும் வடமொழி ஞானம் இல்லாவிட்டால் முடியாது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இந்தி மொழி எல்லா வகையான வளங்களையும் பெறவேண்டுமென்றால் பல்வேறு மொழிகளில் இருந்து சொற்களைத் தாராளமாகக் கடன் வங்குவதில் தவறு கிடையாது என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்திய ஆட்சி மொழியாக இந்தி இன்றைக்கே வராவிட்டாலும், பத்து ஆண்டுகளுக்குப் பிறகாவது, நூறு ஆண்டுகளுக்குப் பிறகாவது வரவேண்டுமென்று சொன்னால் இந்த இரு மாறுதல்களையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இதை மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு நமது மாநில அரசாங்கம் வற்புறுத்துவதில் தவறு கிடையாது என்று சொல்ல விரும்புகிறேன்.

மொழிக் கொள்கை சம்பந்தமாக நாம் சிந்திக்கும்போது நம் தேசத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமே அல்லாது இன்று இருக்கக் கூடிய பிரச்சினைகள் சம்பந்தமாக மட்டும் தற்காலிகமாக எண்ணிப் பார்ப்பதில் பயன் இல்லை. நாம் செய்கிற முடிவு நம் தேச ஒற்றுமையைக் குலைக்காத வகையில் இருக்க வேண்டும்—அதுவும் எதிரியின் குமுறல் எல்லையில் இருந்து கொண்டிருக்கிறபோது நம்முடைய தேசத்தின் ஒற்றுமையை வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். அந்த வகையில் நம் ஒற்றுமையையும் காப்பாற்றிக் கொண்டு, உலக நாடுகளின் மத்தியிலும் கௌரவமாகத் தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய வகையில் ஒரு மொழி அமைய வேண்டும் என்றால் அது இந்தியினால்தான் முடியும். அதுவும் நான் குறிப்பிட்ட இரண்டு திருத்தங்களும் அரசாங்கத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு ஏற்றுக் ொண்டால்தான் முடியும் என்பதைக் குறிப்பிட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI A. KUNJAN NADAR : Sir, we are dealing with a very important national problem. I request the Government not to take it as a party or political problem. It is true that we have written something in our Constitution. We have to confess it. But, we have had no time or mind to think over this important matter as we have now got. In our over enthusiasm over our newly got independence, we did many things without proper thinking. The recent disturbances have done one good thing. They have made the Nation to think.

Sir, this problem of language must be decided on a permanent basis and not on the basis that the Congress party is committed to certain things. There are certain obsessions and obstructions and we must do something to remove these. We cannot think of patching up here and there. We must have a long-range policy in tackling this very important question permanently.

Sir, while tackling this problem of official language, we have to bear in mind certain important aspects, viz., the unity of India the progress of India and also the lessons that we have learnt from the recent disturbances.

Slighting these disturbances and telling that they were caused by unsocial elements or instigated by the D.M.K. people out of political motive to subvert the present Government and all that, are childish, silly and useless arguments. Sir, to say that students have been instigated by any other people, is the greatest insult that one can throw upon the students. It will be just like telling that our Hon. Chief Minister has been instigated by Mr. Kunjan Nadar, which would mean that the Hon. the Chief Minister has no opinion of his own, he has no backbone and he is useless. It amounts to that. The other day a student of a school was telling me, 'You fellows have done us a very great injustice.' I asked him about the injustice done. He said: 'You fought for our Independence and won it. But you denied us the opportunity to fight for the same and win it in a better way. We would have framed a better Constitution and we would have ruled the country in a better way. Now, you blame us for having done this or that anti-national act. You cannot blame us for having born a few years later.' That was the feeling of that student. So, the students know what is best for them and that language is a thing which has affected their future and not our future. Our days have gone and we have no business to legislate for them. It is their affair. India is theirs and not ours. Of course, I do not deny that some untoward things have happened. Sir, when a flood comes, there will be all sorts of impurities mixed along with pure water. It is only natural. I do not think that there is any political motive behind the recent agitation, for no fool would think that the Government constituted in a democratic way can be subverted by burning trains and doing mischief especially when there is the Central Government and the military. The agitation was directed against Hindi and Hindi alone. The damages were caused only to post-offices, trains and Hindi boards. Sir, we have to learn a very important lesson from this agitation. Whatever may be the wrong deeds done,—I do not approve of them—we have to learn lessons and safeguard the future against the repetition of such occurrences and we have to do things in a permanent way. Sir, it is true that the late Mr. Nehru gave some assurances but our recent history is a history of broken promises. If only those who were occupying responsible positions were willing to honour the pledges given by the late Mr. Nehru, these things would not have happened. Nobody believes in the promises made by the persons in Delhi. Sir, Sri Lal Bahadur Sastri spoke one thing in the meeting of the





Travancore Bar Association—I was present at that time—and he denied it in Delhi. Our Congress President spoke one thing in Kerala during the recent elections there and he denied it in Delhi. Who can believe them? So, I request the Hon. the Chief Minister to tell them point blank, 'People of Tamilnad do not believe in your promises or pledges and they want that they must be written in the Constitution and not even by way of an amendment to the Official Languages Act.' Sir, the Official Languages Act does not override the provisions of the Constitution. What does Article 344 of the Constitution say? It says that after ten years from the commencement of the Constitution, the President shall constitute a Commission. What for? Not to safeguard the interests of the people of Tamilnad or non-Hindi speaking people but to safeguard the progress of Hindi and to limit the use of English. An unsympathetic President can make the amendment of the Language Act ineffective and useless unless Article 344 is either repealed or amended. The President has no choice but to appoint a Commission. I can understand our Hon. Chief Minister pleading for Hindi out of a feeling for national unity, though it may be wrong but I cannot understand the Hindi fanatics arguing that it is against our national pride to have English. Sir, we have borrowed everything from outside. The metric system we have borrwed from France. Is not our national pride affected by that? We are going about throughout the world with a begging bowl for money. Is not our national pride affected by that? Sir, we have borrowed all our parliamentary institutions from outside our country. We have copied many things relating to jurisprudence, science and technology from elsewhere. The narrow outlook of nationalism which we had during the pre-Independence days when we were slaves, does not hold good to-day. Even the concept of nationalism has changed throughout the world. We are heading towards one World. If we have Hindi, would it satisfy our national pride? No. For translating from Hindi to English, thousands of persons have to be employed and crores of rupees are spent on that. So, the point is that they want to have their domination over the South. The Hindi fanatics tried to dominate the late Mr. Nehru but they could not do anything against him. Nehru was so dominating and unavoidable to India. If Shri Lal Bahadur Sastri does something against them tomorrow he will be thrown out. If the Congress President says something against them, he also will be thrown out from the Congress Leadership. That is why he has not opened his mouth till now. So, I want the Hon. Chief Minister—I know he is a man with a backbone and ability—to argue, not with bended backbone, the case of Tamil Nad, not in his capacity as the Congress Chief Minister but as the Chief Minister of Tamil Nad. If only he says, 'You look here, if you do not do this or that, I refuse to go to the South and I cannot go', certainly they will yield and do the necessary thing.

About the recent agitation, I will just now read certain passage from an article by an impartial observer, an English lawyer, Mr. J. P. Eddy, who has nothing to do with our politics and language, written in the *Hindustan Times*.

12-00 noon. "The language question is, of course, a domestic issue for India and India alone to decide. All I would seek to do is to point out how the problem has struck a friendly English lawyer who has followed with sympathetic interest for many years the constitutional development of India.

It has occurred to me that the crisis would have come long before if the people in the South had realised that Hindi became the official language of the Union on January 26, 1950—Fifteen years ago. In fact, until January 26 this year, the non-Hindi speaking areas were protected by Article 343 of the Constitution of India—for the period of fifteen years 'the English language shall continue to be used for all the official purposes of the Union . . . .' Then, as this protective provision was running down, the Official Languages Act, 1963, stepped in to extend the protection. But, now the word 'shall' became 'may'—'the English language may continue to be used in addition to Hindi'. The difference was enough to cause uneasiness."

Sir, the writer is one who has nothing to do with our politics. We must care for the future of our nation. English is the window through which we can look to the world. Can we look through Hindi? No dog will pay heed to our looking or thinking. English is an international language and even people in Russia, China, and Japan are studying English. It is the language of science and technology. Even Mr. Nehru has said that English must be more and more popularised and used more and more. We want English. It is only through the English language that we can progress. Small people stepping into the shoes of Mr. Nehru tell so many things and we cannot agree to that. If we want to progress as a modern nation, as a scientific nation, we must have English which can be effetively retained only by continuing it as the official language.

MR. DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

Sri A. KUNJAN NADAR: One point more and I will finish, Sir. There are four view points—(1) Hindi alone should be the official language; (2) Hindi and English should be the official languages; (3) All the 14 languages mentioned in the Constitution should be official languages; and (4) English alone should be the official language. Sir, if the formula of bilingualism is accepted, it will create two Secretariats and there will be two sets of Translators in Delhi. There will be so many other difficulties. Then, what about the huge cost involved in printing and stationery. Above all, a lot of time and energy will be wasted. Have we not got other things to do? English is the language of the educated intelligentia of the country. It is true that we must have a national language, a common language. But can't we wait? Why should a porter in Madras and a porter in Delhi have a common language? If it is stated that the Collector of Chingleput and the Collector of Delhi should have a common language, we can understand it. We have that common language now. We think that we are still slaves.



When we were slaves under the British Rule, all these things were raised. Now we are a free nation—as free as America or England. We can do anything of our free choice.

Then there is the question of the three-language formula. It cannot be an one way traffic. If the Hindi people are sincere about the three-language formula and about our National unity there is a test. Sir, I will suggest one formula as a compromise. I am prepared to accept Hindi. We will even write all the Central examinations and competitive tests in Hindi. But then the Hindi people must write their examinations in Tamil or one of the South Indian languages. Would they agree to it? Under the three-language formula, they have to study a South Indian language. If they are sincere about it, let them do it for the sake of national unity. Will they agree to write their examinations in Tamil or Telugu? They won't agree. The official language must be a common language. The advantages and disadvantages must be equal to all people. It should not be said by the future generation that our Chief Minister had done a very bad thing for all of us and had betrayed the people of the State. I, therefore, strongly plead that English and English alone must be the official language. The Constitution must be amended accordingly.

With these words, I conclude my speech.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய தலைவர் அவர்களால் கொடுத்திருக்கிற திருத்தத்தை யொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். இந்த அவையில் இப்படி ஒரு தீர்மானம் வரவேண்டிய அவசியம் என்ன என்றுதான் எனக்குத் தெரியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை இந்த நாட்டினுடைய பொது மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று பல காலமாகச் சட்ட மன்றத்திலேயும், மற்ற இடங்களிலேயும் பேசி முடிவு செய்யப்பட்ட விஷயத்தை மீண்டும் மீண்டும் இந்தச் சபைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகிறார்கள் என்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று டில்லியில் இருக்கிறவர்கள் கூறுகின்ற யோசனையைக் கேட்டுக் கொண்டு வந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு வந்து சொல்லக்கூடிய தூதுவர்போல்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இந்த நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள், இந்த மக்கள் எதை விரும்புகிறார்கள், இந்த மாணவர்கள் எந்த மொழி வேண்டுமென்று சொல்கிறார்கள் என்பதையெல்லாம் அங்கே சென்று எடுத்துக் காட்டக் கூடிய நிலையிலே முதலமைச்சர் அவர்கள் இல்லை.

இந்த மாநிலச் சட்டசபையில் ஏற்கனவே இதைப் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றினோம். சட்டசபையில் மொழி பற்றிப் பலதடவை பேசினோம். இவ்வளவு பேசி, இவ்வளவு விவாதித்துப் புரியாது இப்போது இவ்வாறு ஒரு விவாதத்தைத்

துவங்கியிருக்கிறார்கள். நம்முடைய சபாநாயகர் அவர்கள் ஆரம்பத்தில் 'வக்கீல்களைப் போல் வாதாட வேண்டும். தனுக்காகப் பேச வேண்டும்' என்று சொன்னார்கள். தனுக்காகப் பேசுவதில் ஆட்சேபணை இல்லை. முதலமைச்சர் அவர்கள் தனுக்காகப் பேசுகிறார். ஆனால் அதற்கும் மேலாக திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தனுக்கிலேயே காரியத்தைக் கொண்டு செல்கிறார். ஆகவே, தனுக்கினால் நம்முடைய முயற்சி வெற்றி பெறாது. நமது கடந்த கால நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே அது தெரியும். அவர்கள் தனுக்குக்கு அல்லது நியாயத்திற்கு வளைந்து கொடுத்ததாக இதுவரை சரித்திரமே இல்லை. பொட்டி ஸ்ரீராமுலு உயிர் போனதற்குப் பிறகுதான், பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறைச்சாலைக்குப் போன பிறகுதான், ஆந்திரத்தில் அமளி ஏற்பட்ட பிறகுதான் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஆந்திரத்தைத் தனியாகப் பிரிக்க முன் வந்தார்கள். தனியாகப் பிரிக்கமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருந்தவர், பொட்டி ஸ்ரீராமுலு செத்து அமளிகள் தொடங்கிய அடுத்த நிமிடத்தில் விசாலாந்திரா பிரித்துக் கொடுக்கிறேன் என்று சொன்னார். அதே போன்று பம்பாயை மகாராஷ்டிரத்தோடு சேர்க்க வேண்டுமென்று கிளர்ச்சி நடந்தது. போலீசார் சுட்டார்கள், பலரைக் கைது செய்தார்கள். அப்போதெல்லாம் மனம் இளகவில்லை. பண்டித நேரு அவர்கள் பம்பாய்க்கு வந்தபோது அவருக்குப் போட்டார்களே ஒரு மாலை! அதற்குப் பிறகுதான் பம்பாய் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தது என்று சொன்னார்கள்.

மத்திய அரசாங்கத்திற்குத் தமிழகத்தின் மொழிக் கொள்கை இன்னும் புரியவில்லை. மனிதன் வாயிலே பேசினால் சில ஜென்மங்களுக்குப் புரியும்; கையினால் சைகை காட்டினால் சில ஜென்மங்களுக்குப் புரியும்; செயலினால் காட்டினால் சில மந்திரிகளுக்குப் புரியும். திராவிட முன்னேற்றக் கழகம் மொழிப் போராட்டத்தை எந்த நாளிலே ஆரம்பித்தது? இன்றைக்குப் புதிதாக ஆரம்பிக்கவில்லை; பல காலமாகத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். மாநாடுகளிலே தீர்மானம் போட்டோம். தமிழகத்தில் இருக்கும் அத்தனை மக்களும் வேதனை உணர்ச்சியோடு இந்தி வேண்டாமென்று சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் 'இந்தி ஆட்சி மொழி' என்று இருக்கும் பகுதியைக் கொளுத்திக் காட்டினோம், புரியுமென்று கருதி. அப்போதும் புரியவில்லை. அதற்குப் பிறகுதான் தமிழகத்திலே இருக்கிற தமிழ் மக்கள் கொதிப்படைந்து தமிழக அரசாங்கம் மொழிப் பிரச்னையிலே நல்ல சீரிய முயற்சியைக் காட்டாத காரணத்தினால் கிளர்ச்சியிலே ஈடுபட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில் பேசிய முறையைப் பாராட்டுகிறேன். பழைய காலச் சம்பிரதாயங்களையெல்லாம் தொகுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆனால் அவருக்கு இருக்கிற நிலை எங்களுக்கு நன்றாகப் புரிகிறது. நான் அவர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். என் யோசனையை அவர் எப்போதுமே கேட்கமாட்டார்கள், இருந்தாலும் யோசனை கூறுகிறேன். நீங்கள் அத்தனையிலும் தலை சிறந்தவர்களாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் என்ன



விரும்புகிறார்கள் மொழி சம்பந்தமாக என்பதை எடுத்துக் காட்ட நீங்கள் தவறி விட்டீர்கள். உங்களால் செய்ய முடியவில்லை. ஆகவே உங்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், தமிழர்களுக்கு வாழ்வு அளிப்பதாக இருந்தால் நீங்கள் தயவு செய்து பதவியில் இருங்கள், இல்லையென்றால் சற்று விலகியிருங்கள் வேறு யாராவது வரட்டும். இந்த யோசனை அவருக்குப் பிடிக்காது. இன்னும் இரண்டு வருடங்கள் என்ன நடந்தாலும், ஆயிரம் பேர்கள் செத்தாலும் அவருக்குக் கவலையில்லை. அவர்கள் முதல் அமைச்சராக இருப்பதுதான் அவர்கள் இஷ்டம். அடுத்து, அபிஷியல் லாங்குவேஜாக 14 மொழிகளும் இருக்க வேண்டும், அவை வளரும் வரை ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதை ஆங்காங்கிருந்து எடுத்து ஒட்டி வைத்துப் பேசுவது தப்பு. அவர்கள் சொன்னது 'எட்டாவது ஷெட்யூலில் 14 மொழிகள் இருக்கின்றன. அவை டெவலப் ஆவது வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும்' என்பது தான். அந்த 14 மொழிகள் என்னென்ன இருக்கிறது? ஆஸாமீஸ், பெங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, உருது என்று இந்த 14 மொழிகளும் வளம் பெறும்போது இந்தியும் வளம் பெறும். இந்திக்கு முதல் அமைச்சர் அவர்கள் மாதிரி காவடி தூக்குகிற ஆட்கள் அல்ல நாங்கள். நாங்கள் சொல்வது ஸ்டாட்டஸ் கோ இருக்க வேண்டும் என்பதுதான். சுதந்திரம் வந்து 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 15 ஆண்டுகளில் இந்த நாடு மொழியில் சுடுகாடாகவா போய் விட்டது? ஏன் 15 ஆண்டுகள் என்று முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இன்னும் கொஞ்சம் நீட்டினால், 100 வருடங்கள், 200 வருடங்கள் என்று நீட்டினால் என்ன? திரு. மகாலிங்கம் அவர்கள் கடைசியில், 'அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்துங்கள் என்று சொன்னார்கள். அதுமாதிரி காங்கிரஸ் உறுப்பினர்கள் விளக்கமாகப் பேசினால் நல்லது. 343-வது பிரிவைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதேபோல் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லுங்கள். காலுக்குத் தகுந்தபடி செருப்பைப் போட்டுக் கொள்வதா? அல்லது செருப்புக்குத் தக்கபடி காலை வெட்டிக் கொள்வதா? மனிதனுக்குத் தான் கோட்டே தவிர கோட்டிற்காக மனிதன் சதையை வெட்ட மாட்டான். யாரோ ஒருவன் ஒரு கனவு கண்டானாம். ஒரு ரூபாய் திடீரெனக் கிடைத்தது கனவில் என்றானாம். அதை இன்னொருவனிடம் கூறியபோது, அவன் "பயித்தியக்காரா! கனவு காண்கிற போது கூட ஏன் இந்தப் பஞ்ச புத்தி? லட்சம் ரூபாய் கிடைத்ததாகக் கனவு காணக் கூடாதா?" என்றானாம். அதேபோல் அபிஷியல் லாங்குவேஜ் ஆக்டைத் திருத்தினால் போதும் என்று ஏன் சொல்கிறீர்கள்? ஏன் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் எனக் கூறவில்லை? அப்படி அபிஷியல் லாங்வேஜ் ஆக்டைத் திருத்தினால் போதும் என்று சொல்ல வேண்டிய நோக்கம் என்ன? இந்தி மட்டும்தான் அகில இந்திய ஆட்சி மொழி என்று சொல்கிறார்கள். அதல்லாது ஆங்கிலமும் அகில இந்திய ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று ஏன் சொல்லக்கூடாது, இரண்டு மொழிகளும்

இருக்கவேண்டுமென்று ஏன் சொல்லக் கூடாது? இந்த சபையில் முடிவு செய்த முடிவுகளை இந்த அமைச்சரவை சரியாகச் செயல் படுத்தவில்லை, அதைச் சரியாக சொல்லவில்லை என்று நான் மீண்டும் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்துங்கள் என்று சொன்னால் ஏன் திருத்த மாட்டேன் என்று சொல்கிறீர்கள். அரிவாளுக்கு பிடி செய்ய வேண்டுமானால் கொடுவாளுக்கு செய்யும் மரம் தேவை. காண்ஸ்டிட்யூஷனை அமெண்ட் செய்யுங்கள் என்று கேளுங்கள். அபிஷியல் லாங்குவேஜ் ஆக்டை திருத்த வேண்டுமென்று ஏன் சொல்கிறீர்கள்? எல்லாவற்றையும் விட்டு விட்டு "மே" என்பதற்கு "ஷல்" என்று போட்டால் போதும் என்று "ஷல்" என்ற வார்த்தையை தூக்கி எடுத்துக் கொண்டு ப்ளேனில் போனால் போதுமா? ஒரு டெப்டி மினிஸ்ட்டர் நேற்று பார்லிமெண்டில் சொல்கிறபோது கூறினர், அபிஷியல் லாங்வேஜ் ஆக்டை திருத்துவதா வேண்டாமா என்பது யோசனையில் இருக்கிறதாம்! இப்படிச் சொல்லியிருக்கிறார். திரு. லால் பகதூர் சாஸ்திரி என்ன சொல்கிறார். 28-ம் தேதி அன்று சொல்கிறார்கள், தெற்கே உள்ள சகோதரர்கள் அகிலயிந்திய ஆட்சிமொழியாக இந்தியோடு ஆங்கிலமும் இருக்கவேண்டும், நேரு கொடுத்த உறுதிமொழியை சட்டபூர்வமாக கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், வடக்கே இருக்கிறவர்கள் உறுதி மொழி மட்டும் போதும் சட்டத்தை திருத்த வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆகவே இதற்கிடையில் ஏதாவது "வயா மீடியா" இருக்கிறதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது என்று சொல்கிறார்கள். 30-ம் தேதி சொல்கிறார்கள்,

"No decision has been taken and hence the *status quo* will continue"

என்று. "ஸ்டாட்டஸ் கோ" என்பது என்ன? காண்ஸ்டிட்யூஷன்-343 விதி பிரகாரம் 15 ஆண்டுகள் கழித்து இந்திதான் இருக்கும். சிறிது நாட்கள் பொறுத்திருந்தால், உணர்ச்சிகள் ஸ்தம்பிக்கட்டும் என்று கொஞ்ச நாட்கள் பேசாமல் இருந்தால் இந்தியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புகுத்தலாம் என்பதுதான் லால்பகதூர் நோக்கம். வேறு என்ன நோக்கமாக இருக்கக் கூடும் இதற்கு? பார்லிமெண்டில், மந்திரிகளுக்குத் தெரியாமல் சர்க்குலர்ஸ் அனுப்பக் கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? நம் உணர்ச்சியை மதிக்கிறார்கள் என்று அர்த்தமா? எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் சர்க்குலர்கள் கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் அனுப்பலாம் என்பதுதான். நாங்கள் சொல்கிறோம் காண்ஸ்டிட்யூஷனை அமெண்ட் செய்யுங்கள் என்று. பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் கூட அதைச் சொன்னார்கள். கடைசியில் போகிற போக்கில் அப்படிச் சொல்லி விட்டுப் போனார்கள். ஆரம்பத்திலேயே அவர்கள் அம்மாதிரி சொல்லியிருந்தால் நாங்கள் ஆரவாரம் செய்திருப்போம். பதினைந்து ஆண்டுகளாக ஆங்கிலம் இருப்பதினால் ஒரு கெடுதலும் வந்து விடவில்லை! அது தொடர்ந்து இருக்கவேண்டும். இந்தி பேசும் பகுதிகளில் ஆங்கிலம்தான் ஆட்சிமொழி என்று சொல்ல நமக்கு உரிமையில்லை. இந்தி தெரியாத பகுதிகளில் இந்தியேதான் அகிலயிந்திய ஆட்சி மொழி என்று சொல்ல எவனுக்கும் உரிமை கிடையாது. அதே





லால்பகதூர் சாஸ்திரியாக இருந்தாலும் சரி, நந்தாவாக இருந்தாலும் சரி, வடக்கே இருக்கிற எந்த வெறியர்களாக இருந்தாலும் சரி, இந்தி பேசாத மாநிலத்தில் இந்திதான் ஆட்சிமொழி என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது! அதைச்சொல்லுங்கள். இதை நீங்கள் சொன்னீர்களேயானால் உங்களை நான் பாராட்டுவேன். இதைச் செய்வீர்களானால் உங்களை நான் வணங்குவேன்! அதைச் செய்யவில்லை என்றால் உங்கள் கட்சியை அழிப்பதற்கு இந்தி மட்டும் போதும், வேறு ஒன்றும் தேவை இல்லை. Clarity of mind அரசாங்கத்திற்கு வேண்டும். அரசாங்கத்திற்கும் எங்களுக்கும் பல கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அகில இந்திய ஆட்சி மொழி பற்றிய விஷயத்தில் இந்த மன்றத்தில் 1959-ல் திரு. சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நிறைவேற்றிய தீர்மானத்தை அமல் படுத்துங்கள், அதுவே போதும். அந்தத் தீர்மானத்தில் அவர்கள் சொன்னார்கள், ஆங்கிலம் என்றென்றைக்கும் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும், அதற்கு ஓர் வழி செய்யமுடியவில்லை என்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்துவோம், அதற்கு நானே முன் நின்று திருத்துவேன் என்று சொன்னார்கள். அதை செயல்படுத்த வேண்டும். இதேமன்றத்தில் முதல் அமைச்சர் அவர்கள் அபிஷியல் லாங்குவேஜ் பில் பற்றி பேசும்போது சொன்னார்கள், இன்றைக்கு ஒரு சட்டம் போட்டால் வடக்கே உள்ளவர்களால் அதைத் திருத்த முடியாதா என்று கேட்டார்கள். உண்மை. உத்திரப் பிரதேச, மத்திய பிரதேச மாநிலங்களில் இருப்பவர்கள் சேர்ந்தால் எந்தச் சட்டத்தையும் பார்லிமெண்டில் திருத்த முடியும்; ஏனெனில் பார்லிமென்டில் மெஜாரிட்டியாக உள்ள இரண்டு மூன்று மாநிலங்கள் சேர்ந்தால் போதும். நான் சொல்வது அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்படி திருத்தப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்திலும் கூட இந்தி பேசாத மாநில சட்ட சபைகளைக் கலந்து ஆலோசிக்காமல் அதைத் திருத்த முடியாது என்ற நிலைக்கு திருத்த வேண்டும். இதை வலியுறுத்துங்கள் என்று தான் நான் அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறேன். இந்த யோசனைகளை நம் அரசாங்கம் செயல்படுத்தி சீரான முறையில் செயல் படுத்தும் என்று கருதுகிறேன். அப்படி உங்களால் செயல்படுத்த முடியவில்லை என்றால் மாணவர்கள் நினைவாக, இறந்தவர் பலருக்காக, நீங்கள் அளிக்கிற அனுதாபக் கண்ணீராக தயவு செய்து நீங்கள் பதவியில் இருந்து விலகுங்கள் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே,

"பிறந்து மொழி பயின்ற பின் எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறம் திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
என்ஞான்று தீர்வது இடர்"

என்ற காரைக்கால் அம்மையார் சொன்ன மனப்பாங்கை ஒத்தும்,

" உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்
a வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துஉ றையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே ".

என்று மணிவாசகர் சொல்லிய மனப்பாங்கை ஒத்தும்,

" இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுத்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே "

என்ற பாரதியின் மனப் பாங்கை ஒத்தும் நாட்டுப் பற்று, தங்களுடைய மனதை ஈர்க்க, பேருணர்வு மனதில் நிரம்பி வழிய அந்த முறையில் நின்று செயலாற்றிய உத்தமர்களைக் கொண்டதும், மதிப்பும், பண்பும் கொண்டதும் நம்முடைய பாரத நாடு. அந்த மரபில் ஒருவராக வந்த நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி மொழி பற்றி தொடக்கவுரை ஆற்றிய நேற்றைய பிரசங்கத்தில் முக்கியமாகக் கூறியது சுதந்திரத்தைத்தான். அந்த சுதந்திரம், நாட்டு விடுதலைதான் நம்முடைய ஆட்சிமொழி சர்ச்சைக்கு கருவூலமாக அமைந்த தொன்று என்று கருத்துரை தெரிவித்தார்கள். இதற்காக தமிழ் மக்களின் சார்பாக அவர்கள் கருத்தை நன்றி கலந்த உணர்ச்சியோடு வரவேற்கிறேன். காரணம் தமிழகத்தில் தாய் மொழியாகிய தமிழ் அரியாசனத்தில் வீற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்த நாட்டினுடைய சுதந்திரம் தான். இதை யாராலும் மறுக்க முடியாது. ஒரு புலவர் பாடினார் :—

" வெள்ளைக்கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனத்தில் வைத்த தாய் . . . "

என்று.

அதாவது நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் அரியாசனத்தில் அமர்ந்து அரசு செலுத்துகிறது என்றால் இந்த நாட்டினுடைய விடுதலை, சுதந்திரம் இவைதான் காரணமாகும். இதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். விடுதலை தான் நம்முடைய மொழி வளர்ச்சிக்கு கருவூலமாக அமைந்தது என்று கூறினார்கள்.

நம்முடைய பாரதி நன்றி உணர்வோடு சொன்னான், காந்தியடிகள் நம்முடைய நாட்டின் சுதந்திரத்திற்குத் தலைவராக இருந்தார், ஒப்பற்ற தந்தையாக இருந்தார், அவர் வாழ்க என்று [illegible]



" வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க! "

என்று பல்லாண்டு கூறுகிறான். காரணம் என்ன, இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக, இந்த நாட்டினுடைய விடுதலைக்காக பணியாற்றி அரும்பெரும் தியாகங்களை செய்த தலைவர்களை எல்லாம் வாழ்த்துகிறான். அப்பேர்ப்பட்ட சுதந்திரத்தை நாம் பெற்றதினால் தான் இன்றையதினம் தமிழகத்தில் தமிழ்நாட்டின் தாய்மொழியாகிய தமிழ் அரியாசனத்தில் வீற்றிருக்கிறது, என்று சொன்னால் அது மிகையல்ல. இதை யாரும் மறுக்கவும் முடியாது. காங்கிரஸாக இருந்தாலும் சரி, அல்லது திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, இப்பேர்ப்பட்ட சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்ததற்காக, தமிழக மக்களாகிய நாம் நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு ஆட்சிமொழி விஷயத்தைப்பற்றி ஆராயப் போவோமேயானால் நம்முடைய தமிழக அரசானது எப்போதும் மும்மொழிக் கொள்கை என்ற ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறது. இது மாணவர்களுடைய கிளர்ச்சிக்குப் பின்னால் ஏற்பட்டதல்ல. முன்னாலேயே வகுத்துக்கொண்டது. நம்முடைய மாநிலத்தின் தாய் மொழி தமிழ். இந்தியாவின் ஜனநாயகப் பண்பையொட்டி வருகிற ஒரு மொழி இந்தி, அதற்கடுத்தாற்போல், நம்முடைய அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ளக் கூடிய வகையில், உலக தொடர்பு மொழியாக இருக்கின்ற ஆங்கிலம் ஆகிய மூன்றையும் படித்துக்கொள்கின்ற வகையில் மும்மொழிக் கொள்கை என்று நாம் மாணவர்கள் படித்துக்கொள்வதற்காக வைத்திருக்கிறோம். ஆனால் கண்டிப்பாக எதையும் நாம் வைக்கவில்லை. அதே நேரத்தில் இந்தி எதற்கு என்று கேட்கலாம். தயவு செய்து இதைப்பற்றி எல்லோரும் யோசிக்கவேண்டும். இதை யோசித்துப் பார்க்கின்ற நேரத்தில் சற்று தேசிய உணர்ச்சியை நாம் வரவழைத்துக்கொள்ளவேண்டும். அந்த வகையில் நாட்டுப் பற்றை வரவழைத்துக்கொண்டு பார்த்தோமேயானால் இதிலுள்ள உண்மை நமக்கு புலப்படும். பாரதி சொன்னான் . . .

" திறமிக்க நல்வயிரச் சீர் திகழும் மேனி
அறமிக்க சிந்தை அறிவு—பிறநலங்கள்
எண்ணற்றன பெறுவார் ' இந்தியா ' என்ற நின்
கண்ணொத்த பேருரைத்தக்கால் . . "

என்றும்.

“ தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானுள் பொன் னுட்டை யறிவிப்பாய்—வானுடு
பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீருகும்
ஆரிய நாடென்றே யறி . . .”

என்றும் பாரதி சொல்லுகின்றான். நம்முடைய நாட்டின் எல்லையைச் சொல்லுகின்ற பாரதி வடக்கே இமயமலையும் தெற்கே குமரியும், மேற்கே மேற்கடலும், கிழக்கே கீழ்கடலும் இருக்கின்ற நாடு என்று சொல்லுகிறார். புறநானூற்றில் கூட சொல்லப் பட்டிருக்கிறது. . . .

“ வடாது பனிபடு இமயத்தின் வடக்கும்
தெனுது உருகெழு குமரியின் தெற்கும் ”

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவகையில் பார்ப்போமே யானுல், இந்த இந்திய நாட்டின், இந்த பாரத தேசத்தின் மக்கள் செந்நாவில் நின்று ஒலித்த ஒரு மொழியை இந்த நாட்டின் மத்திய ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு நமக்கு வக்கில்லையா? நமக்கு அந்தத் தன்மான உணர்ச்சி கிடையாதா? இதை நாம் யோசிக்க வேண்டும். இந்த பாரத தேசத்தின் மொழிக்குள் ஒன்றுகிய இந்தியை நாம் ஏற்றுக் கொண்டோம் என்றுல் உடனே பிற மொழிகள் எல்லாம் அழிந்து போய்விடும் என்று நாம் நினைக்க வேண்டிய தேவையில்லை. இந்த நாட்டிலுள்ள 18 மொழிகளும் வாழத்தான் செய்யும். எத்தனை மொழிகள் இருந்தாலும் நாம் ஒன்று என்ற உணர்ச்சி இருக்கவேண்டும். பாரதி சொல்கிறுன் . .

“ முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழி பதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள் . .”

என்று கூறுகிறுன் பாரதி. அந்த வகையில் பார்க்கின்ற போது, நம்முடைய நாடு ஒன்று என்ற நம்பிக்கையில் சிறந்தோங்கியிருக் கின்ற நாடு. மற்ற நாட்டு மக்களெல்லாம் மரவுரி தரித்துக் கொண்டு வாழ்ந்த நேரத்தில் நம்முடைய நாட்டுமக்கள் நூல் கொண்ட நெய்த துணியை அணிந்து கொண்டிருந்த மக்கள் கொண்ட நாடு நம்முடைய நாடு. அப்பேர்ப்பட்ட நாட்டின் செந் நாவில் முதலாவது தோன்றி உலாவிய ஒரு மொழியை நம்முடைய ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு நமக்கு வக்கு இல்லை என்று சொன்னுல் அந்த இடத்தில் நமக்கு தன்மான உணர்ச்சி இல்லை என்ற பழிதான் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஆகையினுல் இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டை காப்பாற்ற இந்த நாடு முழுவதும் ஒன்று, என்ற எண்ணத்தை நாம் ஏற்படுத்தவேண்டும். அதன்றியும் ஜனநாயகப் பண்பை நாம் ஒத்துக்கொள்வோமானுல் இந்தியை நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். ஆகவே நம்முடைய மாநில மொழியாக தாய் மொழி தமிழ், அகில இந்திய மொழியாக இந்தி, அறிவு பெருக்கத்திற்காக, உலகத் தொடர்பு மொழியாக இருக்கின்ற ஆங்கிலம், இவ்வாறு மூன்று மொழிகளையும் சேர்த்து, மும்மொழிக்



கொள்கை என்று தமிழக அரசாங்கம் எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறது. இது மாணவர்களுடைய கிளர்ச்சிக்குப் பின்னுல் ஏற்பட்டதல்ல.

மற்றொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தி வருவதினுல் தமிழுக்கு பாதகம் ஏற்படும் என்று சொல்லப்படு கிறது, இதை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய தமிழில் தண்டமிழ், வண்டமிழ், முதுதமிழ், கன்னித் தமிழ், நற்றமிழ், தீந்தமிழ், ஒண்தமிழ் என்று பல துறைகள் உள்ளன, இவைகளில் எத்துறையில் போய் ஒளிந்து கொண்டாய் என்று பாடுகிறார் மாணிக்கவாசகம் திருக்கோவையில்,

“ ஒண் தமிழின் துறைவாய் நுழைத்தனையோ
ஏழிசைச் சூழல்புக்கோ ”

என்று பாடுகிறார். பல துறைகள் இருக்கின்றனவே, இதில் எதில் போய் நுழைந்து கொண்டாய் என்று கேட்கின்ற முறையில் சொல்லியிருக்கிறார். 12 உயிர் எழுத்துக்களையும், 18 மெய் எழுத்துக்களையும், 216 உயிர் மெய்யெழுத்துக்களையும், ஆய்தம் ஒன்று, ஆக 217 எழுத்துக்களையும் கொண்ட ஒரு மொழி, எப்படி இந்தியினுல் அழிந்துவிடும் என்பது தெரியவில்லை. நம்முடைய தமிழ் மொழியில் இருக்கின்ற ‘ ழ ’ கர ஒற்று ஒன்றே போதும், உலகத்திலுள்ள எல்லா மொழிகளையும் வெல்வதற்கு. எந்த மொழி யிலும் ‘ ழ ’ என்ற சிறப்பான எழுத்து கிடையாது. நம்முடைய அந்த அழகான எழுத்தின் மூலம் தான் ‘ மாம்பழம் ’ என்றெல் லாம் அழகாக சொல்லுகிறோம், மற்றவர்கள் ‘ மாம்பயம் ’ என்று தான் சொல்ல முடியும். (குறுக்கீடு.) நம்முடைய மொழிக்கு இருக்கின்ற சிறப்பைப்பற்றிக் குறிப்பிடுவதற்காக சொல்லு கிறேன். இப்பேர்ப்பட்ட நிலைமையில் எந்த மொழி வந்தாலும் நிச்சயமாக நம்முடைய மொழிக்கு பாதகம் வராது. சமஸ் கிருதம் வரவில்லையா, அதனுல் நம்முடைய தமிழ் மொழிக்கு என்ன ஏற்பட்டுவிட்டது என்று கேட்கிறேன் . . . திசைச் சொல் என்று சொல்வார்கள் அந்த முறையில் . . . (குறுக்கீடு)

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள், சபையிலுள்ள மற்ற அங்கத்தினர்களைப் பதில் சொல்லுமாறு கேட்கின்ற வகையில் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் கனம் அங்கத்தினர் அவர்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் :** நான் இன்னும் விஷயத்திற்கு வரவில்லையே, இனிமேல் தான் விஷயம் இருக்கிறது (சிரிப்பு). ஆகவே எந்தவகையிலும் இந்தி வருவதினுல் தமிழுக்கு ஆபத்து வந்துவிடப்போவதில்லை. இந்தியில் சில சொற்கள் தமிழில் வந்து சேரும், அப்போது ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது மணிப்பிரவாள நடை என்று முன்பு இருந்தது. இப்போது இல்லை. மணிப்பிரவாளம் என்று சொன்னுல் வருகின்ற ஒரு மொழியிலுள்ள சிலச் சொற்களை அப்படியே பிற மொழியில் கையாள்வது—வேண்டுமென்றே

கையாள்வது. அந்த வகையில் இல்லாமல் திசைச் சொல் என்ற வகையில் மாற்றி அமைத்து விட்டால், தமிழ் மொழிக்கு எந்தவித மான பாதகமும் ஏற்படாது, ஆகவே தமிழ் மொழிக்கு இந்தியினால் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று சொல்வதை ஏற்றுக்கொள்வதற் கில்லை. தமிழ் இன்று நேற்று தோன்றிய மொழியல்ல ; பழங்காலத் திலிருந்தே, வேரூன்றிய மொழி தமிழ் மொழி ; ஐந்து இலக்கணங் களைக் கொண்ட மொழி. இதிலுள்ள நன்னூல் ஒன்றை மட்டும் படித்தால், இலக்கியத்தைப் படிப்பது போல் இருக்கும். உதார ணத்திற்கு நான் ஒரு சூத்திரத்தை மட்டும் குறிப்பிடுகிறேன் . . . சூத்திரத்தைப்பற்றிய இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது . . .

“ சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளை
செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்” . . .

12-30 p.m. இலக்கியம் படிக்கிற மாதிரி இருக்கிறதா, இலக்கணம் படிக்கிற மாதிரியா இருக்கிறது ? (திரு. சா. கணேசன் (குறுக்கீடு) நன்னூலில் யாப்பு, அணி இல்லாமல் இருக்கலாம். ஆக, 14 மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் அதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 14 மொழிகளும் ஆட்சி மொழி என்று சொல்லி, தமிழையும் டில்லியில் காரியாலயத்தில் வைத்துக்கொண்டு இயங்குவதால் தமிழ் மொழிக்கு வளப்பம் வந்து விடும் என்று நான் வாஸ்தவத்தில் எண்ணவில்லை. இரண்டாவது, ஒன்றிரண்டு மொழிகளை வைத்துக் கொண்டே காலதாமதத்தைத் தவிர்க்க முடியவில்லை. எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. தெனாலிராமன் காளியை நோக்கித் தவம் பண்ணினான். காளி பிரசன்னம் ஆனாள். தெனாலிராமன் காளியைப் பார்த்தான். காளிக்கு தலைகள் அதிகம், கைகள் குறைவு. இவன் பார்த்தான்—காளியின் பயங்கரமான கோலத்தைப் பார்த்து கேட்டான் : ‘ ஏனம்மா எனக்கு ஒரு தலை இருக்கிறது, ஒரு மூக்கு இருக்கிறது, இரண்டு கைகள் இருக் கின்றன. எனக்குச் சளி பிடித்தால் என் இரண்டு கைகளைக் கொண்டு ஒரு மூக்கைச் சிந்துவதே கஷ்டமாக இருக்கிறதே உனக்குச் சளி பிடித்தால், உன்னுடைய மூக்குகளையெல்லாம் இவ்வளவு குறைந்த எண்ணிக்கை உள்ள கைகளைக் கொண்டு எப்படிச் சிந்துவாய் ? ’—என்று கேட்டானாம். ஒன்றிரண்டு மொழிகளை வைத்துக்கொண்டாலே நிர்வாகம் ஸ்தம்பிக்கிறது. இந்த நிலையில் 14 மொழிகளையும் வைத்துக் கொண்டு குழப்பினால், ஒரு விண்ணப்பம் அனுப்பினால் எப்போது அதற்கு பதில் வருவது. ஆகவே, 14 மொழிகளையும் வைத்துக்கொள்ளுவது காரிய சாத்தியம் அல்ல. நிர்வாகத்தில் குழப்பம் ஏற்படுமே தவிர, அது காரிய சாத்தியம் ஆகாது. அதனால் தமிழுக்கு நிச்சயமாகப் பலன் ஏற்படும் என்றும் நான் நம்பவில்லை.

இன்னொன்று, நாம் ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லுகிறோம். பெரும்பாலான மாநிலங்கள் இந்தி வேண்டுமென்று சொல்லு கின்றன. பிரத்தியட்ச நிலையிலே பார்த்தாலும் கூட, இந்தியை மறுத்தால் அவர்களுக்குக் கோபம், ஆங்கிலத்தை மறுத்தால் நமக்குக் கோபம் ; வேறு என்ன மாற்று வழி வைத்திருக்கிறார்கள்





என்று எனக்குப் புலப்படவில்லை. இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டும். ஒருமைப்பாடு இந்த நாட்டிலே உருவாகவேண்டும், இப்போது நடக்கின்ற ஆட்சி முறை நீடித்து நடக்கவேண்டு மென்று கருதினால்—ஆஸ்ட்ரேலியாவிலிருந்து ஒன்பது லட்சம் டன் தான்யம் சும்மாக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய ஐக்கியத்தைப் பார்த்துத்தான் கொடுக்கிறார்கள் ; சீனாக்காரன் படையெடுத்து வந்தபோது உலகெல்லாம் முன் வந்து கட்டிக் காத்து நிற்கக் காரணம் என்ன ? நாட்டின் ஐக்கிய உணர்வும் ஒருமைப்பாடுதான் காரணம்—அந்த முறையில் பிரத்தி யட்சக் கண்ணோட்டத்தோடு பார்த்தாலும் கூட மும்மொழித் திட்டத்தைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை என்று நன்றாகப் புலன் ஆகின்றது. ஆகையால் தான் இந்தச் சட்ட மன்றத்தின் வாயிலாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மும்மொழித் திட்டத்தைத் தவிர வேறு எந்த மார்க்கமும் கிடையாது. நிச்சயமாக இந்தி வருவதால் தமிழுக்கு பாதகமும் கிடையாது. ஆகையால் திராவிட முன்னேற்றக் கழகம் இதை ஏற்க வேண்டும் என்று கோருகின்றேன். வருங்கால மாண வர்கள் இந்தி படித்தால்தான் சிறப்பாக இருப்பார்கள். தமிழை படிக்கவேண்டும், இந்தியைப் படிக்கவேண்டும், அதோடு உலகத் தொடர்புக்காகவும், அறிவுப் பெருக்கத்திற்காகவும் ஆங்கிலத்தைப் படிக்கவேண்டும். ஆக, மும்மொழித் திட்டத்தை வரவேற்று, அன்பான முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சி மொழி பற்றிச் சொன்ன வியாக்யானத்தைத் தமிழக மக்கள் சார்பாக, மாணவர் கள் சார்பாக, வருங்கால வளப்பத்தை நோக்கி, ஆதரித்து அமர் கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சி மொழிக் கொள்கையைப் பற்றிச் சர்க்கார் பிரேரேபித்த கொள்கையின் மீது எங்கள் கட்சித் தலைவர் அளித் திருக்கிற திருத்தத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன்.

இதுகாறும் நண்பர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சிறந்த தமிழில், தெள்ளு தமிழில், அழகான பாடல்களையெல்லாம் சொல்லி, இதற்கென்று இருக்கிற சிறப்புகளையெல்லாம் சொல்லி இப்படிப்பட்ட தமிழ் மொழியை அழிக்க யாராலும் முடியாது. இப்படிப்பட்ட பழம் பெரும் தமிழுக்கு இவ்வளவு இலக்கியங்கள் இருக்கிறது பார்த்தீர்களா என்றெல்லாம் வானளாவப் புகழ்ந்து விட்டு, அது வேண்டாம் என்று சொல்லும்போது, ‘ மயில் அழகாக ஆடும், ஆனால் அது கூடாது, வான்கோழி தான் வேண்டும் ’ என்று சொல்லுவது மாதிரி இருக்கிறது. நான் உள்ளபடியே வருத்தப் படுகிறேன், இவ்வளவு சிறப்பு மிக்க தமிழில், தெள்ளு தமிழ் பேசுகிற திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பேசும்போது. இன்னும் கொஞ்சம் பேச மாட்டாரா, பேச மாட்டாரா என்று நான் கூடக் காத்துக் கொண்டிருந்தேன் : திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன், ‘ தயவு செய்து இந்தியில் பேசி விடாதீர்கள், அது அபத்தமாக இருக்கும்’.

தமிழை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்துப் பார்க்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டுக்கொண்டு வருகிறது. அந்த முறையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணா அவர்கள் ராஜ்ய சபையில் பேசும்போது, தமிழை ஆட்சி மொழியாக ஆக்கிப் பார்க்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார்கள் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆங்கிலத்தை நீடிப்பது குறித்தும், ஆங்கிலத்தை எவ்வளவு காலம் நீடிப்பது என்பது குறித்தும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், இந்திய அரசாங்கத்திற்கு மூன்று மொழிகளும், மாநில அரசாங்கத்திற்கு ஆட்சிக்கு இரண்டு மொழிகளும், படிப்புக்கு மூன்று மொழிகளும், மாநில ஆட்சிக்கு இரண்டு மொழிகளும், தமிழக ஆட்சிக்கு ஒரு மொழியும் வைத்துக் கொள்ளலாம் என்று இப்படி மூன்று—இரண்டு—ஒன்று என்று வைத்துக்கொள்வதை விட, பதினான்கு மொழிகளையும் வைத்துக் கொள்ளுவதால் ஏற்படும் சிக்கல்களை கனம் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து விளக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ‘14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டுமென்று கூறுகிறார்கள், 14 மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்றாக இருக்கிறது, சமஸ்கிருதத்தை எப்படி ஆட்சிமொழியாகப் பயன்படுத்துவது; தெரியாத்தனமாகச் சொல்லுகிறார்கள்’ என்று, அமைச்சர் அவர்களைத் திருப்பிக் கேட்க நேரம் பிடிக்காது, நான் கேட்பதற்கு அமைச்சர் அவர்கள் சற்று மன்னிக்கவேண்டும்—பேச முடியாத மொழியை தேசிய மொழியாக வைத்திருப்பது குற்றம். இது காங்கிரஸ் கட்சி செய்திருக்கிற குற்றமே தவிர . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ‘தேசிய மொழி என்றால் பேசுவதற்கு உபயோகப்படுத்தியாகவேண்டும் என்பதல்ல. அந்த மொழியில் ஒப்புயர்வற்ற பொக்கிஷம் இருக்கிறது. ஆகையால் தான் அதைத் தேசிய மொழியாக வைத்திருக்கிறது.

**திரு. ப. உ. சண்முகம்:** ‘தேசிய மொழி என்றால் பேசுவதற்கு உபயோகப்படுத்தியாகவேண்டும் என்பதல்ல, அந்த மொழியில் ஒப்புயர்வற்ற பொக்கிஷம் இருக்கிறது, ஆகையால் தான் அது தேசிய மொழியாக இருக்கிறது’ என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வளவு சிறந்த பொக்கிஷம் ஒரு ஆட்சி மொழியாக வருவதைப் ஏன் தடுக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அதன் மேல் அவ்வளவு பற்று இருக்குமானால் அதையும் ஒரு ஆட்சி மொழியாகக் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்ளலாம். இன்னும் சில கோடி ரூபாய்கள் செலவிட்டுப் பார்க்கலாம்; தாராளமாகச் செய்யலாம்; வேண்டாமென்று சொல்லவில்லை.

இந்தியைத் திணித்தது முதன் முதலாக 1938-ம் ஆண்டு என்றால், இதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிற தியாகம், சாதாரண தியாகம் அல்ல. தமிழ் நாட்டு மக்கள் செய்திருக்கிற உயிர் தியாகம் கொஞ்ச நஞ்சமல்ல, தாளமுத்து நடராஜன், திருச்சியில் சின்னசாமி, சென்னையில் சிவலிங்கம்





போன்ற நண்பர்கள் தமிழைக் காக்க, வருகிற இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்று நான் சொல்ல வரவில்லை—தமிழகத்து மக்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் உயிர்த் தியாகங்கள் செய்திருக்கிறார்கள். இவர்கள் செய்திருக்கிற உயிர்த் தியாகங்கள் வீண் போகக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுவது, இதனை ஒரு கட்சிப் பிரச்னையாக ஆக்கி, கட்சிக் கண்ணோட்டத்தோடு காணவேண்டாம்; திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எடுத்துச் சொல்லுகிறார்களே என்று தவறாகக் கருதி எங்கள் வாதத்தைத் தூக்கி எறியவேண்டாம். எது நியாய வாதம் என்று அருள் கூர்ந்து முதல் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 14 மொழிகளும் வளரும் வரையில் ஆங்கிலத்தை நீடிக்கவேண்டுமென்று சொல்லுவதில் தவறு என்ன? ஆங்கிலத்தை வைத்துக் கொண்டால் இந்திக் காரர்கள் ஒத்துக்கொள்வார்களா என்று இங்கே முதல் அமைச்சர் அவர்கள் மெத்த வருத்தப்படுகிறார்கள். இந்திக்காரர்களுக்காக இவ்வளவு அக்கறை எடுத்து வாதாடுகிற முதல் அமைச் சருக்கு நான் அக்கறையோடு எடுத்துச் சொல்லுவேன், ‘தமிழக முதல் அமைச்சர், தமிழ் மக்களுக்காகக் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள், எடுத்துக்கொள்ளுகிற அக்கறை கொஞ்சம் குறைவாக இருந்தால் கூட, இப்போது இருப்பதை விடக் கொஞ்சம்அதிகமாக எடுத்துக் கொண்டு, தமிழக மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்’ என்று. இந்தியால் தமிழ் கெடுமா, கெடாதா என்ற வாதத்திற்குக் கூட நான் வரவில்லை. தென்னக மக்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தும் வகையில், அவர்கள் கவலைகொள்ளும் வகையில் வடநாட்டுக்காரர்களுடைய சமீப கால நடவடிக்கைகள் இருந்துகொண்டிருக்கின்றன. டில்லியிலே உள்ள பாராளுமன்றத்தில் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு பதிலையும் நினைக்கும் போது வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது. இந்த மன்றத்தில் பேசிய நண்பர் மகாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திக்கு ரோமன் ஸ்கிரிப்ட் இருக்கவேண்டும், தேவநாகரி எழுத்து பயன்படவில்லை, ஆங்கில எழுத்து இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நண்பர் மகாலிங்கம் அவர்கள் கூறிய கருத்துக்கும், மத்திய கல்வி மந்திரி சாக்ளா அவர்கள் கருத்துக்கும் நிறைய முரண்பாடு இருக்கிறது. மந்திரி திரு. சாக்ளா அவர்கள் குறிப்பிட்டார்கள். இனிமேல் இந்தியாவில் இருக்கிற எல்லா மொழிகளுக்கும் தேவநாகரி ஸ்கிரிப்ட், இந்தி எழுத்துக்களாக இருக்கவேண்டும் என்று. அந்தக் கருத்தை அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த பயங்காத்தில், நான் இருக்க பயம் இல்லை என்று சாயிபாபா வரம் கொடுப்பது போலச் சொல்லி கொண்டிருந்தால், நாடு எத்தனை காலம் கேட்டுக்கொண்டிருக்கும்? வரம் கொடுத்தவரோ சென்று விட்டார். அவரும் சென்ற பிறகு அவர் கொடுத்த வாக்குறுதியோ காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களையும் மீறி இந்திய நிர்வாகத்தினாலும், மந்திரிகளாலும், எங்கள் கட்சி நண்பர் திரு. மதியழகன் அவர்கள் எடுத்துக் காட்டிய மாதிரி, பழைய மாதிரியே நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு

ஒன்று சொல்லுவேன், நேற்றைய தினம் ராஜ்ய சபையில் நடந்த சம்பவம். ராஜ்ய சபை அங்கத்தினர் ஒருவருக்கு ஆந்திராவில் கொடுக்கப்பட்ட ரெயில்வே டிக்கெட்டில் இந்தி எழுத்து மட்டும் இருக்கிறது என்று பார்த்த உடனே திரு. லால் பகதூர் சாஸ்திரிக்குத் தூக்கிவாரிப் போட்டது என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. நான் என்ன குறிப்பிடுகிறேன் என்றால் எவ்வளவு தான் பதவியில் உள்ள முதல் அமைச்சர் அவர்கள் உறுதி மொழி கொடுத்தாலும், அந்த உறுதிமொழியை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதில்லை, தூக்கி எறிகிறார்கள், கேவலப்படுத்துகிறார்கள், மதிப்பதில்லை, வாக்குறுதி இருக்கிறது போதும் வாக்குறுதி இருக்கிறது போதும், அரசியல் சட்டத்தை திருத்த வேண்டியதில்லை' என்று சொல்லுகிறார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது ஒன்று சொன்னார்கள். மொழிப் பிரச்னையில் அவசரப்படக்கூடாது என்று எங்களுக்கு கீதாபதேசம் கூறுகிறார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்க விரும்புகிறேன், மொழிப் பிரச்னையில் அவசரம் காட்டியது யார்? வடக்கே இருந்தவர்கள் தான் ஜனவரி 26-ம் தேதியன்று இந்தியை ஆட்சி மொழியாக கொலு பீடத்தில் ஏற்றிப் பார்க்கவேண்டும் என்று அவசரப்பட்டார்கள். இவர்கள் சொல்லியிருக்கவேண்டும். 'நான் சொன்னேன், கேட்கவில்லை' என்று இவர்கள் சொன்னார்களா? இவர்கள் சொல்லி அவர்கள் கேட்கவில்லை என்றால், தமிழ் மக்களிடத்திலே உடனே திரும்பிப் பார்த்து 'அவசரப்படாதே' என்று தெரிவிப்பதா? 'நான் சொன்னேன், கேட்கவில்லை, தமிழ் மக்களுடைய உரிமைக்கு நியாயம் வழங்கப்படவில்லை, தமிழ் மக்கள் என்ன தீர்ப்பு வழங்குகிறார்கள்' என்று கேட்டிருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு 'நான் சொன்னேன், கேட்கவில்லை, நீங்கள் அவசரப்படாதீர்கள்' என்று சொல்லுவது ஆட்சி மொழிப் பிரச்னைக்கு பரிகாரம் காணுவது ஆகாது. நேற்றைய முன் தினம் ஒரு அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். ஆட்சி மொழிச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரவேண்டுமா, வேண்டாமா என்பதே இன்னும் மத்திய சர்க்காரால் முடிவு செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். வெட்கமாக இருக்கிறது கேட்பதற்கு. முதல் அமைச்சர் அவர்கள் பாஷையில் சொல்லவேண்டுமானால், இவ்வளவு நாபலிகள் கொடுத்த பிறகும் கூட, ரத்த ஆறு ஓடிய பிறகும் கூட, உயிர்ச் சேதம் ஏற்பட்ட பிறகும் கூட, அரசியலில் எங்கும் காணாத கொந்தளிப்பும், தீயும் ஏற்பட்ட பிறகும் கூட, உஷ்ணத்தின் தீட்சண்யம் தணிந்த பிறகும் கூட, இப்பொழுது கூட கொண்டு வரவேண்டுமா, கொண்டு வரவேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று பொறுப்பு உள்ள அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் பதில் அளித்திருக்கிறார்கள். வெட்கமாக இருக்கிறது கேட்பதற்கு. நம்முடைய தமிழகத்து அமைச்சர்கள் என்ன செய்வார்கள்? அங்கே இருக்கிற திரு. லால்பகதூர் சாஸ்திரியிடம் கேட்டுக்கொள்வார்கள் "தயவுசெய்து மந்திரிகளிடம் சொல்லுங்கள், அறிக்கை விடவேண்டாம் என்று சொல்லுங்கள், பேசாமல் இருக்கச் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொள்வார்கள். அவர்கள்





வாயை மூடி வைப்பதினால், வருகிற ஆபத்திற்கு ஒரு பரிகாரம் இருப்பதற்கு நியாயமில்லை. ஆபத்துக்கு பரிகாரம் தேடவேண்டும், அதைத் தான் நமது முதல் அமைச்சர் அவர்களிடம் எதிர்பார்க்கிறேன். வடக்கே இருக்கிற அமைச்சர் பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லுகிறார். வடக்கே இருக்கிறவர்கள் ஆட்சி மொழிச் சட்டத்தை திருத்தப்போகிறார்களோ, இல்லையோ, தமிழ் மக்களுடைய ஏகோபித்த முடிவாக இருக்க வேண்டும், ஏகோபித்த குரலாக இருக்கவேண்டும். ஆட்சி மொழிச் சட்டத்தை திருத்துவதா, வேண்டாமா என்பது ஒருபுறம் இருக்க, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அவ்வாறே வற்புறுத்தியிருக்கலாம். ஆனால், ஆட்சி மொழிச் சட்டத்தையாவது திருத்துவார்களா, இல்லையா என்றால், அது கூட இப்போதைக்கு இல்லை, இன்னும் கொஞ்ச நாட்களாகும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களையும், மற்றவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், ஆட்சி மொழிச் சட்டத்தை திருத்துவதற்கு அருள் கூர்ந்து நீங்கள் அவசரப்பட்டாகிலும் நாட்டு மக்களுடைய உணர்ச்சியை எடுத்துச் சொல்லவேண்டும். 'பொறுங்கள்' என்று எங்களைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருப்பது எந்தவகையிலும் நியாயம் இல்லை. வடக்கே இருப்பவர்கள் தமிழ் மக்களுடைய உணர்ச்சியை மதிக்க வேண்டும். இந்தி இந்த நாட்டில் எந்த ரூபத்தில் திணிக்கப்பட்டாலும், தமிழகம் அதை தாங்காது, எதிர்த்தே தீரும், நிச்சயமாக எதிர்த்தே தீரும். தமிழகம் என்ன விலை கொடுத்தாகிலும் எதிர்த்தே தீரும், தடுத்தே தீரும். இதனைத் தெளிவாக தெரியப்படுத்திக் கொள்கிறேன். திராவிட முன்னேற்ற கழகம் தமிழைக் காப்பாற்றுவதற்கு என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறது, அதற்காக என்ன விலை முதல் அமைச்சர் அவர்கள் கேட்டாலும், கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்து உணர்ச்சியை, தமிழ் மக்களுடைய உணர்ச்சியை அலட்சியப்படுத்தி விடாதீர்கள், தமிழக மக்களுடைய உணர்ச்சியை கேவலப்படுத்தி விடாதீர்கள். வடக்கே நடந்த முதல் மந்திரிகள் மகாநாட்டில் நம்முடைய முதல் மந்திரி என்ன பேசினார் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. பேசினேன் என்று சொல்லுகிறார்கள். வடக்கே உள்ள மந்திரிகள் சொல்லுகிறார்கள் 'உங்கள் முதல் அமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், எனவே நாங்கள் சட்டம் செய்கிறோம்' என்று குறிப்பிடுகிறார்கள். அருள் கூர்ந்து தமிழகத்து முதல் அமைச்சர் தமிழ் மக்களுடைய உள்ளக் கிடக்கையை, மனக் கொதிப்பை, நெஞ்சில் இருக்கின்ற எண்ணங்களை அப்படியே அப்பட்டமாக எடுத்துச்சொல்ல வேண்டும். அச்சம், தயை, தாட்சண்யத்திற்கு இடமில்லாமல் எடுத்துச் சொல்லவேண்டும். மொழிப் பிரச்னை வருங்காலத்தில் சந்ததிகளுக்கு விட்டுவிடுகிற பிரச்னை இல்லை. நம்முடைய ஆயுள் காலத்திற்குள்ளேயே வற்புறுத்தி, அதற்குப் பரிகாரம் தேடி,

[திரு. ப. உ. சண்முகம்] [31st March 1965

நிரந்தரமான முடிவு தேடி வைக்க வேண்டும் என்று நான் முதல் அமைச்சர் அவர்களை வேண்டிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஏ. பி. ஸி. வீரபாகு : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டினுடைய அரசியல் மொழியைப்பற்றி தமிழ் நாட்டில் ஒரு சீரான மாற்று யோசனை கொடுக்கக்கூடிய சூழ்நிலை இன்றைய விவாதத்திலும் கூட இல்லை என்பது புலனாகிறது. இங்கே மாற்று யோசனையை கூறுகிற அங்கத்தினர்கள் நம்முடைய மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், அல்லது ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில், இந்தியை ஆட்சேபிக்கிறவர்களுடைய மத்தியில் ஒரு ஒற்றுமையைப் பார்க்க முடியவில்லை. அதிலிருந்து மொழிப் பிரச்னை மிகுந்த குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது என்பது புலனாகிறது. அதற்கு உணர்ச்சி காரணமாக இருக்கலாம். அல்லது தமிழ் அபிமானம் காரணமாக இருக்கலாம். அல்லது, இந்தியினால் தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய ஆபத்து வந்து விடுமோ என்ற பயம் காரணமாக இருக்கலாம். அல்லது, அரசியல் காரணமும் இருக்கலாம். ஆனால், நாம் சம்பந்தப்பட்ட மட்டிலே ஒரு உறுதியான கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். உறுதியான கொள்கை என்று சொல்லும்பொழுது, பிறர்களுடைய எண்ணங்களை அலட்சியப்படுத்தியோ, அல்லது அவர்களுடைய உணர்ச்சியைப் பற்றி கவலைப்படாமலோ நாம் ஒரு கொள்கை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லோரும் ஒத்துக்கொள்ளக் கூடிய கொள்கையை நிர்ணயிக்க முடியவில்லை. பிறருடைய பயத்தையும், அச்சத்தையும் போக்கக்கூடிய கொள்கையை நாம் உருவாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில் தான் இப்பொழுது அகில இந்திய தலைவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டினுடைய உணர்ச்சிக்கு கௌரவம் கொடுத்து, இதை மறு பரிசீலனை செய்து வருகிறார்கள். அப்படி மறுபரிசீலனை செய்கிற நேரத்தில் நாம் இந்த மொழிக்கொள்கையை விவாதிக்கிறோம். இதற்கு மாற்று யோசனையாக நாம் குறிப்பிட்டுச் சொல்வது பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது 'பை லிங்குவிஸம்' தான். ஆங்கிலமும், இந்தியும் தொடர்ந்து இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக இருப்பதற்கு வகை செய்வது, அந்த நிலைமை இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரையிலும் என்கிற முறையிலே ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இதற்கு உரு கொடுப்பதற்கு அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமா, அல்லது ஆட்சிமொழி சட்டத்தை திருத்தவேண்டுமா என்கிற வரையிலே விவாதம் இருந்தால், பயனுள்ளதாக இருந்திருக்கும். அதைவிட்டுவிட்டு, இந்தி இந்த தேசத்தினுடைய பொது மொழியாக ஆவதற்கு தகுதி வாய்ந்த மொழியா, என்றாவது அது பொது மொழியாக வர முடியுமா, எந்தெந்த மொழிகளெல்லாம் இந்த தேசத்தின் பொது மொழியாக ஆவதற்கு அருகதை உள்ளதாக இருக்கின்றன, ஆங்கிலத்திற்கு அவசியம் இருக்கிறதா,



31st March 1965] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

இல்லையா, ஆங்கிலம் பெரிய மொழியா, அல்லவா, அந்த எல்லா மொழிகளையும் விட தமிழ் மொழி மிகப்பெரிய மொழி அல்லவா என்றெல்லாம் விவாதிப்பது, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு எவ்வளவு உதவியாக இருக்க முடியும் என்பது புரியவில்லை. தமிழ் முக்கியமான மொழியாக இருக்கலாம், அதற்கு மிகுந்த ஆற்றல் இருக்கலாம், அது மிகச் செறிவு உள்ள மொழியாக இருக்கலாம், நாமும் அதன் மேல் அதிக மாக பற்று உள்ளவர்களாக இருக்கலாம். அதனால், இந்தியாவில் உள்ள எல்லோரும் அதை பொது மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் எப்படி வற்புறுத்துவது என்று தெரிய வில்லை. அதே மாதிரியாக ஆங்கிலம் இதுவரையிலும் உதவி வந்திருக்கலாம், இன்னும் உதவக்கூடிய மொழியாக இருக்கலாம், விஞ்ஞானத்திற்கும் நுணுக்க அறிவுக்கும் அதையே பயன்படுத்த வேண்டிய காலம் இன்னும் கொஞ்சம் அல்லது அதிக காலமாக இருக்கலாம், அல்லது நிரந்தரமாகவும் அமையலாம். அதனால் ஆங்கிலம் இந்த நாட்டினுடைய அரசாங்க மொழியாக எப்படி இருக்க முடியும் என்பது புரியவில்லை. நாட்டினுடைய பொது மொழிக்கு தகுதியான மொழி என்றால், அது மக்கள் எவ்வளவு தூரம் அந்த மொழியை புரிந்துகொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. மொழிக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்று மொழியினுடைய வரலாற்றில் புகுந்து சர்ச்சை செய்யாமல், பெரும்பாலான மக்கள் உணர்ந்துகொள்ளும், தெரிந்து கொள்ளும், அவர்களுடைய வாழ்க்கையை செம்மைப்படுத்து வதற்கு நடத்துகிற நிர்வாகத்தையும், மக்களையும் தொடர்பற்ற நிலையில் செய்யக்கூடிய வகையில் இல்லாமல், இரண்டையும் இணைத்து, செயலாற்றக்கூடிய முறையில் இருக்கிற, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியை நாட்டு நிர்வாக மொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லுகிறேன்.

ஆற்றலுக்குள்ளே போகாது, வரலாற்றினுள்ளே போகாது அறிவு எந்தத் துறையில் எந்த மொழியின் மூலம் பெறவேண்டும் என்பதினுள் போகாது, நாட்டிலே பெருவாரியான மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழி என்கிற காரணத்தினால், இந்தியைப் பொதுமொழியாக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். 16 கோடி மக்கள் இந்தியைப் பேசுகிறார்கள் என்று இவர்களே சொல்லுகிறார்கள். சிலர் 13 கோடி என்று சொல்லுகிறார்கள். மற்றவர்கள் வேறு மொழிகள் பேசுகிறார்கள் என்று சொல்லு கிறார்கள். ஆக 16 கோடி மக்கள் ஹிந்தியைப் பேசுகிறார்களே தவிர, பாக்கி 28 கோடிப் பேர் ஹிந்தி மொழியே வேண்டாம் என்று சொல்லுவதாக உள்ள வாதத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்று புரியவில்லை. 1965-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதி முதல் இந்தி வேண்டாம் என்பதற்காக பலாத்காரச் செயல்கள் தமிழ் நாட்டில் தான் நடந்தன. ஆக, பாக்கி 28 கோடிப் பேர்களில், 3 கோடி தமிழர்கள் போக பாக்கி 25 கோடிப் பேர்கள் கிளர்ச்சி செய்யவில்லை. அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எத்தனை கோடிப் பேர்கள் பேசுகிறார்கள் என்பதல்ல

முக்கியம். எவ்வளவு பேர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள் என்பதைக் கொள்ள வேண்டும். நாம் சம்பந்தப்பட்டவரை, இந்தியைப் புகுத்துகிறார்களா, திணிக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அதைப் பற்றிச் சொன்னாலும் சிலர் புண்பட்டுவிடுகிறார்கள். மாணவ சமுதாயம் அச்சம் கொண்டிருக்கிறது. இந்தியைத் திணிக்க மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறதா? இல்லையே. ஆகவே, நாடு பூராவும் அந்த மொழி இருக்கவேண்டும் என்று சொல்லும்போது, இந்தி வேண்டாம் என்கிற கிளர்ச்சி எவ்வளவு தூரம் தர்க்கத்திற்கும், வாதத்திற்கும் பொருந்தும் என்று புரியவில்லை. பெருவாரியான மக்கள் இந்தி பேசுகிறார்கள்; இந்தி பெருவாரியான மக்களுக்குப் புரிகிறது. அவர்கள் நாட்டின் நிர்வாகம் இந்தியில் ஆக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் மத்திய சர்க்கார் செயல்படும்போது, நமக்கு இடைஞ்சல்கள், இடையூறுகள் ஏற்படும் என்றால், அதற்குப் பரிகாரங்கள் தேவை. அந்தத் துறையில் நம்முடைய ஆராய்ச்சி இருக்க வேண்டுமே தவிர, அதற்குப் புறம்பான மற்ற கருத்துக்களைச் சபையில் மொழிக்கொள்கையை விவாதிக்கும் போது எடுத்து உரைப்பது பொருத்தமானது அல்ல என்பதை களம் அங்கத்தினர்கள் கவனிக்க வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நாட்டின் பொது மொழி, நிர்வாக மொழி—பொது மொழி என்று கூடச் சொல்ல மாட்டேன்—மக்களுக்கு புரியும் மொழியாக இருக்கவேண்டும் என்றால் என்ன தவறு? இன்றைக்கு நாம் தமிழ் நாட்டிலே தமிழிலே நிர்வாகம் நடைபெறவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆங்கிலத்தில் நடந்து வந்தது. ரொம்பக் காலமாக அப்படி நடந்து வந்தது. ஆங்கிலமே நிரந்தரமாக தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக இருக்க முடியுமா? இன்றைக்கு ஆங்கிலமே நிரந்தரமாக இருக்க வேண்டும், தம் மாணவர்கள் படிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஏன் நிர்வாகம் தமிழில் நடக்க வேண்டும் என்று விரும்புகிறோம்? அப்படிச் சொல்லும் நாம், மற்றவர்கள் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் நிர்வாகம் நடத்தக் கூடாது என்று சொல்ல என்ன உரிமை? சரி. பெருவாரியான மாநிலங்கள் இந்தியில் நடத்துவதாக இருந்தால், தொடர்பு கொள்ளுகிறவர்கள் இந்தியா பூராவும், மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் யூனியனுடன் தொடர்பு கொள்ள இந்தி இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட பிராந்தியமொழி கொள்கையை வற்புறுத்தினால், அதில் என்ன தவறு? நாம் அவர்களுக்குள் ஆங்கிலத்தில்தான் தொடர்பு கொள்ள வேண்டும் என்று சொல்ல உரிமை இல்லை. நாம் இங்கே நம்முடைய பிராந்திய மொழியாகிய தமிழ் மொழி எல்லா அம்சங்களிலும் வரவேண்டும் என்று விரும்புகிறோம். கல்லூரிகளில் போதனை மொழியாக இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறோம். அந்த வகையில் நம் பிராந்திய மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்று விரும்புகிறோம். அதே போல மற்றவர்கள், மற்ற பிராந்தியக்காரர்கள், இந்தியில் வேண்டும் என்று விரும்பினால், அதைத் தடுக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது? பெருவாரியான மக்கள், பிரதேசங்கள், அது தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பும்போது, அது தானாகவே மலர்கிறது. அது நம்மீது திணிக்கப்படுகிறதா என்றுதான் நாம் பார்க்கவேண்டும். அந்த அந்த பிராந்திய மக்கள், அந்த அந்தப் பகுதி மக்கள், தங்கள் தங்கள் மொழி பற்றி அக்கறை கொள்வது இயல்பே. அதை ஒத்துக்கொள்ளும் போது, பெருவாரியான மக்கள் இந்தி மொழி வேண்டும் என்றால், அதை எப்படித் தடை செய்ய முடியும்? 16 கோடி மக்கள் அந்த மொழியைப் பேசுகிறார்கள் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு, பஞ்சாபில், பீகாரில், மகாராஷ்ட்ராவில், இந்தியை ஒத்துக் கொள்ளுகிறார்கள். அவர்களெல்லாம் ஒத்துக் கொண்டு, இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று, அது சீக்கிரமாகப் பரவவேண்டும் என்று விரும்பும்போது, நாம் யார் அதைப் பரவக்கூடாது என்று சொல்ல? அந்த உரிமை நமக்குக் கிடையாது.



இன்னொரு கேள்வி கேட்கப்பட்டது, எத்தனை பேர்கள் தமிழ் நாட்டில் இந்தி படிக்கிறார்கள் என்று? இந்தியைத் தமிழ் நாட்டில் படிக்கவில்லை என்று சொன்னார்கள். வருஷம் ஒன்றுக்கு ஒரு லட்சம் பேர்கள் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். நாம் விரும்பாமல் இருக்கலாம்; ஆனால் விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள். வருங்கால சமுதாயம் அதைக் கற்றுக் கொள்வதில் ஈடுபட்டிருக்கிறது. அதை மறுக்க முடியாது.

இங்கே கொடுத்திருக்கிற மாற்றுக் கட்சி அன்பர்களுடைய வாதங்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். "இந்தி ஆட்சி மொழியாவதால் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு போன்ற வாழ்க்கை நிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது" என்பது ஒன்று. அது இன்றைக்கு சிந்தனையில் இருக்கிறது. வேலை வாய்ப்பு குறையும் என்றால், அதற்கு வழி 'கோட்டா சிஸ்டத்தை' ஒத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் வேண்டுகிற ஆங்கில பாஷையில் தான் அகில இந்தியத் தேர்வுகள் நடத்த வேண்டும், நாங்கள் வெற்றி பெற்றுக் கொண்டு போகிறோம், என்று சொல்வதானால், அது எப்படிப் பொருந்தும்? பிராந்திய மொழியில் யு.பி.எஸ்.ஸி. தேர்வுகள் இருக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொண்டால், எவ்வளவு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும்? அதற்குத்தான் பாபுலேஷன் பேஸிசில் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். வேலை வாய்ப்புப் பெற வேண்டும் என்றால், கோட்டா சிஸ்டத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். 'கோட்டா சிஸ்டத்தை' வற்புறுத்துகிறார்கள். ஏன்? மொழிக் கொள்கையால் வேலை வாய்ப்பு போகிறது என்று நாம் சொன்னால், அவர்கள் அதை, மாறாமல் இருந்தால் தங்கள் வேலை வாய்ப்பு குறைகிறது என்று சொல்லுகிறார்கள். ஆங்கிலம் தொடர்ந்து இருந்தால், எங்களுக்கு வேலைவாய்ப்பு பாதிக்கிறது என்று வடநாட்டினர் சொல்லுகிறார்கள். நாம் ஆங்கிலம் போனால் வேலை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது என்று சொன்னால், ஆங்கிலம் இருப்பதால் அதிக வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்றுதானே

அர்த்தம்? எதிர்க்கட்சிகள் அதை சொல்ல வேண்டாம். அந்த ஆர்குமெண்டைச் சொல்லி, வேலை வாய்ப்பு பாதிக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு அதிக வேலை வாய்ப்பு இருக்கிறது, அது போகிறது என்றுதானே அர்த்தம். யாரையும் பாதிக்காத முறையில் எல்லோருக்கும் கோட்டா சிஸ்டம் என்கிறார்கள். கோட்டா சிஸ்டத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். இதைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் யாரும் பேசவில்லை.

அடுத்து, "இந்தி ஆழ்ந்த, முதிர்ந்த, தெளிந்த பொருள் நிறைந்த, சொல்வளம் அற்ற மொழியாகவும், பழம்பெரும் இலக்கியங்கள் அற்ற மொழியாகவும், எக்காலத்திலும், எப்பகுதியிலும், எவர் ஆண்டபோதும் ஆட்சிமொழியாக விளங்காத ஒரு மொழி" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் இந்தி மொழி எப்படிப் பொது மொழியாக இருக்கக்கூடாது என்று சொல்லத்தக்க ஆர்குமெண்டாக ஆகும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பல மக்கள் பேசக் கூடிய மொழி அது, பல பகுதி மக்களுக்குப் புரியக் கூடிய மொழி அது. இன்றைக்கு ஆங்கிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஆங்கிலம் மைனஸ் ஸாக்ஸன், ஆங்கிலம் மைனஸ் டேனிஷ், ஆங்கிலம் மைனஸ் லாடின், ஆங்கிலம் மைனஸ் அதர் லாங்வேஜஸ் (other languages) என்ன ஆகும்? ஆகவே, ஒரு மொழி வளப்பட்டதாக இருக்க வேண்டும் என்று சொன்னால், அது மற்ற மொழிகளிலிருந்து எடுத்துக் கொண்டு வளரக்கூடியதாக இருக்க வேண்டும். இன்றைக்கு இங்கிலீஷ் லிடரேச்சர் ஹிஸ்டரியை எடுத்துப் பார்த்தால், அவ்வளவு மொழிகளையும் சேர்த்துக் கொண்ட மொழி அது. இங்கே என்ன பார்க்கிறோம்? நாம் சிறப்பு, 'ழ' கரத் தமிழாக இருக்க வேண்டும் என்கிறோம். (குறுக்கீடு) இங்கே தமிழ்ச் சங்கமே நடக்குமோ என்று பார்த்தேன். ஆக, சிறப்புத் தமிழ், தனித் தமிழ்தான் வேண்டும் என்று சொல்லுகிறோம். மறைமலை அடிகள் அவர்களால் அப்படிப் பட்ட தனித் தமிழ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அப்படிப்
1-00 p.m. பட்ட சிறந்த செறிவுள்ள பாஷை பிற மொழிகளை ஏற்றுக் கொள்ளாத மொழியாக இருக்கிறது. எதைக் காரணம் காட்டி இந்தி பொது மொழி ஆகக் கூடாது என்று அவர்கள் சொல்கிறார்களோ, அந்தக் காரணத்தைக் காட்டியே இந்தி பொது மொழி ஆக வேண்டும் என்று நான் சொல்கிறேன். பிற மொழிகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய பாஷையாக ஆங்கிலம் இருப்பதால்தான் அது சிறந்த மொழியாக இருக்கிறது. அதே போன்று, பிற மொழிகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய, பிற கலாச்சாரச் சொற்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய வளமுள்ள பாஷையாக வரக்கூடிய வாய்ப்பு இந்தி மொழிக்கு அதிகமாக இருப்பதால் இந்தி மொழியானது நம் தேசத்தின் பொது மொழியாக இருக்கலாம் என்று நான் சொல்கிறேன்.

அடுத்து, "அகில உலகமொழியாக விளங்கும் ஆங்கிலமே தொடர்ந்து நம் ஆட்சி மொழியாக இருக்குமானால் இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவிலும் பயன் விளைவிக்கக்



கூடும் . . ." என்ற வகையிலும் திருத்தம் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆங்கிலம் தொடர்ந்து நமக்கு 'கன்வீனியெண்ட்' ஆக இருக்கலாம். நமக்கு அதில் விருப்பமும் இருக்கலாம். ஆங்கில மோகம் நமக்கு இருக்கலாம். அதைத் தப்பு என்று நான் சொல்ல வில்லை. ஆனாலும், பிற நாடுகளில், ஆங்கிலத்தின் மூலமாக அல்லாமலேயே சயன்ஸ், டெக்னாலஜி போன்றவற்றைப் படித்து, சிறந்த நிலையை அடைந்திருப்பதையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம். ஜப்பானிலும், ருஷ்யாவிலும் அந்தந்த தேசத்தின் மொழிகளிலேயே சயன்ஸ், டெக்னாலஜி போன்றவற்றைப் படிக்கிறார்கள். அவர்கள்கூட ஆங்கிலம் படிக்கிறார்கள் என்றால், ஆங்கிலத்தையும், ஒரு பாஷையாக எடுத்துக்கொண்டு படிக்கலாம். ஆனால், ஆங்கிலத்தின் மூலமாகப் படித்துத்தான் விஞ்ஞானம், டெக்னாலஜி போன்ற துறைகளில் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. என்னைக் கேட்டால், 'originality' இல்லாமற் போனதற்குக் காரணமே ஆங்கிலத்தின் பிராதான்யம் என்று தான் நான் நினைக்கிறேன். "நம்மவர்களுக்கு ஏன் ஓரிஜினாலிடி இல்லை?" என்று கேட்டால், "நம்முடைய சொந்த மொழியில் விஞ்ஞானப் பொறியியல் நூல்களைப் படிக்காததன் காரணமாகத் தான் 'ஓரிஜினாலிடி' இல்லை" என்று மொழி வல்லுநர்கள் (Language Experts) அத்தனை பேரும் சொல்கிறார்கள். அதற்கு நான் வரவில்லை. நமக்கு ஆங்கில மோகம் அதிகமாக இருக் கிறது என்பது தான் இந்தத் திருத்தத்திலிருந்து தெரிகிறது. ஆகவே, தொடர்ந்து ஆங்கிலமே இந்த தேசத்தின் ஆட்சி மொழி யாக இருக்கவேண்டும் என்று ஒரு சிலர் சொல்கிறார்கள்.

MR. DEPUTY SPEAKER : The hon Member's time is up.

SRI A. P. C. VEERABAHU : Sir, I will finish my speech in a minute.

"பதினான்கு மொழிகளும் தேசிய மொழியாக இருக்க வேண்டும்" என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். பதினான்கு மொழிகளும் தேசிய மொழி ஆகப் போவதில்லை. ஆங்கிலமே நிரந்தரமாக தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்கிற கருத்துக்கு indirect support கொடுப்பதாகத்தான் அந்த வாதம் இருக்கிறது. ஆங்கிலம் நிரந்தரமாகக்கூட தமிழ்நாட்டில் இருக்கவேண்டும் என்று சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்தியா முழுமைக்கும் ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

* திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மொழிக் கொள்கையைப்பற்றி நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி காலத்தை நீண்ட நாட்களுக்கு நீட்டிக் கொண்டே சென்றேமானால், உண்மையிலேயே நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும், இன்னும் கிளர்ச்சிகள் ஏற்படு வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், எதிர்க் கட்சிக்காரர்கள் நம்முடைய பிற்கால சந்ததியினராகிய மாணவர்களுடைய எதிர் காலத்தை நினைக்காமல் ஏதோ 14 மொழிகளும் ஆட்சி மொழி யாக வரவேண்டும் என்ற வகையில் திருத்தம் கொடுத்திருக்கிறார் களென்றால், மாணவர்களுக்கு அது எந்த வகையிலாவது நன்மை பயக்கக்கூடியதாக இருக்குமா என்பதை அவர்கள் நன்றாக உணர் வார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்கள் ஹிந்தியை ஆட்சேபிக்கிறார்கள் என்றால், அதைப் படிப்பதிலே இருக்கும் கஷ்டங்களை உணர்ந்து, நீண்ட காலத்திற்கு ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையில் இன்னும் 14 மொழிகளும் ஆட்சி மொழியாக சட்டத்திலே இடம் பெறவேண்டும் என்று சொன்னால், அது எந்த வகையில் அவர்களைப் பாதிக்கும் என்பதை மாணவர்கள் நன்கு உணர்வார்கள் என்பதிலே கொஞ்சம்கூட சந்தேகப்பட வேண்டியதில்லை. ஒரு புதிய பாஷையைக் கற்றுக் கொள்வதென்றால் மாணவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்து கொண்டிருக்கிறது. பல மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியுமா என்பதிலே அவர்களுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதற்காகத் தான் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று அவர்கள் கருதிக்கொண்டி ருக்கக்கூடிய நேரத்தில், இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் நாம் வேறுபட்ட கருத்தை வைத்துக்கொண்டிருந்தோமானால், உண்மை யிலேயே நம்முடைய தேசீய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் வரும் என்பதிலே சந்தேகமே கிடையாது. பல கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள், டில்லியில் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமான எண்ணத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள் என்று. நான் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்—கூடிய விரைவில் நம்முடைய திட்டத்தை' நல்ல முறையில் நிறைவேற்றினால்தான் இந்தப் பிரச்னைக்கே இடமில்லாம லிருக்கும்.

அடுத்தபடியாக, முதல் அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் விவாதத்திற்குப் பதிலளிக்கக்கூடிய சமயத்தில், 'மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் ராஜினமா செய்தது அவ்வளவு நல்லது அல்ல' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்—உண்மையிலேயே அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கோயமுத்தூர் வந்தபோது நான் அவர்களைச் சந்திப் பதற்காகச் சென்றிருந்தேன். அப்பொழுது அங்கிருந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசும்போது, உண்மையிலேயே எனக்கெல்லாம் மிகவும் ஆச்சரியப்படுகின்ற முறையிலே ஒரு உணர்ச்சி வாஸ்தவமாகவே ஏற்பட்டது. யாராயிருந்தாலும், அந்தச் சமயத்தில் அந்த உணர்ச்சிதான் ஏற்பட்டிருக்கும்.





மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் ராஜினமா செய் திருக்கவில்லையென்றால், அன்று அங்கிருந்த அந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கவே முடியாது. இதை எதற்காகச் சொல் கிறேன் என்றால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கலவரங்கள் அடங்கினதற்குக் காரணம் மதிப்பிற்குரிய திரு சுப்பிரமணியம் என்பதை நாம் என்றும் மறக்கவே முடியாது. இன்று மத்திய சர்க்காரிலே ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நினைக்கின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. அளகேசன் அவர்களும் என்பதை நாம் என்றும் மறக்க முடியாத அளவிலே அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றும் அந்தச் சட்டத்தை அதி விரைவில் திருத்த வேண்டுமென்றால் அவர் போன்றவர்களுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அந்த நேரத்தில் தமிழகத்தின் பெருமையை இந்தியாவிலேயே நிலை நாட்டக்கூடிய வகையில் தைரியமாக அந்தக் காரியத்தைச் செய் திருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு மட்டும் அல்ல, இந்தியாவின் ஒற்றுமையை வளர்ப்பதிலேயே ஈடுபட்டிருக் கிறார்கள் என்று சொல்லவேண்டும். அவர்கள் அப்படிச் செய் ததன் காரணத்தினால்தான் மத்திய சர்க்காரிலே அந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசக்கூடிய நிலை வந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்னும் ஒன்று கூடச் சொல்கிறேன். கூடிய சீக்கிரத்தில் மத்திய சர்க்கார் ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தாமல் தட்டிக் கழிப்பார்கள் என்றால் இந்தச் சபையில் உள்ள அங்கத்தினர்கள் அனைவரும் இந்தச் சபையை விட்டு வெளியேறக்கூடிய நிலைமை வரும். கூடிய விரைவில் அவர்கள் ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தத் தவறுவார்களேயானால் இந்தச் சபையைவிட்டு வெளி யேற எல்லோரும் தயாராக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். வி கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கச் சார்பில் கொடுக்கப் பட்டிருக்கிற தீர்மானத்தின்மீது எங்கள் கட்சித் தலைவர் கொடுத் திருக்கிற திருத்தத்தையொட்டி இந்த மாமன்றத்தில் ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்றாலும் மத்திய சர்க்கார் ஆட்சி மொழிச் சட்டத்தை விரைவில் திருத்து வதற்குத் தவறுவார்களேயானால் இந்தச் சபையில் உள்ள அத்தனை பேர்களும் வெளியேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வெளியேற வேண்டும் என்று சொன்னது ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்ற கருத்தில்தான் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்]

நம்முடைய மாகாணத்தில் சென்ற மாதத்தில் 9, 10, 11, 12 தேதிகளில் நடந்த கிளர்ச்சியைப்பற்றிச் சிந்திக்கும்போது, உண்மையிலேயே மிகவும் வருத்தப்படக்கூடிய நிலைமையில் நான் இருந்தது. 12-ம் தேதியில் நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய மாகாணத்தில் இருக்கக்கூடிய கிளர்ச்சியை நல்ல முறையில் அடக்கியிருக்கின்றார்கள் என்றால், ஏன் அதை முதலாவதாகவே செய்திருக்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கு நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது இன்று இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசக்கூடிய கனம் அங்கத்தினர்கள் தெரிவித்த கருத்துக்களைப் பார்த்தால், உண்மையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் இந்த மொழிக் கொள்கையை பொறுத்த வரையிலும் நன்றாகச் சிந்தித்து, நம்முடைய நாட்டிலே அந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும் எந்த விதத்திலே நடைபெறுகிறது என்று யோசித்துச் செய்திருக்கின்றார்கள் என்று நான் சொல்ல வேண்டும்.

மதிப்பிற்குரிய எதிர்க் கட்சியிலிருக்கும் அங்கத்தினர் அவர்கள் நம்முடைய நாட்டின் தேசிய பாஷையாக 14 மொழிகளையும் கொண்டுவர வேண்டும் என்று அவர்களுடைய இருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சபையிலே இன்று நடக்கக்கூடிய விவாதத்தைப் பல கோடிக் கணக்கான மக்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், 1952-ம் ஆண்டிலே நாம் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசும்போது, நம்முடைய மாகாணத்தில் கிட்டத்தட்ட ஏழு சத விகிதத்தினர்தான்—மாணவர்கள்—படித்தவர்கள் இருந்தார்கள். ஆனால், தற்போது இந்தப் பிரச்னையிலே பின்னிருந்து பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்கள்—65 சத விகிதத்தினர்—படித்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்களுடைய பிற்கால வாழ்க்கை நல்ல முறையில் நடக்க வேண்டும் என்றால், இந்த மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில், இங்கிருக்கக்கூடிய அங்கத்தினர்கள் எல்லோரும், குறிப்பாக நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையிலும், நல்ல விதத்தில் இந்தப் பிரச்னை தீரவேண்டும் என்றால், இந்தச் சபையிலே இன்று விவாதிக்கக்கூடிய விஷயத்தில் ஏகமனதாக இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும், மத்திய சர்க்காரிலே இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இந்த சட்டசபையிலே இருக்கக்கூடியவர்கள் என்றுதான் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய மாகாணத்தினுடைய மொழிப் பிரச்னையைப் பொறுத்தும், தேசத்தினுடைய மொழிப் பிரச்னையைப் பொறுத்தும் நன்றாக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எடுத்துச் சொன்னாலும்கூட, அந்தப் பிரச்னைக்கு இப்போதே இந்தச் சபையிலிருக்கும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மூன்று விதமாகத்



திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இம்மாதிரி நம்முடைய மாகாணத்திலேயே, அதுவும் குறிப்பாக ஹிந்தியைப் பொறுத்த வரையில், நாம் மூன்று விதமான கொள்கையை வைத்துக்கொண்டிருந்தோமானால், உண்மையிலேயே மத்திய சர்க்காரிலே அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முடியாமற் போகலாம். ஆகவே, உடனடியாக இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் நம்மிடையே உள்ள ஒற்றுமையின்மை என்றுதான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தைக் கொண்டுவந்தால்தான் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எதிர்க் கட்சியில் இருக்கக் கூடியவர்கள், 14 மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு மொழியைப் படிக்கவே இவ்வளவு கஷ்டம் இருக்கிறதென்றால், மத்திய சர்க்காரில் வேலை வாய்ப்பு பெறவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் 14 மொழிகளையும் கற்று அங்கே போய் அவர்கள் நிர்வாகத்தை வகிக்க முடியுமா என்பதைத்தான் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க் கட்சி அங்கத்தினர் திரு. கணேசன் அவர்கள் ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே நாம் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் எப்படித் தமிழ் வளர்ச்சி அடைய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதே மாதிரி ஹிந்தியைக் கற்றுக் கொண்டிருக்கக் கூடியவர்கள் என்ன யோசிப்பார்கள் என்பதைத்தான் யோசித்துப் பார்க்க வேண்டும். இதை எதற்காக சொல்கிறேன் என்றால், உடனடியாக இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்றால், நம் தலைவர்கள் எல்லோரையும் கொண்ட ஒரு கமிட்டியாவது போட்டு, இந்த சபையிலே ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால்தான், கூடிய வரையில் இந்த மொழிப் பிரச்சினையை தீர்க்க நல்ல வாய்ப்பு இருக்கும். அதை விட்டுவிட்டு, ஏதோ வாதப் பிரதிவாதம் செய்து கொண்டு, தங்கள் தங்கள் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும் என்பதற்கான திட்டம் இருக்கிறதா என்று யோசித்துக்கொண்டிருந்தோமானால் உண்மையிலேயே நமக்குப் பின்னால் இருக்கும் சந்ததிகளுக்கு நாம் பாதகம் செய்து விடுகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது என்றுதான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, முதல் அமைச்சர் அவர்கள் மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இங்கே ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லையென்றால், மத்திய சர்க்காரிலே இது சம்பந்தமாக மேலும் கால தாமதம் ஆகும் என்பதிலே எனக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால், ஒன்று சொல்கிறேன். கூடிய விரைவில் ஏதாவது கால வரம்பு வைத்து, 'அங்கச் சட்டத்தைத் திருத்துவதற்கு முதல் அமைச்சர் அவர்கள்

இந்த முறையில், இந்தி வந்தால் தமிழ் கெடாது என்ற கருத்து எடுத்துக் கூறப்பட்டது. நிச்சயமாக நான் இந்தச் சமயத்தில் ஒன்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தி வந்தால் தமிழ் கெடாது என்கிறார்களே, கேரளத்தில் ஒரு காலத்தில் தமிழ் தானே இருந்தது; சம்ஸ்கிருதம் வந்த பிறகு அங்கே தமிழ் கெடவில்லையா? ஆந்திராவில் முதலில் தமிழ் தானே இருந்தது; சம்ஸ்கிருத கலப்புடைய தெலுங்கு வந்தவுடனே அங்கு தமிழ் கெடவில்லையா? இந்தி வந்தால் நம் மொழி எந்த மொழியாகுமோ தெரியாது. ஒரு மொழியின் ஆதிக்கத்தினால் இன்னொரு மொழி மாறாது, கெடாது என்று சொல்கிற வாதம் சிறந்த வாதமாக இருக்கமுடியாது.

அதே சந்தர்ப்பத்தில் இந்தி ஏன் பொது மொழியாக இருக்க வேண்டும் என்பதற்குச் சில காரணங்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டன. இந்தியாவின் ஒற்றுமைக்காக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அடுத்து காந்தியார் இந்தியாவின் பொதுமொழியாக இந்தி இருக்கவேண்டும் என்று சொன்னார், ஆகவே இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன், காந்தியார் இயந்திரத் தொழில்கள் கூடாது, கனரகத் தொழில்கள் கூடாது என்று சொன்னார்களே, இன்றைக்கு இந்தியாவில் அத்தனையும் குடிசைத் தொழில்களாகத் தான் இருக்கின்றனவா? கனரகத் தொழில்கள், இயந்திரத் தொழில்கள் ஏற்படுத்தப்படவில்லையா? குடிசைத்தொழில்கள் சம்பந்தப்பட்டவரை அவரது அறிவுரைகளை நாம் ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்துவிடவில்லையா? அப்படி இருக்க, 'அவர் சொன்னார், ஆகவே இந்தி பொதுமொழியாகத்தான் இருக்க வேண்டும்' என்ற வாதத்தை முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. ஆகவே அந்த வாதம் சற்றும் பொருந்தாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எந்த மொழி பேசுகின்றவர்களாக இருந்தாலும் அவரவர்களுக்கு அவரவர்களுடைய மொழி இந்தியப் பொதுமொழியாக வரவேண்டும், அகில இந்திய இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் எழுவது இயற்கை. அந்த எண்ணத்தில் வடக்கே உள்ளவர்கள் இந்திதான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். என்னைக் கேட்டால் நான் நிச்சயமாகச் சொல்வேன், இந்த மன்றத்தில் புலவர்கள் இருக்கிறார்கள்—இரண்டு கட்சியிலும் இருக்கிறார்கள்—தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றி, இலக்கணச் செறிவைப் பற்றி, இலக்கிய வளங்களைப் பற்றி பலமுறை எடுத்தும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி தொன்மையானதாகவும், இலக்கிய, இலக்கண வளம் உடையதாகவும் இருக்கிற நம்முடைய தமிழ் மொழியை ஏன் அகில இந்தியப் பொதுமொழியாக வைக்கக் கூடாது? இந்திக்காரர்களுக்கு ஆசை இருப்பதுபோல நமக்கு அத்தகைய ஆசை ஏன் இருக்கக்கூடாது? இதைச் சிந்தித்துப் பார்க்க



வேண்டும். எல்லாப் பிரதேச மொழிகளும் வளர்ச்சி அடைந்தாக வேண்டும், ஏற்றம் அடைய வேண்டும். ஆகவே அதுவரைதான் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்கட்டும். பதினான்கு மொழிகளுமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்கிற கருத்தை நாங்கள் சொல்கிறோம். ராஜ்ய சபையில் இந்த மாபெரும் கருத்தைத்தான் எங்கள் தலைவர் எடுத்துச் சொன்னார். அதை ஒரு சிலர் அறிந்தும் அறியாதவர்கள் போல, புரிந்தும் புரியாதவர்கள் போல—சாரத்தை விட்டுவிட்டு சக்கையைப் பற்றிக் கொண்டு, தும்பைவிட்டுவிட்டு வாலைப் பற்றிக் கொண்டு—இந்திப் பிரசார சபையில் மாலை போடுவார்களா என்று எதிர்பார்த்து அண்ணாதுரை இந்திப் பிரசாரம் செய்ய இறங்குகிறார் என்று கேலி செய்வது சரியல்ல. சாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள், சக்கையைப் பற்றாதீர்கள்; தும்பைப் பிடியுங்கள், வாலைப் பிடிக்காதீர்கள் என்பதாக அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** துணைத் தலைவர் அவர்களே, திரு. அண்ணாதுரை டெல்லியில் சொன்னது, "இந்தியைத் திணிப்பதை தமிழ் மக்கள் சார்பாக எதிர்க்கிறேன், இந்தியைத் திணிப்பது இல்லை என்று சொல்லுங்கள், திராவிட முன்னேற்றக்கழகத்தினர்களே இந்திப் பிரசாரம் செய்யத் தயாராய் இருக்கிறார்கள்" என்பதுதான். இந்தி வருவதால் தமிழ் கெடும் என்றால் இப்படி இந்திப் பிரசாரம் செய்ய இவர்கள் முன் வந்தால் மட்டும் தமிழ் கெடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உறுப்பினர் இப்படிக் குறுக்கிட்டு கேள்வி கேட்பதால் ஒன்றும் பிரச்னை தீராது. இது பேசித் தீர்க்கக்கூடியதாக இல்லை. இதற்கெல்லாம் கேள்விக்கு மேல் கேள்வி போட்டால் ஓரளவு குழப்பம்தான் ஏற்படும். ஆகவே கனம் தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் கேள்வி போடுவதால் ஒன்றும் பயன் இல்லை என்று சொல்கிறேன். அனாவசியமாக காலத்தை கனம் உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** துணைத் தலைவர் அவர்களே, வடநாட்டில் உள்ளவர்கள் தென்னாட்டில் உள்ள தமிழ், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம் ஆகிய மொழியைச் சரளமாகப் பேச, எழுதக் கற்றுக் கொண்டால் தென்னாட்டில் உள்ளவர்களும் இந்தி மொழியைச் சரளமாகப் பேச, எழுதப் பயிலலாம். அப்படியின்றி ஒரு மொழியை மற்ற மொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பது என்பது கூடாது. மொழிகளை அதனதன் போக்கில் வளர்ச்சி அடைய விடவேண்டும், ஒரு மொழி இன்னொரு மொழி மீது ஆட்சி செலுத்தக் கூடாது என்பதைத்தான் எங்கள் தலைவர் திட்டவட்டமாக எடுத்துச் சொல்கிறார்கள். அதுதான் சாரம், அதுதான் தும்பு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சந்தர்ப்பத்தில் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது மொழிக் கிளர்ச்சிகளின் காரணமாக, மொழிப் போராட்டத்தின் காரணமாக, தமிழகத்தில் விழுந்த பிணங்களால் மட்டும் முதல் அமைச்சர்கள் மகாநாடு கூடவில்லை, எற்கனவேயே கூடுவதற்குத் திட்டமிட்டிருந்தோம், அதன்படி கூடினோம் என்பதாகச் சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், முதல் அமைச்சர் அவர்கள் இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை வற்புறுத்தப் போவதாக டெல்லி சலோ, டெல்லி சலோ என்று சொல்லிக்கொண்டு கிளம்பினார்களே அந்த இருமொழிக் கொள்கையைப் பதினைந்து நாட்களுக்கு முன் சொல்லியிருந்தால், இத்தனை அமளிகள் நாட்டில் ஏற்பட்டிருக்க இடம் இருந்திருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதலில் இருந்தே அதுபற்றித் தான் நான் சொன்னேன். டெல்லியிலும் அதைப்பற்றிப் பேசினோம் என்று சொன்னேன். வேறு ஒன்றும் வித்தியாசமாகச் சொல்லவில்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** ஆங்கிலம் தொடர்ந்து நீடித்து இருக்கவேண்டும். இந்தி மொழியோடு ஆங்கிலமும் தொடர்ந்து எத்தனை காலம் வரையில் இருக்கவேண்டும் என்று ஒரு ராஜ்யம் விரும்புகிறதோ அதுவரையில் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதாகப் போராட்டங்களுக்குப் பின்னால் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்குப் பதிலாகப் போராட்டங்களுக்கு முன்னால் அறிவித்திருந்தால் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எப்போதும் சொல்லிக்கொண்டு வருகிறேன். புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இந்த இரு மொழிக் கொள்கையையே போராட்டத்திற்குப் பின்னால் வலியுறுத்தினார்களே தவிர முதலில் எல்லாம் மும்மொழிக் கொள்கையைத்தான் வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** படிப்பதற்கு—கல்வியைப் பொறுத்தவரையில்தான் மும்மொழிக் கொள்கை. நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் இரு மொழிக் கொள்கைதான். அதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இந்தி பேசாத, இந்தி பேசுகின்ற, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் ஆங்கிலம் வேண்டாம் என்று தீர்மானிக்கின்ற வரையில் ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும், ஒரு மாநிலம் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும், இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்றால் ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும் நமது முதல் அமைச்சர் சொல்லவில்லை. கிளர்ச்சிக்குப்பின் தான் இந்த கருத்தை வெளியிட்டார்கள். மூன்று மொழிக்கொள்கையைத்தான் வற்புறுத்திக்



கொண்டு வந்தார்கள். இந்தக் கிளர்ச்சிக்குப் பின்னால்தான் நிரந்தர இருமொழிக் கொள்கை என்பதை விளக்கமாக வெளியிட்டார்கள் என்பதை நான் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சிமொழிச் சட்டப் பிரிவின் கருத்துக்களை நான் இந்த மன்றத்தின் முன்னால் எடுத்துவைக்க ஆசைப்படுகிறேன். 3-வது பிரிவிலே 'இந்தியுடன் ஆங்கிலம் தொடர்ந்து 15 ஆண்டுகள் இருக்கலாம்' என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் 10 ஆண்டுகள் கழித்து பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தீர்மானமொன்று கொண்டுவரப்படும், குழுவொன்று அதற்காக நியமிக்கப்பட வேண்டும் என்று 4-வது பிரிவிலே கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் உடனடியாக ராஜ்ய சபையிலோ அல்லது மக்கள் சபையிலோ கொண்டுவர முடியுமா என்று கேட்டால் முடியாது என்று தான் நிச்சயமாகச் சொல்ல முடியும். அப்படிச் செய்யவேண்டுமென்றால் ஜனாதிபதியினுடைய முன் அங்கீகாரம், 'பிரீவியஸ் சாங்ஷன் ஆப் தி பிரெஸிடெண்ட்' வேண்டும். ஜனாதிபதியினுடைய அனுமதி கிடைக்கவில்லையென்றால் ராஜ்ய சபையோ அல்லது மக்கள் சபையோ ஆட்சிமொழிக் குழுவொன்றை அமைப்பதற்கு அதிகாரம் இல்லை. ஆகவே, ஜனாதிபதி இந்தி பேசுகின்ற பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலையில் இருந்தால் அந்த நிலைகூட வந்திருக்காது என்று கருதுகிறேன். ஒன்றே ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆட்சிமொழிச் சட்டத்தின் 7-வது பிரிவு ஹைகோர்ட் தீர்ப்புகள், உத்திரவுகள் எல்லாம் பிராந்திய மொழிகளிலே இருக்கலாம் என்று கூறுகிறது. ஆனால் அந்த மாநிலத்தினுடைய கவர்னர் விரும்பினால், ஜனாதிபதியினுடைய அங்கீகாரத்தைப் பெற்று இந்தியிலும் ஹைகோர்ட்டுகள் தீர்ப்புகள், உத்திரவுகள் வழங்கலாம் என்று சொல்லப்படுகிறது. மாநில சர்க்கார் இருக்கும் பொழுது கவர்னர் அவர்கள் இந்தியில் ஹைகோர்ட்டுகள் நடவடிக்கைகள் எடுக்க, மற்றக் கட்டளைகள் போட, ஜட்ஜ்மெண்ட் கொடுக்க ஜனாதிபதியினுடைய முன் அங்கீகாரத்துடன் செய்யலாம் என்கின்ற அளவுக்கு . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜனநாயகத்திலே நடைமுறையிலே அந்த மாநில ஆட்சி ஒப்புக்கொள்ளாவிட்டால் கவர்னர் எந்த வகையிலும் சிபாரிசு செய்ய முடியாது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** அது சம்பிரதாயமேயொழிய அரசியலமைப்புச் சட்டத்தில் அந்த மாதிரி கிடையாது. வேண்டுமானால் அண்மையிலே கேரளாவில் என்ன நடந்தது என்பதைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மொழி ஒரு சிக்கலான விஷயம். அதிகமான சிக்கலை நம்முடைய தென்னகத்திலே அது கொண்டுவந்து விட்டது.

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [31st March 1965

நாட்டுக்கு ஒரு பொது மொழி, அதாவது, இந்தி வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னைதான் பிரதானமானது. இன்றைக்கு அதைப்பற்றிப் பேசும்பொழுது, நாட்டிலேயுள்ள 14 மொழிகளும் நன்கு வளரவேண்டும், அப்படி வளரும்வரை ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று ஒரு சாரார் சொல்கிறார்கள். இன்னொரு சாரார் எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த நாட்டிலே வளமற்ற, வரலாறற்ற இந்திமொழி இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வரவேண்டும்.

கிளர்ச்சி நடந்த காலத்தில், அது தமிழைக் காப்பாற்ற நடந்ததா அல்லது இந்தியினால் வரக்கூடியக் கெடுதல்களை அகற்றுவதற்காக நடந்ததா என்பதையெல்லாம் முதலிலே நாம் ஆலோசிக்க வேண்டும். தமிழைக் காப்பதற்கென்று இந்தி எதிர்ப்பு நடக்கவேண்டிய அவசியம் இல்லை. தமிழ் நன்றாக வளர்ந்துவிட்டது. இனி அது வளரவேண்டுமென்பதில்லை. தமிழின்மேல் உள்ள ஆர்வத்தால் தமிழ் நன்றாக வளர்ந்துவிட்டது. வாழையானது நன்றாக முற்றிக் குலை தள்ளிக் காய்ந்துவிடுவதுபோல, தமிழும் பூரண வளர்ச்சியடைந்து இப்பொழுது சற்று நிலை குலைந்து வருகிறது என்பது புலப்படும். புலவர்கள் தமிழின் சிறப்பைப் பலவிதமாகக் கூறுகிறார்கள். 'ழ' என்ற எழுத்து மிகவும் விசேஷமான எழுத்து. பல்லைத் தொட்டால் 'ல' என்றும், முகட்டைத் தொட்டால் 'ள' என்றும், சற்று வளைந்துகொடுத்தால் 'ழ' என்றும் தமிழிலே இருக்கும் இந்த மூன்று உச்சரிப்புகளும் தமிழுக்கே உரித்தானது என்பதை அறிவோம். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அகராதியை எழுதப் புறப்படுவார்களானால், உலகம் என்ற சொல்லைக் கொடுத்து அதற்கு முன்னால் உளகம் என்று சொல்லப்பட்ட பொருள் நிலப் பரப்பு என்று எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். ஆகவே, தமிழை வளர்ப்பதற்கு இந்தி எவ்விதத்திலும் இடையூறாக இருக்காதென்பதை உணர்ந்திருக்கிறோம். 14 மொழிகளையும் வைத்துக்கொள்ளவேண்டும், பின்பு அவைகளில் எந்த மொழி நல்லமொழியாக இருக்கிறதோ அதை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு அப்பாற்பட்டது. தமிழானது சுலபமாக எல்லோராலும் படிக்கக்கூடிய ஒரு மொழியல்ல. நம்முடைய தமிழ் மொழியிலிருந்து பிரிந்த கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் இப்பொழுது இருக்கின்ற நிலையைப் பார்த்தால் அவையெல்லாம் தமிழ் மொழியிலிருந்து பிரிந்துபோன மொழிகள்தானா என்று சந்தேகப்படக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மொழியும் வளர்ந்துகொண்டே வருகின்ற நிலை இருக்கும்பொழுது, தமிழைப்பற்றி நாம் கவலைப் பட வேண்டியதில்லை. இந்திக்கு எதிராக மக்களைத் தூண்டுகிற காலத்திலே, இந்தியினால் உத்தியோக விஷயங்கள் பாதிக்கப்படும் என்று உண்மையைச் சொன்னால் அது ஒப்புக்கொள்ளப்படுகின்ற நியாயமான வாதமாக இருக்கும். அப்படியில்லாமல் இந்தியே கூடாது என்று சொல்வது ஒப்புக்கொள்ளக் கூடியதுதானா



31st March 1965] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விஜயவாடாவுக்கு வடக்கே போகப்போக உள்ள இடங்களில் எல்லாம் இந்தி தான் பேசப்படுகின்றது. இந்தியைத் தவிர வேறெந்த பாஷையும் பேசப் படுவதில்லை. தமிழ்மொழியைத் தவிர, மற்ற மொழிகள் சமஸ்கிருத மொழியையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நமது நாட்டில் உள்ள பெரும்பாலான மொழிகள் எல்லாம் சமஸ்கிருத லிபியிலேயே இருக்கின்ற காரணத்தால் இந்தியைப் படிக்கும் பொழுது சுலபமாக அதைக் கற்றுக்கொள்ளமுடியும். அப்பொழுது நாட்டிலுள்ள மற்றவர்கள் எல்லோரும் சுலபமாக இந்தியைக் கற்றுக்கொண்டுவிட்டால் நாம் மட்டும் மிகமிகப் பின்தங்கிய நிலையில் இருப்போம் என்பதில் சந்தேகமே இல்லை. இப்பொழுது இந்தி ஆட்சிமொழியாக இருக்கிறது. அது ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று நாம் எல்லோரும் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, உண்மையை மறைத்துப் பேசுவதினால் எந்தவிதமான உபயோகமும் இல்லை. இந்தி ஆட்சிமொழியாக வந்ததற்குப் பிறகு அதன்மூலமாக அது பரீட்சாகர மொழியாக வந்துவிட்டால் அதனால் தமிழ்நாட்டில் உள்ள இந்தி தெரியாத மக்களுக்கு உத்தியோக விஷயத்தில் பாதகமேற்படுமென்றால் அதை வேண்டுமானால் சொல்லலாமே ஒழிய உண்மையையே மறைத்துப் பேசக்கூடாது. கட்சித் தலைவர்கள் எல்லாம் நாட்டுமக்களுக்கு உண்மையைத்தான் எடுத்துச்சொல்லவேண்டும். நாட்டில் இந்தி வந்துவிட்டது, வந்துவிட்டது என்று ஒரு ஆவேசத்தை நாட்டு மக்களிடையே எழுப்பிக்கொண்டிருப்பது முறைதானா என்பதைத் தலைவர்கள் சிந்தித்து பார்க்கவேண்டும். இந்தி ஆட்சிமொழியாக வரப்போகிறது. மற்ற மொழிகள் வளரும்வரைதான் ஆங்கிலம் இருக்கப்போகிறது. எப்படியோ மறைமுகமாக இந்தி வரப் போகிறது என்பதை எல்லோரும் உணர்ந்து ஒப்புக்கொள்ளத் தான் செய்கிறார்கள் என்பது நமக்குப் புலப்படுகிறது. ஆனால், நாட்டிலே அதை எல்லோரும் படிக்கவேண்டுமென்பதற்காக 20 அல்லது 30 வருஷங்கள் வரையறை வைத்து அந்தக் காலத்திற்குள் இந்தியை ஆட்சிமொழியாக்கி அதன் மூலம் உத்தியோக விஷயங்கள் கவனிக்கப்படும் என்று முறையில்லாமல் இருந்தால் அதைப்பற்றிச் சொன்னால் அதில் நேர்மை இருக்கிறது. நேர்மையான முறையில்தான் நம்முடைய வாதத்தைக் கொண்டுபோக வேண்டுமே தவிர, இந்தி வந்துவிடும் என்று நமக்குத் தோன்றியும் கூட இந்தி வராது என்று மற்றவர்களுக்குச் சொல்லிக்கொண் டிருப்பதில் எந்தவிதமான பலனும், பிரயோஜனமும் இல்லை. ஆகவே செய்ய வேண்டிய முதற்கடமை என்னவென்றால் இந்தி ஆட்சிமொழியாக வரத்தான் போகிறது, நீங்கள் எல்லோரும் இந்தியைப் படித்து தயாராகும் வரையில் உங்களுக்கு பாதகம் ஒன்றுமில்லை என்று உள்ளதைச் சொல்லி, உள்ளதைச் சொல் வதைப் போலவே எழுத்தும் பேச்சும் இருந்தால் மாணவர் களுக்குச் சமாதானம் ஏற்படும், ஐயப்பாடும் நீங்கும். அப்படி யில்லாமல், இந்தியை எதிர்த்துப்பேசி, ஆங்கிலமே நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, ஒரு பக்கம் உள்ளத்திலே இந்தி வரத்தானே போகிறது, ஆனால் கூடுமானவரை

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [31st March 1965

தள்ளிவிடலாம் என்று ஒப்புக்காகப் பேசிக்கொண்டிருக்கலாம் என்ற நிலையை வைத்துக்கொண்டிருந்தால் அது மாணவர்களை ஏமாற்றுவது ஆகும். ஆனால் அப்படி வெகுநாட்களுக்கு ஏமாற்றிக்கொண்டு செல்லமுடியாது என்பதையும் நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தி நிச்சயமாக வரப்போகிறது. நம்முடைய நாட்டிலே கட்டாயப்பாடமாகப் படிக்கவேண்டுமென்ற நிலைமை இல்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான் பிரச்சினை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மும்மொழித் திட்டத்தை வைக்கும்போது இந்தியை இஷ்டப்பாடமாகப் படிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மற்றவர்கள் இந்தியைக் கட்டாயமாக வைக்கக்கூடாது என்ற காரணத்தால்தான் இந்தியைக் கட்டாயமாக வைக்கவில்லை. இல்லாவிட்டால் இந்தியைக் கட்டாயப் பாடமாக வைத்திருக்கலாம். தமிழகத்தில் லட்சோப லட்சம் மக்கள் இந்தி படித்து வருகிறார்கள். இந்தியிலே பண்டிதர்களாகக் கூட இருக்கிறார்கள் என்பதையும் மறந்து விடுகிறோம். தமிழுக்கு ஆபத்து வந்து விடும் எந்த நிலைமையும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி வரத்தான் போகிறது, இந்தியை வரவேற்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

1-30 p.m.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Rules and Orders

* 176. *Notification issued with G.O. Ms. No. 89, Rural Development and Local Administration, dated 12th January 1965, appointing certain persons to be the Members of the Courtallam Township Committee for a period of three years with effect from the date of publication of this notification in the* Fort St. George Gazette. *[Laid on the Table of the House under section 4 (3) of the Courtallam Township Act, 1964 (Madras Act XVI of 1964).]*

177. *Notification issued with G.O. Ms. No. 3983, Home, dated 22nd December 1964, directing the tax payable in respect of the Tata Mercedes-Benz van belonging to Messrs. Tata Engineering and Locomotive Company, Limited, Madras, be reduced by 50 per cent so long as the said vehicle is used for the purpose of demonstration only. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

178. *Notification issued with G.O. Ms. No. 3720, Home, dated 30th November 1964, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to the vehicle bearing registration number MDR 4376, belong-*

* Circulated to Members on 29th March 1965.



31st March 1965]

*ing to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Ramanathapuram. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

179. *Notification issued with G.O. Ms. No. 355, Rural Development and Local Administration, dated 17th February 1965 appointing with effect on and from 17th February 1965. Sri K. Diraviam, I.A.S., Joint Development Commissioner and Ex-officio Joint Secretary to Government, Rural Development and Local Administration Department, as a member of the Madras State Bhoodan Yagna Board. [Laid on the Table of the House under section 28 (3) of the Madras Bhoodan Yagna Act, 1958 (Madras Act XV of 1958).]*

### B.—Reports, Notifications and other papers.

* 105. *The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 40 of 1964) with annexure containing the Amendments made by the Legislative Council on 25th March 1965.*

* 106. *The Madras Public Buildings (Licencing) Bill, 1964, (L.A. Bill No. 31 of 1964), with annexure containing the Amendments made by the Legislative Council on 25th March 1965.*

* 107. *The Madras Appropriation (No. 3) Bill, 1965 (L.A. Bill No. 9 of 1965).*

108. *List of Unstarred Questions and Answers from Nos. 41 to 61.*

† 109. *Sixth Report (Third Assembly) of the Committee on Government Assurances.*

110. *First Report of the Committee on Estimates (1964-65) on the action taken by the Government on the recommendation of the Committee contained in the Report on Fisheries Department.*

* Circulated to Members on 29th March 1965.

† Laid on the Table of the House on 30th March 1965.

## APPENDIX I.

(*Vide* answer to starred question No. 377 at page 547)

The National Development Council at its meeting held in November 1963, considered the mid-term appraisal of Third Five-Year Plan and made recommendations which were applicable to all States in general. This House has already made a similar mid-term review of the State's Third Five Year-Plan. This review as well as the details on the progress of the plan furnished subsequently in Budget Speeches will clearly show that the implementation of the Plan is quite satisfactory in this State, and the Plan will be overfulfilled both in physical and financial terms in several sectors.

The important recommendations of the National Development Council and the action taken thereon so far as they are applicable to this State are set out below :

| *Recommendations.* (1) | *Action taken.* (2) |
|---|---|
| 1 The highest priority should be given to agriculture, for, a suitable and progressive agricultural economy constitutes the essential foundation even for the growth of industry. | A very important place has been assigned in all our plans to the augmentation of agricultural production. The Third Plan target for additional food production potential is likely to be achieved under all items except fertilisers where against the targetted quantity of 5·83 lakh tonnes of Nitrogenous fertilisers (in terms of Ammonium Sulphate), we may be able to get only 4 lakh tonnes of Ammonium Sulphate, by the end of the Plan period. It is expected that the actual production in the last year of the Plan period will be of the order of 65 lakh tonnes, representing an increase of 12 lakh tonnes over the level at the commencement of the Third Plan. |
| | The pace of execution of agricultural programmes has been appreciably accelerated and larger financial provision made in the Plans as will be seen from the figures furnished in the Plan documents placed along with the Budget papers on the table of the House. |
| 2 In areas with irrigation and assured rainfall and specially in areas selected for intensive development, concentrated efforts should be made to secure rapid increase in production. | In areas where there are irrigation facilities and assured rainfall, package and intensive cultivation programme have been launched to step up production. A package scheme was introduced in 1960–61 with a view to undertake intensive agricultural development in Thanjavur District. The scheme covered 65 per cent of the total cultivated area in 24 blocks and 30 per cent in the three blocks of Avudayarkoil, Peravurani and Tiruvonam and 40 per cent of the area in Vedaranyam block. The total area covered was 6·92 lakhs acres. Entire area will be |



| *Recommendations.* (1) | *Action taken.* (2) |
|---|---|
| | covered in 1965–66. Besides, an intensive cultivation scheme was introduced in nine selected districts, In these areas, arrangements have been made to stock adequate quantity of fertilisers and mixtures within the easy reach of the farmers. Credit facilities have also been provided to enable the farmers to purchase and apply adequate quantity of fertilisers and mixtures for the food and non-food crops. |
| | Similar package programmes have been introduced also for commercial crops like cotton, groundnut and tobacco in select tracts of the State. |
| 3 Special attention should be given to extension work at the level of the village, efficient arrangements for supplies and technical advice, provision of credit, introduction of improved implements and machinery and strengthening of co-operative movement. Increasing use should be made of institutions engaged in Agricultural research, education and training and of progressive farmers in developing extension activities. | This recommendation has been kept in view and agricultural programmes depending for their success on people's participation have been entrusted to Panchayat Unions and provision of Rs. 2 lakhs each has been placed at their disposal. |
| | The Co-operative movement has also been considerably strengthened and the credit provided by co-operatives has increased from Rs. 26 crores at the commencement of the Third Plan to Rs. 47 crores in 1964–65. |
| 4 During the next two years, Minor Irrigation Programmes should be expanded to the extent possible and from this aspect, facilities for the extension of rural electrification should also be developed. | The Minor Irrigation Programme is being implemented vigorously. A drive for the sinking of large number of wells has been launched and the upper limit of loan sanctioned per well under the New Well Subsidy Scheme has been raised from Rs. 2,000 to 5,000. Our original target for Third Plan was 6,000 wells. As against this, 16,600 wells are expected to be sunk during the Plan period. 2,250 filter point wells are expected to be completed against the Plan target of 1,500. Apart from this, the Government have also sanctioned a special scheme at a cost of Rs. 37 lakhs for sinking 2,000 filter point tube wells in Thanjavur district with a view to enable the ryots to raise an additional crop during the summer. The outlay on all the Minor Irrigation schemes will go up to about Rs. 19 crores during the Plan period as against the original provision of Rs. 12·8 crores only. |
| | Use of electricity for agricultural pumpsets has been very popular in this State. 9,000 towns, villages and hamlets would have been electrified during the Plan period as against the target of 8,000 and the number of agricultural pumpsets worked by electric power would increase from 1·18 lakhs to 2·3 lakhs during the Plan period, i.e. by 1·12 lakhs which is substantially in excess of the target of 75,000 |

[31st March 1965

| Recommendations. (1) | Action taken. (2) |
|---|---|
| 5 There should be efficient arrangements for the distribution of fertilisers, as far as possible through co-operatives and the necessary credit should be assured and at the same time, effective action should be taken to implement the programmes for composing and green manuring. | Fertilisers are distributed in this State as far as possible only through Co-operatives. In fact the Co-operatives had a monopoly till recently when as an experimental measure private trade has also been associated in select areas. The consumption of fertilisers has increased appreciably in the current Plan period. The targets in respect of composting and green manuring are being realised according to schedule. |
| 6 The implementation of the land reform programmes should be completed before the end of the Third Plan. | The following Acts relating to Land Reform have been enacted:— 1. Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963; 2. The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963; 3. The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963; 4. The Madras Inam (Supplementary) Act, 1963; 5. The Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964; 6. The Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1964; 7. The Madras (Transferred Territory) Thirupuvaram Payment Abolition Act, 1964; 8. The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Act, 1964; A Bill for making the Madras Cultivating Tenants Protection Act, 1955, permanent has been passed by the Legislature. |
| 7 Every effort should be made to speed up the completion of irrigation and power projects likely to yield early benefits. | The irrigation projects and power projects are making satisfactory progress. The Aliyar reservoir, one of the important dams in the chain of dams visualised under Parambikulam —Aliyar Project, has already been completed and water made available for irrigation of 17,500 acres. In 1965–66, the Parambikulam, Tunacadavu and Tirumurthi Dams will also be completed along with the connected works like the Sarkarpathi Tunnel and the Contour canal. With the provision of Rs. 556 lakhs for the project in 1965–66, an additional irrigation potential for about 60,000 acres will be created. A provision of Rs. 258 lakhs has been made for other medium irrigation projects with a view to ensure completion of (i) the scheme relating to remodelling of Palar Anicut and channels; (ii) Sathanur Project II Stage; (iii) Gomukhi Nadhi and (iv) Manjalar schemes. |



31st March 1965]

| Recommendations. (1) | Action taken. (2) |
|---|---|
| | The outlay on power programmes in the current Plan period is expected to be over Rs. 120 crores against the original target of Rs. 100 crores. As against the Third Plan target of 1040 MW of power, the Madras State Electricity Board will have an installed capacity of 1150 MW. With the 400 MW of power to be commissioned at Neyveli, the installed capacity in the State will be 1550 MW as against only 570 MW at the commencement of the Third Plan. |
| 8 Adequate provisions should be ensured for the continuance of the National Malaria Eradication Programme and its maintenance phase in the annual plans of States. | The Malaria Eradication Programme is being continued and sufficient allocations are being made every year in the State Plan. The active and passive surveillance operations are continued in all the unit areas. Fifteen units have entered the maintenance phase on 1st January 1965 while the remaining units may enter the maintenance phase during the course of 1965. Arrangements for implementing the maintenance phase of the programme has also been provided for, through a set-up centering round the Primary Health Centres. In order to cover the areas coming under maintenance phase 120 Primary Health Centres have been ordered to be opened in 1964–65. |
| 9 Elementary needs of the people such as supply of drinking water in rural areas and urgent social problems like slums and unsatisfactory living conditions should receive special consideration in carrying out development plans. | In this State, Rural Water-Supply schemes are executed by the Panchayat Unions with the Village Works Grants given to them along with the contribution from the beneficiaries. A sum of Rs. 508·82 lakhs (Rs. 473·51 lakhs for Rural Water-Supply Schemes and Rs. 35·31 lakhs for National Water-Supply schemes) would have been spent during the first four years of the Third Plan period for providing water-supply in rural areas. Besides an expenditure of Rs. 610 lakhs is likely to be incurred under Urban Water Supply Schemes. The Third Plan provision for slum improvement, viz. Rs. 300 lakhs will be fully utilised. |
| 10 Specific measures should be taken to improve machinery for planning, raise the levels of administrative efficiency and strengthen the implementation of development programmes in different sectors. | The Planning and Development organisation in the Madras State functions as a wing of the Finance Department. The organisation attends to preparation of Annual Plans, quarterly and Annual reviews of the Progress in the implementation of the various Plan Schemes, compilation of quartetly statements of expenditure and finalisation of claims for release of Central assistance. Problems of co-ordination between different departments are being discussed at periodical meetings of Departmental Officers concerned. A close review of the progress of Plan |

[31st March 1965

| *Recommendations.* | *Action taken.* |
| --- | --- |
| (1) | (2) |
| | Schemes is being done every quarter by the State Development Committee which is the Chief Agency in regard to Planning and Development in this State. Remedial measures are proposed and decided at the meetings. Difficulties in implementing the schemes are also brought to light during these meetings and solutions are suggested and decisions taken by the Committee after full discussion. These arrangements have proved adequate so far as this State is concerned. |

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டம் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால ஆய்வைப் பற்றி ஆலோசித்து, பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும் பொருத்தமான சில பரிவுரைகளைச் செய்தது. இதைப் போன்றே, இம் மாநிலத்தின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால ஆய்வை இச்சபை ஏற்கெனவே செய்துள்ளது. இந்த ஆய்வின் மூலமும் வரவு—செலவுத் திட்ட உரையில் பின்னர், திட்ட முன்னேற்றம் குறித்து கொடுத்துள்ள விவரங்களின் மூலமும், இம்மாநிலத்தில் திட்டம் மிகவும் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டு வருவதையும், பல துறைகளில் திட்ட இலக்குகளும் நிதி இலக்குகளும் எதிர்பார்த்ததற்கு மேலாகவே சாதிக்கப்பட்டுவிடும் என்பதையும் தெளிவாகக் காட்டும்.

இம் மாநிலத்திற்குச் சம்பந்தப்படுகிற வரையில் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் செய்த முக்கியமான பரிவுரைகளும், அவற்றின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| பரிவுரைகள். | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. |
| --- | --- |
| 1 முற்போக்கான தகுந்ததொரு வேளாண்மைப் பொருளாதாரம் தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாத அடிப்படையாக அமையுமாதலால் வேளாண்மைக்கு மிகமிக முதன்மையிடம் அளிக்க வேண்டும். | வேளாண்மை உற்பத்தி அதிகரிப்புக்கு நமது திட்டங்கள் அனைத்திலும் மிக முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. உர வகைகள் நீங்கலாக, மற்றெல்லா இனங்களின் கீழும் கூடுதல் உணவு உற்பத்தித்திறன் விஷயமாக மூன்றுவது திட்ட இலக்கினை நாம் சாதித்துவிடுவோம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உரவகைகளைப் பொறுத்தமட்டில், 5·83 லட்சம் மெட்ரிக் டன் நைட்ரஜன் உரம் (அம்மோனியம் சல்பேட்) பயன்படுத்தப்பட வேண்டும் என்ற திட்ட இலக்குக்கெதிராக மூன்றுவது திட்ட முடிவிற்குள் 4 லட்சம் மெட்ரிக் டன்கள் அமோனியம் சல்பேட் உரத்தைத் தான் பயன் படுத்த முடியுமெனத் தோன்றுகிறது. திட்டக்கால அளவின் கடைசி ஆண்டில் சுமார் 65 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது மூன்றுவது திட்டத் தொடக்கத்தில் இருந்த அளவைக் காட்டிலும் 12 லட்சம் மெட்ரிக் டன் உயர்ந்திருப்பதைக் காட்டுகிறது. |



31st March 1965]

| பரிவுரைகள். | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| | வேளாண்மைத் திட்டங்கள் நிறைவேறும் வேகம் வெகுவாய் அதிகரிசகப்பட்டுள்ளது. திட்ட வேலைகளில் இதற்கென அதிக நிதி ஒதுக்கம் செய்திருக்கிறது. இச்சபையில் பட்ஜெட் வெளியீடுகளுடன் வைக்கப்பட்டுள்ள திட்ட ஏடுகளில் கொடுத்துள்ள புள்ளி விவரங்களின் மூலம் இதை அறியலாம். |
| பாசன வசதியும், உறுதியான மழையும் உள்ள பகுதிகளில் முக்கியமாக, மும்முர அபிவிருத்திக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில், உற்பத்தி விரைவில் அதிகரிக்கத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். | பாசன வசதியும் உறுதியான மழை வசதியும் உள்ள பகுதிகளில் உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டு தீவிரச் சாகுபடித் திட்டங்கள், மும்முரச் சாகுபடித் திட்டங்கள் இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மும்முர வேளாண்மை அபிவிருத்தி முறைகளை மேற்கொள்வதாக 1960–61-ல் ஒரு தீவிரச் சாகுபடித் திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டது. 24 அபிவிருத்தி வட்டாரங்களில் மொத்தச் சாகுபடிப் பரப்பளவில் 65 சதவீதப் பரப்பிலும் ஆவுடையார் கோயில், பேராவூரணி, திருவோணம் ஆகிய மூன்று அபிவிருத்தி வட்டாரங்களில் 30 சதவீதப் பரப்பிலும், வேதாரண்யம் வட்டாரத்தில் 40 சதவீதப் பரப்பிலும் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மொத்தத்தில் 6·92 லட்சம் ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1965–66-ல மாவட்டம் முழுவதிலும் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும். அத்துடன், தீவிரச் சாகுபடித் திட்டம் ஒன்று தெரிந்தெடுத்த 9 மாவட்டங்களில் கொண்டுவரப்பட்டது. இப்பகுதிகளில், குடியானவர்களுக்கு உரங்கள் எளிதில் கிடைக்கும் விதத்தில் போதிய அளவு உரங்களையும் உரக்கலவைகளையும் சேர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உணவுத் தானியப் பயிர்களுக்கும் மற்றப் பயிர்களுக்கும், போதிய அளவு உரங்களையும் உரக் கலவைகளையும் பயன்படுத்த குடியானவர்களுக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன, பருத்தி, நிலக்கடலை, புகையிலை போன்ற வாணிபப் பயிர்களுக்காகவும் அதே போன்ற தீவிரச் சாகு |

| பரிவுரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| | படித் திட்டங்கள் இம்மாநிலத்தின் தெரிந்தெடுத்த பகுதிகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. |
| 3 கிராம அளவில் வேளாண்மை அபிவிருத்தி வேலை, தொழில் நுட்ப ஆலோசனையையும் பொருள்களையும் வழங்கல், கடன் வசதி செய்தல், நவீன வேளாண்மைக் கருவிகளையும் இயந்திரங்களையும் பயன் படுத்தல், கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிலையங்களை அதிக அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வேளாண்மை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள முற்போக்கு எண்ணமுள்ள குடியானவர்களை மேன்மேலும் இத்துறையில் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். | இந்தப் பரிவுரையைக் கருத்தில் கொண்டு, மக்களுடைய ஒத்துழைப்பினால் வெற்றியடைய வேண்டிய வேளாண்மைத் திட்டங்கள், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கென ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூபாய் 2 லட்சம் நிதிவசதி கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கமும் கணிசமான அளவுக்கு வலுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடனின் அளவு மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் 26 கோடி ரூபாயிலிருந்து 1964–65-ல் 47 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. |
| 4 அடுத்த இரண்டாண்டுகளில் இயன்ற அளவிற்குச் சிறு பாசனத் திட்டங்கள் விரிவுப் படுத்தப்படவேண்டும். இதன் விளைவாக கிராம மின்சார வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். | சிறுப்பாசனத் திட்டம் மும்முரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏராளமாகக் கிணறுகளை வெட்ட ஊக்கமளிக்கப்படுகிறது. புதிய கிணறு மானியத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிணறுக்காகவும் வழங்கப்படும் கடனின் உச்ச வரம்பு ரூ. 2,000 லிருந்து ரூ. 5,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக் காலத்தில் 6,000 கிணறுகள் தோண்ட வேண்டுமென்று முதலில் இலக்கிட்டிருந்தோம். ஆனால் திட்டக் காலத்தில் 16,600 கிணறுகள் தோண்டப்பட்டுவிடுமென எதிர்பார்க்கிறோம். 1,500 வடிமுனைக் கிணறுகள் அமைக்கப்படும் என்று முதலில் திட்டமிடப்பட்டது. அதற்கெதிராக, திட்டக் காலத்தில் 2,250 வடிமுனைக் கிணறுகள் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள குடியானவர்கள் கோடையில் கூடுதலாக ஒரு பயிரை விளைவிப்பது சாத்தியமாகும்படி அம் மாவட்டத்தில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை ரூ. 37 லட்சம் செலவில் தோண்டுவதற்கான ஒரு விசேஷத் திட்டத்திற்கு அரசாங்கம் |



| பரிவுரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| | அனுமதி அளித்துள்ளது. சிறு பாசனத் திட்டங்கள் எல்லாவற்றிற்குமாக ஆரம்பத்தில் ரூ. 12·8 கோடி தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், அச்செலவு மூன்றாவது திட்டக் காலத்தில் சுமார் ரூ. 19 கோடியாக உயரும். வேளாண்மை பம்பு செட்டுகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவது இம்மாநிலத்தில் மிகவும் பிரபலமடைந்துள்ளது.<br>8,000 நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதென முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால், மூன்றும் திட்டக் காலத்தில் 9,000 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கும். இந்தத் திட்டக் கால அளவில் மின்சாரபம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1·18 லட்சத்திலிருந்து 2·3 லட்சமாக அதிகரித்திருக்கும். அதாவது, 1·12 லட்சம் அதிகரித்திருக்கும். 75,000 மின்சார பம்பு செட்டுகள் நிறுவ வேண்டும் என்று ஆரம்பத்தில் திட்டமிட்டதைப் பார்த்தால், இது கணிசமாய் அதிகரித்திருப்பதை அறியலாம். |
| 5 உர வகைகளைப் பங்கிடுவதற்காக சீரான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கூடியவரையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர வகைகள் பங்கிடப்பட வேண்டும். அவசியமான கடன் வசதிகள் செய்து கொடுக்கப் படவேண்டும். அதே சமயத்தில் கலவை எருவையும், தழை எருவையும் பயன்படுத்தும் திட்டங்களை நிறைவேற்ற தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும். | இம்மாநிலத்தில் உர வகைகள் கூடிய வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் பங்கிடப்படுகின்றன. சமீப காலம் வரை உர வகைகள் அவ்வாறு பங்கிடப்பட்டு வந்தாலும், தெரிந்தெடுத்த பகுதிகளில் தனிப்பட்ட வியாபாரிகள் மூலமும் முன்னோடி அடிப்படையில் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்புத் திட்டக் காலத்தில் உர வகைகளைப் பயன்படுத்துவது கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. கலவை எருவையும் தழை எருவையும் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட இலக்குகளை திட்டமிட்டுள்ளபடி நாம் சாதித்துவிடுவோம். |
| 6 நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட முடிவக்குள் பூர்த்தியாக நிறைவேற்றப்படவேண்டும். | நிலச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக அடியிற்கண்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன :—<br>1 தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டுகள் (ரத்து-ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963. |

| பரிந்துரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| | 2 தமிழ்நாடு சிறிய இனும்கள் (ரத்து-ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம். 1963.<br>3 தமிழ்நாடு குத்தகைக் கிராமங்கள் (ரத்து-ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963.<br>4 தமிழ்நாடு இனும் (துணைச்) சட்டம், 1963.<br>5 தமிழ்நாடு (மாற்றப்பட்டுள்ள பகுதி) ரயத்துவாரி செட்டில்மெண்ட் சட்டம், 1964.<br>6 கன்னியாகுமரி ஸ்ரீ பண்டாரவகை நிலங்கள் (ரத்து-ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1964.<br>7 தமிழ்நாடு (மாற்றப்பட்டுள்ள பகுதி) திருப்புவாரம் செலுத்துதல் ரத்துச் சட்டம், 1964.<br>8 தமிழ்நாடு (மாற்றப்பட்டுள்ளபகுதி) ஜெனமீகரம் செலுத்துதல் ரத்துச் சட்டம், 1964.<br>1955–ம் ஆண்டு தமிழ்நாடு சாகுபடிக் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை நிரந்தரச் சட்டமாக்குவதற்கான மசோதா ஒன்றை சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ளது. |
| 7 விரைவில் பலனளிக்கக்கூடிய பாசன, மின்சாரத் திட்டங்களை விரைவில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லா முயற்சியையும் எடுத்துக் கொள்ளவேண்டும். | பாசனத் திட்டங்களும், மின்சார வேலைத் திட்டங்களும் திருப்திகரமாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின்கீழ் உத்தேசித்துள்ள தொடர் அணைக்கட்டுகளில் முக்கியமானது ஆளியாறு நீர்த்தேக்கத் திட்டமாகும். இத் திட்டவேலை பூர்த்தியடைந்து 17,500 எக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்து வருகிறது. 1965-66–ல் பரம்பிக்குளம், தூணக்கடவு, திருமூர்த்தி அணைக்கட்டுகள், சர்க்கார் பதி, சுரங்கத்திட்டம், சம மட்டக் கால்வாய்த் திட்டம் போன்ற தொடர்பான வேலைத் திட்டங்களோடு பூர்த்தியாக நிறைவேற்றப் பட்டுவிடும். பரம்பிக்குளம்–ஆளியார் திட்டத்திற்காக 1965–66–ல் ரூ. 556 லட்சம் ஒதுக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 60,000 எக்கர் நிலங்கள் வரை கூடுதல் பாசன வசதி ஏற்படும். மற்ற நடுத்தரப் பாசனத்திட்டங்களுக்காகவும் ரூ.258 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; |



| பரிந்துரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| | அத்திட்டங்களாவன :— பாலார் அணைகட்டு, வாய்க்கால்களைப் புதுப்பிக்கும் திட்டம், சாத்தனூர் திட்டம் II-ம் நிலை, கோமுகி நதி திட்டம், மஞ்சளாறு திட்டம்.<br>மின்சாரத் திட்டங்களுக்காக ஆரம்பத்தில் ரூ. 100 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், நடப்புத் திட்டக்கால அளவில் ரூ. 120 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மின்சார உற்பத்தி திறனைப் பொறுத்தவரையில் மூன்றாவது திட்ட இலக்கு 1040 மெகவாட் ஆகும். இப்போது தமிழ்நாடு மின்சாரபோர்டு 1150 மெகவாட் உற்பத்தித் திறன் பெற்றிருக்கிறது. நெய்வேலி மின்சார திட்டத்தின்மூலம் கிடைக்கக் கூடிய 400 மெகவாட் உற்பத்தித் திறனுடன், இம்மாநிலத்தின் மின்சார உற்பத்தித் திறன் 1550 மெகவாட்டாக இருக்கும். மூன்றாவது திட்ட ஆரம்பத்தில் மின் உற்பத்தித் திறன் 570 மெகவாட் மட்டுமே இருந்தது. |
| 8 மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தையும், அதன் பராமரிப்புக் கட்டத்தில் சில வேலைத் திட்டங்களையும் தொடர்ந்து எடுத்துக்கொள்வதற்கு இம்மாநில ஆண்டுத் திட்டங்களில் போதிய நிதி ஒதுக்கப்படவேண்டும். | மலேரியா ஒழிப்புத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாநிலத் திட்டத்தில் ஆண்டுதோறும் போதிய நிதி வசதியும் செய்யப்பட்டுவருகிறது. எல்லா யூனிட்டுப் பகுதிகளிலும் கண்காணிப்பு வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியில் 15 யூனிட்டுகள் பராமரிப்புக் கட்டத்தை அடைந்தன. எஞ்சிய யூனிட்டுகளும் 1965–ம் ஆண்டு கால அளவிலேயே பராமரிப்புக் கட்டத்தை அடையலாம். இத்திட்டத்தின் பராமரிப்புக் கட்ட வேலையை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அமைந்துள்ள ஓர் அமைப்பு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பராமரிப்புக் கட்டத்தின் கீழ் எல்லாப் பகுதிகளையும் கொண்டு வரும் பொருட்டு, 1964–65–ல் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் திறப்பதற்கும் உத்திரவிடப்பட்டிருக்கிறது. |
| 9 கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், சேரி ஒழிப்பு, வாழ்க்கை நிலையை உயர்த்து | இம்மாநிலத்தில் கிராமக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வருகின் |

| பரிவுரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| தல் போன்ற மக்களின் அடிப் படைத் தேவைகள் அபி விருத்தித் திட்டங்களில் இடம் பெறவேண்டும். | றன. தங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள், பொது மக்களிட மிருந்து பெறும் நன்கொடைகள் ஆகியவை மூலமாகப் பஞ்சாயத்து யூனியன்கள் இவ்வேலைத் திட்டங் களை நிறைவேற்றுகின்றன. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற் காக மூன்றாவது திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் ரூ.508·82 லட்சம் (கிராமக் குடி நீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூ. 473·51 லட்ச மும், தேசீயக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூ. 35·31 லட்ச மும்) செலவழிக்கக்கூடும். இத் துடன், நகரக் குடிநீர் வழங்கும் திட்டங்களின் கீழ் ரூ. 610 லட்சம் செலவழிக்கப்படும். மூன்றாவது திட்டத்தில் சேரி அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 300 லட்சம் முற்றிலும் பயன்படுத்தப் படும். |
| 10 ஐந்தாண்டுத் திட்டம் குறித்த நிர்வாகத்தை அபிவிருத்தி செய்வது, நிர்வாகத் திறமை யை எல்லாக் கட்டங்களிலும் அபிவிருத்தி செய்வது, பல் வேறு துறைகளின் கீழ் எடுத் துக்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது ஆகிய இவற்றிற்காக ஏற்பாடு களை மேற்கொள்ளவேண்டும். | தமிழ்நாட்டில் திட்ட அபிவிருத்தி நிர்வாக அமைப்பு நிதித் துறை யின் ஒரு பிரிவாக இயங்கி வரு கிறது. ஆண்டு வேலைத் திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றி வரு கிற பல்வேறு வேலைத் திட்டங் களின் சாதனை குறித்த காலாண்டு ஆய்வுரை, ஆண்டு ஆய்வுரைகளைத் தயாரித்தல் திட்டச் செலவு பற்றிய காலாண்டு அறிக்கைகளைத் தொகுத் தல், மத்திய உதவி வேண்டிய திட்டங்கள் தயாரித்தல் ஆகிய வேலைகளை திட்ட அபிவிருத்தி அமைப்பு கவனித்துக் கொள் கிறது. |
| | அந்தந்தத் துறை அதிகாரிகள் அவ்வப் போது கூடி பல்வேறு துறைகளுக் கிடையே ஒருங்கிணைப்புப் பிரச்சினை களைக் குறித்து விவாதித்து வரு கின்றனர். இம்மாநிலத்தில் திட் அபிவிருத்தியைப் பொறுத்த மட் டில், தலைமை நிறுவனமாக இயங் கும் மாநில அபிவிருத்திக் கமிட்டி காலாண்டுக்கொருமுறை, திட் வேலைகளில் அடைந்துள்ள முன் னேற்றம் பற்றி விரிவாக ஆராய்ந்து வருகிறது. இத்தகைய கூட்டங்களில் பரிகார ஏற்பாடுகள் தெரிவிக்கப் பட்டு அவற்றின் பேரில் முடிவு எடுக்கப்படுகிறது. இத்தகைய கட்டங் களில், திட்டங்களை நிறைவேற்று வதில் ஏற்படும் இடையூறுகள் |



| பரிவுரைகள். (1) | எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| | தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு அவற்றிற்கு முடிவு காணுவதில் ஆலோசனைகளும் தெரிவிக்கப்படு கின்றன. பிரச்சினைகளைக் குறித்து முழுவதும் விவாதித்த பின்னர் கமிட்டி முடிவு எடுக்கின்றது. இம் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் இந்த ஏற்பாடுகளே போது மானவை என்று தெரிகிறது. |

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 378 at page 549.]

The State Geology Branch has been carrying out investigations for various minerals in Salem district from time to time. Among those, the important investigations that may be mentioned are for iron ores and limestones carried out in conjunction with the Neyveli-Salem Steel Project. Recently, the State Geology Branch has carried out field investigations for chromite, steatite, sulphide minerals, quartz, feldspar and sillimanite and an earlier investigation for bauxite.

A gist of the mineral occurrences in Salem district is furnished below :—

1. *Iron Ores.*—Nearly 100 million tons of iron ore has been estimated to occur in the first band of Kanjamalai hill about six miles south-east of Salem Town. There are two other bands which together may yield about 40 million tons of ore. Similarly about 60 million tons of iron ore are estimated in Godumalai and another 60 million tons in the Tiruthamalai hills. The iron ores are of magnetite quartzite type containing 35 per cent to 40 per cent iron ore. But they are amenable to magnetic concentation yielding as much as 60 to 70 per cent of Iron (Fe). Earlier reports by the Geological Survey of India gave a total estimate of the iron ores in Salem in the order of 300 million tons, but recent work shows that the actual reserves may be much higher. The Geologists of the State Geology Branch and the Neyveli-Salem Steel Project have carried out detailed mapping, drilling and sampling of the iron ores at Kanjamalai and Godumalai.

2. *Bauxite.*—Ore of aluminium occurs as cappings on some of the peaks in the Shevaroy hills. The total reserves of the bauxite has been estimated to be about 5 to 6 million tons containing 35 to 40 per cent of alumina. A small occurrence of bauxite is also located by the State Geology Branch near Ariyur Chola in Kolli hills, Namakkal taluk. Only about 24,000 tons of ore have been estimated here with an alumina content of 46 per cent.

3. *Magnesite.*—In the "Chalk" hills area north of Salem Town, magnesite occurs as veins over an area of about 4½ square miles. Recently, the area has been re-surveyed by the Geological

Survey of India. Existing reserves have been estimated to be in the order of 44 million tons, of which 11 million tons are of the refractory grade. The average magnesia content (Mgo) of the magnesite in the area is about 46 per cent.

4. *Chromite.*—Chromite of a rather inferior variety occurs discontinuously in the villages of Sittampundi, Eriyamangalam, Molasi, Kunnambunallur and Ramadevam. The total reserves of the chromite in this area have been estimated to be 0.5 million tons.

5. *Steatite.*—The occurrence of steatite deposits are known around Eswaramurthipalayam hill and also near Karuppur, seven miles north-north-west of Salem. The reserves may be up to a few thousand tons only.

6. *Corundum.*—Corundum occurs associated with syenite and pegmatite rocks at Papparapatti and Palakod and also as stringers in anorthosite, south of Tiruchengode taluk associated with chromite. The reserves of this mineral cannot be estimated due to the irregular nature of the occurrence of this mineral. It would also be uneconmical to extract this mineral by crushing th rock and separating the corundum.

7. *Limestone.*—Large deposits of flux and cement grade limestones occur in several parts of this district of which the deposits of Sankaridrug, Namakkal taluk and Tiruchengode are important. The flux grade limestone in this area has been estimated in the order of 4½ million tons while the cement grade limestone has been estimated to be in the order of 45 million tons. Cement grade limestone has been recently located and investigated by the State Geology Branch in Krishnagiri taluk and the reserves have been estimated to be 7 lakhs tons.

8. *Feldspar.*—Feldspar is chiefly found in the pegmatite rocks in Sankaridrug, Idappadi and Jalakandapuram. Investigations carried out by the State Geology Branch have proved a total reserve of 50,000 tons.

9. *Quartz.*—Quartz is found to occur associated with pegmatites at Jalakandapuram. Agraharathalaiyur, Vellakalpatti and Tindamangalam. The State Geology Branch has estimated the reserves of quartz in this area to be about a lakh of tons.

10. *Mica.*—Minor amounts of mica occur in pegmatite rocks around Kurumbapatti, Dasavillakku, Pallipatti and Alanchiampalayam and these are found to be of no economical importance.

11. *Garnet.*—Garnet occurs associated with clacgneisses near Thippampatti, Sankaridrug and ¼ mile north of Mangarampalayam and also 1 mile north-east of Tiruchengode and around Kailasapuram. Garnet rich rocks are also found to occur in Sanyasimalai and in Shevaroy hills. The reserves cannot be estimated due to its sporadical concentrations.

12. *Beryl.*—Beryl has been reported to occur in the mica pegmatite rocks around Kurumbapatti and Idappadi. Reserves are considered to be very little.



13. *Gold.*—Placer gold is reported to occur in the streams near Singiliancombai, Eswaramurthipalayam in Rasipuram taluk. Investigations carried out by the State Geology Branch proved that the recovery of the gold is very meagre from the stream sands.

14. *Pyrite.*—Pyrites are found to occur in small amounts in the gneissic rocks at Pusaripalayam. Pyrites and Pyrrhotite also occur in the biotite (mica) gneisses near Ariyur in the Namakkal taluk. Sulphide occurrences near Ariyur village in Mohanur block were investigated in detail. The examination of the occurrence shows the mineralisation of pyrite is confined to a narrow zone of one furlong length. Hence, the occurrence is of little economic value.

15. *Kankar.*—The State Geology Branch has carried out an investigation of the Kankar deposit associated with ultrabasic rock near Kanjanur, Valaipatti and other villages in the Krishnagiri taluk and the reserves have been estimated to be in the order of two million tons.

16. *Asbestos.*—Asbestos, 'amphibole' variety occur south of Alanganattam village, Namakkal taluk and is found to be inferior in its quality.

Small deposits of asbestos associated with magnesite has been seen near Valasiramani village in Namakkal taluk.

17. *Radio-active minerals.*—So far no investigation has been carried out by the State Geology Branch in respect of the radioactive minerals in this district. However, the Atomic Energy Commission after having examined the radio-active mineral occurrences near Idappadi reported that the deposits are not workable.

*மாநிலப் புவியியல் கிளை சேலம் மாவட்டத்தில் பல்வேறு கனிப்பொருள்களுக்காக ஆராய்ச்சி நடத்தி வந்தது. அவற்றில், நெய்வேலி சேலம் எஃகு ஆலைத் திட்டத்தின் கூட்டுடன் இரும்புத்தாது, சுண்ணும்புக்கல் ஆகியவற்றுக்காக நடத்தப் பட்ட ஆராய்ச்சி மிக முக்கியம் வாய்ந்ததாகும். சமீபத்தில் மாநிலப் புவியியல் பிரிவு, குரோமைட், மாக்கல் (Steatite).—சல்பைடு தாதுக்கள், படிகக்கல், ஃபெல்ஸ்பார், சில்லிமனைட் ஆகியவற்றிற்காக கள ஆராய்ச்சிகள் நடத்தியது. இதற்கு முன்னர் இது பாக்சைட்டிற்காகவும் ஓர் ஆராய்ச்சி நடத்தியது.*

*சேலம் மாவட்டத்தில் காணக்கூடிய கனிப்பொருள்களின் சுருக்கத் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.*

*1. இரும்புத்தாது.—சேலம் நகருக்குச் சுமார் 6 மைல் தென் கிழக்கில் உள்ள கஞ்சமலைக் குன்றுகளின் முதல் தொகுதியில் ஏறக்குறைய 100 மில்லியன் டன் இரும்புத்தாது இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர வேறு இரண்டு தொகுதிகளும் இருக்கின்றன. அவையிரண்டிலுமிருந்து 40 மில்லியன் டன் இரும்புத் தாது கிடைக்கக்கூடும். இதைப்போலவே, கூடமலையில் சுமார் 60 மில்லியன் இரும்புத்தாது இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் தீர்த்தமலைக் குன்றுகளிலும் 60 மில்லியன் டன் தாது இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது*

இந்த இரும்புத்தாது மாக்னடைட் (அயக்காந்தக்கல்), குவார்ட்
ஜைட்டு (படிகக்கல்) வகையினதாகும். இதில் 35 சத விகிதம் முதல்
40 சத விகிதம் வரை மட்டுமே இரும்புத்தாது அடங்கியுள்ளது.
ஆயினும் அவை காந்த உலையின் உதவியால் உருக்கினால் 60 முதல்
70 சத வீதம் அளவிற்கு இரும்பு (Fe ) தரக்கூடிய தன்மை
வாய்ந்தனவாகும். இந்தியப் புவியியல் சர்வேயின் முந்திய அறிக்
கைகள் சேலத்தில் இருக்கும் இரும்புத் தாதின் மொத்த மதிப்பு
300 மில்லியன் டன் அளவுடையதாகுமென்று தெரிவித்தன.
ஆனால், அங்கு மிகவும் அதிகமான அளவில் தாதுக்கள் இருக்கக்
கூடுமென்பதை அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் காட்டு
கின்றன. மாநிலப் புவியியல் கிளை, நெய்வேலி-சேலம் உருக்கு
ஆலைத் திட்டம் ஆகிய இவற்றைச் சேர்ந்த புவியியல் வல்லுனர்கள்
கஞ்சமலையிலும் கூடமலையிலும் விரிவான முறையில் தலப் படம்
வரைந்து துளையிட்டு இரும்புத் தாதுக்களின் மாதிரிகள் எடுத்துப்
பார்த்தனர்.

2. பாக்ஸைட் (Bauxite).— சேர்வராயன் மலைகளின்
முகடுகள் சிலவற்றின் மீது மூடி போன்று படிந்து அலுமனியம்
தாது காணப்படுகிறது. 35 முதல் 40 சத வீதம் வரை
அலுமினியத்தைக்கொண்ட பாக்ஸைட்டின் மொத்த இருப்பு 5
முதல் 6 மில்லியன் டன் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டி
ருக்கிறது. நாமக்கல் தாலூகாவைச் சேர்ந்த கொல்லிமலையில்
ஆரியூர்சோலைக்கு அருகில் குறைந்த அளவில் பாக்ஸைட்டு
இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவ் விடத்தில் 46 சத
வீதம் அலுமினியத்தைக் கொண்ட 24,000 டன் தாது மட்டுமே
இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

3. மாக்னஸைட் (Magnesite).— சேலம் நகருக்கு
வடக்கில் உள்ள சுண்ணும்புக்குன்றுப் பகுதிகளில் சுமார் 4½
சதுர மைல் பரப்பில் மாக்னசைட்டானது நரம்புகள் போன்று
ஊடுருவிக் காணப்படுகின்றது. இந்த நிலப் பகுதி இந்தியப்
புவியியல் சர்வேயினால் அண்மையில் மறுசர்வே செய்யப்பட்டது.
இப் பகுதியில் தற்போதுள்ள இருப்பானது 44 மில்லியன் டன்
வீதத்தில் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில், 11
மில்லியன் டன் எளிதில் உருகாத தரத்தைச் சேர்ந்ததாகும்.
இந்தப் பகுதியில் இருக்கும் மாக்னசைட்டில் சராசரி சுமார் 46
சத வீதம் மக்னீசியம் அடங்கியுள்ளது.

4. குரோமைட் (Chromite).— சிட்டம்பூண்டி, இறைய
மங்கலம், மொளசி, குன்னம்புநல்லூர், இராமத்தேவன் ஆகிய
கிராமங்களில் சற்றே தரத்தில் குறைந்த குரோம்மைட்டானது
ஆங்காங்கு விட்டுவிட்டு காணப்படுகின்றது. இந்தப் பகுதியில்
உள்ள குரோமைட் இருப்பானது 5 லட்சம் டன் என்று மதிப்
பிடப்பட்டிருக்கின்றது.

5. மாக்கல் (Steatite) — ஈஸ்வரமூர்த்தி குன்றைச் சுற்றி
யும் சேலத்திற்கு வடமேற்கில் 7 மைல் தொலைவில் உள்ள கருப்
பூருக்கு அருகிலும் மாக்கல் படிவங்கள் இருக்கின்றன. இந்தப்
படிவங்களின் இருப்பானது சில ஆயிரம் டன் மட்டுமே இருக்கக்
கூடும்.



6. குருந்தக்கல் (Corundum).— சைனைட் ( Syenite )
பெக்மாடைட் ( (Pegmatite) பாறைகள் ஆகியவற்றுடன்
கலந்து குருந்தக்கல் பாப்பாரப்பட்டியிலும் பாலகோட்டிலும்
காணப்படுகின்றது. மேலும் திருச்செங்கோடு வட்டத்தின்
தெற்குப் பகுதியைச் சேர்ந்த வேறோரிடத்தில் இது குரோமைட்
டுடன் கலந்து மரத்துண்டுகள்போல் நீளவாட்டில் அமைந்து
காணப்படுகின்றது. இந்தக் கனிப்பொருள் பலவிதமாகக்
காணப்படுவதால், இதன் இருப்பை மதிப்பிட முடியாது. மேலும்
பாறையைப் பொடியாக்கி குருந்தக்கல்லைத் தனியாகப் பிரித்து
எடுப்பது சிக்கனமானதும் அல்ல.

7. சுண்ணும்புக்கல்.—பிளக்ஸ் (Flux) வகையையும்
சிமென்ட்டு வகையையும் சேர்ந்த சுண்ணும்புக்கல் படிவங்கள்
இம் மாவட்டத்தில் பல பாகங்களிலும் மிகுந்த அளவில் காணப்
படுகின்றன. இவற்றில், நாமக்கல் தாலூகாவைச் சேர்ந்த சங்
கரி துர்க்கத்திலும் திருச்செங்கோட்டிலும் உள்ள படிவங்கள்
முக்கியமானவையாகும். இந்தப் பகுதியில் உள்ள பிளக்ஸ்
வகையைச் சேர்ந்த சுண்ணும்புக்கல் 45 லட்சம் டன் அளவிலும்
சிமென்ட்டு வகையைச் சேர்ந்த சுண்ணும்புக்கல் 450 லட்சம் டன்
அளவிலும் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. சிமென்ட்டு
வகையை சேர்ந்த சுண்ணும்புக்கல் மாநிலப் புவியியல் கிளையினால்
கிருஷ்ணகிரி வட்டத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு
ஆராய்ச்சி செய்யப்பட்டது. இது 7 லட்சம் டன்கள் இருக்கு
மென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

8. களிக்கல் (Feldspar).— களிக்கல் முக்கியமாக சங்கரி
துர்க்கம், இடப்பாடி, ஜலகண்டபுரம் ஆகிய இடங்களில் உள்ள
பெக்மடைட் பாறைகளில் காணப்படுகின்றன. மாநிலப் புவியி
யல் கிளையின் ஆராய்ச்சியினால் இதன் மொத்த இருப்பானது,
50,000 டன்கள் என நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

9. படிகக்கல் (Quartz).— படிகக்கல் பெக்மாடைட்டு
களுடன் கலந்து ஜலகண்டபுரம், அக்ரஹாரத்தளையூர், வெள்ளக்
கல்பட்டி, திண்டமங்கலம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றது.
இந்தப் பகுதியில் உள்ள படிகக்கல் இருப்பானது ஏறக்குறைய ஒரு
லட்சம் டன் என மாநிலப் புவியியல் கிளை மதிப்பிட்டிருக்கின்றது.

10. அபிரகம் (மைக்கா) குரும்பப்பட்டி, தசவிளக்கு,
பள்ளிப்பட்டி, அலஞ்சியாம்பாளையம் ஆகிய இடங்களைச் சுற்றி
யுள்ள பெக்மாடைட் பாறைகளில் அபிரகம் சிறு அளவில் காணப்
படுகின்றது. இது பொருளாதார முக்கியத்துவம் உடையதாகத்
தென்படவில்லை.

11. கார்னெட் (Garnet).— கார்னெட்டானது சுண்ணும்பு
கனி படிவங்களுடன் (காலன்சுகளுடன்) கலந்து, திப்பம்பட்டி,
சங்கரி துர்க்கம் ஆகிய இடங்களின் அருகிலும் மங்கரம்
பாளையத்துக்கு ½ மைல் வடக்கேயுள்ள இடத்திலும் திருச்செங்
கோட்டிற்கு 1 மைல் வடகிழக்கிலும் கைலாசபுரத்தைச் சுற்றியுள்ள
இடங்களிலும் காணப்படுகின்றது. கார்னெட் மிகுதியான
அளவில் உள்ள பாறைகள் சன்னியாசிமலையிலும் சேர்வராயன்

மலைகளிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஆங்காங்கு விட்டு விட்டு காணப்படுவதால் இதன் இருப்பை மதிப்பிடமுடியாது.

12. கோமேதகம் (Beryl).– குரும்பப்பட்டி, இடப்பாடி ஆகிய இடங்களைச் சுற்றி மைக்கா பெக்மாடைட் பாறைகளில் கோமேதகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகக்குறைவான அளவில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

13. பொன்.—சிங்கிலியான் கோம்பை, ஈஸ்வரமூர்த்திபாளையம் ஆகிய இடங்களில் அருகிலுள்ள ஓடைகளில் அரித்தெடுக்கக்கூடிய பொன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீரோடை மணலிலிருந்து எடுக்கப்படும் பொன் மிகவும் சொற்பமாக இருக்குமென்று மாநிலப்புவியியல் கிளையால் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

14. பைரைட்.—பைரட்டானது குறைவான அளவில், பூசாரி பாளையத்திலுள்ள கனிப்படிவப்பாறைகளில் (Gneissic Rock) இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பைரைட்டும் பைரோடைட்டும் நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த அரியூருக்கு அருகில் காணப்படும் பையோடைட் (அபிரகம்) கனிப்படிவப் பாறைகளில் இருக்கின்றன. மோகனூர் வட்டாரத்தைச் சேர்ந்த அரியூர் கிராமத்துக்கு அருகில் காணக்கூடிய சல்பைடு குறித்து விரிவான முறையில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. பைரைட் கனிப்பொருள் தன்மையுடைய பகுதியானது ஒரு பர்லாங்கு நீளமுடைய குறுகிய மண்டலத்திற்குள் அமைந்துள்ளதாக அதைக் கண்டு பிடிப்பதற்கான ஆய்வுகள் காட்டுகின்றன. எனவே, இதன் பொருளாதார மதிப்பு குறைவுதான்.

15. கங்கர் (Kankar).— கிருஷ்ணகிரி வட்டத்தைச் சேர்ந்த கஞ்சனூர், வாலைப்பட்டி ஆகிய இடங்களுக்கு அருகிலும், பிற கிராமங்களிலும் அல்ட்ராபேசிக் பாறைகளுடன் கலந்த கங்கர் படிவங்கள் குறித்து மாநிலப்புவியியல் கிளை ஆராய்ச்சிகள் நடத்தியது. இது 20 லட்சம் டன் அளவில் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

16. கல்நார் (Asbestos).— நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த அலங்கநத்தம் கிராமத்திற்குத் தெற்கே ஆம்ஃபிபோல் (Amphibole) வகையைச் சேர்ந்த கல்நார் கிடைக்கின்றது. இது தரத்தில் குறைந்ததாகக் காணப்படுகிறது.

நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த வலசிராமணி கிராமத்திற்கு அருகில் மாக்னசைட்டுடன் கலந்த கல்நார் சிறுபடிவங்களாகக் காணப்படுகின்றது.

17. கதிரியக்கக் கனிப்பொருள்கள் (Radioactive minerals) கதிரியக்கக் கனிப்பொருள்கள் சம்பந்தமாக இம் மாவட்டத்தில் மாநிலப்புவியியல் கிளையால் ஆராய்ச்சி எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை. ஆயினும், இடப்பாடிக்கு அருகில் காணப்பட்ட கதிரியக்கக் கனிப்பொருள்களை அணுசக்திக் கமிஷன் ஆராய்ந்து அங்குள்ள படிவங்கள் வேலை மேற்கொள்ளுவதற்குத் தக்கதாக இல்லை என்று அறிவித்தது.



## APPENDIX III

[*Vide* answer to starred question No. 388 at page 568]

*Schemes under the Special Development Programme for Cultivation of Vegetables.*

With a view to stepping up vegetable production in and around Madras City and the towns of Tiruchirappalli, Madurai, Coimbatore and Tirunelveli, during the National Emergency the Government sanctioned in 1963 a scheme for increased production of vegetables. This scheme has later been extended to four blocks in the Kanyakumari district and the Neyveli township. Under this scheme, vegetable seeds and seedlings and pesticides are supplied to growers at a subsidised rate of 50 per cent of their cost. Loan assistance on personal security up to Rs. 120 per acre per vegetable crop, limited to Rs. 240 per ryot is also available. This scheme has since been extended to areas within a three-mile radius of Kumbakonam Municipality also.

Subsequently, as part of the Special Development Programme, three schemes have been sanctioned for increasing vegetable production, one for increased production of vegetables in the Nilgiris, Kodaikanal and Shevaroys hills, another for intensive production of vegetables in the plains in and around Vellore, Salem, Erode and Thanjavur and the third for development of Potato cultivation in Kodaikanal. These schemes will be implemented during 1964–65 and 1965–66 at a total cost of Rs. 7·08 lakhs besides loans.

In addition to these schemes under implementation, two more schemes, one for vegetable seeds production and another for intensification of vegetable production in and around Madras City and Madurai, have been sent up to the Government of India, and their approval is awaited.

**காய்கறி வகைகளைப் பயிரிடுவதற்கான சிறப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைந்த வேலைகள்.**

சென்னை மாநகரிலும் அதைச் சுற்றிலும் திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில், தேசிய நெருக்கடி காலத்தில் 1963-ல் காய்கறி உற்பத்தி அதிகரிப்பிற்காக அரசாங்கம் திட்டம் ஒன்றை அனுமதித்தது. பின்னர் இத்திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு வட்டாரங்களுக்கும் நெய்வேலி டவுன்ஷிப்பிற்கும் நீடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், காய்கறி விதைகளும், இளஞ்செடிகளும் பூச்சி கொல்லி மருந்துகளும் காய்கறிப் பயிரிடுவோருக்கு அவற்றின் விலையில் 50 சதவீத விலைக்குக் கொடுக்கப்படுகின்றன. காய்கறிப் பயிர் வகை ஒன்றுக்கு ஏக்கராவுக்கு சொந்த ஜாமீன் பேரில் ரூ. 120 வரையில் ஓர் உழவருக்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறது; அதிக அளவு ரூ. 240 வரையில் கொடுக்கப்படும். கும்பகோணம் நகராட்சியின் மூன்று மைல் சுற்றளவுக்குள் அமைந்த பகுதிகளுக்கு இத்திட்டம் இப்போது நீடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சிறப்பு வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகக் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க மூன்று திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. நீலகிரி, கொடைக்கானல், சேர்வராயன் மலை, ஆகிய இடங்களில் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கென ஒரு திட்டமும், வேலூர், சேலம் ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும் அவைகளைச் சுற்றியுள்ள சம வெளிப் பகுதிகளிலும் காய்கறி உற்பத்தியைத் தீவிரப்படுத்த இரண்டாவது திட்டமும், கொடைக்கானலில் உருளைக்கிழங்கு சாகுபடியைப் பெருக்கு வதற்கு மூன்றாவது திட்டமும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1964–65, 1965 66-ஆம் ஆண்டுகளில், கடன்கள் தவிர, ரூ. 7·08 லட்சம் மொத்தச் செலவில் மேற்படி திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

நிறைவேற்றப்பட்டுவரும் இத்திட்டங்கள் தவிர இன்னும் இரண்டு திட்டங் கள் இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத் தின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் ஒன்று காய்கறி விதை கள் உற்பத்திக்கான திட்டம். மற்றொன்று சென்னை மாநகர், மதுரை ஆகிய இடங்களிலும் அவற்றைச் சுற்றிலும் காய்கறி உற்பத்தியைத் தீவிரமாக்கு வதற்கான திட்டம்.

## APPENDIX IV.

[*Vide* answer to unstarred question No. 47 at page 578]

(a) *The details showing the incidence of Tuberculosis in the State.*—Tuberculosis is widely prevalent not only in urban areas but also in the rural areas. The incidence is estimated at 3 per cent of the population in the City and at two per cent in other areas. The mortality rate is about 250 to 300 per 1,00,000 population. The incidence and mortality of Tuberculosis in the muffassal is similiar to that in the Madras City. Of late the mortality has fallen down considerably all over the State due to the advent of anti-tuberculosis drugs.

(b) *Details of preventive measures for controlling the spread of the disease.*—Adequate treatment of the infectious tuberculosis patient to render him non-infective is an important and effective method of preventing the spread of Tuberculosis to the community. In addition, detailed examination of the contracts of the infectious tuberculosis patients is undertaken at the T.B. Demonstration and Training Centre, Chetput and at the several clinics in Government General Hospital, Stanley Hospital, Government Royapettah Hospital, Government Kasturba Gandhi Hospital for Women and Children, and Government Kilpauk Medical College and Hospital, Madras and adequate treatment given whereever necessary. Such of those contacts who have not contracted Tuberculosis are advised to get BCG vaccination as a prophylactic measure.

One BCG team under a team leader is carrying intensive house to house BCG Vaccination in the City of Madras. The T.B. Demonstration and Training Centre is functioning as a diagnostic and treatment Centre for the Madras City and the Districts surrounding the Centre. A mobile Mass X-ray Unit of this Centre is visiting the sub-clinics in Christina Rainy Hospital and Kalyani Hospital once a week. Groups of population are mass X-rayed to detect early cases of Pulmonary Tuberculosis amongst Factory Workers, Mental Patients, Workers in Hospitals, inmates of Jails, Schools and Colleges, etc.

Health visitors working in this State Centre are motivating the patients regarding the necessity for uninterrupted treatment for at least one year and also visiting the house of patients who fail to attend the clinic and advise them to attend the clinic or the Centre, etc., regularly for treatment.





The Tuberculosis patients are being treated by Anti-Tuberculosis Drugs supplied by UNICEF free of cost. Financial assistance is being offered to the deserving Tuberculosis patients by the State Health Ministers Tuberculosis Discretionary Grant and the Bhavnagar Kshayarog Fund.

*Muffassal.*—All the District Hospitals have full-time Chest Clinics where adequate treatment for all cases of Pulmonary Tuberculosis is given. Chest clinics attached to the District Headquarters Hospitals have been upgraded as District Tuberculosis Centres in four places in the State of Madras, i.e., at Vellore, Ootacamund, Thanjavur and Ramanathapuram.

Diagnosis of cases is undertaken in this District T.B. Centre by means of X-ray and sputum examination. All cases found to be suffering Pulmonary Tuberculosis are put under Domiciliary Treatment. Similar Diagnosis and Treatment facilities have been provided at some of the taluk Hospitals.

Along with the curative measures, proventive measures are being undertaken through these centres. A BCG Vaccination Team attached to the District Tuberculosis Centre is visiting all the villages according to a scheduled programme and protecting all susceptible persons against Tuberculosis by giving BCG Vaccination. Symptomatic cases are referred to the District Tuberculosis Centre or to the nearer Hospital for diagnosis and treatment. Curative and Preventive measures are undertaken simultaneously.

In addition, Publicity and Propaganda is undertaken in the City of Madras and the muffassal Districts by means of lectures and film shows, etc.

### (அ) இம்மாநிலத்தில் காசநோய் பரவியுள்ளதைக் காட்டும் விவரங்கள்

காசநோய் நகரப்பகுதிகளில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் பெருவாரியாகப் பரவியுள்ளது. இம்மாநகர மக்கள் தொகையில் 3 சதவீதத்தினருக்கும் மற்றப் பகுதிகளில் 2 சதவீதத்தினருக்கும் இந்நோய் கண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. 100,000 மக்கள் தொகைக்கு சுமார் 250 முதல் 300 பேர் வீதம் இறக்கின்றனர். வெளியூர்களில் காசநோய் பரவியிருப்பதும் அதனால் ஏற்படும் இறப்பும் சென்னை மாநகரின் நிலவரத்தை ஒத்திருக்கிறது. காசநோய்த் தடுப்பு மருந்துகள் உபயோகத்துக்கு வந்ததன் காரணமாக, இம்மாநிலம் முழுவதிலும் காசநோய் காரணமாக இறப்பவர்களின் தொகை இப்போதெல்லாம் வெகுவாகக் குறைந்துள்ளது.

### (இ) இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விவரம்.

தொற்றுக் காசநோய்ப் பிணியாளர்களைத் தொற்று நீங்கியவர்களாகச் செய்வதற்கு அவர்களுக்குப் போதிய சிகிச்சையளிப்பதுதான் மக்களிடையே காசநோய் பரவுவதைத் தடுப்பதற்கான பயனுள்ள முக்கிய வழிகளில் ஒன்றாகும். மேலும், சேத்துப்பட்டு காசநோய் செயல் விளக்கப் பயிற்சி நிலையத்திலும் மற்றும் அரசாங்கப் பெரிய மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, அரசாங்க இராயப்பேட்டை மருத்துவமனை, அரசாங்க கஸ்தூரிபாய் காந்தி மகளிர்—சிறுர் மருத்துவமனை, சென்னை அரசாங்கக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் உள்ள பல காசநோய் சிகிச்சை நிலையங்களிலும் (clinics) தொற்றச் செய்யும் காசநோய்ப்பிணியாளர்களுடைய தொடர்புகள் விரிவாக ஆராயப்பட்டு, அவசியமான இடங்களில் போதிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவ்விதம்

தொடர்புடையவர்களில் காசநோய் பிடிக்காமலிருப்பவர்களுக்கு நோய்த் தடுப்பு நடவடிக்கையாக பி.சி.ஜி. ஊசி குத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகிறது.

சென்னை மாநகரத்தில் குழுத்தலைவர் ஒருவரின் கீழ் பி.சி.ஜி. குழு ஒன்று வீடுவீடாகச் சென்று தீவிரமான முறையில் பி.சி.ஜி. ஊசி குத்தி வருகின்றது. காசநோய் செயல்விளக்கப் பயிற்சி நிலையமானது, சென்னை மாநகரத்திற்கும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கும் காசநோயின் தன்மை யறிந்து சிகிச்சையளிக்கும் நிலையமாகப் பணிபுரிந்து வருகின்றது. இந்த நிலையத்தைச் சேர்ந்த இயங்கும் பெரிய எக்ஸ்ரே வண்டியானது செங்கல்பட்டு ரெயினி மருத்துவமனை, கல்யாணி மருத்துவமனை ஆகியவற்றில் உள்ள துணை சிகிச்சை நிலையங்களுக்கு (sub-clinics) வாரத்திற்கு ஒருமுறை சென்று வருகிறது. தொழிற்சாலைத் தொழிலாளர்கள், மனநோயாளிகள், மருத்துவமனைத் தொழிலாளர்கள், சிறையில் இருப்பவர், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் ஆகியோர்களிடையே நுரையீரல் காசநோய் ஆரம்பநிலையில் ஏற்பட்டிருப்பின் அதை கண்டுபிடிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட நோயாளிகளை எக்ஸ்ரே படம் எடுக்கின்றனர்.

நோயாளிகள் குறைந்தது ஓராண்டிற்காவது இடைவிடாமல், சிகிச்சை பெற வேண்டிய அவசியம் பற்றி, இந்த மாநில நிலையத்தில் பணி புரிந்து வரும் சுகாதாரப் பார்வையாளர்கள் அவர்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர். மேலும் சிகிச்சை நிலையங்களுக்கு (clinics) வந்து சிகிச்சை பெறத்தவறும் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று பார்த்து சிகிச்சைப் பயிற்சியிடங்களுக்காவது (clinics) காசநோய் செயல் விளக்கப் பயிற்சி நிலையத்துக்காவது சென்று தவறாமல் சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பார்வையாளர்கள் அவர்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

யூனிசெஃப் (UNICEF) நிறுவனம் இலவசமாய் வழங்கும் காசநோய்த் தடுப்பு மருந்துகளைக் கொண்டு காசநோய்ப் பிணியாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. மாநில சுகாதார அமைச்சரின் காசநோய் யுக்த மானியத்திலிருந்தும் பவநகர் க்ஷயரோக நிதியிலிருந்தும் தகுதியுடைய காசநோய்ப் பிணியாளர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## நாட்டுப்பகுதி

மாவட்ட மருத்துவ மனைகள் எல்லாவற்றிலும் முழுநேர இதய சிகிச்சை நிலையங்கள் (Chest Clinics) உள்ளன. நுரையீரல் காசம் சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் அவ்விடங்களில் தக்க முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மாவட்டத் தலைமை நிலைய மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டிருக்கும் இதய சிகிச்சை நிலையங்கள் (Chest Clinics) நான்கினை மாவட்டக் காசநோய் நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. வேலூர், உதகமண்டலம், தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் அவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த மாவட்டக் காசநோய் நிலையங்களில் எக்ஸ்-ரே மூலமாகவும், சளிப்பரிசோதனை (Sputum Examination) மூலமாகவும் நோயின் தன்மை அறியப்படுகின்றது. நுரையீரல் காசத்தால் பீடிக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் அவரவர்கள் வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்படுகிறது. சில தாலூக்கா மருத்துவமனைகளிலும் இவ்வாறே நோயின் தன்மையறிந்து சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந் நிலையங்களின் மூலமாக, நோய் தீர்க்கும் நடவடிக்கைகளுடன் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. மாவட்டக் காசநோய் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பி.சி.ஜி. ஊசி குத்தும் குழுவானது, குறிப்பிட்ட திட்டத்தின்படி எல்லாக் கிராமங்களுக்கும் சென்று பார்வையிட்டு சுலபத்தில் நோயால் பீடிக்கப்பட கூடியவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்தி அவர்களுக்குக் காசநோய் ஏற்படாமல் தடுத்து வருகின்றது



நோயின் அறிகுறி தென்படக்கூடியவர்களுக்கு நோயின் தன்மையறிந்து சிகிச்சையளிப்பதற்காக அவர்கள் மாவட்டக் காசநோய் நிலையத்திற்கு அல்லது அண்மையில் இருக்கும் மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகின்றனர். நோய் தீர்ப்பதற்கும் நோயைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் ஒரே சமயத்தில் எடுக்கப்படுகின்றன.

மேலும், சென்னை மாநகரத்திலும் வெளி மாவட்டங்களிலும், சொற்பொழிவுகள், காட்சிகள் ஆகியவற்றின் மூலம் இந்நோய்த் தடுப்பு, சிகிச்சை முதலியவை குறித்து விளம்பரமும் பிரச்சாரமும் செய்யப்படுகின்றன.

## APPENDIX V.

[*Vide* answer to unstarred question No. 49 at page 578.]

| *District.* (1) | *Total number of Bus stands maintained by the Municipal councils.* (2) | *Towns in which they are located.* (3) | *Bus stands constructed by the Government.* (4) |
| --- | --- | --- | --- |
| South Arcot .. .. .. | 4 | 1 Chidambaram<br>2 Tindivanam<br>3 Villupuram<br>4 Cuddalore | Nil. |
| Coimbatore .. .. .. | 6 | 1 Erode<br>2 Gobichettipalayam.<br>3 Dharapuram<br>4 Mettupalayam<br>5 Tiruppur<br>6 Udumalpet | One at Coimbatore town constructed by the Madras State Transport Department. |
| The Nilgiris .. .. .. | 2 | 1 Ootacamund<br>2 Coonoor | Nil. |
| Salem .. .. .. | 3 | 1 Salem<br>2 Rasipuram<br>3 Dharmapuri | Nil. |
| Kanyakumari .. .. .. | None at present | | 1 Nagercoil. However one bus stand maintained by the State Transport in Meenakshipuram attached to the Government Garage.<br>2 Colachel. One sub-Government Garage located on the western side from the municipal office. |
| Chingleput .. .. .. | 5 | 1 Kancheepuram<br>2 Chingleput<br>3 Tiruvallur<br>4 Tiruvottiyur<br>5 Tambaram | Nil. |
| Thanjavur .. .. .. | 6 | 1 Kumbakonam<br>2 Thanjavur<br>3 Mannargudi<br>4 Nagapattinam<br>5 Mayuram<br>6 Tiruvarur | Nil. |

| District. (1) | Total number of bus stands maintained by the Municipal councils. (2) | Towns in which they are located. (3) | Bus stands constructed by the Government. (4) |
|---|---|---|---|
| North Arcot .. .. .. | 10 | 1 Vellore<br>2 Arcot<br>3 Walajapet<br>4 Arkonam<br>5 Ambur<br>6 Gudiyatham<br>7 Vaniyambadi<br>8 Tirupathur<br>9 Arni<br>10 Tiruvannamalai. | The State Transport Department has constructed a seperate Bus stand at Vellore but no bus stands have been constructed by the Government at any other town. |
| Ramanathapuram .. .. | 3 | 1 Paramakudi<br>2 Ramanathapuram.<br>3 Devakottai | |
| Tiruchirappalli .. .. .. | 6 | Rural bus stand near Tiruchy Junction<br>2. Town Bus stand near Main guard gate 1.<br>4 Srirangam<br>5 Pudukottai<br>6 Karur | The State Transport Department has constructed a bus stand for the State Transport buses near Tiruchy Junction. |
| Madurai .. .. .. .. | 8 | 1 Madurai<br>2 Dindigul<br>3 Palani<br>4 Bodinayakanur<br>5 Periakulam<br>6 Cumbum<br>7 Theni<br>8 Kodaikanal (Township). | |
| Tirunelveli .. .. .. | 7 | 1 Tirunelveli<br>2 Palayamcottai<br>3 Shencottai<br>4 Courtallam (Township).<br>5 Tuticorin<br>6 Koilpatti<br>7 Sankarankoil | There is a State Transport Garage at Shencottah. |
| Total .. | 60 | | |



APPENDIX VI.

[*Vide* answer to unstarred question No. 51 at page 579.]

Sixty-three Joint Farming Societies and three Collective Farming Societies were started during 1960–64.

The break-up figures of the Societies year-war and district-war are as shown below :—

| Districts. | Number of Joint Farming Societies started in | | | | | | Number of Collective Farming Societies started in | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960. | 1961. | 1962. | 1963. | 1964. | Total. | 1960. | 1961. | 1962. | 1963. | 1964. | Total. |
| Ramanathapuram. | 1 | 5 | 6 | 3 | .. | 15 | .. | .. | .. | .. | .. | .. |
| Madurai .. .. | 2 | 2 | 2 | 6 | .. | 12 | .. | .. | .. | .. | .. | .. |
| Tirunelveli .. | 1 | 3 | .. | 8 | .. | 12 | .. | .. | .. | .. | .. | .. |
| Salem .. .. | 1 | .. | .. | 2 | .. | 3 | .. | .. | .. | 3 | .. | 3 |
| Chingleput .. | 1 | 1 | 1 | 5 | .. | 8 | .. | .. | .. | .. | .. | .. |
| South Arcot .. | 2 | .. | .. | 1 | .. | 3 | .. | .. | .. | .. | .. | .. |
| Coimbatore .. | .. | .. | .. | 7 | .. | 7 | .. | .. | .. | .. | .. | .. |
| North Arcot .. | .. | .. | .. | 2 | 1 | 3 | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | 8 | 11 | 9 | 34 | 1 | 63 | .. | .. | .. | 3 | .. | 3 |

1960-64 வரையுள்ள ஆண்டுகளில் 63 கூட்டுப் பண்ணைச் சங்கங்களும் (Joint Farming Societies), 3 தொகுப்புப் பண்ணைச் சங்கங்களும் (Collective Farming Societies) நிறுவப்பட்டன.

அவை நிறுவப்பட்டது பற்றிய ஆண்டுவாரி, மாவட்டவாரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—


| மாவட்டங்கள். | கீழ்க்கண்ட ஆண்டுகளில் நிறுவப்பட்ட கூட்டுப் பண்ணைச் சங்கங்கள். | | | | | மொத்தம். | கீழ்க்கண்ட ஆண்டுகளில் நிறுவப்பட்ட தொகுப்புப் பண்ணைச் சங்கங்கள். | | | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960. | 1961. | 1962. | 1963. | 1964. | | 1960. | 1961. | 1962. | 1963. | 1964. | |
| ராமநாதபுரம் .. | 1 | 5 | 6 | 3 | .. | 15 | .. | .. | .. | .. | .. | .. |
| மதுரை .. .. | 2 | 2 | 2 | 6 | .. | 12 | .. | .. | .. | .. | .. | .. |
| திருநெல்வேலி .. | 1 | 3 | .. | 8 | .. | 12 | .. | .. | .. | .. | .. | .. |
| சேலம் .. .. | 1 | .. | .. | 2 | .. | 3 | .. | .. | .. | 3 | .. | 3 |
| செங்கற்பட்டு .. | 1 | 1 | 1 | 5 | .. | 8 | .. | .. | .. | .. | .. | .. |
| தென் ஆற்காடு .. | 2 | ... | .. | 1 | .. | 3 | .. | .. | .. | .. | .. | .. |
| கோயம்புத்தூர் .. | — | .. | .. | 7 | .. | 7 | .. | .. | .. | .. | .. | .. |
| வட ஆற்காடு .. | .. | .. | .. | 2 | 1 | 3 | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 8 | 11 | 9 | 34 | 1 | 63 | | | | 3 | | 3 |



## APPENDIX VII.

[*Vide* answer to unstarred question No. 53 at page 58.]

*Statement showing number of marriages registered under the Special Marriage Act, 1954 during the years 1962–63 and 1963–64 in each district of the Madras State.*




| *Serial number and name of the Revenue District.* | *Number of marriages registered.* | |
|---|---|---|
| | 1962–63. | 1963–64. |
| 1 Arcot North .. .. | 15 | 16 |
| 2 Arcot South .. .. | 32 | 26 |
| 3 Coimbatore and Nilgiris | 17 | 20 |
| 4 Tirunelveli .. .. | 1 | 4 |
| 5 Kanyakumari .. | .. | 1 |
| 6 Madras and Chingleput | 216 | 239 |
| 7 Madurai .. .. | 11 | 13 |
| 8 Thanjavur .. .. | 48 | 39 |
| 9 Tiruchirappalli .. | 39 | 41 |
| 10 Ramanathapuram .. | 3 | 6 |
| 11 Salem .. .. | 24 | 24 |
| | 406 | 429 |

V211.3 N65

1962–63, 1963–64-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்புத் திருமணச் சட்டம், 1954-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :

N65-29-6

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| | | 1962–63. | 1963–64. |
| 1 | வட ஆற்காடு .. .. | 15 | 16 |
| 2 | தென் ஆற்காடு .. .. .. | 32 | 26 |
| 3 | கோயம்புத்தூர், நீலகிரி .. | 17 | 20 |
| 4 | திருநெல்வேலி .. .. | 1 | 4 |
| 5 | கன்னியாகுமரி .. .. .. | .. | 1 |
| 6 | சென்னை, செங்கற்பட்டு .. | 216 | 239 |
| 7 | மதுரை .. .. .. | 11 | 13 |
| 8 | தஞ்சாவூர் .. .. .. | 48 | 39 |
| 9 | திருச்சிராப்பள்ளி .. .. | 39 | 41 |
| 10 | ராமநாதபுரம் .. .. .. | 3 | 6 |
| 11 | சேலம் .. .. .. .. | 24 | 24 |
| | மொத்தம் | . 406 | 429 |